வெளியீடு 23-3-2007

808
05/X/07

Issued 23-3-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஆகஸ்ட் 31, 2006—தொகுதி 16—எண் 1

**Thursday the 31st August, 2006—Volume 16—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V21,31' P06
P06.16-1
227483

[Price Rs. 3.00

31–8–2006

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-x |
| Governor and Council of Ministers | xi-xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xix |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxi |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-40 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) தமிழ்நாடு நகரமைப்புச் சட்டப் பிரிவு உயர் நீதிமன்றத்தால் இரத்து செய்யப் பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை | 40-43 |
| (ஆ) மேட்டூர் பகுதியில் சிக்-குன்-குன்யா நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளித்தல் | 44-48 |
| **3. விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| சென்னை, வண்டலூர்–கேளம்பாக்கம் பகுதியில் துணை நகரம் அமைத்தல்–மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 48-50 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2006 | 50-51 |

பக்கங்கள்

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு, 2006 — 51-52

(இ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2006 — 52-53

**5. அறிவிப்பு—**

தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) — 52

**6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 39 – பொதுப் பணித் துறை–கட்டடங்கள்
(ஆ) கோரிக்கை எண் 40 – பொதுப் பணித் துறை–பாசனம் — 53-184

| | |
|---|---|
| * மாண்புமிகு திரு. துரைமுருகன் | 53,70,97, 162-166 |
| * திரு. செ. பொன்னுதுரை | 97-102 |
| திரு. ஆர். காந்தி | 103-115 |
| திரு. ஓ. பன்னீர்செல்வம் | 108,109,156-162 |
| திரு. எஸ். ஜெயபால் | 115-122 |
| திரு. கி. ஆறுமுகம் | 122-128 |
| * திரு. ப. டில்லி பாபு | 129-134 |
| * திரு. சு. குணசேகரன் | 134-139 |
| * திரு. நா. இராமகிருஷ்ணன் | 140-143 |
| திரு. கு. செல்வம் | 144-147 |
| திரு. செ. புஷ்பராஜ் | 148-151 |
| * திரு. ந. சுந்தரம் | 152-156 |




| | |
|---|---|
| 24. Minister for Highways .. | **The Hon. Thiru M. P. Saminathan:** Highways and Ports |
| 25. Minister for Social Welfare .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled. Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes. |
| 26. Minister for Animal Husbandry .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| 27. Minister for Adi Dravidar Welfare .. | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 28. Minister for Fisheries .. | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| 29. Minister for Dairy Development .. | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| 30. Minister for Khadi | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி*

## மாற்றுத் தலைவர்கள் #

*திரு. ப. ரங்கநாதன்*

*திரு. துரை சந்திரசேகரன்*

*டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்*

*திரு. தி. வேல்முருகன்*

*செல்வி கே. பாலபாரதி*

*திரு. வை. சிவபுண்ணியம்*

## செயலாளர்

*திரு. மா. செல்வராஜ்*

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா. பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வ.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இஎஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்



42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ்... கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்

| | | |
|---|---|---|
| 63. | குமரகுரு, திரு. இரா | .. திருநாவலூர் |
| 64. | குருசாமி, திரு. செ. | .. அந்தியூர் (செ.வ.) |
| 65. | கோபாலன், திரு. போ. | .. உதகமண்டலம் |
| 66. | கோபிநாத், திரு. கே. | .. ஓசூர் |
| 67. | கோவிந்தசாமி, திரு. சி. | .. திருப்பூர் |
| 68. | கோவை தங்கம், திரு. | .. வால்பாறை (செ.வ.) |
| 69. | சக்கரபாணி, திரு. அர. | .. ஒட்டன்சத்திரம் |
| 70. | சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி | .. அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 71. | சண்முகம், திரு. எஸ்.வி. | .. மதுரை மேற்கு |
| 72. | சண்முகம், திரு. சி.வி. | .. திண்டிவனம் |
| 73. | சண்முகவேலு, திரு. சி. | .. உடுமலைப்பேட்டை |
| 74. | சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 75. | சந்திரகாசி, திரு. மா. | .. வரகூர் (செ.வ.) |
| 76. | சந்திரா, திருமதி மு. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 77. | சாமி, திரு. ஆர். | .. மேலூர் |
| 78. | சாமி, திரு. கே.பி.பி. | .. திருவொற்றியூர் |
| 79. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 80. | சிவசங்கர், திரு. எஸ்.எஸ். | .. ஆண்டிமடம் |
| 81. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 82. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 83. | சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |
| 84. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருவள்ளூர் |




பக்கங்கள்

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 .. 184-187

* மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் .. 185, 186

திரு. சி. சண்முகவேலு .. 185

திரு. செ.ம. வேலுசாமி .. 185.

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 .. 187-189

* மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் .. 187-189

திரு. சி. சண்முகவேலு .. 188

திரு. டி. ஜெயக்குமார் .. 188

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 .. 189-196

* திரு. சுப. வேலுமணி .. 190-192

திரு. செ.ம. வேலுசாமி .. 190

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் .. 190, 192-193, 195

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி .. 194

திரு. ஆர்.டி. கணேசன் .. 194

(ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 .. 196-210

திரு. பி.கே. சேகர்பாபு .. 196, 197-201

திரு. டி. ஜெயக்குமார் .. 196

* மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் .. 197, 201-202, 207 210

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி .. 203

திரு. ஞா. செந்தமிழன் .. 204

பக்கங்கள்

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** தொடர்ச்சி

(ய) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006— தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. மு. பரஞ்ஜோதி | 204, 206, 208 |
| திரு. வே. செந்தில் பாலாஜி | 204, 205 |
| திரு. பொ. சின்னப்பன் | 205 |
| திரு. பி. தங்கமணி | 206 |
| திரு. கோ. அரி | 208 |

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 210

D
V211, 31 P06
P06. 16.1

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
22748
சென்னை-600 008
நூலகம்



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி & தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

**7. பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம் மற்றும் செயற்திட்டப் பணிகள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்



**9. போக்குவர்த்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**12. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**13. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்*

**14. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ. வ. வேலு:**

*உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு*

**15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

*வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*

**16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்*

**17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

*தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*



**18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

*இந்து சமய மற்றும் அறநிலையங்கள்*

**19. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்*

**20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

*பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்*

**21. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

*வணிக வரிகள்*

**22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

*விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)*

**23. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

*வனங்கள் மற்றும் சின்கோனா*

**24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

*நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள*

25. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு*

26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

*கால்நடை பராமரிப்பு*

27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

*ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்*

28. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

*மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

29. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

*பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*

30. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

*கதர் கிராமத் தொழில் வாரியம் பூமிதானம் மற்றும் கிராமதானம்*



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

3. **Minister for Electricity and Rural Industries** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

| | | |
|---|---|---|
| 5. **Minister for Co-operation** | .. | **The Hon. Thiru Ko. Si. Mani:**<br>Co-operation and Statistics |
| 6. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development |
| 7. **Minister for Public Works** | .. | **The Hon. Thiru Duraimurugan:**<br>Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works |
| 8. **Minister for Higher Education** | .. | **The Hon. Dr. K. Ponmudi:**<br>Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen |
| 9. **Minister for Transport** | .. | **The Hon. Thiru K. N. Nehru:**<br>Transport, Nationalised Transport and Motor Vehicles Act |
| 10. **Minister for Backward Classes** | .. | **The Hon. Thiru M. R. K. Panneerselvam:**<br>Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act |



| | | |
|---|---|---|
| 11. **Minister for Revenue and Law** | .. | **The Hon. Thiru I. Periasamy:**<br>Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies |
| 12. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:**<br>Tourism and Tourism Development Corporation |
| 13. **Minister for Information** | .. | **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**<br>Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| 14. **Minister for Food** | .. | **The Hon. Thiru E. V. Velu:**<br>Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| 15. **Minister for Housing and Slum Clearance** | .. | **The Hon. Thiru Suba. Thangavelan:**<br>Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Waste land Development |
| 16. **Minister for Health** | .. | **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**<br>Health, Medical Education and Family Welfare |

| | | |
|---|---|---|
| **17. Minister for Labour** | .. | **The Hon. Thiru T. M. Anbarasan:**<br>Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment |
| **18. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru K. R. Periakaruppan:**<br>Hindu Religious and Charitable Endowments |
| **19. Minister for Handlooms** | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:**<br>Handlooms and Textiles |
| **20. Minister for School Education** | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:**<br>School Education and Archaeology |
| **21. Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:**<br>Commercial Taxes |
| **22. Minister for Environment** | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**<br>Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| **23. Minister for Forests** | .. | **The Hon. Thiru N. Selvaraj:**<br>Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 85. சின்னசாமி, திரு. அ. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 86. சின்னசாமி, திரு. ஆர். | .. | சிங்காநல்லூர் |
| 87. சின்னச்சாமி, திரு. செ. | .. | மருங்காபுரி |
| 88. சின்னதுரை, திரு. கு. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 89. சின்னப்பன், திரு. பொ. | .. | விளாத்திகுளம் |
| 90. சின்னராஜ், திரு. ஓ.கே. | .. | மேட்டுப்பாளையம் |
| 91. சீனிவாசன், திரு. கு. | .. | பூங்கா நகர் |
| 92. சுதர்சனம், திரு. டி. | .. | பூந்தமல்லி |
| 93. சுந்தரம், திரு. எம்.ஆர். | .. | ஆத்தூர் |
| 94. சுந்தரம், திரு. ந. | .. | காரைக்குடி |
| 95. சுந்தர், திரு. க. | .. | உத்திரமேரூர் |
| 96. சுப்பிரமணியம், திரு. ஓ. | .. | பவானிசாகர் |
| 97. சுப்புராம், திரு. ராம. | .. | திருமயம் |
| 98. சுப்ரமணியன், திரு. ந. | .. | குளத்தூர் (செ.வ.) |
| 99. சுரேஷ் ராஜன், திரு. என். | .. | கன்னியாகுமரி |
| 100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். | .. | நாட்றாம்பள்ளி |
| 101. செங்குட்டுவன், திரு. டி. | .. | கிருஷ்ணகிரி |
| 102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. | .. | கோபிசெட்டிப்பாளையம் |
| 103. செந்தமிழன், திரு. ஜா. | .. | சைதாப்பேட்டை |
| 104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. | .. | மேல்மலையனூர் |
| 105. செந்தில் பாலாஜி, திரு. வே. | .. | கரூர் |
| 106. செல்வம், திரு. கு. | .. | மங்களூர் (செ.வ.) |
| 107. செல்வராஜ், திரு. என். | .. | முசிறி |

108. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
109. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி
110. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
111. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
112. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வி.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி - 2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆவா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் வரதன், திரு. ம. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கே.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்-1
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமசந்திரன், திரு. கா. - கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை

199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்
200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பெ. .. ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. .. போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. .. விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. .. போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்-2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
221. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி



222. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
234. (வெற்றிடம்) .. மதுரை மத்தி
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 15, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 31, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்*
*அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து."*

*மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு எனக் கூறப்படுபவைகளாகும்.*

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**121—**

### தங்கும் விடுதி

***544—திரு. சு. குணசேகரன்:**

*மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2006 ஆகஸ்ட் 31

சிவகங்கை அரசு பெண்கள் கல்லூரியில் தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் அரசு பெண்கள் கலைக் கல்லூரியும், மன்னர் கலைக் கல்லூரி, இருபாலர் படிக்கிற கல்லூரியும் இருக்கிறது. அந்தக் கல்லூரிகளிலே சிவகங்கை, மானாமதுரை, இளையான்குடி, தேவகோட்டை, திருப்பத்தூர் போன்ற பகுதிகளிலிருந்தும், மாவட்டம் முழுவதிலிருந்தும், இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்தும், மாணவ, மாணவியர்கள் அங்கே வந்து படிக்கிறார்கள். அவர்கள் ஏழை எளிய நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் என்ற அடிப்படையில், அவர்கள் தங்கிப் படிப்பதற்கும், தினந்தோறும் வந்து செல்வதற்கான பஸ் போக்குவரத்து சிரமமான பிரச்சினையாக இருப்பதாலும், விடுதிகள் என்பது அவசியம் தேவைப்படுகிறது. எனவே, அந்த அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்லூரி மாணவியர் விடுதியும், கல்லூரி மாணவர்களுக்கான ஆதிதிராவிடர் நல விடுதியும் அமைத்துத் தந்தால், அந்தப் பகுதியிலே இருக்கிற நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையில், நமது அரசு அந்த மாணவ, மாணவியர்களுக்கான தங்கும் விடுதிகளைக் கட்டிக்கொடுக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சா அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சிவகங்கையில் மகளிருக்கான இரண்டு தங்கும் விடுதிகள் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே மகளிர் கலைக் கல்லூரியைச் சேர்ந்த 91 ஆதிதிராவிட மாணவிகளும், 17 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர்களும் தங்கிப் படிக்கின்றார்கள். ஆகவே, அந்த வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது. தேவை ஏற்படுமானால், அதற்கான வசதிகளை



2006 ஆகஸ்ட் 31]

ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே எங்களது மாவட்டத்திலிருந்து 120-க்கும் மேற்பட்ட மாணவியர்கள், ஆதிதிராவிட கல்லூரி மாணவியர்கள் விடுதியில் சேர்வதற்காக விண்ணப்பித்து அவர்களுக்கு இடம் கிடைக்காத நிலைமை உள்ளது. அவர்களை விடுதியில் சேர்க்க அனுமதி கேட்டு ஒரு செயற்குறிப்பை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருக்கிறார். அதைப்போல, அங்கே மாணவர்களுக்கு சீர் மரபினருக்கான ஒரு கல்லூரி விடுதி இருக்கிறது. அதிலும் கிட்டத்தட்ட 100 மனுக்கள் நிலுவையில் இருக்கிற சூழ்நிலையில், அதற்கும் கூடுதலாக இட ஒதுக்கீடு செய்வதற்கான அனுமதி வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு அமைச்சருக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில் ஆண்டுக்காண்டு கல்லூரிகளிலே சேர்ந்தும், நூற்றுக்கணக்கான மாணவ மாணவியர்கள் இன்றைக்குத் தங்கிப் படிக்க முடியாத ஒரு சூழலில் பாதியிலே படிப்பை நிறுத்தவேண்டிய ஒரு சூழலுக்கும், மிகுந்த சிரமத்திற்கும் ஆளாகிறார்கள். வெளியிலே தங்கியிருக்கும்போது ஏற்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் மாணவ, மாணவியர்களுக்கும் பல துன்பங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிற சூழ்நிலையில், அவசியம் மாணவியர்களுக்கான பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியும், அதைப்போல மாணவர்களுக்கான ஆதிதிராவிடர் நல விடுதியும் தேவை என்ற அடிப்படையில், கருணைகூர்ந்து நமது முதல்வர் அவர்களால் சிவகங்கை நகரத்திலே இரண்டு விடுதிகளும் அமைத்துத் தரப்படுமா என தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி விடுதிகளெல்லாம் ஆதிதிராவிடர் நலத் து றை. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாகத்தான் கட்டபட டு பராமரிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களு நம சட்டமன்ற உறுப்பினர்களுக்கான நிதியும் கொடுக்கப்பட்டிருக்கி து. நீங்களும் அதற்கான நிதி உதவியை அளித்து, பிற்படுத்தப்பட்டோர் ந லத்

துறை அல்லது ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களோடும் பேசி, வருங்காலங்களிலே முதல்வர் அவர்களையும் கலந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம்.

*முற்பகல் 9—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன்.*

**திரு. பி.என். பெரியண்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், 8 ஒன்றியங்களை உள்ளடக்கிய மாவட்டம். தருமபுரியில் ஒரு கலைக் கல்லூரி உள்ளது. பெண்களுக்கென்று தனியாக ஒரு கலைக் கல்லூரி வழங்கினால் நன்றாக இருக்கும் என்ற எண்ணத்திலே, அதைச் செய்து தர முடியுமா என்று தலைவர் அவர்களுடைய வாயிலாக அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டு அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கே இருக்கிற கல்லூரி, இரு பாலரும் சேர்ந்து படிக்கிற கல்லூரியாகத்தான் இருக்கிறது. ஆகவே, மகளிருக்கென்று தனியாக கல்லூரியை இப்பொழுது தொடங்குகின்ற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.*

**திரு. செ.ம. வேலுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் கல்லூரி விடுதிகளில் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு அரசு இந்த ஆண்டு முன்வருமா? பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோருடைய விடுதிகள் அந்தந்தத் துறை சார்பாகச் செய்து தருகின்றது. அரசு சார்பாக கல்லூரிகள் இருக்கக்கூடிய இடங்களில் உள்ள விடுதிகளில் கூடுதலாக இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், அதேபோல, ஆதிதிராவிடர் நலத் துறை நடத்துகிற விடுதிகளும் அரசு சார்பிலே நடத்தப்படுகிற விடுதிகள்தான். ஆகவே, அந்தத் துறையிலே இதுபற்றிய கேள்விகளைக் கேட்க வேண்டும். அதற்கான வசதிகளையோ, விரிவுபடுத்துவது பற்றியோ, அந்தத் துறையிலேதான் முடிவு எடுக்க வேண்டும்.*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை.*

**திரு. பா. வேல்துரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கல்லூரியினுடைய விடுதிக்காக இருந்தாலும்கூட, அமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் உள்ள எல்லா விவரங்களையும் வைத்திருப்பதால், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியிலே, மனோ கல்லூரி என்ற ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரி மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெறவில்லை. அந்தக் கல்லூரியிலே மாணவர்கள் அதிகமாக, ஈடுபாட்டோடு சேர்வதில்லை. எனவே, அந்தக் கல்லூரியை அரசு கலைக் கல்லூரியாக மாற்றி, சேரன்மகாதேவி தொகுதிக்கு ஒரு கல்லூரியை அமைச்சர் அவர்கள் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த விவரத்தை என்னிடம் கொடுப்பார்கள் என்று சொன்னால், முதல்வர் அவர்களோடு கலந்து, அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 122, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**122—**

**பணிமனை**

***764—திரு. சு. சிவராஜ்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சங்கராபுரம் நகரத்தில் அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2006 ஆகஸ்ட் 31

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 9–8–2006 அன்று மானியக் கோரிக்கையின்போது, நடப்பு நிதியாண்டில் சங்கராபுரத்தில் பணிமனை அமைக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. சங்கராபுரம் வட்டத்தில், அரசுக்குச் சொந்தமான 3.17 ஏக்கர் நிலம், நில உரிமை மாற்றம் அடிப்படையில் வருவாய்த் துறையினர்மூலம் போக்குவரத்துக் கழகத்தினரால் பெறப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் சங்கராபுரத்தில் பணிமனை அமைக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரத்திலே போக்குவரத்துக் கழகப் பணிமனை வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின்போதே வரும் என்று அறிவித்தார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டாவதாக, அந்தப் பணிமனை தொடங்கப்படும்பொழுது, முதற்கட்டமாக எத்தனை நகரப் பேருந்துகள் விடப்படும்? அதேபோல, சாதாரணப் பேருந்துகள் எத்தனைப் பேருந்துகள் அந்தப் பணிமனையிலிருந்து இயக்கப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தப் பணிமனையிலிருந்து 30 கிலோ மீட்டர் வரை நகரப் பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. கொஞ்சம் அதிகமான தூரம், 30 கிலோ மீட்டர் தூரம் சென்று, 10 கிலோ மீட்டர் சென்று திரும்பி பணிமனை செல்லக்கூடிய அனைத்துப் பேருந்துகளும் இந்தப் பணிமனைக்கு செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அந்தப் பகுதியிலே இயங்குகின்ற அனைத்து நகரப் பேருந்துகளும் சங்கராபுரம் பணிமனையிலேயிருந்துதான் இயங்கும்படிச் செய்ய முடியும். எத்தனைப் பேருந்துகள் என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனால், நடைபெற்ற போக்குவரத்துக் கழகத்தினுடைய 117 ஆவது கூட்டத்திலே, இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, விரைவிலே அந்தப் பணிகள் ஆரம்பிக்க இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, கள்ளக்குறிச்சி பணிமனையிலேயிருந்தும், திருக்கோவிலூர்



2006 ஆகஸ்ட் 31]

பணிமனையிலேயிருந்தும்தான் ரிஷிவந்தியம் பகுதியிலே பேருந்துகள் இயக்கப்பட்டன. அப்பொழுது நகரப் பேருந்து 30 கிலோ மீட்டருக்குள்ளாகத்தான் இயக்க வேண்டுமென்ற விதி இருந்ததன் காரணமாக, சங்கராபுரத்திலேயிருந்தும், திருக்கோவிலூரிலேயிருந்தும் ரிஷிவந்தியம் ஒன்றியத்திலே பல்வேறு கிராமங்களுக்கு முழுமையான போக்குவரத்து வசதி தர முடியவில்லை. ஆகவே, சங்கராபுரம் பகுதியிலே இந்தப் பணிமனை ஆரம்பிக்கப்படும்பொழுது, சங்கராபுரத்திலேயிருந்து திருக்கோவிலூருக்கும், சங்கராபுரத்திலேயிருந்து மணலூர்ப்பேட்டைக்கும், அதேபோல் சங்கராபுரத்திலேயிருந்து தியாகதுருக்கத்திற்கும் நகரப் பேருந்துகளை இயக்குவதற்கு அமைச்சர் அவர்கள் அனுமதி தருவார்களா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9–40

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற மானியக் கோரிக்கையிலே அதைப்பற்றி அறிவிப்பு தெளிவாக வெளியிடப்பட்டிருக்கிறது. நமது சென்னையைச் சுற்றிலும் இருக்கின்ற விரிவாக்கப் பகுதிகளுக்குப் பேருந்து வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, ஏற்கெனவே சென்னையிலிருக்கின்ற நகரப் பேருந்துகள் 40 கிலோ மீட்டர் தூரம் வரைதான் செல்ல முடியும் என்று ஒரு சட்டம் இருக்கின்றது. அவை 50 கிலோ மீட்டர் தூரத்திற்குச் செல்லலாம் என்று புதிய சட்டத்தை இந்த அரசு இப்பொழுது இயற்றியிருக்கிறது. அதைப்போல மற்ற மாவட்டத் தலைநகரங்களில் இருக்கின்ற பேருந்துகள், நகரப் பேருந்துகள் 30 கிலோ மீட்டர் வரைதான் செல்லலாம் என்று ஏற்கெனவே முன்பு சட்டம் இருந்தது. இப்பொழுது 5 கிலோ மீட்டர் கூடுதலாகச் செல்லலாம் என்ற புதிய சட்டம் அரசின் சார்பாக இயற்றப்பட்டிருக்கிறது. அதனால், சங்கராபுரத்திலிருந்து 35 கிலோ மீட்டர் தூரத்திலிருக்கின்ற அத்தனைப் பகுதிகளுக்கும் அங்கு நகரப் பேருந்துகள் இயக்கலாம். தூரம் அதிகமானால் mofussil பேருந்தாக அதை இயக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினா திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஜெயங்கொண்டம் தொகுதியிலேயிருந்து, விழுப்புரம் பணிமனையிலிருந்து 14 பஸ்கள் அரியலூர், செந்துறை, உடையார்பாளையம் வழியாக ஜெயங்கொண்டத்திலிருந்து ஆண்டிமடம் செல்கின்றன. அதேபோல், ஜெயங்கொண்டம் பணிமனையிலிருந்து

[2006 ஆகஸ்ட் 31

இரண்டு பஸ்கள் ஆண்டிமடத்திற்கு ஜெயங்கொண்டத்திலிருந்து செல்கின்றன. அந்த பஸ்கள் கங்கைகொண்டசோழபுரம், மீன்சுருட்டி வழியாகச் செல்கின்றன. ஆனால், ஜெயங்கொண்டம் பணிமனைக்கு ஜெயங்கொண்டம், கங்கைகொண்டசோழபுரம், ஜெயங்கொண்டம் கூறுக்கு ரோடு, மீன்சுருட்டி வழியாக இயங்க இன்னும் கூடுதல் பஸ்கள் தேவைப்படுகின்றன. 5-லிருந்து 7 பஸ்கள் தேவைப்படுகின்றன. ஏனென்றால், ஜெயங்கொண்டம் கூறுக்கு ரோடு, மீன்சுருட்டியில் தினம் கிட்டத்தட்ட 200 பேர்கள் நின்று கொண்டேயிருக்கின்றார்கள். அதேபோல், கும்பகோணத்திலிருந்து வரும் பஸ்கள் அங்கேயே ticket full-ஆகி விட்டால், இங்கு நிற்பதேயில்லை. அதேபோல் நாங்கள்கூட, எம்எல்ஏ.-க்கள் வரும்போது, கும்பகோணம் டிப்போவிலே ரிசர்வ் பண்ண வேண்டியதாக உள்ளது. ஆனால், அங்கேயே நிறைய எம்.எல்.ஏ.-க்கள் ரிசர்வ் பண்ணிவிடுவதால், உங்களுக்கு இடம் இல்லை என்று சொல்லி, அதன் பின்னர் இடம் கொடுக்கின்றார்கள். அதுபோல், எங்களுக்கு ஜெயங்கொண்டத்திலிருந்து இரண்டு Ultra Deluxe பஸ்கள் விட வேண்டும். அதேபோல், சொகுசு பஸ்கள் 5-லிருந்து 7 ஆவது ஜெயங்கொண்டம் டெப்போவிலிருந்து விடவேண்டும். (குறுக்கீடு) இன்னும் ஒரே ஒரு கேள்வி. ஜெயங்கொண்டம் பணிமனைக்கு கூடுதல் பஸ்கள் வேண்டும். அதேபோல், நான் இங்கு கேள்வி போட்டதால், ஜெயங்கொண்டம் பஸ் ஸ்டாண்டுக்கு இடம் பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள் 10 நாட்களுக்கு முன்பாக. ரோட்டின் ஓரத்தில் ஹைவே பக்கத்திலேயே இடம் உள்ளது. அதைச் சில பேர் ஆக்கிரமிப்புச் செய்துள்ளார்கள். அதையும் நீங்கள் செய்து, கூடிய விரைவில் மீன்சுருட்டிக்கும் பஸ் ஸ்டாண்டு தேவை என்று உங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். மீன்சுருட்டியிலேயிருந்து ஜெயங்கொண்டம் வருகின்ற சாலை எவ்வளவு மோசமாக இருந்தது. இப்பொழுதுதான் அந்தச் சாலை விரிவுபடுத்தப்பட்டு, சிறப்பான சாலையாக அது ஆக்கப்பட்டிருக்கின்றது. மேலும், ஜெயங்கொண்டம் நகரத்திலேயே ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, கடைவீதியே இன்றைக்கு கிட்டத்தட்ட 100 அடி அகலத்திற்கு இருக்கின்றது. மீன்சுருட்டியிலும் இருக்கின்ற ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு உரிய முயற்சி எடுக்கப்படும். அதேபோல ஜெயங்கொண்டத்தினுடைய பயணிகள் அடர்வு அதிகமாக இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பேருந்துகளை நிச்சயமாக இந்தத் துறை இயக்கும்.



2006 ஆகஸ்ட் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி அங்கையற்கண்ணி.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் பணிமனை என்று அறிவித்துள்ளார். தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2006 ஆம் ஆண்டில் நமது கழக ஆட்சியில் 50 இலட்சம் மதிப்பீட்டில் பணிமனை அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது எவ்வளவு மதிப்பீட்டில் பணிமனை அமைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்தினுடைய கூட்டத்தில் அது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான மதிப்பீடுகள் எல்லாம் செய்யப்படும். எவ்வளவு என்ற கணக்கு இப்பொழுது இல்லை. ஆனால், இந்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப அந்தப் பணி தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியிலே அரசுப் பேருந்து கழகப் பணிமனை புதிய இடத்திலே கட்டப்பட்டு, பல ஆண்டுகளாகச் செயல்பட்டுவருகிறது. ஏற்கெனவே நமது போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பழைய பணிமனையிலே பழைய பேருந்துகள் கூண்டு கட்டும் பிரிவாகச் செயல்பட்டது. இப்பொழுது அந்தப் பணியும் நடைபெறவில்லை. அந்த இடம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அது முக்கியமான இடத்திலே இருக்கிற காரணத்தினாலே அதிலே போக்குவரத்து ஆய்வாளரின் அலுவலகத்தைச் செயல்படுத்துவதற்குரிய முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புவதோடு, நமது அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய பொறியாளர்களுடைய கோரிக்கை நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய காலத்திலேதான் அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. ஒவ்வொரு கட்டத்திலேயும் அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்காக ஊதிய உயர்வு பற்றிப் பேசுகிறபொழுது அந்தப் பொறியாளர்களுக்கான ஊதிய உயர்வு பற்றி 1998 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் அவர்களுக்கு உரிய முறையிலே உதிய உயர்வு வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், இடைப்பட்ட காலத்திலே

[2006 ஆகஸ்ட் 31

அது நிறுத்தப்பட்டு விட்டது. இப்பொழுது மீண்டும் அதற்கான முயற்சியை நமது அரசின் சார்பிலே எடுக்கப்படுவதாக அறிகிறேன். அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவதற்கான முயற்சியும் எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் தனி கட்டுப்பாட்டில் இருக்கின்றன. போக்குவரத்துத் துறை நேரடியாக அரசுக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான இடங்களில் அரசுத் துறை அங்கு வைத்து இயக்கப்படுமா என்றால் அவர்கள் அனுமதித்தால் இயக்கப்படலாம். குறிப்பாக, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்கு வேலூரிலே ஓர் இடம் வேண்டுமென்று அவர்கள் உயர் கல்வித் துறையின் சார்பாகக் கேட்டு, அங்கு இருக்கின்ற போக்குவரத்துத் துறை விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட காரணத்தால், அங்கு இடம் இருக்கிறது என்று அவர்கள் கேட்டதற்கு, நாங்களும் தரலாம் என்று முடிவு செய்து, அங்கு சென்று பார்த்த போது, தொழிலாளர்கள் இதை எப்படிக் கொடுக்கலாம் என்று எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அவர்கள் ஒரு 5, 6 மாதத்திற்குத்தான் அதைக் கேட்டார்கள். அதுபோல போக்குவரத்துக் கழகங்களுக்கு இருக்கிற இடத்தை நேரடியாக அரசு எடுக்க முடியுமா என்பதை ஆலோசித்துத்தான் அந்த அலுவலகம் திறக்க இயலும். மேலும், நமது பொறியாளர்களுக்குச் சம்பள உயர்வு தரப்படுமா என்று இங்கே கேட்டிருக்கிறார்கள். பொறியாளர்களுடைய நீண்ட நாள் கோரிக்கை நம்முடைய முதலமைச்சர், முன்பு முதலமைச்சராக இருந்தபோதுதான் அவர்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டும் என்று உத்தரவிட்டு, கடைநிலைப் பணியாளர்களிலிருந்து அவர்களுக்கு ஒருபடி மேலே ஏற்றித்தர வேண்டும் என்று சொன்னார்கள். பிறகு நம்முடைய ஆட்சி போய், அவர்களுடைய ஆட்சி வந்த பிறகு, 4 ஆண்டுகாலம் அவர்கள் அதைச் செய்யாமல், கடைசியிலே 7 பேர்கொண்ட ஒரு குழுவை நியமித்து, அவர்களுக்கு ஒரு சம்பள உயர்வை நிர்ணயித்தார்கள். அதற்குள் தேர்தல் வந்து, அது அப்படியே நின்றுபோய் விட்டது. இப்போது செயலாளர் மட்டத்திலே அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிதித் துறை செயலாளர் அவர்களிடம் பேசப்பட்டிருக்கிறது. இன்றைக்குக்கூட அந்தப் பொறியாளர்களோடு செயலாளர் பேசிக் கொண்டிருக்கிறார்கள், விரைவில் நல்ல முடிவு ஏற்படும்.



2006 ஆகஸ்ட் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 123, திரு. பெ. காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**123—**

## பேருந்து வசதி

***1081—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி-பழனிக்குச் செல்ல தோகைமலை, தரங்கம்பட்டி, பாளையம், கோவிலூர், வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் வழியாகப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி-பழனி வழி மணப்பாறை, வையம்பட்டி, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் வழித்தடம் தேசிய நெடுஞ்சாலையில் இயக்கப்படுகிறது. அதன் பயண நேரம் சுமார் 4-00 மணி நேரம் ஆகும். ஆனால், திருச்சி-பழனி வழி தோகைமலை, தரங்கம்பட்டி, பாளையம், கோவிலூர், வேடசந்தூர், கோரிக்கை வழித்தடம் கிராமப்புறம் மற்றும் மாவட்டச் சாலைகள் இணைக்கப்பட வேண்டியதாகும். அதன் பயண நேரம் சுமார் 5-30 மணி நேரம் ஆகும். எனவே, நேரடியாகச் செல்லும் பயணிகள் இவ்வழித்தடத்தில் பயணம் செய்ய விரும்பமாட்டார்கள். தோகைமலை, தரங்கம்பட்டி, பாளையம், வேடசந்தூர் போன்ற பகுதிகளிலிருந்து பழனிக்குப் பயணம் செய்ய கீழ்க்கண்டவாறு பேருந்து வசதிகள் உள்ளன. தோகைமலை பகுதி மக்கள் குளித்தலை, மணப்பாறை வழி தோகைமலை வழித்தடத்தில் இயக்கப்படும் திருச்சி மண்டல 13 பேருந்துகள் 96 நடைகள், தனியார் துறை பேருந்துகள் மூன்றின்மூலம் 20 நடைகள் இயக்கப்படும் பேருந்துகளில் மணப்பாறை வந்தடைந்து பழனி செல்ல ஏதுவாக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன அனைத்து வழித்தடங்களும் என்னுடைய தொகுதியை ஒட்டியே செல்லவில்லை. நான் கூறிய வழித்தடங்கள் அனைத்தும் ஸ்ரீரங்கம், குளித்தலை, கிருஷ்ணராயபுரம், அரவக்குறிச்சி, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் இப்படியாக 6 தொகுதி மக்களும்

பயன்பெறும் வகையில் இடையில் இருக்கும் கிருஷ்ணராயபுரம் என்னுடைய தொகுதி மக்களும் பயன்பெறும் வகையில்தான் இந்தக் கேள்வியை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று வருங்காலத்தில் பழனிக்குச் செல்வதற்கு ஏதுவாக ஒரு பேருந்து இயக்கிடவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு இடது புறமும், வலது புறமும், இரண்டு பக்கமும் தேசிய நெடுஞ்சாலைகள் போகின்றன. ஒரு பக்கம் திண்டுக்கல் சேருகிறது. கரூரிலிருந்து திண்டுக்கல் சாலையும் இருக்கிறது. அதனால்தான் உள் கிராமங்களில் இருந்து நேரடியாகப் பழனிக்குச் செல்லக்கூடிய பயணிகள் அடர்வு அதிகமாக இருக்காது என்ற காரணத்தால்தான் பேருந்து விடுவதற்கு இப்போது எண்ணம் இல்லை என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கேட்டு, நம்முடைய அதிகாரிகளை அனுப்பி அது சரியாக இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், போளூரிலேயிருந்து கலசப்பாக்கம் வழியாக பெங்களூருக்குச் சென்ற அரசுப் பேருந்து தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அதை உடனடியாக இந்த அரசு இயக்குவதற்கு முன்வருமா என்பதையும், அதேபோல், கலசப்பாக்கம் தொகுதியினுடைய தலைமையிடமாக இருக்கிற கலசப்பாக்கத்திலேயிருந்து, மாநிலத்தினுடைய தலைநகராக இருக்கிற சென்னை மாநகருக்குத் தனியாக ஒரு பேருந்து இயக்க இந்த அரசு முன்வருமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் விட்டு மாநிலம் நம்முடைய பேருந்துகள் செல்கின்றபோது, அதுபற்றி மற்ற மாநிலத்தோடு பேசி முடிவு செய்ய வேண்டிய ஒரு நிலையிருக்கிறது. அது விரைவிலே, இந்த மாதம்





அல்லது அடுத்த மாத ஆரம்பத்திலே அந்தக் கூட்டம் கூட்டப்பட இருக்கிறது. அவர்களோடு ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர்தான், ஏற்கெனவே நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி, கலசப்பாக்கத்திலிருந்து சென்னைக்குப் பேருந்து கேட்டிருக்கிறார்கள். ஆய்வுசெய்து அதைப் பற்றி யோசிக்கலாம்; ஆய்வுசெய்து பேருந்து விடுவதைப் பற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

**திரு. கூ.ந. சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயினால் பாதிக்கப்பட்ட ஏழையெளிய மக்கள் நகரங்களிலே பல்வேறு மருத்துவமனைகளுக்குச் செல்கிறார்கள். அவர்கள் எல்லாம் அந்த மருத்துவமனைகளுக்குச் செல்கிற வகையிலே, அவர்களுடைய நலன் கருதி, பேருந்துகளை Medicare Special என்கின்ற வகையிலே அந்தப் பேருந்துகளையெல்லாம், நோயாளிகளினுடைய வசதிக்காக இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அதுபோல் ஓர் எண்ணம் இல்லை. ஏற்கெனவே உங்களுக்கு எல்லாம் தெரியும். பேருந்திலே சிறிய, சிறிய உதவிகள், மருத்துவ உதவிகள் செய்கின்ற அளவிலே, மருந்துகள் இருக்கின்ற kit ஒன்று இருக்கும். அதுதான் இதுவரை இருந்துகொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் இப்போது சொல்கின்ற அந்தப் பணி என்பது அவ்வளவு எளிதான பணி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூர் மாநகர பேருந்துக் கழகத்தின் சார்பாக Medicare Special என்ற bus-கள் இயக்கப்பட்டு, அரசு மருத்துவமனை, தனியார் மருத்துவமனைகளையெல்லாம் இணைத்து, வெற்றிகரமாகச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. கிராமப்புறங்களிலே இருந்து வருகின்ற நோயாளிகள் நம்முடைய கோயம்பேட்டிலேயிருந்து அரசு மருத்துவமனைகளுக்கும் தனியார் மருத்துவமனைகளுக்கும் செல்ல ஏதுவாக படுக்கை வசதியோடு கூடிய Medicare Special பேருந்துகளை, பெங்களூர் போல இயக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரே ஒரு fleet owner, பேருந்து உரிமையாளர். மற்ற மாநிலங்களைக்காட்டிலும் தமிழ்நாட்டிலே மிகக் குறைவாகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பெங்களூரிலே இயக்குகிறார்கள் என்று சொன்னால், டீசல் விலை எப்போது ஏற்றப்படுகிறதோ, அந்த நிமிடத்திலே, அவர்கள் பேருந்துக் கட்டணத்தையும் ஏற்றுகிறார்கள். அதனால் அவர்களால் நினைத்த காரியங்களைச் செய்ய முடிகிறது. Medicare Special Bus என்று சொன்னால், அதற்குக் கூடுதலான செலவாகும். அதுகுறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அவருடைய ஒப்புதல் பெற்றுதான் அதைச் செய்ய இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு பேருந்திலும் இந்த முதலுதவிப் பெட்டி kit இருப்பதாகச் சொன்னார்கள். kit இருக்கிறது. ஆனால், அதன் உள்ளே எதுவுமே இல்லை. அதிலே மருந்தோ, டிஞ்சரோ, எதுவுமே இல்லை என்பதை அமைச்சர் அறிவாரா? இனி வருங்காலங்களிலாவது அந்த முதலுதவிப் பெட்டியிலே கட்டாயம் இன்னின்ன மருந்துப்பொருட்கள் வைக்கப்பட வேண்டும் என்கிற ஒரு சட்டத்தை இயற்றியாவது அல்லது ஓர் ஆணையைப் பிறப்பித்தாவது அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் உள்ள அரசு ஆணை அப்படி. ஒரு மருத்துவமனையிலிருந்து இன்னொரு மருத்துவமனைச் செல்வதற்கு 1 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர், 10 கிலோ மீட்டர் என்று இடைவெளி இருந்த காலத்தில், மருத்துவர்கள் அதிகம் இல்லாத காலத்தில், பேருந்துகளிலே அந்த ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது 100 அடிக்கு ஒரு மருத்துவர் இருந்து கொண்டிருக்கிறார். ஆனாலும், இந்த kit என்று வைத்தால், உடனடி சிகிச்சை செய்வதற்கான அந்த மருந்துகள் அதில் வைக்க ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 124, திரு. கோவை தங்கம், மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.





**124—**

## கட்டட வசதி

***2033—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை குற்றவியல் நீதிமன்றம் சொந்தக் கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வால்பாறை குற்றவியல் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் குற்றவியல் நீதிமன்றம் நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அங்கே ஜன நெருக்கடி உள்ள பகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், நீதிபதிகள்கூட--தங்குவதற்கு வசதியில்லாததால்--வருவதில்லை. பணியாளர்களும் அங்கே பணிபுரிவதற்கு வருவதில்லை. 1996, 1997 ஆம் ஆண்டில் நம்முடைய தமிழினத்தினுடைய தலைவர் மாண்புமிகு கலைஞர் ஐயா அவர்களுடைய காலத்தில் நீதிபதிகள் குடியிருப்புகள் கட்டுவதற்காக 6½ இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், அந்த 6½ இலட்சம் ரூபாயிலே கட்டடம் கட்ட முடியவில்லை. எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் பரிசீலனை செய்து, வால்பாறை குற்றவியல் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உதவி புரிய முன்வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலே நீதிமன்றம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் இடம் தேர்வு செய்யும் பணி இன்னும் முழுமையாக முடிவடையவில்லை. மாவட்ட ஆட்சியர் இடம் தேர்வு செய்து, அதை மாவட்ட முதன்மை நீதிபதியின் மூலமாக உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தவுடன், நிதிநிலைக்கேற்ப அது எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தர்மலிங்கம். (குறுக்கீடு) தர்மலிங்கம், கொஞ்சம் இருங்கள். சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள், இப்போது வால்பாறையிலே ஒரு கலைக் கல்லூரியை தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியருக்காக வழங்கியிருக்கின்றார்கள். அங்கே 14 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலே 10 ஏக்கர் நிலத்தைத்தான் கல்லூரிக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். 4 ஏக்கர் இப்போது சும்மா இருக்கிறது. அதிலே ஒரு ஏக்கர் நிலத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், நீதிமன்றமும் அந்த இடத்தைப் பார்வையிட்டு ஒரு ஏக்கரை நீதிமன்றத்திற்கு ஒதுக்குவதற்கு அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவர் அன்னை சோனியா காந்தி அம்மா அவர்கள் இந்த 100 நாட்கள் ஆட்சியைப் பாராட்டியிருக்கின்றார்கள். நேற்றுகூட எங்களுடைய மத்திய அமைச்சர், எங்களுடைய தலைவர் மாண்புமிகு ஜி.கே. வாசன் அவர்கள் இந்த 100 நாட்கள் ஆட்சியை மிகவும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதெல்லாம், கேட்டதையும் கொடுக்கின்ற, கேட்காததையும் கொடுக்கின்ற நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் வால்பாறைக்கு ஒரு குற்றவியல் நீதிமன்றத்தை சொந்தக் கட்டடத்திலே கட்டிக் கொடுப்பதற்கு முன்வருவாரா என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்குத் தயாராகத்தான் இருக்கிறது. நான் ஏற்கெனவே இந்த அவையிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். நம்முடைய, இந்தியா முழுக்க அனைத்து மாநிலங்களிலும் நீதிமன்றங்களுடைய உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, மத்திய அரசினுடைய 50 விழுக்காடு சம பங்கு வழங்கி, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலே இந்த அரசு, மத்திய அரசை மீண்டும் எங்களுடைய மாநிலத்திற்கு அதிக நிதி வேண்டுமென்று நாம் வலியுறுத்தியிருக்கின்றோம். விரைவில் நிதி கிடைக்கும். வருகின்றபொழுது நிச்சயம் வால்பாறையிலும் அந்த நீதிமன்றம் கண்டிப்பாகக் கட்டப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலத்தில் நீண்ட காலமாக நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லை. 1980-லிருந்து எந்த இடத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதென்று இடம் தேர்வு செய்யப்படாமல், ஒவ்வொரு முறையும் இடம் மாறறி மாற்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சத்தியமங்கலத்திற்குச் சொநத நீதிமன்றக் கட்டடம் கட்டித் தர முடியுமா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதுபோல தமிழகத்திலே வாடகைக் கட்டடத்திலே இருக்கின்ற, நீதிமன்றங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்கின்ற பணியில் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர், அங்கு இருக்கின்ற முதன்மை நீதிபதி ஆகியோருக்கு அரசு அறிவுரை வழங்கி, அதற்கான பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இடம் தேர்வு செய்கின்ற பணியிலே ஈடுபட்டு, நம்முடைய உயர் நீதிமன்றத்திற்கு அவர்கள் இடம் தேர்வு செய்த அந்த விவரத்தை அனுப்பினால், தொடர்ந்து கட்டடம் கட்டுவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே இடம் தேர்வு செய்கின்ற பணியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணியில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு அரசுக்குச் சொந்தமான கட்டடங்களும் இட வசதியும் இருப்பதைக் கருத்தில்கொண்டு, கடந்த கால, மாண்புமிகு அம்மா ஆட்சியில், சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது நிலுவையிலுள்ளன. திருத்தணியிலும், பள்ளிப்பட்டிலும் இரண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் உள்ளன. இரண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இருந்தும், அங்கே செல்கின்ற பொதுமக்கள் சார்பு நீதிமன்றத்திற்கு (மணியடிக்கப்பெற்றது) திருவள்ளூர் வருவது என்றால், 90 கிலோ மீட்டர் வருகிறார்கள். திருத்தணியிலிருந்து 45 கிலோ மீட்டர் வருகிறார்கள். அவர்களுடைய இன்னல்களைப் போக்க திருத்தணியிலே சார்பு நீதிமன்றம் உடனடியாகத் தொடங்க இந்த அரசு முன்வருமா என்பதைப் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பற்றி, அவர்கள் எனக்கு முழு விவரங்களை அளித்தால், அதிலே அரசு என்ன செய்யமுடியும் என்பதை ஆய்ந்து முடிவு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. ஆர். சின்னசாமி. (குறுக்கீடுகள்) நேரம் ஆகிறது. எதைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள்? கேள்வி கேளுங்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி. எனது சிங்காநல்லூர் தொகுதியில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில், அங்கீகரிக்கப்படாத பிரிவுகளுக்காகப் பணம் கட்டச் சென்றபோது, பணம் வாங்க மறுக்கிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லுகிற காரணம், (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் சொல்லிவிடுகிறேன், சொல்லிவிடுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) மூலக் கேள்வி —அதாவது Revenue சம்பந்தமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். Revenue–லே ஏற்கெனவே, நிலச் சீர்திருத்தம் என்று சொல்லக்கூடிய அந்த இடம். (குறுக்கீடு) பணம் வாங்க மறுக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னசாமி, மூலக் கேள்விக்கும் நீங்கள் கேட்பதற்கும் சம்பந்தமில்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் ரூ.5 கோடியிலே கட்டிமுடிக்கப்பட்டு, இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. அங்கே பழைய கட்டடங்களை இடித்துவிட்டு, அதைப் Park ஆக அமைக்கவும், புதிய நீதிமன்ற வளாகத்தை உடனடியாகத் திறக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**125—**

## கோயில் பராமரிப்பு

***441—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோயிலினை சுற்றுலாத் துறைமூலம் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான கோயில்கள், மாநில இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின்மூலமே பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்பொழுது சுற்றுலாத் தலத்திற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை, அப்பகுதியின் முக்கியத்துவம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பரிந்துரையுடன் குடிதண்ணீர் வசதி, உணவகம், சாலை வசதி, தங்கும் வசதி, போக்குவரத்து, நிலச்சீரமைப்பு, வாகன நிறுத்துமிடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, கழிவறை போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சுற்றுலாத் துறையின்மூலமாக நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், தேனி தொகுதி, குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோயில், தினமும் இரண்டாயிரம் பக்தர்களும், சனிக்கிழமைதோறும் 25,000 பக்தர்களும் வந்து செல்லுகின்ற இடமாகும். குச்சனூர் பகுதியானது, ஒரு பேரூராட்சிப் பகுதி. அங்கு போதுமான நிதிவசதி இல்லாத காரணத்தால், கடந்த 2005-2006 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் சுற்றுலாத் துறையின்மூலம் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலுடன் அடிப்படை வசதிகளை செய்வதற்கு துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது. தற்சமயம், சுற்றுலாத்

[2006 ஆகஸ்ட் 31

துறை ஆணையர் அலுவலகத்தில் ஆய்வில் இருக்கின்றது. Part-II திட்டத்தின்கீழ், அங்கு அடிப்படை வசதிகளைச் செய்துக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டில் சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தேனி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு கோரப்பட்டுள்ளது. தேனி தொகுதி, குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது குறித்து தேனி மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. எச். வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில், கூந்தன்குளம் என்ற இடத்திற்கு உலகச் சுற்றுலா மக்கள் அதிகமாக வருகிறார்கள். அங்கு அடிப்படை வசதிகள் குறைவாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் செய்து கொடுப்பாரா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளிலே அடிப்படை வசதிகள் செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதியிலே தேன்கனிக்கோட்டையிலுள்ள அருள்மிகு பேட்டராசாமி திருக்கோயில் மிகவும் பிரசித்திப்பெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வெளி மாநிலங்களிலிருந்து தரிசிக்க வருகின்றனர். ஆகவே, அந்தக் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு குடிநீர், கழிப்பறை, தங்கும் வசதி, போன்ற அடிப்படைத் தேவைகளை சுற்றுலாத் துறைமூலம் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2006 ஆகஸ்ட் 31]

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோயிலில் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு, அங்கே அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தால், துறை அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**126—**

### நியுரோ சயின்ஸ்

***1674—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவ, மாணவிகள் மூளையின் செயல்திறனை அதிகரிக்கும் நியுரோ சயின்ஸ் வழிமுறைகளைப் பயன்படுத்தி, நவீனக் கல்வியைப் போதிப்பது குறித்த புதிய திட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆய்வில் உள்ளது. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ மாணவிகளின் மூளையின் செயல்திறனை அதிகரிக்கும் நியுரோ சயின்ஸ் பாடத் திட்டம், பள்ளி மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையில், சர்வதேச நிறுவனமான, Perform Concepts International என்ற நிறுவனம், இந்தியாவில் தன்னுடைய செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளது. ஆகவே, தமிழகத்திலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மனித மூளை சற்று சிக்கலானது. இப்படி நியுரோ சயின்ஸ் பற்றியெல்லாம் இங்கே கேட்கக்கூடிய, சிக்கலான

கேள்விகளையெல்லாம் எழுப்பக்கூடிய வகையிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினரைத் தூண்டக்கூடிய வகையிலும் அது அமைந்திருக்கிறது. (சிரிப்பு) இருந்தாலும், அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய குழந்தைகளை எடுத்துக்கொண்டால், ஒருசில குழந்தைகள் நன்றாகப் படிக்கக்கூடிய குழந்தைகளாக அமைந்திருக்கின்றன; சில குழந்தைகளை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், படிப்பிலே அவ்வளவு ஆர்வமில்லாமல், மெத்தனமாக இருக்கும். ஒருசில குழந்தைகள், சிறு வயதிலேயே நான்கு மொழிகள் பேசும்; சில குழந்தைகளுக்கு தாய்மொழியையே, கட்டாய மொழியாகக் கொண்டுவரக்கூடிய நிலையும்கூட இருக்கிறது. எனவே, மூளையினுடைய செயல்திறனை அறிந்து, நரம்பு மண்டலங்களுடைய செயல்பாடுகளை உணர்ந்து, அந்தந்தக் குழந்தைகள் கல்வியைக் கற்கக்கூடிய வேறுபாடுகள்; ஒவ்வொரு குழந்தையும், கல்வியைக் கற்றுக் கொள்வதிலே இருக்கக்கூடிய வேறுபாடுகளை உணர்ந்து, அவர்களுக்குள்ள தனித்திறமையை கண்டறிந்து, அவற்றை வளர்க்கக்கூடிய வகையிலே, உபகாரணிகளாக அமையக்கூடிய அந்த கல்விதான், அந்த நியுரோ சயின்ஸ்மூலமாகச் சொல்லக்கூடிய அந்தக் கல்வி.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், முன்பெல்லாம் முதுமொழி, 'விளையும் பயிர், முளையிலேயே தெரியும்' என்று சொல்வார்கள். இப்போது 'விளையும் பயிர், மூளையிலேயே தெரியும்' என்பதற்கான அந்த ஒரு புது மொழியாக, வரக்கூடிய இந்தத் துறை குறித்த ஆய்வுகள், சர்வதேச அளவிலும், நம்முடைய இந்திய அளவிலும்கூட நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும்கூட, அவற்றை நம்முடைய பாடச் சூழ்நிலைக்கு, நம்முடைய தமிழ்நாட்டிலே தற்போது இருக்கக்கூடிய பாடச் சூழ்நிலைக்கு, உடனடியாகக் கொண்டு வர முடியுமா என்று சொன்னால், அதுகுறித்து விரிவான ஆய்வுகளை எல்லாம் மேற்கொண்டுதான், அதைக் கொண்டுவர முடியும். அரசு அந்த ஆய்வுகளை மேற்கொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் ஆய்ந்து தெளிந்தபின்தான், அதனைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் பெரும்பாலும் பழுதடைந்து, உடைந்து விழக்கூடிய நிலையில் இருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய நாகர்கோவில் சட்டமன்றப்





பேரவை தொகுதிக்குட்பட்ட, தெங்கம்புதூர் பகுதியில், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட ஒரு பள்ளிக் கட்டடம், உடைந்து பழுதடைந்திருக்கிறது. நான் நேரடியாக அங்கே மாவட்ட ஆட்சித் தலைவருடன் சென்று, அதைப் பார்வையிட்டேன். அங்கே, அது என்றைக்குக் கீழே விழுந்து உடையுமோ? அதனால் மாணவர்களுக்கு ஒரு பெரிய பாதிப்பு வரக்கூடிய நிலையிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரே சொல்லியிருக்கிறார்கள்; 'இதை நீங்கள் சட்டமன்றத்திலேகூட பேசலாம்; ஒரு நல்ல கருத்து' என்று சொல்லியிருக்கிறார்கள். தயவு செய்து, அந்தக் கட்டடத்தை மீண்டும் கட்டித் தந்து, மாணவர்களின் உயிரைக் காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதோடு, கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில் கட்டப்பட்ட அந்தக் கட்டடம் உடைகிறது. எனவே, அதில் ஏதாவது ஊழல் நடந்திருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்பதையும் நான் கேட்டுக்கொண்டு, இதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பாரா என்பதை உங்கள்மூலம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்குத் தொடர்பில்லாவிட்டாலும்கூட, பொதுவாக, கட்டடங்கள் பழுதுபட்டிருப்பது என்பது, அந்தக் கட்டடத்தினுடைய கால வயதினுடைய தன்மையிலேகூட அமையக்கூடிய ஒன்று. நீண்ட நெடுங்காலமாக இருக்கக்கூடிய பல கட்டடங்கள், பழுதுபார்க்க வேண்டிய நிலைமையில் இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த முறை அறிவித்திருப்பதைப்போல, பள்ளிக் கட்டடங்களுக்கெல்லாம், பழுதுபார்க்கக்கூடிய அந்த நிலையாக இருந்தாலும், புதிய பள்ளிக் கட்டடங்களை உருவாக்குவதாக இருந்தாலும், அவற்றைத் தொடக்கப பள்ளி அல்லது upper primary வரை இருககக்கூடிய பள்ளிகளுக்கு, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்மூலமாக, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு, நபார்டு வங்கியினுடைய உதவியோடு, ஆங்காங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதி ஆகியவற்றின்மூலமாகக் கட்டடங்களைக் கட்டிட வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில், இந்த ஆண்டு, ஏறத்தாழ 530 கோடி ரூபாய்க்குப் புதிய கட்டடங்களைப் பள்ளிகளுக்கு உருவாக்குவதற்கு அரசு திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, அந்த வகையிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பகுதியிலே, எந்தெந்தப் பள்ளிகளில் இருக்கக்கூடிய கட்டடங்களுக்கெல்லாம், இப்படிப் புதிய

கட்டடங்கள் உருவாக்கிட வேண்டும்; பழுது நீக்கிட வேண்டுமென்ற தகவல்களை அவர்கள் எனக்குத் தருவார்களென்றால், நிச்சயமாக முன்னுரிமை அடிப்படையில், இந்த ஆண்டு அவற்றையெல்லாம் அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கேள்வி நேரத்திலே, யாரும், யாரைப்பற்றியும் குற்றச்சாட்டுச் சொல்லக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன்.

*முற்பகல் 10-10*

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுடைய மூளை வளர்ச்சி மற்றும் மனதை ஒருமுகப்படுத்துதல் போன்ற வகையிலே அண்டை நாடுகளான சீனா, மலேசியா போன்ற நாடுகளில் இருக்கின்ற Abacus என்ற கணித பாட முறையை இன்றைய நாட்களிலே ஆங்காங்கு தமிழகம் எங்கும் தனியார் நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. அதைத் தொடக்கக் கல்வியிலே கற்றுக் கொடுத்தால் குழந்தைகளுடைய மனம் மற்றும் மூளை வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும். அதை அமல்படுத்த நமது அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதை கல்வித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து, தங்கள் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முன்கூட்டியே சொன்னேன். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தனிப்பட்ட திறமை இருக்கிறது. Multiple intelligence skill. பன்முக திறமைகள் ஒவ்வொரு குழந்தைக்கும் பார்த்தோம் என்று சொன்னால், எட்டுவிதமான திறமைகள் அமைந்திருக்கக்கூடியவை என்று கருதப்படுகிறது. எனவே, அது அது அந்தக் குழந்தைகளுடைய திறமையைக் கண்டறிந்துதான் செய்யக்கூடியது. Abacus இப்போது பல பள்ளிகளிலும்கூட இருக்கிறது. இருந்தாலும் ஒட்டுமொத்தமாக தொடக்கக் கல்வியிலே இருக்கக்கூடிய அத்தனை பிள்ளைகளுக்கும் Abacus-ஐ இங்கே கொண்டு வருவது என்பது அந்தக் குழந்தைகளுக்கு இருக்கக்கூடிய சுமையை அதிகரிக்கக்கூடியதாகவே அமைந்துவிடக்கூடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.





**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சிறப்பாக நல்ல கல்வி போதிக்கப்படுகிறது. குறிப்பாக தமிழகத்தில் நவீன கல்வியை சிறப்பாக நாம் நடத்தி வந்தாலும் தமிழ்வழிக் கல்வியில் ஆங்கிலம் நீங்கலாக அனைத்துப் பாடங்களும் தமிழிலேயே படித்து சிறப்பாக முன்னேறி வருகின்றார்கள். 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்விக்கு ஆங்கிலத்தில், ஆங்கிலம் ஒரு பாடமாக போதிக்கப்பட்டாலும் 12 ஆம் வகுப்பு முடிந்து வெளியே வருகின்ற மாணவ மாணவிகள் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகின்ற வாய்ப்பை பெறாமலே வந்து, பொறியியல் முடித்து வெளியே வந்தாலும்கூட, ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரியாத காரணத்தினாலே பல பேர் வேலை வாய்ப்பை இழந்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வி பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதற்கு Spoken English அந்த முறையை அதிகமாகப் பயன்படுத்தி, எல்லாப் பள்ளிகளிலும் பயன்படுத்தி ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகின்ற வாய்ப்பையும் பெற்று பள்ளிக் கல்வியை முடித்து வருகின்ற வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்தித் தருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆங்கில அறிவைப் பொறுத்தமட்டிலே தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மாணவர்கள்தான் மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடியவர்களைவிட சிறப்பான ஆங்கில அறிவைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். பொதுவாகவே, தமிழ்நாட்டில் இருக்கக் கூடியவர்களிடத்திலே ஆங்கில அறிவு அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினால்தான் பிற நாடுகளிலிருந்துகூட அவர்கள் வேலைக்கு எடுக்கிறபோது அல்லது அங்கே University களுக்குப் படிக்கச் செல்லுகிறபோதுகூட தமிழ்நாட்டு மாணவர்களுக்கு அதிக அளவிலே அங்கே வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. அவர்கள் சொல்வதைப்போல, ஒரு நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்பாக சிங்கப்பூரிலிருந்து வந்த கல்வி அமைச்சர்கூட நம்முடைய மாண்புமிகு உயர்க் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், என்னிடத்திலும் பேசிக்கொண்டிருக்கிற போதுகூட இந்தக் கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். உங்களுடைய மாணவர்கள், உங்களுடைய சென்னையிலே இருக்கக்கூடியவர்கள் குறிப்பாக இந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் ஆங்கிலத்தை மிக அழகாகப் பேசுகிறார்கள், ஆங்கில மொழியிலே வல்லமை பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள் என்ற கருத்தைக் கூட அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய கிராமப்புற மாணவர்கள்,

நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல அவர்களுக்கும் ஆங்கில அறிவை ஊட்டுவதற்காக, ஏற்கெனவே English Laboratories என்று சொல்லக்கூடிய ஆங்கில ஆய்வகங்கள் இப்போது பள்ளிகளிலே தொடங்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு Spoken English–லே உரையாடக்கூடிய அந்தத் திறமையைத் தருவதன்மூலமாக பின்னாலே அவர்கள் வேலைவாய்ப்புக்குப் போகிறபோது, அவர்களுக்கு ஒரு தன்னம்பிக்கையை உருவாக்கக்கூடிய வகையில் அந்தப் பயிற்சிகள் எல்லாம் அரசு கொடுப்பதற்கான, முறையான ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

*முற்பகல் 10-15*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு திறமைகளை உள்ளடக்கி வைத்திருக்கின்ற குழந்தைகளுக்கு அவர்களுடைய மூளைக கூறு அடிப்படையிலே கல்வி கொடுப்பதைப் பற்றிய பதில்களை ரொம்பவும் தெளிவாகச் சொன்னார்கள். இப்போது கிராமங்களிலே போகின்றபோது, ஒவ்வொரு கிராமத்திலேயும் மூளை வளர்ச்சி குறைந்த குழந்தைகளை, அதை ஆங்கிலத்திலே இப்போது differently abled children அல்லது children with Down's Syndrome என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளை நகர்ப்புறங்களில் இருக்கின்ற வசதியான பெற்றோர்கள் அதற்கான சிறப்புப் பள்ளிக்கூடங்களிலே Special Schools அதிலே சேர்த்து அந்தக் குழந்தைகளுக்கு ஏதாவது ஓர் அடிப்படையில் வாழ்க்கை நடத்தக்கூடிய அந்தக் கல்வியை கற்றுக்கொடுப்பதற்கான சூழ்நிலை சென்னை போன்ற பெருநகரங்களிலே இருக்கிறது. ஆனால், எங்களைப்போல, ஊரகப் பகுதியிலேயிருந்து வருகின்றபோது, அந்தக் குழந்தைகளைப் பார்த்தால் மிகவும் பரிதாபகாமாக இருக்கிறது. அந்தப் பெற்றோர்களுக்கும் அந்தக் குழந்தைகளை என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஆனால், இப்பொழுது, இந்த Sarva Shiksha Abhiyan—S.S.A.—என்கிற மத்திய அரசினுடைய திட்டத்தின்கீழே, அந்த Special Children — அந்த தனிப்பட்ட குழந்தைகளுக்காக ஒரு சிறப்பு நிதியையே ஒதுக்கீடு செய்கிறார்கள். எனவே நான், உங்கள் மூலமாக நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது, ஊராட்சி ஒன்றியப்





பள்ளிகளிலே, கூடுமானவரை ஒவ்வொரு பள்ளிகளிலும் ஒரு வகுப்பாவது, இதைப்போன்ற மூளை வளர்ச்சி குறைந்த குழந்தைகளை, நாள் முழுவதும் வைத்துப் பாதுகாத்து, அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கிற வகையிலே, அதற்காக இப்போது Special Teachers — சிறப்பு ஆசிரியர்கள்கூட இருக்கிறார்கள். அதற்கான வகுப்புகளைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அந்தக் குழந்தைகளுக்கு, மன வளர்ச்சி குன்றி இருக்கக்கூடிய தழந்தைகளுக்கு, எந்தவகையிலே சிறப்பான கல்வியை அளிக்க வேண்டுமென்று, இங்கே அழகாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் கோடிட்டுக் காட்டிய அந்த விவரங்களுக்குள்ளே, அரசு ரற்கெனவே இந்த விஷயத்தில் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளும்கூட, அதிலே அடங்கியிருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், மன வளர்ச்சி குறைந்திருக்கக்கூடிய குழந்தைகளுக்கு, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் அடிப்படையிலே — Sarva Shiksha Abhiyan என்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, N.G.O.s என்று சொல்லக்கூடிய ன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் அதில் இணைத்துக்கொண்டு, கர்ப்புறப் பகுதிகளில் மாத்திரமல்லாமல், கிராமப்புற, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலே இருக்கக்கூடிய கிராமங்களிலும், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின்மூலமாக அரசும், அதேபோல தன்னார்வத் தொண்டு றுவனங்களையும் இணைத்து, அவர்கள்மூலமாக அந்தக் குழந்தைகளுக்கு, அங்கே முதலிலே அடிப்படையான பயிற்சிகளை அளிப்பதற்கு, அரசு இப்போது அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இந்த mentally retarded hildren என்று சொல்லக்கூடிய மன வளர்ச்சி குறைந்திருக்கக்கூடிய ழந்தைகளாக இருந்தாலும்சரி, அல்லது physically challenged children ன்று சொல்லக்கூடிய குழந்தைகளாக இருந்தாலும், அவர்கள் normal tream–லே இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு, பொதுவாகப் படிக்கக்கூடிய ழந்தைகளுக்கு இணையாக, உடனடியாக அவர்கள் வந்துவிட முடியாது. னவே, அவர்களுக்கு முதலிலே ஒரு சிறப்பு பயிற்சியைக் கொடுக்கக்கூடிய கையிலே, அங்கே ஆசிரியர்கள்கூட இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக ந்தப் பயிற்சி, முறையாக அங்கே வழங்கப்பட்டு, அவர்கள் ஓரளவிற்கு திலே தேர்ந்ததற்குப் பிறகு, அவர்களுக்கு நம்முடைய ஊராட்சி ன்றியப் பள்ளிகளிலே, முறையான அந்தக் கல்வியை அளிக்கக்கூடிய சதியை ஏற்படுத்த அரசு இப்போது உத்தேசித்திருக்கிறது. இன்னும் சால்லவேண்டுமென்றால், அதற்கு ஒருபடி மேலேபோய், இன்றைக்குக் ாலையிலே கூட, Indian Express பத்திரிகையிலே அது குறித்து ஒரு

article-கூட வந்திருக்கிறது. அதற்கும் ஒருபடி மேலேபோய், அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் பின்னாலே உதவக்கூடிய வகையிலே, தொழிற்கல்வி படிப்புகளை உருவாக்கக்கூடிய வகையிலேயும்கூட, இருக்கக்கூடிய வாய்ப்புகளை உருவாக்கிடவேண்டும் என்று, அந்த வாய்ப்புகள் குறித்தும் அரசு இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக அவையெல்லாம் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்களெல்லாம் பள்ளிக்கூடங்களிலே படிக்கும்போது, Moral Science என்று ஒரு வகுப்பு இருந்தது. அதாவது இன்றைக்கு, எவ்வளவுதான் படித்தாலும், ஒழுக்கம் இல்லாவிட்டால் அவர்கள் வாழ்க்கையிலே நல்லபடியாக இருக்க முடியாது. படிப்பு எவ்வளவு இருந்தாலும், ஒழுக்கமும், நன்னடத்தையும் இல்லையென்றால், நல்லபடியாக இருக்க முடியாது என்பதற்காக அந்த Moral Science— நீதிபோதனைக் கதைகளுக்கென்று ஒரு class நடத்திக்கொண்டிருந்தார்கள். அதற்கு examination எல்லாம் கிடையாது. அதை நடத்திக் கொண்டிருந்தார்கள். சுமார் பத்தாண்டுகளுக்கு மேலாக என்று நினைக்கிறேன், அது நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆனால், இன்றைக்கு மாணவர்களுக்கு ஏகப்பட்ட distortions இருக்கக்கூடிய சூழ்நிலையிலே, மீண்டும் அந்த Moral Science class-ஐ, Moral Education-ஐப் பள்ளிக்கூடங்களில் ஆரம்பிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒழுக்கப் போதனைகளைப் பற்றி அரசு தெளிவாக இருக்கிறது. When character is lost, everything is lost என்று சொல்வார்கள். எனவே, ஒழுக்கம் குறித்த அந்தப் பாடப் போதனைகளை நிறைவேற்றுவதிலே, அரசு உண்மையிலேயே ஆர்வம் கொண்டிருக்கிறது. நீங்கள் குறிப்பிடுவதைப்போல, மாணவர்களாக நாங்களெல்லாம், நீங்களெல்லாம் இருந்த காலகட்டத்திலே, Moral Science என்ற அந்த period-லே நீதிபோதனை வகுப்புகளெல்லாம் நடந்து கொண்டிருந்தன. ஆனால், காலத்தினுடைய அந்தக் கெடுபிடியைப் பார்க்கும்போது, இப்போது இருக்கக்கூடிய மாணவர்களுக்கு, Physics, Chemistry, Maths இந்த மூன்றிலும் 200 out of 200 என்று எடுத்தால், அவர்களுக்கு Medical College, Engineering College-களில் இடம் கிடைக்கும் என்ற ஒரு





நெருக்கடியான சூழ்நிலை இருக்கிறது. That is because of the competitive environment. அதனாலே, வரக்கூடிய சூழ்நிலைகளிலே, இப்போது அத்தகைய வகுப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட அந்தப் பாடவேளைகளையெல்லாம், மற்ற வகுப்புகள் கொஞ்சங்கொஞ்சமாக ஆக்கிரமிக்கத் தொடங்கி, இன்றைக்குப் பல இடங்களிலே அந்த வகுப்புகள் இல்லை. இருந்தாலும்கூட, அந்தச் சூழ்நிலையை அரசு கருத்திலேகொண்டு, இப்போது எப்படி ஒரு குறிப்பிட்ட பாட வேளையிலே, உடல் கல்விக்கு, Yoga கொண்டுவர வேண்டுமென்று அரசு இருப்பதைப்போல, நூலகங்களுக்குக் கொடுக்கக்கூடிய அந்த நேரம், அதைப்போல Moral Science — நீதிபோதனைகளுக்கான அந்த வகுப்புகளெல்லாம், குறிப்பாக கீழே இருக்கக்கூடிய பள்ளிகள் — Primary and Upper Primary என்று சொல்லக்கூடிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் — அளவிலும்கூட, இவற்றிற்கெல்லாம் முறையான பாட வேளைகள் ஒதுக்கப்பட வேண்டுமென்று அரசு கருதுகிறது. அதற்காக உரிய அறிவிக்கைகளை சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு அரசு அனுப்பி இருக்கிறது. அவை முறையாக வருங்காலங்களிலே பின்பற்றப்பட வேண்டுமென்பதிலே அரசு ஆர்வமாக இருக்கிறது.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது Neuro Science பற்றி பள்ளிக் கல்வியிலே வினா எழுப்பப்பட்டுள்ளது. இதையும் அமைச்சர் அவர்கள் மிகச் சிக்கலான வினா என்று சொன்னார்கள். ஆனால், நான் மிக மிக அடிப்படையான ஒரு வினாவை எழுப்ப முன்வந்திருக்கிறேன். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் கேட்காதீர்கள்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** வருகிறேன், வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்களெல்லாம் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) ஜெயராமன், உட்காருங்கள். நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்....

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** வருகிறேன், வருகிறேன், வருகிறேன். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விஷ்ணுபிரசாத் இதுவரை சொன்ன அந்த வார்த்தைகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விஷ்ணுபிரசாத் அவர்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டுகளெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) சொல்லியாகிவிட்டது (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. விஷ்ணுபிரசாத் சொன்ன அந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கேள்வி, மூலக் கேள்விக்கும் தொடர்புடையது அல்ல, கல்வி அமைச்சருக்கும் நேரடியாகத் தொடர்புடையது அல்ல. ஆகவே, அப்படிப்பட்ட கேள்வியை, இந்த நேரத்தில், இந்தக் கேள்வித் தொடர்ச்சியில் எடுத்துக்கொள்ள இயலாது என்பதைத் தாங்கள் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கேள்வியினுடைய முழுக் குறிப்பையும் எடுத்துவிடுங்கள்.

வினா எண் 127, மாண்புமிகு உறுப்பினர் ஆர். சாமி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**127—**

## விளையாட்டு மைதானம்

***82—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மேலூர் நகரத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் நகரத்தில் விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் நகரில் விளையாட்டு மைதானம் அமைத்துத் தரவேண்டும் என்கிற என்னுடைய கேள்விக்கு அமைச்சர் அவர்கள் வினா எழவில்லை என்று பதிலளித்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், இன்றைக்கு நாடு வளர்ச்சி அடைய வேண்டுமென்றால், விளையாட்டுத் துறையிலும் முன்னேறினால்தான் பல்வேறு நாடுகளிலே சென்று விளையாடுகின்றபோது, நம்முடைய நாடு, பெரும் புகழும் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். மேலூர் நகரிலே கேட்பதற்குக் காரணம், உலக அளவிலே, கடந்த காலங்களிலே volley ball விளையாட்டிலே முதல் அர்ஜுனா விருது பெற்றவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த அருமை நண்பர் பழனிச்சாமி அவர்கள் மேலூரிலேதான் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அதைப்போல, தடகள வீராங்கனை சோளபதி போன்றவர்களெல்லாம் பல்வேறு உலக நாட்டிலே சென்று பதக்கங்களைப் பெற்றுவந்த வீரர்கள், வீராங்கனைகள் எல்லாம் மேலூர் தொகுதியிலேதான் இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்பொழுதும், அதிகமாக தமிழ்நாட்டிலே விளையாட்டுத் துறையிலே இருக்கின்ற 6 விளையாட்டுப் பயிற்சி மையங்களிலே, மேலூர் தொகுதியைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப் படித்து வருகின்றனர். ஆகையால், அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், மேலூர் நகரை ஒட்டிய பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஐந்து ஏக்கர் நிலம், விளைச்சல் நிலம், அதாவது விளையக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. அதை, ஆண்டுதோறும் குறைந்த குத்தகைக்குத்தான் ஏலம் விடுகிறார்கள், விவசாயம் செய்வதற்கு. பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான அந்த ஐந்து ஏக்கர் இடம் மேலூர் நகரை ஒட்டியே காலியாக இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் உலகத் தரம் வாய்ந்த ஒரு விளையாட்டு மைதானமாக அமைத்துத் தந்தால், அங்கே மேலூர் தொகுதியிலே இருக்கின்ற அனைத்து

விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், விளையாடி, உலக அளவிலே சாதனை புரிவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து, இதை இந்த ஆண்டு இல்லையென்றால் அடுத்த ஆண்டு செய்துதர முன்வருவாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலுள்ள ரேஸ் கோர்ஸ் விளையாட்டு அரங்கம், தமிழ்நாடு விளையாட்டு அரங்க மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதில் ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம், சிறுகபந்து உள்விளையாட்டு அரங்கம், மற்றும் உடற்பயிற்சிக்கூடம் ஆகியவை அமைந்துள்ளன. இந்த வெளி விளையாட்டு அரங்கில், சர்வதேச அளவிலான போட்டிகள் நடத்துவதற்கு ஏதுவாக, தடகள செயற்கை இழை ஓடு பாதை, சுமார் 2.50 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. இதுமட்டுமின்றி, ஒரு கால்பந்து ஆடுகளம், இரண்டு வளைகோல் பந்து ஆடுகளம், இரண்டு கூடைப்பந்து ஆடுகளங்கள், இரண்டு கையுந்துபந்து ஆடுகளங்கள், ஆகியவை இந்த மைதானத்தில் அமைந்துள்ளன. இதுதவிர 50 இலட்சம் ரூபாய் செலவில், தற்போது ஒரு நீச்சல் குளம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்டுள்ள அந்த திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தைப் பயன்படுத்துவதற்கு, இந்த விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற யோசனையையும் தெரிவிக்கும் அதேநேரத்தில், மாவட்ட அளவில் ஏற்படுகின்ற, இதுபோன்ற விளையாட்டுத் திடல்கள் தவிர, தாலுகா அளவிலும் அமைப்பதற்கு, ரூ.30 இலட்சம் செலவில், சிறிய, மினி விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கு, ஏற்கெனவே அரசு கொள்கையில் உள்ளது. அதற்கு முறைப்படி 5 ஏக்கர் நிலம் விளையாட்டு ஆணையத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலமாக, ஒப்படைக்கப்பட்டு, அதற்கு அளிக்கப்பட வேண்டிய மக்கள் பங்களிப்பும் அளித்தால், இருக்கின்ற நிதி ஆதாரத்திற்கு ஏற்ப, இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.



**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவாகள், பங்குத்தொகையும், இடமும் அளித்தால் அமைத்துத்தரப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். பங்குதொகையைக் கொடுப்பதற்கு, நாங்கள், பொதுமக்கள் தயாராக இருக்கின்றோம். பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 5 ஏக்கர் நிலம், அதாவது இடம் என்றால் கட்டடத்திற்கு அல்ல, விவசாயத்திற்கு பயன்படக்கூடிய நிலமாக இருந்து, குறைந்த குத்தகைக்கு வருடத்திற்கு 200, 300 ரூபாய் ஏலத்திற்கு விட்டு அந்த நிலத்தைப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அந்த 5 ஏக்கர் பொதுப் பணித் துறை இடம் என்பது அரசாங்கத்தினுடைய இடம்தான். அந்த இடத்தை அரசாங்கம் எடுத்து அதில், விளையாட்டு மைதானம் அமைத்துத் தந்தால், நாங்கள் பணம் கட்டுவதற்கு பொதுமக்கள் பங்களிப்பதற்கு தயாராக இருக்கின்றோம். அமைச்சர் அவர்கள் அதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலிலே அவர் கேட்டதற்கு பதிலும் இடம்பெற்றிருக்கிறது. திரும்பவும் சொல்கிறேன். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் 5 ஏக்கர் நிலத்தை ஒப்படைக்கும்பட்சத்தில், நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் பங்களிப்புடன் ஒரு சிறிய விளையாட்டு அரங்கம் அமைத்துக்கொடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா வாரியாக 30 இலட்சம் செலவில், 5 ஏக்கர் நிலம் கொடுத்தால், அரசாங்கம் ஒரு சின்ன விளையாட்டு அரங்கத்தை உருவாக்கித் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதே நேரத்திலே சென்னையிலேயிருக்கின்ற நேரு விளையாட்டு அரங்கத்தைப்போல, எழும்பூரிலே இருக்கின்ற ஸ்டேடியத்தைப்போல, சென்னைக்கு அருகிலே இருக்கின்ற இடங்களில் 40–50 கிலோ மீட்டருக்குள்ளே, அதுபோன்ற ஸ்டேடியங்களை உருவாக்கி, சென்னையிலேயே நடைபெறுகின்ற இந்த விளையாட்டுப் போட்டிகள் எல்லாம், கிராமப்பகுதிகளிலேயும் நடைபெறுவதற்குரிய ஒரு வாய்ப்பினை இந்த அரசு உருவாக்கித் தருமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

[2006 ஆகஸ்ட் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருப்பதுபோன்று கிராமப்புறங்களில் அமைப்பது என்பது, இப்போது இருக்கிற விளையாட்டுத் திடல்களை எந்த அளவிற்குப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பது ஒரு கேள்விக்குறிதான். காரணம், சர்வதேச அளவிலே போட்டி நடத்தவும், பயிலவும்தான், சென்னை போன்ற நகரங்களில் இதுபோன்ற விளையாட்டு மையங்கள் அமைக்கப்படுகின்றன. அதுபோல மாவட்டங்களில் கோயம்புத்தூர், இன்னும் பல முக்கியமான மாவட்டத் தலைநகரங்களில் எல்லாம் அமைக்கப்படுகின்றன. கிராமங்களில் உள்ள அந்த விளையாட்டுப் பகுதிகளை உருவாக்குவதற்காகத்தான், இந்த ஆண்டு விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற நோக்கத்தோடு, வயதுவரம்பின்றி, ஒன்றியங்களில், மாவட்ட அளவில், மாநில அளவில் வீரர்களைத் தேர்ந்தெடுத்து, போட்டிகள் நடத்தி, அதற்கான செலவுகளை ஏற்று பரிசுகளையும் கொடுப்பதற்கான ஓர் அடிப்படைத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலேயே அறிவித்திருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். வினா எண் 128, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**128—**

## தையற்பயிற்சிப் பள்ளி

***2072—திரு. சி. சண்முகவேலு:**

*மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் மகளிருக்காக தையற்பயிற்சிப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*



2006 ஆகஸ்ட் 31]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் ஒரு தையல் பயிற்சி நிலையம் சுழற்சி முறையில் வருடத்திற்கு ஒருமுறை இடமாற்றம் செய்து செயல்பட்டு வருகிறது. தற்போது மதுக்கரை என்ற இடத்தில் 31-12-2006 வரை இத்தையல் பயிற்சி நிலையம் செயல்படும். 1-1-2007 முதல் பயிற்சி நிலையம் தேவையிருப்பின் உடுமலைப்பேட்டைக்கு மாற்றம் செய்வது குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.*

**திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது மதுக்கரையிலே இருக்கக்கூடியதை சுழற்சி முறையிலே தேவைப்படும்பட்சத்தில் உடுமலைப்பேட்டைக்குக் கொண்டு வருவதாகக் கூறினார்கள். என்னைப் பொறுத்தவரை, நான் கூறிக்கொள்ள விரும்புவது, அந்த தையல் பயிற்சிப் பள்ளியானது பல்வேறு இடங்களிலே பயிற்சி கொடுத்து வருகிறது. அதிலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக்கூட பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அந்தத் தையல் பயிற்சி மையங்கள் மூலமாக பயிற்சி கொடுக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பெண்கள் சுய உதவிக் குழுவிலும் அதிகமான நபர்கள் அந்த தையல் பயிற்சியிலே ஈடுபட்டு, அதை ஆர்வமாக, ஒரு தொழிலாகச் செய்யக்கூடிய வகையிலே, அருகிலே இருக்கக்கூடிய திருப்பூர் போன்ற பகுதியிலே, அந்த நூல்களை, அந்தத் துணிகளைக் கொண்டுவந்து தைக்கக்கூடிய வகையிலே, அந்த தையல் பயிற்சியிலே, அதிகம் பயிற்சி பெற்றுள்ளார்கள். சுய உதவிக் குழுவைச் சேர்ந்த அந்தப் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய வகையிலே, அவர்களுக்கு அந்தத் தையல் பயிற்சியைக் கொடுக்கக்கூடிய வகையிலே, நடப்பு ஆண்டிலேயே அதற்கென்று தனியாக ஒரு சொசைட்டியோ அல்லது ஒரு சங்கமோ அமைக்கக்கூடிய ஒரு வாய்ப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து, நடத்திக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். அதோடு, அந்தப் பகுதியிலே, உடுமலை பகுதிக்குட்பட்ட வனப் பகுதியிலே 14 செட்டில்மென்ட் பகுதிகள் உள்ளன. அங்கு பெண்கள் சுய உதவிக் குழுவினர் அதிகமாக உள்ளார்கள். அங்கே இருக்கக்கூடிய பெண்களும் குழுவிலே அங்கம் வகிக்கிறார்கள். தையல் பயிற்சியிலேயும் பயிற்சி பெற்றுள்ளார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே சில மாவட்டங்களிலே...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** கேள்விக்குதான் வருகிறேன். சில மாவட்டங்களிலே கொடுக்கப்படுவதைப்போல, அந்த வனப் பகுதியிலே இருக்கக்கூடிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கக்கூடிய அந்தப் பயிற்சி மையங்களைப்போல, எங்கள் பகுதியிலே அந்த செட்டில்மென்ட் பகுதியிலும் ஒரு பயிற்சி மையத்தை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரின் கருத்தினை மனதில் கொண்டு, அதிகாரிகளிடம் கலந்து பேசி, கண்டிப்பாக அரசு இதனைப் பரிசீலிக்கும். மேலும், உங்கள் தொகுதியில் உள்ள பெண்கள் ஏற்கெனவே தையற் பயிற்சி பெற்றவர்களாக இருந்தால், சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ், தையல் இயந்திரம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக இருந்தால், இத்திட்டத்தின்மூலம் உங்கள் தொகுதி பெண்கள் பயன்பெறலாம் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கோவை மாவட்டத்திலே பெண்கள் சுய உதவிக் குழுக்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கு கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு அங்கு திட்ட அலுவலர் அவர்கள்மூலமாக grading கொடுக்கக்கூடியதை நிறுத்தி வைத்துள்ளார்கள். அதை உடனடியாகக் கொடுக்கக்கூடிய வகையிலே அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கூறிக்கொள்கிறேன். அதோடு, அங்கு இருக்கக்கூடிய தொண்டு நிறுவனங்கள், N.G.O.-கள், பதிவு செய்யப்படுவதை, மாவட்ட திட்ட அலுவலரிடமே பதிவு செய்யக் கூடாது என்றும், அதை மாநில அளவிலே Director-அவர்களிடம் பதிவு செய்ய வேண்டுமென்று கூறியுள்ளார்கள். அதையும் மாற்றி, அங்கேயே பதியக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்குமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**129—**

## கால்நடை மருத்துவமனை

***1440—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரகுளம், ராமானுஜம் புதூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சேரகுளம் மற்றும் ராமானுஜம் புதூர் கிராமங்களில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருங்குளம் ஒன்றியத்தில் உள்ள சேரகுளம், ராமானுஜம் புதூரில் 2000-க்கும் அதிகமான மக்கள் வசிக்கிறார்கள். அவர்களில் அதிகமானவர்கள் விவசாயத் தொழிலே செய்கிறார்கள். அதனால் அங்கு அதிகமான கால்நடைகள் உள்ளன. அங்கு அவசியமாக ஒரு கால்நடை மருத்துவமனை தேவை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில், சேரகுளம் மற்றும் ராமானுஜம் புதூர் கிராமங்களின் அருகில் 4 கிலோ மீட்டர் தூரத்தில் மூலக்கரைப்பட்டு கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. அதேபோல,

[2006 ஆகஸ்ட் 31

8 கிலோ மீட்டர் தூரத்தில் பேய்க்குளம் கிராமத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், கருங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலேயே 3 கால்நடை மருந்தகங்களும், 4 கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு கிராமங்களிலும் 2 ஆயிரம் விவசாயிகள் இருந்தாலும், கால்நடைகளின் எண்ணிக்கை சுமார் 1,900 தான், சோகுளம் கிராமத்திலுள்ளது; அதேபோல ராமானுஜம் புதூர் கிராமத்தில் 1,200 தான் உள்ளது. ஆதலால், இப்பொழுது அந்தச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று அக்கிராமங்களுக்கு அருகில் உள்ள கால்நடை நிலையங்களில் பணிபுரியும் நம்முடைய கால்நடை உதவி மருத்துவரை அனுப்பி சிகிச்சைப் பணி மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

**திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதியில் அரவட்லா, பாஸ்மார்பென்டா பகுதிகள் அடர்ந்த காட்டுப் பகுதியிலே, பேரணாம்பட்டிலிருந்து 12 கிலோமீட்டர் தொலைவிலே இருக்கின்றன. மேலும், தரை மட்டத்திலிருந்து 500 மீட்டர் உயரத்திலே அந்தப் பகுதி இருக்கின்றது. அடர்ந்த காட்டுப் பகுதியிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கால்நடை வளர்ப்பும், விவசாயமும்தான் முக்கியத் தொழிலாக இருக்கின்றது. அங்கு கால்நடை மருத்துவமனையை அல்லது துணை கால்நடை மருத்துவமனையை அமைத்தால், அந்த மக்கள் கால்நடைகளைப் பராமரிப்பதற்குப் பேருதவியாக இருக்கும். ஆகவே, அந்தக் காட்டுப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த மக்களுக்கு ஒரு துணை கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு ஆய்வு செய்து உரிய முடிவு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.



2006 ஆகஸ்ட் 31]

**130—**

## தொழிற்சாலை

***1—திரு. துரை சந்திரசேகரன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், புதுக்குடி கிராமத்தில் புதிய பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் பால் உற்பத்தி முழுவதும் சென்னை மாநகர விற்பனைக்காக அனுப்பிவைக்கப்படுகிறது. ஆகையால், தஞ்சை மாவட்டம், புதுக்குடி கிராமத்தில் பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–2001 ஆம் ஆண்டு கழக ஆட்சிக் காலத்தில் தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் புதுக்குடி கிராமத்தில் பால் பண்ணை அமைக்க மத்திய அரசிடமிருந்து நிதி பெற முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. மறுபரிசீலனை செய்து இத்திட்டத்தை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தில் உள்ள பால் பண்ணையை புதிய பொலிவுடன் மேம்படுத்தி பன்னாட்டு தரச் சான்று பெறத்தக்க வகையில் உயர்த்திட திட்டம் தயாரிக்கப்பட்டு தீவிர பால் பண்ணை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 100 சதவிகித மானியமாக 8.59 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் உற்பத்தியாகும் பால் முழுவதும் கொள்முதல் செய்யப்பட்டு, சென்னை மாநகர

விற்பனைக்காக எடுத்துக்கொள்ளப்படுவதால், உபரியாக பால் இல்லாத நிலை உள்ளது. ஆகையால், புதுக்குடியில் தனியாக, புதிதாக பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்குச் சொந்தமாக புதுக்குடியில் உள்ள நிலத்தில் உயர் இரக கலப்பின பொலிக் காளைகள் மற்றும் எருமையின பொலிக் காளைக்ள் பண்ணை அமைக்கத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பொலிக் காளைகள் பண்ணைமூலம் தமிழகத்திலுள்ள அனைத்து பால் கூட்டுறவு சங்கங்களிலுள்ள பால் உற்பத்தியாளர்களின் பசு மற்றும் எருமையின அபிவிருத்திக்குத் தேவையான உயர் இரக பொலிக் காளைகள் விந்து அதிக அளவில் தயார் செய்து வழங்க வாய்ப்புள்ளது. மேலும், புதுக்குடியில் உள்ள 15 ஏக்கர் நிலத்தை சீர் செய்து, உயர் இரக வீரிய பசும்புல் பண்ணை அமைக்கத் தேவையான பூர்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தப் பண்ணையில் உற்பத்தியாகும் பசும்புல் தஞ்சை மாவட்ட பால் உற்பத்தியாளர்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க வாய்ப்புள்ளது, என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு :** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 2. தகவல் கோரல்

### (அ) தமிழ்நாடு நகரமைப்புச் சட்டப் பிரிவு உயர் நீதிமன்றத்தால் இரத்து செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.*

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய சிறப்பான அனுமதியின்மூலம் ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து நம்முடைய அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்நாடு நகரமைப்பு திருத்தச் சட்டம் பிரிவு 113 (அ), சென்னை உயர் நீதிமன்றத்தால் 23–8–2006 ஆம் தேதி அன்று இரத்து செய்யப்பட்டது. அதாவது, விதிமுறை மீறி சென்னையிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் கட்டப்பட்ட*



*கட்டடங்களுக்காக நம்முடைய சட்டசபையில் அனுமதிக்கப்பட்ட வரைமுறை திருத்தச் சட்டத்தை மூன்று முறை நீட்டித்தது செல்லாது என்று சென்னை உயர் நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்து, அந்தத் தீர்ப்பின்மீது இப்போது உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யப்பட்டு, ஏறக்குறைய 30,000 மனுக்கள் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் 2002 ஆம் ஆண்டு வரை பல்வேறு கட்டட உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்டு, இன்று அந்தத் தீர்ப்பின்மூலம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.*

*(முற்பகல் 10-40*

*இதிலே முக்கியமான செய்தி என்னவென்றால், 1999 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு, கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், அதுசம்பந்தமாக நாம் நிறைவேற்றியுள்ள வரைமுறை திருத்தச் சட்டத்தை முழுவதிலுமே நடைமுறைப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலைக்கு இந்த உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பும், உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பும், அதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி உள்ளது. இதிலே இன்னொரு கோணம் என்னவென்று சொன்னால், இப்போது உச்ச நீதிமன்றத்திலே அளிக்கப்பட்ட தீர்ப்பிலே அவர்கள், இந்த 30,000 மனுக்களைப் பரிசீலனை செய்வதற்காக ஒரு கண்காணிப்புக் குழுவினை, உச்ச நீதிமன்றமே நியமித்து இருக்கிறது. அதிலே ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள் மட்டுமல்லாது, சில தனியார்களையும் அந்தக் குழுவிலே நியமித்து, அந்தக் குழுதான் அந்த 30,000 மனுக்களையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரை, நான் இந்த அவையினுடைய கவனத்திற்கு என்ன கொண்டுவர விரும்புகிறேன் என்று சொன்னால், இது நம்முடைய அரசு, சட்டமன்றம், சட்டம் இயற்றி, இந்தப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் என்பது ஒரு* Statutory Body; *நம்முடைய சட்டமன்றமே அதற்கான அதிகாரத்தைத் தந்து அந்தக் குழுவை உருவாக்கியிருக்கிறது. அந்தக் குழுவிற்கு நாம் அதிகாரம் தந்திருக்கிறோம். அந்தக் குழுவினுடைய வேலையே, இந்தச் சென்னை பெருநகரிலே எழும்புகிற கட்டடங்களை முறைப்படுத்துவதுதான் வேலை. அந்தக் குழுவில் நிபுணர்களை வைத்திருக்கிறார்கள், அரசு அதிகாரிகள் இருக்கிறார்கள். எனவே, உச்ச நீதிமன்றத்திற்கு ஒருவேளை இதிலே ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மாநில அரசைத்தான் அவர்கள் பணித்திருக்க வேண்டும். இதை நீங்கள் பரிசீலனை செய்ய மாநில அரசு ஒரு குழு நியமிக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் மாநில அரசிற்குத்தான் அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்க வேண்டுமேயொழிய உச்ச நீதிமன்றமே அந்த அதிகாரத்தை தன்னுடைய கைகளில் எடுத்துக்கொண்டு, அவர்களே*

ஒரு குழுவை நியமித்திருப்பது, எனக்கு, இந்த மன்றத்தினுடைய அதிகாரத்திலும், நம்முடைய மாநிலத்தினுடைய அதிகாரத்திலும் உச்ச நீதிமன்றத்தினுடைய encroachment அல்லது transgression இருக்கிறதோ என்கிற என்னுடைய சந்தேகத்தையும், அப்படியிருந்தால் அதை நாம் அனுமதிக்கக்கூடாது என்கிற வேண்டுகோளையும் நான் இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

மேலும், இப்போது நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தமிழகமெங்கும் இருக்கின்ற, சென்னை பெருநகருக்கு வெளியே இருக்கின்ற பல்வேறு நகரங்களிலே இருக்கின்ற மனைப் பிரிவுகளை ஒழுங்குபடுத்துகின்ற ஒரு திருத்தச் சட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தி, நாம் அதற்கும் ஒப்புதல் அளித்திருக்கின்றோம். இப்போது அதற்கும் பொது நல மனு ஒன்று உயர் நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தங்களை நம்பி ஏறக்குறைய 400 கோடி ரூபாய் பணத்தை பொது மக்கள் கட்டி இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட, நாம் இயற்றுகிற அல்லது நாம் பரிசீலனை செய்து பல்வேறு கோணங்களிலே ஆராய்ந்து, பல அரசு அதிகாரிகளுடைய கருத்துகளை ஏற்றுக்கொண்டு, நிபுணர்களை ஏற்றுக்கொண்டு, நிறைவேற்றப்படுகிற சட்டங்களையெல்லாம், அதைப் பொதுமக்கள் நம்பி அவர்கள் ஏற்படுத்திக்கொள்கிற transactions, இப்போது இந்த 30,000 பேர்கள் இந்த அரசாங்கம் அளித்துள்ள உறுதியை நம்பி, பணம் கட்டி அவர்கள் flats வாங்கியிருக்கிறார்கள். இப்போது அதெல்லாம் கேள்விக்குறியாகி, ஒரு பெரிய பதற்றமான நிலை வருகிறது. அதிலும் நேற்று ஒரு கட்டடம் இடிக்கப்பட்டிருக்கிறது. வரைமுறைக்கு வராத கட்டடங்களை இடிப்பதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், அரசு அளித்த திட்டத்தின் அடிப்படையில் பணம் கட்டி நம்முடைய மாநில அரசை நம்பி, வீடு வாங்கியவர்கள் தெருவிற்கு வந்து விடுவார்களோ என்கிற பயம், 30,000 பேருக்கு இருக்கிறது. இதுசம்பந்தமாக அரசு என்ன நினைக்கிறது? என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கின்ற பிரச்சினை மிக மிக முக்கியமான பிரச்சினை, அதோடு சிக்கலான பிரச்சினையும்கூட. அவர்கள், இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட, எடுக்கப்பட்ட ஒரு முடிவை





நீதிமன்றம் புறக்கணித்து விடலாமா? அதற்கு மாறுபாடாக இன்னொரு கருத்தை, இன்னொரு முடிவை அறிவிக்கலாமா என்று ஒரு கேள்வியை கேட்டிருக்கின்றார்கள். ஆனால், எத்தனையோ சட்டங்கள், முடிவுகள், சட்டமன்றங்களிலே எடுக்கப்பட்டு, ஏன், பாராளுமன்றத்திலேகூட எடுக்கப்பட்டு, அவை நீதிமன்றங்களால் மறுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

(முற்பகல் 10-45

சமுதாயத்திலே மிக மிக முக்கியமான விகிதாச்சாரம் 69% வேண்டும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று நிறைவேற்றப்பட்ட, சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட, பாராளுமன்றத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஆதரிக்கப்பட்ட சட்டங்கள்கூட நீதிமன்றங்களிலே மறுக்கப்பட்டிருக் கின்றன. இப்பொழுது அண்மையிலே ஆசிரியர்களுக்காக பயிற்சிக் கூடங்கள், நிலையங்கள் அமைக்கப்பட்டதை ஆய்வு செய்ய ஒரு குழு, இந்த அரசின் சார்பிலே அமைக்கப்பட்டபோதுகூட, அந்தக் குழு முதலிலே தடுத்து நிறுத்தப்பட்டு, இடைக்காலத் தடை பெறப்பட்டு, பிறகு குழுவே நீதிமன்றத்தால் கலைக்கப்பட்டிருக்கிறது. எனவே, நீதிமன்றம் இடுகின்ற கட்டளைகளை, வழங்குகின்ற தீர்ப்புகளை, சட்டமன்றத்திலே ஆராய்வதும், அதைப் பற்றி கருத்துகளைச் சொல்வதும், நீதிமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் இடையிலே பிணக்குகள் தோன்றுவதும் நல்லதா என்ற இந்தக் கேள்விக்கு விடையளிக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். இருந்தாலும்கூட மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள், மாநில மன்றங்களுக்கு இருக்கவேண்டும் என்ற அந்தக் கருத்தின் அடிப்படையில் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்ன இந்தக் கருத்துகள் வரவேற்கத் தகுந்தவை, ஆதரிக்கத் தகுந்தவை; எனினும், இதுபற்றி நீதிமன்றத்தோடு மோதிக்கொள்கிற ஒரு நிலைமை வரலாமா என்பதை சட்ட வல்லுநர்களுடன் கலந்து பேசி, இதுகுறித்து என்ன செய்யலாம் என்பதை ஆராய்ந்து, அதற்குப் பிறகு முடிவு எடுப்பது நலம் என்று கருதுகின்றேன்.

அவர்கள், இந்தக் குழுவை நீதிமன்றம் அமைத்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நீதிமன்றமே அமைத்திருக்கிற காரணத்தால், அந்தக் குழுவை, அதனுடைய செயல்முறைகளை உடனடியாக அரசின் சார்பிலே மறுப்பது என்பது இயலாத காரியம். சட்டரீதியாக, விதிமுறைகளுக்குட்பட்டு நம்முடைய கருத்துகளை எடுத்துச் சொல்லி, அதற்கு அணை போட முடிந்தால், அணை போடலாம். அதுபற்றி சட்ட வல்லுநர்களைக் கலந்து ஆலோசிக்கலாம் என்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கு விளக்கமளித்து, இந்த அளவில் அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஆ) மேட்டூர் பகுதியில் சிக்-குன்-குன்யா நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு, மூன்று மாதங்களாக தமிழ்நாட்டில் பரவலாக சிக்-குன்-குன்யா காய்ச்சல் பலபேரை தொல்லைபடுத்திக் கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, கர்நாடகத்தின் எல்லையோர மாவட்டங்களில் மிக அதிகமான பாதிப்பை உருவாக்கியிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், இந்த சிக்-குன்-குன்யா காய்ச்சல் வந்துவிட்டால், கோழி எப்படி குறுகி அமர்கிறதோ, அதைப்போல இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் நரம்புகளெல்லாம் இழுக்கப்படக்கூடிய வகையில் கூனிக் குறுகுகிற நிலை உருவாகிறது. உடலின் மூட்டுப் பாகங்களெல்லாம் வீங்கி, வலுவிழந்துவிடுகின்றன என்பதையெல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்; நல்ல ஆலோசனைகளை வழங்கினார்கள். அந்த அடிப்படையிலே கர்நாடகத்தினுடைய எல்லையோரப் பகுதிகளாக இருக்கின்ற,-மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள்கூட குறிப்பிட்டார்கள், கர்நாடகத்திலிருந்து வந்த நோய் என்பதற்கு அது ஆதாரம்தான். அந்த அளவிலே எங்கள் மேட்டூர் பகுதியிலே பரவலாக இந்த நோய் எல்லோரையும் உலுக்கிக்கொண்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக, மருத்துவமனையிலிருந்து கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களைக் கூட நான் இங்கே சொல்கிறேன். மேட்டூர் அரசு மருத்துவமனையில் மட்டும் 10-6-2006 முதல் 30-6-2006 வரையுள்ள 21 நாட்களிலே புற நோயாளிகளாக வந்தவர்கள் 27,003 பேர்கள். அதிலே உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டவர்கள் 175 பேர்கள். அடுத்து, ஜூலை மாதம் 1 முதல் 30 வரை, 30 ஆம் தேதி வரையுள்ள அந்த 30 நாட்களில் புற நோயாளிகள் 39,706 பேர்கள். உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டவர்கள் 974 பேர்கள். ஆகஸ்ட் மாதம் 28 ஆம் தேதி வரையிலே புற நோயாளிகள் 17,012 பேர். உள் நோயாளிகள் 624 பேர், இது நகரத்திலே.*

*முற்பகல் 10-50*

*கிராமப்புறங்களிலே சிகிச்சை பெற்றவர்கள், சின்ன ஊரிலே, சிற்றூர்களிலே 500, 300 மக்கள் தொகை கொண்ட ஊர்களிலே, கோவிந்தபாடி என்ற ஊரிலே, 9-8-2006 அன்று மட்டும் 301 பேர். செட்டிப்பட்டி என்ற ஊரிலே 10 ஆம் தேதி 260 பேர். 11 ஆம் தேதி,*





*11-8-2006-லே பண்ணவாடி என்ற ஊரிலே 221 பேர். கருங்கல்லூர், 18-8-2006-லே 297 பேர்--இப்படி ஒவ்வொரு ஊரிலேயும் உலுக்கிக் கொண்டிக்கிறது. அந்த ஊர்களில் எல்லாம் படுத்துக் கிடக்கின்றார்கள். எந்த வேலையும் செய்ய முடியவில்லை. இதற்குத் தீவிர சிகிச்சை வேண்டும் என்று அங்கே அதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொல்லியும்கூட அவர்களால் இயன்ற அளவுக்கு சிகிச்சை அளிக்கின்றார்கள். நானே இரண்டு, மூன்று நாட்கள் சென்றேன். மேட்டூர் அரசு மருத்துவமனையில் மட்டும் 1,500 பேருக்கு மேலே 2,000 பேர் வந்த நாட்கள் எல்லாம்கூட உண்டு. அந்த அளவுக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது. இதற்கு அந்தப் பகுதிகளிலே சிறப்பு முகாம்கள் அமைக்க வேண்டும். எங்கெங்கெல்லாம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறதோ அங்கே சிறப்பு முகாம்கள் அமைத்துப் பாதுகாக்க வேண்டும். இப்பொழுதுகூட 15 நாட்களுக்கு மேலாக பாதிக்கப்படுகிறார்கள். இது முதலிலே வந்தவர்களுக்கு; இரண்டாவது முறையாக வருவதாகவும் சொல்லப்படுகின்றது. ஆகவே, இரண்டாவது முறையாக வருகின்ற இந்தச் சூழ்நிலையில் தடுப்பு நடவடிக்கை எடுக்க இயலுமா, அப்படி இயலவில்லை என்று சொன்னால் முதற்கட்டமாக வந்தவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு அந்தப் பகுதிகளில் தீவிரச் சிகிச்சை அளிக்க சிறப்பு முகாம்கள் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.*

*அதுமட்டும் அல்லாமல், மேட்டூர் அரசு மருத்துவமனையிலே மருந்துகள் இல்லை; மருந்துகள் இல்லாத சூழ்நிலை, குளுகோஸ் இல்லை என்றுகூட இரண்டு நாளைக்கு முன்னால் தொலைபேசியிலே சொன்னார்கள். 29 ஆம் தேதிகூட அந்த நோய்த் தடுப்பூசி இல்லாமல் எடப்பாடியிலிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. இப்படி மருந்துகள் எல்லாம் அங்கே குறைவாக இருக்கின்ற காரணத்தால் மருந்து கூடுதலாக வழங்க வேண்டும். சிறப்பு முகாம்களை அமைத்து அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று நம்முடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருமை அண்ணன் கோ.க. மணி அவர்கள் இதுசம்பந்தமாக எனக்கு இரண்டு தினங்களுக்கு முன்பாகவே சொல்லி இருக்கிறார்கள். அருமை அண்ணன் கோ.க. மணி மட்டும் அல்ல, சட்டமன்ற உறுப்பினர்கள் என்னைச் சந்திக்கின்ற நேரத்தில் அவர்களுடைய பகுதியிலே, எந்தெந்தப் பகுதியிலே*

இப்படி பாதிக்கப்பட்டிருக்கிறதோ அதையெல்லாம் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். கொண்டு வந்த அடுத்த நிமிடமே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. இதுசம்பந்தமாக அந்தந்த மாவட்டத்திலே ஒரு team work போட்டிருக்கிறோம். அவர்களும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உடனடியாகச் சென்று, பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய அந்த முதலுதவி சிகிச்சை அளிப்பதோடு மட்டுமல்லாமல், உள் நோயாளிகளாக எங்கெல்லாம் அனுமதிக்கப்பட வேண்டுமோ அங்கெல்லாம் அனுமதித்து அந்தப் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இந்தப் பணியை பொறுத்த அளவுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 9 கோடி ரூபாய் வரைக்கும் இதற்காக கொடுத்திருக்கிறார்கள். மருந்து பற்றாக்குறை இல்லாத அளவுக்கு நாங்கள் கொடுத்துக் கொண்டே இருக்கிறோம். இந்த மருந்தைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், முதலிலே 6 கோடிக்கு வாங்கினோம். நேற்றுகூட மறுபடியும் ஒரு கோடிக்கு வாங்கச் சொல்லி இருக்கிறோம். ஆகவே, இந்தப் பணிகளை நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். இதிலே நடைமுறையிலே நேற்று, நேற்றுமுன்தினம் ஆகிய இரண்டு தினங்களுமே தமிழ்நாட்டிலே இருக்கின்ற மாவட்டங்களிலே இருக்கின்ற Deputy Directors (Health) அந்த 49 அலுவலர்களையும் வரச்சொல்லி ஒவ்வொரு மாவட்டத்திலேயும் எந்தெந்தப் பகுதிகள் பாதிககப்பட்டிருக்கின்றன, பாதிக்கப்பட்ட பகுதிகளில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை ஆய்ந்து பார்த்த நேரத்திலே, ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. ஆனால், பத்திரிகையிலே வருகிற அளவுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் தகவல் சொல்கிற அளவுக்கும் - அவ்வளவு பயங்கரமாக இல்லை. எண்ணிக்கையிலே குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால், பொதுமக்கள் பயத்தின் காரணமாக, அச்சத்தின் காரணமாக வருகிறார்கள். போன ஆண்டிலே இதே மாதத்திலே பார்த்தோம் என்று சொன்னால், வைரஸ் காய்ச்சல் வந்திருக்கிறது. இந்த ஆண்டு வைரஸ் காய்ச்சலோடு சேர்ந்து இந்த சிக்-குன்-குன்யா காய்ச்சலும் வந்திருக்கிறது. சிக்-குன்-குன்யாவுக்கு முதல் அடையாளமே— நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் போனவுடனே, உங்களுக்கு இந்தத் தொந்தரவு வரப்போகிறது வாருங்கள் என்று உங்களை அழைக்கப் போகிறார்கள்—அதற்கு அடையாளமே என்ன என்று சொன்னால் மூட்டுகள் வீங்கினால் மட்டும்தான் சிக்-குன்-குன்யா. சாதாரண காய்ச்சலாக இருந்தால் அது சிக்-குன்-குன்யா இல்லை; வைரஸ் காய்ச்சல்தான். ஆகவே, அதைத் தனியாகப் பிரித்தெடுத்து அதற்கு வைத்திய உதவிகளை இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறோம்.





ஒரு சின்ன விஷயம் என்னவென்று சொன்னால், நாமக்கல் மாவட்டத்திலே—முதலிலே அதிகமாக நாமக்கல் மாவட்டம்தான் பாதிக்கப்பட்டிருந்திருக்கிறது; அந்த நாமக்கல் மாவட்டத்திலே இன்றைக்கு முழுவதுமாக ஏறத்தாழ 95 சதவிகிதம் அப்புறப்படுத்தி இருக்கிறோம். எப்படி அப்புறப்படுத்தினார்கள் என்று விசாரிக்கிற நேரத்திலே, ஒரு நல்ல தகவலைச் சொன்னார்கள். கிராமங்களிலே போனால் அந்தக் கிராமங்களிலே வீடுகளில் இருக்கிற உடைந்து போன சட்டிகள், டயர், உரல் போன்ற இடங்களில் எல்லாம் அந்தக் கொசு புழுக்கள் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. அவர்களே நேற்று டி.வி.-யிலே போட்டுக் காட்டினார்கள். அந்த progress-ஐக் காட்டினார்கள். அந்தத் தாய்மார்கள், எப்பொழுதுமே எங்கள் ஊரிலே இந்தக் கொசுக்கள் இருக்குமே, இப்பொழுது மட்டும் எப்படி எங்களுக்கு இந்தக் காய்ச்சல் வருகிறது என்று கேட்கிறார்கள். ஆகவே, இந்தக் கொசு என்பது அந்த ஊரிலே, அந்தப் புழுக்கள் வளர்வதைப் பொதுமக்கள் பார்க்கிறார்கள். அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். இப்பொழுது நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்று சொன்னால், கொசு ஒழிப்பதைவிட கொசுப் புழுக்களையும், அந்த முட்டைகளையும் முதலிலே ஒழிக்க வேண்டும் என்று சொல்லி, நேற்று ஒரு கணக்குப் போட்டு, அதற்கு 7 தினங்கள் வேண்டும் என்று கணக்குச் சொல்லி, நேற்றைய தினம் முதல் அந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறோம். முதலிலே மழைக் காலம் வருவதற்கு முன்பாகவே, ஒரு மாத காலத்திற்கு முன்பாக முழுவதுமாக ஒழிக்க வேண்டும் என்று சொல்லி, கொசு முட்டைகளையும், கொசுப் புழுக்களையும் ஒழிப்பதன் மூலமாகக் கொசு வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும் என்று சொல்லி அதற்கு ஒரு கணக்குப் போட்டு, இந்தக் கொசு ஆராய்ச்சியை ஒரு மாதமாக நானும் பண்ணிக் கொண்டிருக்கிறேன். எனக்கு வேறு வேலையே ஓடவில்லை. ஆகவே, இந்தப் பணிகளை எங்களால் முடிந்த அளவிற்குச் சிறப்பாகச் செய்கிறோம். நம்முடைய முதலமைச்சர் பார்க்கிற நேரமெல்லாம், நேற்று சாயங்காலம்கூட அறிவாலயத்திலே 'என்னப்பா ஆனது' என்று கேட்டார். ஆகவே, இதிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற அக்கறையைவிட, அதிகமாக நம்முடைய முதலமைச்சருக்கு இருக்கிறது. அவர் எங்களைத் தூண்டிக்கொண்டிருக்கிறார். நீங்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அங்கே ஊருக்குப் போகிற நேரத்திலே, வரும் 5 ஆம் தேதியிலிருந்து, 6 மாத காலத்திற்கு 25 ஆயிரம் சுகாதாரப் பணியாளர்களையும் எங்கே வேண்டுமானாலும், mass programme–ஆகச் செய்யச் சொல்லி நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். அதற்கும் தலைவர் கலைஞர் அவர்கள் 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, அடுத்த மாதம் 30 ஆம் தேதிக்குள்ளாகவே முழுவதுமாக இந்தப் பணியை நிறைவு செய்து,

தமிழ்நாட்டிலே சிக்-குன்-குன்யா நோய் இல்லையென்று சொல்லக்கூடிய அளவிற்கு எங்களுடைய பணிகள் இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-55

இன்னொரு தகவல். நேற்றையதினம் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள். ஆந்திராவிலே பார்ப்போம் என்று சொன்னால், காட்டுக்குள்ளே இருக்கிற நக்சலைட்டுகளுக்கு எல்லாம் இந்தக் காய்ச்சல் வந்து, அந்த நக்சலைட்கள் எல்லாம் வெளியிலே வந்து வைத்தியம் செய்துகொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, பரவலாக, இந்தியாவிலே ஒரு 4, 5 மாநிலங்கள் இதனாலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்திலே நம்முடைய அரசாங்கத்தின் அக்கறையின் காரணமாக, முதலமைச்சரின் அக்கறையின் காரணமாக, முடிந்த அளவிற்கு நாம் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோம். (குறுக்கீடுகள்)

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### சென்னை, வண்டலூர்–கேளம்பாக்கம் பகுதியில் துணை நகரம் அமைத்தல்–மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் தொடர்ந்து பெருகி வரும் மக்கள்தொகை, போக்குவரத்து நெரிசல் இவற்றின் காரணமாக, குடிநீர், சாலைகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்டு வரும் பற்றாக்குறை, இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு சென்னையைச் சுற்றி துணை நகரங்களை, Satellite Cities அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், அதன் தொடர்ச்சியாக, ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை ஆகியவற்றில் அறிவிக்கப்பட்டிருந்தது.

2001ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரத்தின், Chennai City மக்கள்தொகை 43 இலட்சத்து 43 ஆயிரமாகும். சென்னை பெருநகரத்தின், Chennai Metropolitan மக்கள்தொகை 70 இலட்சத்து 40 ஆயிரமாகும். அடுத்த 20 ஆண்டுகளில் சென்னை மாநகரின் மக்கள்தொகை 58 இலட்சத்து 50 ஆயிரமாகவும், சென்னை





பெருநகரத்தின் மக்கள்தொகை 125 இலட்சத்து 8 ஆயிரமாகவும் உயருமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தில் தற்போது மக்கள்தொகை அடர்த்தி, density of population ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 28 ஆயிரத்து 125 பேர் என்ற விகிதத்தில் இருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது. உலகில் மிக அதிக மக்கள்தொகை அடர்த்தியுள்ள நகரங்களில் சென்னையும் ஒன்றாகும். மக்கள்தொகை பெருக்கத்தால் உள்கட்டமைப்பு வசதிகளில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தில் தற்போது திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றத் தேவையான இடவசதி இல்லை. இவ்வகைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆய்வு மேற்கொண்டு, வண்டலூர் கேளம்பாக்கம் சாலைக்குத் தென் பகுதியில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும், எண் 45 தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையிலுள்ள சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு இடத்தை உத்தேசமாகத் தேர்வு செய்துள்ளது. உத்தேசமாகத் தேர்வு செய்துள்ள பகுதியில் தற்போது 13 ஆயிரம் குடும்பங்கள் மட்டுமே வாழ்ந்து வருகின்றார்கள். 270 சதுர கிலோ மீட்டரில் அமைந்துள்ள இந்த நிலப்பரப்பு, மாசற்ற, நல்ல சுற்றுப்புறச் சூழலில் அமைந்துள்ளது. இது புதிய நகரமைப்புக்கு உகந்த பகுதியாகும். இப்பகுதியில் பெரும்பாலான நிலங்கள் பயிரிடப்படாமல் தரிசாகவே உள்ளன. உத்தேசிக்கப்பட்டுள்ள நிலங்களைக் கையகப்படுத்தும்போது நீர்வளப் பகுதி, குடியிருப்புப் பகுதி, காடு உள்ள பகுதி ஆகியவற்றை அறவே நீக்கிவிட்டு, தரிசாகவும், புஞ்சையாகவும் உள்ள நிலங்க்ள் மட்டுமே கையகப்படுத்தப்பட உள்ளன. நிலங்களைக் கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்களுக்கு நியாயமான market விலை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் இடப்பெயர்ச்சி செய்யப்பட மாட்டார்கள். அவர்கள் அந்தந்த இடங்களிலேயே தொடர்ந்து வாழ்ந்து வரலாம். ஏற்கெனவே மக்கள் வாழ்ந்து வருகின்ற பகுதிகள், உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய துணை நகரத்தின் வளர்ச்சியோடு ஒருங்கிணைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி உள்ளிட்ட அனைத்துக் கட்டமைப்பு வசதிகளும் மேம்பாடு செய்யப்பட்டு அவர்கள் பயன்பெறும்வகையில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். புதிய நகரம் அமையும்போது உருவாகும் வேலைவாய்ப்புக்கு, இப்பகுதியில் ஏற்கெனவே வாழ்ந்து வரும் மக்களுக்கு மட்டுமே, நல்ல பலனை வழங்கி, அவர்கள் பொருளாதார ரீதியாக உயர்வதற்கும் வழி வகுக்கும்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 ஆகஸ்ட் 31

இந்தத் துணை நகரத் திட்டம் வளர்ந்து வரும் சென்னை பெருநகரத்தின் நெரிசலைப் பெருமளவிற்குக் குறைப்பதோடு, உலகின் ஒரு முக்கிய தொழில் நகரமாகவும், தகவல் தொழில்நுட்ப நகரமாகவும், வளர்ந்து வரும் சென்னையை நோக்கி, மேலும் தொழில் முதலீட்டாளர்களைத் தொடர்ந்து ஈர்த்திடவும், பொதுமக்களுக்குத் தரமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவும் பயன்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-00

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு... (குறுக்கீடுகள்) சேகர்பாபு உட்காருகிறீர்களா? சேகர்பாபு உட்காருகிறீர்களா? (குறுக்கீடுகள்) அடுத்த அலுவல்களுக்கு இடைஞ்சல் பண்ணுகிறீர்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பொள்ளாச்சி ஜெயராமன், உட்காருங்கள். நடவடிக்கை எடுப்பேன், முதலில் உட்காருங்கள்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி ஜெயராமன், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோர் நின்றுகொண்டிருந்தனர்.)



2006 ஆகஸ்ட் 31] [பேரவைத் தலைவர்]

நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். உட்காருங்கள், மூன்று பேரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2006 ஆகஸ்ட் 31

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்பு

### தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)–தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.



2006 ஆகஸ்ட் 31]

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 39 – பொதுப் பணித் துறை-கட்டடங்கள்**

**(ஆ) கோரிக்கை எண் 40 – பொதுப் பணித் துறை-பாசனம்**

---

### (அ) கோரிக்கை எண் 39 – பொதுப் பணித் துறை-கட்டடங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 39–பொதுப் பணித் துறை-கட்டடங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–05

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணித் துறை–கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 110,87,99,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.245,57,28,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2299, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை அரசு மருத்துவமனை மற்றும் வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனைகள் ஆகியவற்றை பழுதுபார்த்து வெள்ளை அடித்து சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7575, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோவிலூர் நகரத்தில் உள்ள பத்திரப் பதிவு அலுவலகத்தை உடன் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2867, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3607, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிப்பட்டு தொகுதி, பொதட்டூர்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய சைக்கிள் ஸ்டான்டு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6322, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கட்டட கட்டுமானப் பொருட்களான மணல், சிமெண்ட், ஜல்லி, இரும்பு ஆகியவற்றின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9424, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2361, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானி நகரில் காவிரி ஆற்றின் கரை ஓரத்தில், பவானி ஆற்றின் கரை ஓரத்தில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4021, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, ஆற்காடு நகரில் உள்ள அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி சுமார் 50 வருடங்களுக்கு முன் தொடங்கப்பட்ட பள்ளி. இப்பள்ளியின் கட்டடங்கள் அனைத்தும் பாழடைந்து அபாயகரமான நிலையில் உள்ளன. எனவே, இந்தப் பழைய கட்டடங்களை இடித்துவிட்டு புதிதாகக் கட்டடங்கள் கட்டி, பெரும் அபாயத்தைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4362, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப் பணித் துறையில் தினக்கூலி தொழிலாளர்களாக உள்ளவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5266, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட புகழ்பெற்ற திருக்கடையூர் அபிராமி அம்மன் ஆலயத்திற்கு வருகை தரும் விருந்தினர்களின் வசதிக்காக விருந்தினர் சுற்றுலா மாளிகை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6249, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கழுக்குன்றம் வட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7088, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, காவேரிப்பட்டினம் நகர பெரியகுளத்தில் தூர் வாரி மழைநீர்க் கால்வாயைச் செப்பனிட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7260, திரு. தி. வேல்முருகன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7458, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியில் பணிபுரியும் பொதுப் பணித் துறை ஊழியர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7780, திரு. வீ.ஏ.டி. கலியவரதன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9015, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட நெடுங்குணம் கிராமத்தில் இயற்கை எழில் கொஞ்சும் இடத்தில் மலைச் சாரலில் கட்டப்பட்ட பயணியர் ஓய்வு விடுதி தற்போது தங்க முடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளது. அதனைச் சீர்செய்வதைவிட புதிய கட்டடம் ஒன்றை கட்டித்தர வேண்டியதன்

அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3421, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3856, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8231, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை வைகை ஆற்றில், மானாமதுரை காவல் நிலையத்திற்கும் கிருஷ்ணராஜபுரம் தெருவிற்கும் இடையில் ஒரு தரைப்பாலம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு இன்னும் டெண்டர் விடாமல் இருப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7206, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், ஆர். கோம்பை அருகில் உள்ள வறட்டாறு அணையைப் புதியதாகக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2167, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை அரசினர் தோட்டத்தில் காலியாகவுள்ள இடங்களில் பூங்கா அமைத்து, வெளியார் உள்ளே வந்து சுகாதாரக் கேடு விளைவிக்காதவண்ணம் பாதுகாவலர்களை அனைத்து நுழைவு வாயில்களிலும் காவல் போட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7222, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், சிறுவாச்சூரில் இருந்து சிறுகன்கூர் செல்லும் சாலையின் குறுக்கே மருதையாற்றில் மேம்பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5088, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் இயங்கி வரும் தொடக்கப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்டவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6898, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6837, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

***திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7585, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதிக்குட்பட்ட வானூர் ஒன்றியத்தில் புதிய பயணியர் விடுதி கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7567, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி சட்டமன்றத் தொகுதி, வண்ணாரங்கொம்பு, காரைக்குளம், மணப்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5624, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைக்கட்டுகளையும் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6039, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதியில் உள்ள பரமத்திவேலூர் மற்றும் ஜேடர்பாளையம் ஆகிய இரு இடங்களிலும் உள்ள Inspection Bungalow-களை (ஆர்.சி. டிவிஷனுக்குச் சொந்தமானவை) நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6011, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பல்வேறு அரசுத் துறைகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9283, திரு. ப. டில்லி பாபு.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் வட்டாட்சியரின் குடியிருப்புக் கட்டடம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அதை அகற்றிவிட்டு அவ்விடத்தில் பொதுப் பணித் துறையின் கீழ் புதிய குடியிருப்புக்



கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6299, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் உள்ள பழவேற்காடு முதல் பசியவரம் எடமணி வரை தரைப்பாலம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9190, திரு. ஆ. அருண்மொழிதேவன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9173, முனைவர் கு. ஜெயக்குமார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9317, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பூர் தொகுதியில் உள்ள கேப்டன் காட்டன் கால்வாயைத் தூர்வாரி தடுப்புச் சுவர் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9327, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அழிக்கால், கடியப்பட்டணம், பெரியவிளை, கொட்டில்பாடு, புதூர், மண்டைக்காடு ஆகிய மீனவ கிராமங்களில் மீனவ மக்களின் தொழில் பாதுகாப்புக்காக அவசர கதியில் தூண்டில் வளைவுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9149, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதி, குன்றுவாரான் கோட்டைக்கும், கூட்டாத்து அய்யம்பாளையத்திற்கும், ஆற்றின் குறுக்கே ஒரு ஓடுபாலம் உள்ளது. இதில் வெள்ளக்காலத்தில் பலர் இறந்துள்ளனர். இங்கு ஒரு பாலம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8458, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதியில் அடையாறு ஆற்றின் கரையோரம் தடுப்புச் சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8019, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5131, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் கிராமங்களிலிருக்கும் தாய்சேய் நல விடுதி (ஆரம்ப சுகாதார துணை நிலையம்) கட்டடங்களைப் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4460, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராஜபாளையம் தொகுதியில் இராஜபாளையம், சேத்தூர், கிழவிகுளம், சிவலிங்கபுரம், சத்திரப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள அரசு மேனிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம், கூடுதல் வகுப்பறைக் கட்டடம், சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2452*, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி தொகுதி, அரசக்கநாயக்கனூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய *39* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*110,87,99,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*245,57,28,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4861*, திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருகி வரும் போக்குவரத்து நெருக்கடியைச் சமாளிப்பதற்கு, அடையாறு ஆற்றில், பட்டினப்பாக்கம் ஸ்ரீனிவாசபுரத்திலிருந்து பெசன்ட் நகரை இணைக்கும் இடிந்துபோன பாலத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய *39* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*110,87,99,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*245,57,28,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4939*, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடியில் பொதுப் பணித் துறைமூலம் கட்டப்படும் தாலுகா அலுவலகம் கட்டும் பணியை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய *39* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*110,87,99,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*245,57,28,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4829*, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, அழகர்கோவில் மலையடிவாரத்தில் வீணாகும் மழைநீரை விவசாயத்திற்கு பயன்படும்வகையில் தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய *39* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*110,87,99,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*245,57,28,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5337*, திருமதி இளமதி சுப்பிரமணியன்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வலங்கைமான் தொகுதி, இனாம்கிளியூர் ஊரில் குடமுருட்டி ஆற்றிற்கு இடையே பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய *39* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*110,87,99,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*245,57,28,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5343*, திரு. பெ.சு. விஜயகுமார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *6525*, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை, பாலரெங்கபுரம் மருத்துவமனையில் சுற்றுச்சுவரைப் பாதுகாக்க புதர்களை அகற்றி சிமெண்ட் தளம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய *39* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*110,87,99,000*/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*245,57,28,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6502, திரு. ஞா. ஜான் ஜோசப் இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1978, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களின் பராமரிப்புச் செலவை அதிகமாக்கி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5625, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் பழமையான பயன்படுத்தப்படாத கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5665, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், தொப்பையாறு நீர்த்தேக்கம் அருகில் உள்ள தொப்பூரில் விருந்தினர் மாளிகை ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5515, திரு. இரா. குமரகுரு. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2061, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டை தொகுதியில் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை விரிவாக்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டவும், ஜல்லிப்பட்டி அரசு மருத்துவமனையில் மருத்துவர் குடியிருப்பு கட்டவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7691, திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தான்குளம் தொகுதியில் உள்ள அனைத்துப் பாசன வாய்க்கால்களையும் தூர் வாரி, கரையைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானததை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5896, திரு. ஆர்.கே. பாரதிமோகன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6909, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதி, கம்பம் மற்றும் கூடலூர் நகராட்சிகளில் பொதுப் பணித் துறை சுற்றுலா மாளிகை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7535, திரு. கே.எஸ். விஜயகுமார். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1277, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மலைப் பகுதியில் அரசு சார்பில் கட்டப்படும் கட்டடங்களுக்கு நிலப் பரப்பில் கட்டப்படும் கட்டடங்களுக்கு வழங்கும் நிதியைவிட 100 சதவீதம் கூடுதல் நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,87,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.245,57,28,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 40 - பொதுப் பணித் துறை-பாசனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40— பொதுப் பணித் துறை-பாசனம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.508,22,37,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1862, திரு. மு.க. பெரியசாமி.



**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட மேலையூர் சட்ரஸ் காவிரி தலை அணையைத் தூர் வாரி ஆழப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 725, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேளாண்மைத் துறை மூலமாக பவானி தொகுதியிலுள்ள அனைத்து ஏரிகளிலும், குளங்களிலும் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4039, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூங்கோடு கிராமம் அருகே உள்ள பாலாற்றில் மணல் குவாரி அமைக்கப்பட்டு, அரசு விதிமுறைகளை மீறி, அதிக அளவு மணல் எடுக்கப்பட்டுள்ளது. அதே இடத்தில் இன்றும் மணல் குவாரி உள்ளது. அதனால் நீர் மட்டம் குறையும் அபாயம் உள்ளது. எனவே, மேற்கண்ட பகுதி மக்களின் நலன் கருதி இம்மணல் குவாரியைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 518, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள அனைத்து ஏரிகளிலும் குளங்களிலும் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5928, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியிலுள்ள பாசனக் குளங்கள் அனைத்தும் உடனடியாகத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1121, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியிலுள்ள அனைத்து ஏரிகளிலும் குளங்களிலும் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7777, திரு. வீ.ஏ.டி. கலியவரதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7852, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியிலுள்ள விவசாயிகள் காவிரி நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்ய அவர்களுக்குக் கடனுதவி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8572, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியிலுள்ள ஏரிகளை ஆழப்படுத்தி, விவசாயத்திற்கு உதவும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9062, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட மண்டகொளத்தூர் வழியாகச் செல்லும் செய்யாற்றின் குறுக்கே ஒரு புதிய தடுப்பணை கட்டி விவசாயத்திற்குப் பயன்படும் ஏரிகளுக்குத் தண்ணீர்விட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2237, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை, சோலையாறு அணையைப் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7577, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கோவிலூர் நகரத்தில் ஓடுகின்ற ஆவியூரான் மற்றும் சித்தேரியான் வாய்க்கால்களைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3304, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 269, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், தென்முகம் வெள்ளோடு, புங்கம்பாடி, கவுண்டச்சிபாளையம் கிராமங்களைச் சார்ந்த கீழ்பவானி வாய்க்கால் L.B.P. 63.0.500 பிரிவு ஊஞ்சலூர் பகிர்மான வாய்க்கால் எம்.7 பாசனக் கோட்டப் பகுதியில், பாசன நீர் செல்லும் கிளை வாய்க்கால், அவசரப் பராமரிப்பு வேலை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9425, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3480, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வளவனாற்றைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9318, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9020, திரு. ப. டில்லி பாபு.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட கீழ்மொரப்பூர் ஊராட்சி மற்றும் எம். வெளாம்பட்டி பஞ்சாயத்துக்குட்பட்ட தென்பெண்ணையாற்றிற்கு அருகில் செனாக்கல் என்கின்ற மதிகெட்டான் கால்வாய்த் திட்டத்தினை, இவ்வாண்டிலேயே பணி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1968, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதியிலுள்ள வல்லநாட்டு கண்மாய் நீண்ட நாட்களாகத் தூர் வாராமல் சென்ற ஆண்டு பெய்த மழையால் உடைப்பு ஏற்பட்டிருப்பதை உடன் செப்பனிட்டு விவசாயிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1269, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதியில் கஞ்சநாயக்கன்பட்டி, வடமனேரி வழியாகச் செல்லும் சரபங்கா நதியைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7252, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8233, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதியிலுள்ள நாட்டார் கால்வாயை பராமத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8289, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்ளிடத்திலிருந்து பொன்னாறு வாய்க்கால் பிரியும் குருவாடி கிராமத்திலிருந்து, பொன்னாறு வாய்க்காலைத் தூர் வாரவும், மழை வெள்ளப் பாதிப்பைத் தடுத்திட 1½ மீட்டர் அளவிற்கு கொள்ளிடக் கரையை இருபக்கமும் உயர்த்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8310, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியில் தொப்பையாறு நீர்த்தேக்கத்தின் வாய்க்காலைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7297, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வயலூர் (வேப்பூர் ஒன்றியம்) பொதுப் பணித் துறை ஏரியில் கலுங்கு கட்டுதல் மற்றும் உப்பு ஓடை வாய்க்கால் சீர் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2165, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், பாலாறு நதி நீர் ஆணையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7279, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதி, செக்கானூரணி பகுதியில் இருக்கின்ற சுமார் 100 கிராம மக்கள் பயன்பெறுகின்ற வகையில் பெரியாறு பாசன விஸ்தரிப்பு கால்வாய் விக்கிரமங்கலத்திலிருந்து பிரதான கால்வாயாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6847, திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணை நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளது. எனவே, சாத்தனூர் அணையைப் புதுப்பித்துச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை – பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5794, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதியில் உள்ள அம்மணம்பாக்கம், பெரும்பேடு, பி.வி. களத்தூர், சோகண்டி, எச்சூர், செங்கற்பட்டு குண்டூர், கோரப்பட்டு ஏரிகளையும், ஏரிபாசனக் கால்வாய்களையும் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9357, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் ஏரி தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9451, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளம், குட்டைகளுக்கு நீர் நிரப்பும் அவிநாசி-அத்திக்கடவுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6312, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் செல்கின்ற கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே கம்மவார்பாளையம், ராப்பாளையம் ஆகிய இடங்களில் நீர்வள ஆதாரத்தைப் பெருக்கி, விவசாயிகளின் நலன் காக்க தடுப்பணை (செக்டேம்) கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7601, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி தொகுதி, சீப்பாலக்கோட்டை அருகே வெள்ளக் கணவாய்த் திட்டம் புதிதாக அமைத்து, விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையில் புதிய கண்மாய் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9189, திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9156, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் குடகனாறு அணையிலிருந்து பிரியும் கூழையாற்றிலிருந்து வரக்கூடிய உபரி நீர் வீணாகிக் கொண்டிருக்கின்றது. நிலக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள கண்மாய்களுக்கு நீர் ஆதாரம் பெருக்கவும், சுமார் 5,000 ஏக்கர் பாசன வசதி பெருக்கி, விவசாயம் செய்ய தற்போதுள்ள கால்வாயை மாற்றி, சிமெண்ட் கால்வாய் அமைத்து, முறைப்படி நீரைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5898, திரு. ஆர்.கே. பாரதிமோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3957, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப் பணித் துறைக்கு சொந்தமான கிணத்துக்கடவு தொகுதிக்கு உட்பட்ட கோதவடி குளம், தேவம்பாடி வலசுகுளம் ஆகிய இரு குளங்களுக்கும், பரம்பிக்குளம்-ஆழியாறு அணைகளின் தண்ணீரை வருடம் ஒருமுறை விட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5962, திரு. ஞா. ஜான் ஜோசப், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3844, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதி, பாழையம்புதூர், மாரியம்மன் நகர் அணைக்கட்டு கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7654, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கல்குளம் தாலுக்காவில் பாய்ந்தோடும் வள்ளியாற்றில் ஓடி வீணாக கடலில் கலக்கும் நீரை நீரேற்றுப் பாசனத் திட்டம் (Lift Irrigation) மூலம் நிலத்தடி நீரற்று போயுள்ள மணவாளக்குறிச்சி பேரூராட்சி, திங்கள்நகர் பேரூராட்சி, தலக்குளம் ஊராட்சி, மண்டைக்காடு பேரூராட்சி, வெள்ளிமலை பேரூராட்சி பகுதிகளில் நீர்ப்பாசனக் கால்வாய்கள் அமைத்து வள்ளியாற்று நீரேற்றுப் பாசனத் திட்டத்தை உடன் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3916, திரு. தி. இராமசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4873, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி வட்டம் குண்டுமலை கரட்டில் தடுப்பணைகள் கட்டி நீர் தேக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1438, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள ஆறுகளை பாசனம் மற்றும் குடிநீருக்காக இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3174, திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, பரமக்குடி நகரில் நிலவுகின்ற கடும் குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்க, பரமக்குடி வைகை ஆற்றில் தடுப்பணை (Check Dam) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5629, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி குளம் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2044, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடுமலைப்பேட்டை பகுதியில் உள்ள திருமூர்த்தி அணை, அமராவதி அணையில் விவசாயிகளின் நலன் கருதி அணையை தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5684, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறையிலுள்ள பழங்காவிரி ஆறு தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3224, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்ளிடம் ஆற்றில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் கரையோர கிராமங்கள் பாதிக்கப்படாமல் தடுக்க, அதன் வடக்குக் கரையை உயர்த்தி பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1665, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதியில் மணிமுத்தாறு அணைக்கு கிழக்கே எலுமிச்சையாறு திட்டம், ஆய்வுகள் முடிவுற்றும் நிறைவேற்றப்படவில்லை. மணிமுத்தாறு முதல் ரீச் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இத்திட்டத்தினை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6905, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதியில் ஏழுரதக்களத்தில் உள்ள வீடு நாயக்கர் குளத்தை ஆழப்படுத்தி, கரையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3581, திரு. கே.எஸ். விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8787, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம் பரம்பிக்குளம்–ஆழியாறு பாசனம்கீழ் காவிரி ஆணையம் போல் பேச்சுவார்த்தைக்கும்–நிர்வாகத்திற்கும் ஏற்றாற்போல் புதிய ஆணையம் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை–பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8553, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளங்கள் மற்றும் குளக்கரைகளில் தனியார் மற்றும் விவசாயிகள் ஆக்கிரமித்துள்ளதை ஆட்சேபித்தும், ஆக்கிரமிப்புப் பகுதிகளை மீட்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2584, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொடக்குறிச்சி தொகுதியைச் சேர்ந்த எல்.பி.பி. வாய்க்கால் ஆயக்கட்டில் தாராபுரம் கட் பகுதி மற்றும் குரங்கன்பள்ளம் அணைக்கட்டு பாசனம் ஆகியவற்றை சேர்க்க வேண்டியது மற்றும் பெரும்பள்ளம் அணைக்கட்டை தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2597, திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மின் மோட்டார் அமைக்க ஆறு செல்லும் இடத்திலிருந்து 200 மீட்டர் தூரம் தள்ளி இருந்தால்தான் பொதுப் பணித் துறையால் தடையில்லை சான்று வழங்கப்படுகிறது. அதன் பின்னர்தான் மின் வாரியம் மின் இணைப்பு வழங்குகின்றது. 200 மீட்டர் என்பதை இரத்துச் செய்து விண்ணப்பம் செய்யும் அனைவருக்கும் மின் மோட்டார்



அமைக்க சான்றிதழ் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4453, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில் அயன்கொல்லங்கொண்டான் பெரியகுளம் கண்மாய், கூனங்குளம் கண்மாய் மற்றும் அதன் கால்வாய் பகுதிகளை மராமத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2894, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெலிங்டன் ஏரியை ஆழப்படுத்திக் கரைகளை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8011, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதிக்குட்பட்ட பரவனாறு பாசன பகுதிகளில் தூர் வாரப்படாமல் பல கிராமங்களில் வெள்ள நீர்ச் சூழ்ந்து, அபாய நிலையை எட்டியது. எனவே, பரவனாற்றை

உரிய முறையில் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8186, திரு. எல். ரவிச்சந்திரன். (குறுக்கீடு) கொடுங்கள், மைக் கொடுங்கள்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகர மையப் பகுதியில் மழைக்காலங்களில் வெள்ளக்குட்டை ஏரி நிரம்பி, கால்வாய் வழியாக செல்லும் தண்ணீர் வீடுகளில் புகுந்து விடுகிறது. இந்த மழைநீர் செல்லும் கால்வாயினைத் தூர்வாரி இருபுறமும் கான்கிரீட் அமைத்து வெள்ளச் சேதம் ஏற்படாமல் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். வாய்ப்புக் கொடுத்துதான் பேசுகிறீர்கள். வெட்டுத் தீர்மானம் எண் 8508, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தொகுதியில் குளமங்கலம் கிராமத்தில் உள்ள ஏரியைத் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8100, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.



**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள குளங்கள், ஆறுகளைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8133, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத்தை விரிவுபடுத்தி, ஆழப்படுத்துவது மற்றும் அகரம், தாடிக்கொம்பு பேரூராட்சிக்குட்பட்ட பாசனத்திற்குரிய கண்மாய்கள், குளங்கள் ஆகியவற்றை ஆழப்படுத்தி முறையாக பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8074, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியிலுள்ள கண்மாய்கள், குளங்களைத் தூர் வாரி, கொள்ளளவை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2758, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதி, மேலப்பாளையம் ஊராட்சி, மேலப்பாளையம் என்ற இடத்தில் அரசு மணல் எடுத்து வருகிறது. மேலப்பாளையம் ஊராட்சி மற்றும் புலியூர் சிறப்பு ஊராட்சியைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு குடிநீர் மற்றும் விவசாய நிலங்களுக்குக் கிணறு அமைத்து, தண்ணீர் செல்கிறது. குடிநீர், விவசாயக் கிணறுகளைக் காப்பாற்ற மேலப்பாளையத்தில் அரசு மணல் எடுப்பதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5443, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன். (குறுக்கீடு) என்ன சொல்கிறீர்கள்? உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) உட்காருங்கள் ஐயா, உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் சம வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறீர்களா இல்லையா? (குறுக்கீடுகள்) வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறீர்களா இல்லையா? (குறுக்கீடுகள்) ஒருவர் மட்டும் பேசுங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒரே வாய்சில் எல்லோரும் பேசாதீர்கள். பொள்ளாச்சி ஜெயராமன் வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறீர்களா இல்லையா? (குறுக்கீடுகள்) முன்மொழிகிறீர்கள், விடுங்கள்.

*முற்பகல் 11-15*

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் பொள்ளாச்சி கிளை வாய்க்கால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதைச் சரிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5496, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியிலுள்ள கால்வாய்ப் பாசனப் பகுதியில் உள்ள ஏரிகளைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1828, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியிலுள்ள பெரியாறு பாசனத்திலுள்ள ஒருபோக சாகுபடி நிலங்களை, இருபோக சாகுபடி நிலங்களாக மாற்றிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5130, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியிலுள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கண்மாய்களைத் தூர்வாரி, வரத்துக் கால்வாயைச் சீர்செய்து, மடைகளைப் புதுப்பித்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2912, திரு. எஸ். ஜான் ஜேக்கப், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2730, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம் தளி சட்டமன்றத் தொகுதியில் பொதுப் பணித் துறையால் ஆய்வு செய்து மதிப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ள பெட்ட முகிலாளம் கிராமத்தில் மாதேஸ்வரன் பள்ளம் குறுக்கே ஏரி அமைத்தல், சாலிவாரம் கிராமத்தில் கவ்வி பள்ளம் அருகே ஏரி அமைத்தல், கூசுவாடி கிராமத்தில், காட்டாறு கிராமத்தில் ஏரி அமைத்தல் போன்ற பணிகளை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2868, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5314, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதியில் உள்ள இராஜா வாய்க்கால் நீரேற்றுப் பாசன விவசாயிகள் சங்கம் ரூ.20 இலட்சம் பொதுப் பணித் துறைக்குச் செலுத்தியும், அது இராஜா வாய்க்காலின் நீரேற்றுப் பாசன விவசாயிகள் மேம்பாட்டுக்காகக் கொடுக்கப்பட்டிருந்தும், அத்தொகை செலவழிக்கப்படாமல் உள்ளது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6552, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.



**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதியிலுள்ள கடற்கரை மீனவ கிராமங்களான வீரபாண்டியன்பட்டணம் மற்றும் மணப்பாட்டில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5047, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், சத்தரை கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் பயன்பெறும் வண்ணம் கூவம் ஆற்றினைக் கடந்து செல்ல ஒரு பாலம் ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4408, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப் பணித் துறையில் ஒப்பந்தக்காரர் பதிவுக் கட்டணம் மிக அதிக அளவில் உயர்ந்துள்ளது. ஏற்கெனவே, பதிவு பெற்று வகுப்பு உயர்வு செய்யும் ஒப்பந்தக்காரர்களுக்கும் இதே அளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்தக் கட்டணங்கள் மிக அதிகமாக இருப்பதால் அதனைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5514, திரு. இரா. குமரகுரு. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5647, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் வட்டம், குஜிலியம்பாறை ஒன்றியம், ஆர். கோம்பையிலுள்ள வறட்டாறு ஓடையில் அணை கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1551, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி 58 கிராம கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றி, விவசாயத்திற்கு நீர் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6261, திரு. ரா. வரதராஜன்.

**திரு. ரா. வரதராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் தொகுதியிலுள்ள மண்ணார்கோட்டை, ஆவுடையாபுரம் கண்மாயைச் சீரமைத்து, பாசன வசதி செய்து தர நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6526, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை தியாகராசர் கல்லூரி பின்புறம் வைகை ஆற்றில் மணல் அரிப்புத் தடுப்பணையைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3359, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல ஆண்டுகளாக தூர்வாரப்படாத குளங்களைத் தூர்வாரி, மதகு சீரமைத்துப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1981, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் தொகுதியில், காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில் உள்ள பழமைவாய்ந்த ஏரியைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3398, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டம் முழுவதும் பாசன வாய்க்கால்களைத் தூர்வார நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7568, திரு. செ. சின்னச்சாமி:

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி சட்டமன்ற தொகுதி, கருப்பூர் பெரியகுளத்திலிருந்து பிச்சம்பட்டி பெரியகுளம் வரை ஏரி தூர் வாருதல், பிச்சம்பட்டி பெரியகுளத்தை ஆழப்படுத்தி கரையைப் பலப்படுத்துதல், பிச்சம்பட்டியிலிருந்து கன்னிகுளம், ஆமணங்கம்பட்டி வரை ஏரி தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.626,76,05,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.508,22,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை–கட்டடங்கள், பொதுப் பணித் துறை–பாசனம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டப்பேரவைப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு

@ 211 முதல் 292 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு 12 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 10 நிமிடங்களுக்கு அதிகமாகாமல் தங்களுடைய பேச்சைச் சுருக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை அவர்களைப் பேச அழைக்கிறேன்.

***திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணம் பரப்புவது மலரின் குணம். அன்பு செலுத்துவது தாயின் குணம். அந்தத் தாயின் அரவணைப்பால் கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழகம் தன்னிகரில்லா வளர்ச்சிபெற்று, முதன்மை மாநிலமாகத் திகழ்ந்தது. அந்த இலட்சியத்திற்காகவே இன்றும் தன்னலம் பாராமல், மக்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் மனிதருள் மாணிக்கம், பெண்குலத்தின் கலங்கரை விளக்கம், தமிழகத்தின் தங்கத் தாரகை, இந்தியாவின் இணையற்ற தலைவி, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கும் திசைநோக்கி வணங்கி, என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் பிறந்த ஈரோடு மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தில், சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, பெருந்துறை ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியக் குழு பெருந்தலைவராகவும், பணியாற்ற வாய்ப்பளித்து, இப்பொழுது இந்த மாமன்ற உறுப்பினராக்கி, பேச வைத்திருக்கும் எங்கள் அன்னைக்கு வாழ்நாள் முழுவதும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், என்னை இந்த மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த பெருந்துறை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் சிரம் தாழ்த்தி வணக்கத்தையும், நன்றியையும் காணிக்கையாக்குகிறேன்.

எங்கள் அம்மா எதையும் தாங்கும் இதயம் படைத்தவர். எந்தச் சோதனை வந்தாலும் அவற்றையெல்லாம் முறியடித்து, வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடிக்கும் வல்லமை படைத்தவர். அவருக்குப் பின்னால் மகத்தான மக்கள் சக்தி இருக்கிறது. மீண்டும் தமிழகத்தின் முதல்வராக

எங்கள் அம்மா வரப் போகிறார் என்பதைத் தன்னடக்கத்துடன் கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) மானியக் கோரிக்கையின்மீது எனது சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுகாலமாக, எங்கள் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் பாசனத்திற்காக 2,684 ஏரிகள் ரூபாய் 296.63 கோடி செலவில் தூர் வாரப்பட்டன. உலக வங்கி கடனுதவியுடன் 620 ஏரிகள், ரூபாய் 104.24 கோடி செலவில் தூர் வாரி புனரமைக்கப்பட்டு, 74,387 ஹெக்டேர் நிலங்கள் பயனடைந்தன. நபார்டு வங்கி கடனுதவியுடன், 199 ஏரிகள், ரூபாய் 63.03 கோடி செலவில் செவ்வனே செய்து முடிக்கப்பட்டன. இதனால், 12,1777 ஹெக்டேர் நிலங்கள் பயனடைந்தன. இராமநாதபுரம் மாவட்டத்தில் தாட்கோ கடனுதவியுடன் 126 குளங்கள், ரூபாய் 24.36 கோடி செலவில் தூர் வாரப்பட்டு, 13,872.34 ஹெக்டேர் நிலங்கள் பயனடைந்தன. அதன் வெற்றியினைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்டத்தில் 22.56 கோடி செலவில், மாநில அரசு நிதியிலே 97 ஏரிகள் தூர் வாரி நவீனப்படுத்தப்பட்டன.

முற்பகல் 11-20

வேலைக்கு உணவு அளிக்கும் திட்டத்தில் சென்னை, நாகப்பட்டினம், நீலகிரி மாவட்டங்களைத் தவிர, ஏனைய மாவட்டங்களில் உள்ள 1,739 ஏரிகள், ரூபாய் 105 கோடி செலவில் தூர் வாரப்பட்டன. மாநில அரசு நிதியின், பகுதி 2 திட்டத்தின்கீழ், 290 ஏரிகள் 62.5 கோடி செலவில் தூர் வாரி புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. நபார்டு வங்கி கடனுதவியுடன் 250 ஏரிகள், 68.02 கோடி செலவில் தூர் வாரி புனரமைக்கும் பணிகளுக்கும், ஏரிகள் புனரமைப்பதற்காக 20.59 கோடியும், நபார்டு வங்கியின் கடனுதவி கிடைக்கப்பெற்றுள்ளது. பல்வேறு அரசுத் துறைகளில், பொதுமக்கள் பயன்பாட்டிற்குரிய கட்டடங்களைக் கட்டி பராமரித்திடும் வகையில், பொதுப் பணித் துறையின் கட்டமைப்புகள்மூலமாக, ரூபாய் 584.76 கோடி செலவில் பல துறைகள் சார்ந்த கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

புதிய வீராணம் திட்டம். சென்னை நகர மக்கள் குடிநீர் கிடைக்காமல், காலிக் குடங்களுடன், சுட்டெறிக்கும் வெய்யிலிலும், நடு இராத்திரியிலும், தாய்மார்கள் அலைந்த காட்சியைப் பார்த்த எங்கள் அம்மா, மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையான குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கும், அதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கும், கொண்டுவந்த திட்டம்தான், புதிய வீராணம் திட்டம். எங்கள் அம்மா ஆட்சியில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின்மூலம், சென்னைக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு



செய்யப்பட்டது. அது, இப்பொழுது சென்னை நகர மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டிருக்கிறது. வீராணத்திலிருந்து 'சென்னைக்கு குடிநீர் கொண்டு வருவேன், வந்தே தீருவேன்' என்று சூளுரைத்த எங்கள் அம்மா, இன்றையதினம், புதிய வீராணம் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு, சென்னை மக்களுக்குக் குடிநீர் வந்துகொண்டிருக்கிறது.

எங்கள் அம்மா தொட்டது துலங்கும். அதனால், அவர் அந்தத் திட்டத்தைத் தொடங்கியவுடனே, காவேரியில் வெள்ளப் பெருக்கெடுப்பு ஏற்பட்டு, வீராணம் ஏரி நிரம்பி வழிந்தது. இதனால், சென்னை மக்களுக்குத் தட்டுப்பாடின்றி எங்கள் அம்மா குடிநீர் வழங்கியதன் காரணத்தால், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில், சென்னை, திமுகவின் கோட்டை என்று இருந்ததை, அண்ணா தி.மு.க.வின் கோட்டையாக மாற்றிக் காட்டியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

அதுபோல, இந்தியாவில் மழைநீர் சேகரிப்புத் திட்டம். முதன்முதலாக தமிழகத்தில் எங்கள் அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டம், வெற்றிகரமாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதன் விளைவாக, இன்று சென்னை மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், நிலத்தடிநீர் மட்டம் பெருமளவு உயர்ந்திருக்கிறது. இப்பொழுதெல்லாம், சென்னை நகரில், அடி பம்பை இலேசாக அழுத்தினாலே, தண்ணீர் கொட்டுகிறது. அதற்குக் காரணம், எங்கள் அம்மா கொண்டுவந்த மழைநீர்ச் சேகரிப்புத் திட்டம்தான் என்பதை இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவிரி நதிநீர்ப் பிரச்சினையில், தமிழ்நாட்டுக்கு நீதி கிடைக்க, எங்கள் அம்மா அவர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், பதவியில் இருந்தபோதும் சரி, இல்லாதபோதும் சரி, எங்கள் அம்மா அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளை இங்கே விரிவாக எடுத்துரைக்க நான் விரும்பினாலும், நேரமின்மை காரணமாக, குறிப்பிட்ட சில வார்த்தைகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் ..-25

நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி, கர்நாடக அரசு கடந்த 1-6-2004 முதல் 31-5-2005 வரை 205 டி.எம்.சி. தண்ணீரை விடுவிக்க

வேண்டும். ஆனால், நமக்குக் கிடைத்ததோ 164 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே. கிடைக்கப்பட வேண்டிய நீர் 41 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்காமல் போய்விட்டது. கர்நாடக அரசு நம்மை வஞ்சித்தாலும், இயற்கை நம்மை வஞ்சிக்கவில்லை. அம்மா அவர்களின் நல்ல இதயத்தைப் போன்றே இயற்கை அன்னையும் கருணை காட்டியதால், கடந்த ஆண்டு காவிரியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, காவிரி டெல்டா பகுதி விவசாயிகளின் இல்லங்களில் மகிழ்ச்சி பொங்கியது.

கடந்த ஆண்டு நிரம்பிய மேட்டூர் அணை வற்றா ஜீவ நதிபோல் இன்றும் நிரம்பி வழிந்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் இந்த ஆண்டு குறிப்பிட்ட நேரத்தில் மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்குத் தண்ணீர் திறந்து விட முடிந்தது. காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமைகளை எங்கள் அம்மா ஆட்சிக் காலத்திலும் எந்த அளவும் விட்டுக்கொடுக்கவில்லை. தமிழகத்தின் உரிமைகளைப் பெறுவதற்கு மத்திய அரசுடனும் கர்நாடக அரசுடனும் எங்கள் அம்மா போராடி வந்ததை தமிழக மக்கள் மறந்துவிடவில்லை. காவிரி நடுவர் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பினை உடனே வழங்க வேண்டுமென்று இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்த வேண்டும். இப்பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு, இறுதித் தீர்ப்பு விரைவில் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். மத்தியில் ஆட்சியில் நீங்கள் இடம் பெற்றிருப்பதால், தமிழகத்திற்கு நியாயம் கிடைக்க தொடர்ந்து போராடி பெற்றுத்தர வேண்டும்.

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்"*

*என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, உழவு செய்யும் விவசாயிகள்தான்...*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. செ. பொன்னுதுரை:** நாட்டின் கண்களாக விளங்கினார்கள். இன்று அந்த நிலை மாறி விவசாயிகள் மற்றவர்களிடத்தில் கையேந்தி வாழும் அவலநிலை நிலவி வருகிறது. இந்த நிலையைப் போக்க வள்ளுவரின் வாக்கை மீண்டும் மெய்ப்பிக்கும் வண்ணம், விவசாயிகள் துயர் துடைக்க, அவர்கள் வாழ்வில் வளம் செழிக்க, கோவை, ஈரோடு மாவட்ட விவசாயிகள் பெரிதும் பயன்பெறும் வகையில், தமிழ்நாட்டில் நீலகிரி மலையில் கூடலூர் பகுதியில் உருவாகி, கேரளா வழியாகப் பாய்ந்து, பேவூர் என்ற இடத்தில் அரபிக் கடலில் கலக்கும் நீரை பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தின் மூலம், பவானி ஆற்றின் கிளை ஆறான மோயாறு ஆற்றில் இணைக்க சாத்தியக்கூறுகளை ஆராய



கேட்டுக்கொண்டதன் பேரில், பரிசீலனை செய்ததில், இந்தத் திட்டம் செயல்படுத்த முடியும் என்று தெரிந்தது. இந்தத் திட்டத்தின் மூலம் மின் உற்பத்தி போக, மீதி உபரி நீரில் குறைந்தபட்சம் 7 டி.எம்.சி. தண்ணீரையாவது மோயாறு ஆற்றோடு இணைக்க கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தர்ப்பத்திலே என்னை இம்மாமன்றத்திற்கு தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த பெருந்துறை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்காக சில கோரிக்கைகளை இங்கே முன் வைக்கின்றேன். பெருந்துறை கருமாண்டிசெல்லிப்பாளையம் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தாமதமின்றி நிறைவேற்றித்தர வேண்டும். பெருந்துறை பேரூராட்சி, கருமாண்டிசெல்லிப்பாளையம் பேரூராட்சி, இரண்டையும் இணைத்து, பெருந்துறை நகராட்சியாக ஆக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்துறை தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துகள் நடக்கின்றன. அங்கே தாலுகா மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் இல்லாததால், பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர். எனவே, பெருந்துறை தாலுகா மருத்துவமனையை விரிவுபடுத்தி, ஆம்புலன்ஸ் வண்டியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுகிறேன். மேலும், பெருந்துறை தாலுகா மருத்துவமனையிலேயோ, பெருந்துறை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள். சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. செ. பொன்னுதுரை:** மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலேயே பிரேத பரிசோதனைக் கூடம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டை பகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் புதியதாக பல உருவாகி வருகின்றன. அவற்றிலிருந்து வெளியேறும் கழிவு நீரைச் சுத்திகரிக்க, சுத்திகரிப்பு நிலையங்கள் இருந்தாலும், அவை சரிவரப் பராமரிக்கப்படாமல் இருப்பதால், அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைப் போக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், நிலத்தடி நீர் மாசுபடாமலும், நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும், அவினாசி-அத்திக்கடவு நீர் செறிவூட்டும் திட்டத்தின் மூலம் இவ்வரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும். இத்திட்டத்தை நிறைவேற்றினால் ஈரோடு, கோவை மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்றத் [illegible] உட்பட்ட ஊத்துக்குளி, பெருந்துறை உட்பட [illegible] ள்ள...

22748
சென்னை-600 008

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *சீக்கிரம் முடியுங்கள்.*

**திரு. செ. பொன்னுதுரை:** *50 குளங்களிலும்; 300 குட்டைகளிலும் நீர் நிரப்ப முடியும். இதன்மூலம் நிலத்தடி நீர் பெருகுவதோடு சுமார் 10 இலட்சம் மக்கள் பயனடைவர். ஏற்கெனவே, தேர்தலின்போது கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இப்போதைய முதல்வர் தி.மு.க. அரசு மீண்டும் வந்தால் அவினாசி–அத்திக்கடவுத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று உறுதி அளித்துள்ளார் என்பதை நினைவூட்டுவதோடு, தற்போது ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் தி.மு.க. அரசு இந்தத் திட்டத்தைக் கிடப்பில் போடாமல் நிறைவேற்ற வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள ஊத்துக்குளி என்றாலே வெண்ணெய் நினைவுக்கு வரும். அந்தவகையில் அங்கே வெண்ணெய்க்கு குளிர்சாதன பாதுகாப்புக் கிடங்கு அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அப்படியே எழுதிக் கொடுத்து விடுங்கள், செய்துவிடுவார்கள்.*

**திரு. செ. பொன்னுதுரை:** *ஊத்துக்குளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றித்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.*

*பொதுப் பணித் துறை மூலமாக, நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற அலுவலகக் கட்டடங்கள் 234–ல் 226 போக மீதியுள்ள கட்டடங்களைக் கட்டிக்கொடுக்குமாறு இவ்வரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பெருந்துறை தாலுகாவில் அந்தப் பகுதியைச் சேர்ந்த விசைத்தறிக் கூடங்கள் அதிகமாக இருப்பதால் அங்கே விசைத்தறிப் பூங்கா ஒன்று அமைத்துக் கொடுக்குமாறு இவ்வரசைக் கேட்டுக்கொண்டு, இம்மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த எங்கள் கட்சித் தலைமைக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அடுத்து மாண்புமிகு உறுப்பினர் ஆர். காந்தி.*

**திரு. ஆர். காந்தி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியத்தில் என்னைப் பேச வாய்ப்பு*



*அளித்ததற்கு நன்றி. என்னை 1996–ல் சட்டமன்ற உறுப்பினராகவும், மாவட்டச் செயலாளராகவும், மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவராகவும் அடையாளம் காட்டிய எங்கள் தலைவர் தற்போது மாவட்டப் பொறுப்பாளராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் எனக்கு நல் வாய்ப்புகள் கொடுத்து, தாயாகவும், தந்தையாகவும் வழி நடத்தும் எங்கள் குடும்பத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாத் தரப்பு மக்களுக்கும் நன்மை செய்யும் பட்ஜெட்டைத் தந்த கலைஞரின் உற்ற நண்பர், கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு நிதி அமைச்சர் எங்கள் அண்ணன் இனமான பேராசிரியர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) என்னை அரசியலில் அறிமுகப்படுத்தி, என்னை ஆளாக்கிய, தொண்டர்கள் போற்றும் கழகப் பொருளாளர் மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர் அணிச் செயலாளராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், சென்னை மாநகர மேயராக, கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளராக, இன்று அமைச்சராக—ஏற்றுக்கொண்ட அனைத்துப் பொறுப்புகளிலும் தனி முத்திரை பதித்து, பாமரர் முதல் படித்தவர்கள் வரை பாராட்டும் பண்பாளர், என் வளர்ச்சியில் அக்கறை கொண்ட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மண்ணின் மைந்தர், கழகத்தின் முதன்மைச் செயலாளர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞரின் மனசாட்சியும், முன்னாள் மத்திய அமைச்சர் அண்ணன் திருமிகு முரசொலி மாறன் அவர்களின் புதல்வர், இளம் சாதனையாளர் கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை ஒரு ரூபாயில் தொலைபேசியில் பேச புரட்சி ஏற்படுத்திய மாண்புமிகு மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் அவர்களே—அனைவருக்கும் எனது நன்றிகலந்த வணக்கம். இப்பேரவைக்கு மீண்டும் என்னை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த இராணிப்பேட்டை தொகுதியில் 32,504 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி. வேலூர் மாவட்டத்தில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிக்கும் என் வெற்றிக்கும் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், செயல்வீரர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.*

*முற்பகல் 11–35*

*8 ஆம் தேதி தேர்தல் நடந்தது. 11 ஆம் தேதி வாக்கு எண்ணினார்கள். 13 ஆம் தேதி தலைவர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு முதல்வராக*

ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், சொன்ன வாக்குறுதிகளில், முக்கியமான வாக்குறுதிகளில்—ஒரு கிலோ அரிசி 2.00 ரூபாய். முதல் கையெழுத்துப் போட்டார்; இரண்டாவது கையெழுத்து, விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் இரத்து; இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு ஏறத்தாழ 6,866 கோடி ரூபாய்க்கு; இரண்டாவது கையெழுத்துப் போட்டார். மூன்றாவது கையெழுத்து, சத்துணவிலே வாரத்திற்கு இரண்டு முட்டை கையெழுத்து போட்டவுடன், அவர் கோட்டைக்குக்கூட போகவில்லை. 3 ஆம் தேதி, 20 நாட்களுக்குள்ளாக—6 மாதங்கள் இல்லை, ஒரு வருடம் இல்லை 20 நாட்களுக்குள்ளாக—முதல்வர் பிறந்த நாள் அன்று, ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்குப் போட்டார்; அன்றே விவசாயிகளுக்கு வட்டி, கடன் இரத்துக்கான சான்று கொடுத்தார். அதேபோல், கலைஞர் ஆட்சிக் காலத்தில், ஒரு ஏழைக் குடும்பத்திலே ஒரு பெண்மணி 10 ஆம் வகுப்பு படித்திருந்தால் திருமணத்திற்காக 10,000 ரூபாய் கொடுத்தார். திரும்ப நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 15,000 ரூபாய் கொடுப்போம் என்று சொன்னார். மூன்றாம் தேதி அன்றே அதுவும் கொடுத்தார். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு முதலமைச்சர், தேர்தல் வாக்குறுதிகளை 20 நாட்களுக்குள்ளாக, நிறைவேற்றிய தலைவர், ஒரே தலைவர், கலைஞர் அவர்களாகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்க முடியுமே தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது.

அடுத்தது, கலைஞர் அவர்கள அரசின் 100 நாள் சாதனைகள். இந்த அரசின் சாதனைகளைப் பாராட்டாதவர்களே இல்லை. இந்தச் சாதனைகளை நமது காங்கிரஸ் பேரியக்கத்தின் தியாகி, தலைவி அன்னை சோனியா காந்தி அவர்கள் பாராட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மட்டுமா? இந்தியாவிலே இருக்கிற தின ஏடுகள், வார ஏடுகள், கலைஞரைப் பற்றிப் பாராட்டி எழுதின. இங்கே தோழமைக் கட்சித் தலைவர்கள் எல்லாம் அந்த ஏடுகளிலே வந்த பாராட்டுகளை எல்லாம் படித்துக் காண்பித்தார்கள். உதாரணத்திற்கு, 'மலையாள மனோரமா' என்ற பத்திரிகை, கலைஞர் அவர்கள், தனது 83-வது வயதில் செய்துள்ள சாதனைகளைப் பாராட்டி எழுதி உள்ளது; கடைசியாக அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள், தெரியுமா? 83 வயது கலைஞர் 100 ஆண்டு வாழ வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்த மக்களைப் பிரார்த்தனை செய்யுமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும், இங்கிருக்கிற, தமிழ்நாட்டிலே இருக்கிற தமிழன், சூடு, சொரணை இல்லாத அளவிற்கு, மனசாட்சி இல்லாத அளவிற்கு அந்தப் பண்பு தெரியவில்லை, ஒரு சிலருக்கு.



நான் எல்லோரையும் சொல்லவில்லை. ஒரு சிலரைத்தான் சொல்கிறேன். ஆனால், கலைஞர் அவர்கள் இன்று ஏழையெளிய, நடுத்தர மக்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், நெசவாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர் பெருமக்கள், மாணவர்கள், வியாபாரிகள், காவல் துறையினர், பத்திரிகையாளர்கள் என்று அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் வகையில் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமா? நாங்கள்கூட, என்னடா, ஒரு குறை வைத்துவிட்டாரே தலைவர் என்று நினைத்தோம். அதையும் நேற்று நிறைவேற்றி விட்டார். அது என்னவென்றால், 10 வருடம் சிறையிலே வாடும் கைதிகள்கூட, சந்தோஷப்படும் அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா பிறந்த நாள் அன்று விடுதலை. அதனால் நேற்றெல்லாம் அவர்கள் ஜெயிலில் கொண்டாடிக் கொண்டிருந்திருப்பார்கள். இந்த சந்தோஷத்தைவிட வேறு என்ன இருக்கிறது அவர்களுக்கு? மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சி, தோழமைக் கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கும், எந்த பாகுபாடும் இல்லாமல், நல்லாட்சி தருவதில் அவருக்கு ஈடு வேறு யாரும் இல்லை. அவர்தான்.

(முற்பகல் 11-40)

கலைஞர் அவர்கள் 1989-வது வருடம் ஆட்சிக்கு வந்தவுடன் – அந்த ஆட்சியிலே இரண்டு வருடம்தான் இருந்தார் – ஆட்சியிலே. அப்படி இருக்கும்போதே விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்தவர் இவர்தான். வேறு யாரும் இல்லை. எது வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளலாம். ஆனால், ** 1991-லே ஆட்சிக்கு வந்தவுடன், அதை இரத்துப் பண்ணினார்கள். (குறுக்கீடுகள்) நாங்கள் எல்லாம் ஜெயிலுக்குப் போனோம் சார். தலையாட்டாதீர்கள். நாங்கள் எல்லாம் கஷ்டப்பட்டோம். நானும் ஜெயிலுக்குப் போனேன். போராடினோம். பா.ம.க. வந்தது. போய்ப் போராடி திரும்பப் பெற்றோம். அன்று நான் திமுகவிலே சாதாரண செயற் குழு உறுப்பினர்தான். அம்மா வந்தவுடன் முதல் பலி நான்தான். என்னைத்தான் குண்டர் சட்டத்திலே போட்டார்கள். (குறுக்கீடு) இல்லை, அந்த அம்மா, அந்த அம்மாதான். இதை எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், எந்தக் காரணமும் இல்லாமல், காரணம் எதுவும் இல்லாமல், நான் ஒரு பினாமி, இங்கிருக்கிற கலைஞர் அவர்கள் குடும்பத்திற்கும், நம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் குடும்பத்திற்கும் நான் பினாமி என்று என்னைப் போட்டார்கள். ** ஆனால் அந்த அம்மா வந்தவுடனே இந்த மாதிரி நல்ல

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திட்டங்களையெல்லாம் தீட்டினார்கள். வந்தவுடனே 1991–1996–லே அம்மா ஆட்சியிலே நடக்காத நல்ல காரியங்களே கிடையாது. ** (குறுக்கீடுகள்) என்ன? (குறுக்கீடுகள்) என்ன? என்ன? வேறு யார்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** P.W.D. Demand-லே சொல்லுங்கள்.

**திரு. ஆர். காந்தி:** *ஆனாலும்... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லிவிட்டேன்.

**திரு. ஆர். காந்தி:** *கலைஞர் அவர்கள்... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லிவிட்டேன். சொல்லிவிட்டேன்.

**திரு. ஆர். காந்தி:** *கலைஞர் அவர்கள்... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காந்தி, மானியத்தையொட்டிப் பேசுங்கள். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன்.

**திரு. ஆர். காந்தி:** *1996-லே கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் (குறுக்கீடுகள்) 1996-லே ஆட்சிப் பொறுப்பேற்றவுடன்... (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** காந்தி, மானியத்தையொட்டியே பேசுங்கள்.

**திரு. ஆர். காந்தி:** *சரி, ரைட். மானியம்தான் இது. (குறுக்கீடுகள்) எல்லாம் மானியம்தான் சார். (குறுக்கீடுகள்) எல்லாம் மானியம்தான். 1996-லே கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் (குறுக்கீடுகள்) மக்கள் வரிப் பணத்தை வீணாக்காமல் சிந்தித்து, சிந்தித்து மக்களுக்கு என்ன தேவை என்பதை... (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே பேசிக்கொண்டிருக்கிறாரா அல்லது அரசியல் பேசுகிறாரா என்பதை நாங்கள் முதலிலே தெரிந்துகொள்ள வேண்டும். அரசியல் பேச வேண்டுமென்றால், பொது மேடையிலே நாங்கள்*

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம். அவர் அதற்குப் பதில் சொல்லத் யாராக இருந்தால் போதும். ஆகவே, அவர் (குறுக்கீடு) குறிப்பிலே றிப்பிட்டிருக்கிற, ** என்பதை நீங்கள் அவைக் குறிப்பிலே இருந்து இப்போது நீக்குவதுதான் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. ** அவர் சொன்னது. (குறுக்கீடுகள்) மானியத்தையொட்டிப் பேசுங்கள். ானியத்தையொட்டிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. ான் கவனித்துக்கொண்டுதான் இருந்தேன். (குறுக்கீடுகள்) ** வேறு துவும் பேசவில்லை.

**திரு. ஆர். காந்தி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996–2001–லே கலைஞர் ஆட்சிக் காலத்தில் (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் வேறு எதுவும் சொல்லவில்லை. ** என்று சொல்கிறார்.

**திரு. ஆர். காந்தி:** பொதுப் பணித் துறையில் 50 வருடம் நடக்காத வேலையை நடத்தினார்கள். (குறுக்கீடுகள்) இதே பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அன்று (குறுக்கீடு) 50 வருடம் நடக்கவில்லை. தட்டை, கால்வாய், ஏரிகள் தூர் வாருவது கலைஞர் ஆட்சிக் ாலத்திலேதான் இதே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லைங்க, சொறடா அவர்களே, அவர் எதையும் சம்பந்தப்படுத்தவில்லை. ** என்பது குறுக்கீடு) அது எப்படி நியாயம்? அதை எப்படி நீக்க முடியும்? t is not an unparliamentary word. (குறுக்கீடுகள்) அதாவது ** என்று அவர் கேட்டுக்கொண்டார். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்களேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அவர் பேசியதில் எந்த வாக்கியம் ஆட்சேபகரமானது என்பதை எதிர்க் ட்சித் துணைத் தலைவர் விளக்கினால் நல்லது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கார்த்திக் அவர்கள் (குறுக்கீடு) காந்தியா? சரி. ாந்தி (குறுக்கீடுகள்) காந்தியே உண்மைக்குப் புறம்பாகப் பேசுகின்ற ஒரு சூழ்நிலை இந்தச் சட்டமன்றத்திலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ாந்தி அவர்கள், மானியக் கோரிக்கையில் பேசுவதைத் திசை திருப்பி, * என்ற வார்த்தைகள் வந்ததனால், நாங்கள் ஆட்சேபணை*

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செய்கின்றோம். அந்த வார்த்தை (குறுக்கீடுகள்) பெயரைச் சொன்னார். (குறுக்கீடுகள்) சொன்னார். (குறுக்கீடுகள்) பெயரைச் சொன்னார். (குறுக்கீடுகள்) பெயரைச் சொன்னார். (குறுக்கீடுகள்) பெயரைச் சொன்னார். இது தேவையில்லாத சர்ச்சை. **

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் restrict பண்ணுகிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இந்தப் பக்கத்திலிருந்தும் சில கேள்விகள் வரும். எனவே, இதைத் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) ** என்பதை நீக்கச் சொன்னீர்கள், வேறு என்ன சொல்கிறீர்கள்!

**திரு. ஆர். காந்தி:** அன்பார்ந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996-லிருந்து 2001 வரைக்கும்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அந்த வார்த்தையை எடுத்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. காந்தி, ஒரு நிமிடம். ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. காந்தி, உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் சென்ற முறை இங்கே முதலமைச்சராக இருந்து இருக்கிறார். தயவுசெய்து கடந்த கால நடவடிக்கைகளையெல்லாம் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். முதலமைச்சர் வராதபோதே, எவ்வளவு தரக்குறைவாக ஓர் அமைச்சரே பேசி, அப்பொழுது நாங்கள் சபாநாயகரைப் பார்த்துக் கேட்கும்பொழுது, யாரையும் பெயரிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் பேசினார், பேசலாம் என்று allow பண்ணியதெல்லாம் இந்தச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கிறது. அது உங்களுக்குத் தெரியும். மனசாட்சி என்று ஒன்று இருந்தால், கடந்த ஐந்து ஆண்டுகளிலே பேசியதையெல்லாம் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். இப்போது ஒன்றும் அவர் பெரியதாகப் பேசவில்லை. ஏதோ, அரசியலும் பேசவில்லை.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரச்சினை முடிந்து போய்விட்டது. அப்படியே விட்டுவிடலாம். (குறுக்கீடு) யார், நீங்கள் பேசுகிறீர்களா? எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) நீக்கப்பட்டுவிட்டது. அதிலே ஒன்றும் இல்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர், உயர் கல்வித் துறை அமைச்சர், கடந்த காலத்தில் பேசினீர்கள், கடந்த காலத்தில் பேசினீர்கள் என்று சொல்லி, நாங்கள் மறுபடியும் அதேமாதிரிதான் பேசுவோம் என்ற தொனியில் பேசுகின்றார். கடந்த காலத்தில் என்ன பேசினோம் என்பதை இப்போது சிந்தித்துப் பார்க்கின்ற நிலையில் இல்லை. இப்போது நாட்டிற்கு சொல்லவேண்டிய கருத்தைச் சொல்லுங்கள். குற்றச்சாட்டாகச் சொல்ல வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், டாக்டர் க. பொன்முடி அவர்கள் சொன்னது, கடந்த காலத்திலே எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசியதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கினார்கள் என்பதைப்பற்றிச் சொன்னார்கள். இப்போது அதுவல்ல பிரச்சினை. இந்த அவையின் நேரம் மிக முக்கியம். மாண்புமிகு உறுப்பினர் திரு. காந்தி அவர்கள் பேசியதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கேற்ப, சபைக் குறிப்பிலிருந்து நீக்கியாகிவிட்டது. தொடர்ந்து பேச அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. காந்தி, சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஆர். காந்தி:** எங்கே, நான் பேசவில்லையே சார். பேசாமலே முடியுங்கள் என்றால் எப்படி சார்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் நேரம்தான் முக்கியம்.

**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996-லிருந்து 2001 வரைக்கும், இதே பொதுப் பணித் துறை அமைச்சர், இதே முதல்வர்தான் இருந்தார்கள். 50 வருடங்களில் நடக்காத வேலைகள், அந்த மன்னர்கள் காலத்திலும்கூட நடக்காத வேலைகள், அந்த ஐந்து வருடங்களிலேதான் நடந்தன; எங்கள் தலைவர், இந்த மன்னர்

காலத்தில்தான் நடந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், எதற்கெடுத்தாலும் அம்மா, அம்மா என்று சொல்லுகிறார்கள். ஐந்து வருடம்தான் அம்மா, அம்மா என்று போய்விட்டது. இப்போதுகூடவா அம்மா. எதற்கு நான் சொல்ல வருகிறேன் என்றால், உங்கள் அம்மா செய்ததை நான் இல்லையென்று சொல்லப்போவதில்லை. (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நான் அமைதிப்படுத்துகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் அமைதிப்படுத்துகிறேன்.

**திரு. ஆர். காந்தி:** ஆனாலும், இன்று கலைஞர் அவர்கள், அந்த ஐந்து வருடங்களில் மக்களுக்காகச் சிந்தித்து, சிந்தித்துச் செயல்பட்டு-(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் restrict பண்ணுகிறேன், உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. ஆர். காந்தி:** நல்ல திட்டங்களைத் தீட்டி மக்களுக்கு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

**திரு. ஆர். காந்தி:** இந்த பொதுப் பணித் துறையிலே நடக்காத வேலைகள் கிடையாது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு தயவுசெய்து ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், ஜெயராமன் உட்காருங்கள். சீக்கிரம் முடித்துவிடுங்கள், திரு. காந்தி.

**திரு. ஆர். காந்தி:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது-(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடித்துவிடுங்கள், திரு. காந்தி.



முற்பகல் 11-50

**திரு. ஆர். காந்தி:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் (குறுக்கீடுகள்) நாங்கள். (குறுக்கீடுகள்)** அதற்கொரு உதாரணம் சொல்லட்டுமா? (குறுக்கீடுகள், உதாரணம். (குறுக்கீடுகள்) ஒரே உதாரணம், ஒரே உதாரணம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். காந்தி, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். காந்தி:** ஒரே உதாரணம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி மட்டும் சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். காந்தி:** ** அதை உருவாக்கியது யார்? (கூச்சல்—குழப்பம்) அதேபோல், நமது கும்மிடிப்பூண்டி.. (கூச்சல்—குழப்பம்) கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர்..(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். காந்தி, சீக்கிரம் முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர். காந்தி:** Right, right, sir. (குறுக்கீடுகள்) அதேபோல், (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதோ முடிக்கப் போகிறார். (குறுக்கீடுகள்) முடிக்கப் போகிறார். (கூச்சல்—குழப்பம்) இல்லை, கொறடா.

**திரு. ஆர். காந்தி:** சரி, பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, முடிக்கப் போகிறார், விட்டுவிடுங்கள்.

**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு ஒரு வேண்டுகோள். (குறுக்கீடுகள்) ஒரு வேண்டுகோள். (குறுக்கீடுகள்) இதை, இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம். (குறுக்கீடுகள்) இனிமேல் இந்தப் பிரச்சினை எதுவும் இங்கே நீங்களும் பேசக்கூடாது, நானும் பேசமாட்டேன். **நான் சொல்கிற கோரிக்கையைமாத்திரம் நிறைவேற்றுங்கள். (குறுக்கீடுகள்) என்ன கோரிக்கை என்றால்...

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கையை மாத்திரம் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. ஆர். காந்தி :** என் கோரிக்கையைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோரிக்கையைச் சொல்லுங்கள்.

**திரு. ஆர். காந்தி :** ஒருநாள் நீங்கள் எங்களைக் கூப்பிட்டு ஒரு பட்டிமன்றம் நடத்திவிடலாம். ** *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)* உட்காரச் சொல்லுங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அடுத்த உறுப்பினரைக் கூப்பிடுங்கள். *(குறுக்கீடுகள்)* அடுத்த உறுப்பினரைக் கூப்பிடுங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் *(கூச்சல்-குழப்பம்)* அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால். *(கூச்சல்-குழப்பம்)* எல்லோரும் உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* நீங்கள்..

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார், அவையின் மையப்பகுதிக்கு வந்து பேரவைத் தலைவரின் இருக்கையின் எதிர்ப்புறம் கீழே அமர்ந்தார்.)*

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவையின் மையப்பகுதிக்கு வந்து பேரவைத் தலைவரை நோக்கி கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)*

திரு. டி. ஜெயக்குமார், எழுந்திருங்கள். *(குறுக்கீடுகள்)* இருக்கைக்குப் போய் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முதலில் எழுந்திருங்கள். *(கூச்சல்-குழப்பம்)* உங்கள் இருக்கையிலே போய் உட்காருங்கள். *(கூச்சல்-குழப்பம்)*

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு பேரவைத் தலைவரை நோக்கி கையை நீட்டி ஏதோ பேசினார்.)*

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. பி.கே. சேகர்பாபு, கையை நீட்டிப் பேசாதீர்கள், போங்கள். *(கூச்சல்-குழப்பம்)* என்ன சொன்னார்? *(கூச்சல்-குழப்பம்)* சரி, அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லியாகிவிட்டது. நான் அவைக்குறிப்பைப் பார்த்துவிட்டு, நீக்க வேண்டியதை நீக்கிவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* போங்கள், நான் பார்த்துவிட்டு நீக்குவேன். *(குறுக்கீடுகள்)* திரு. டி. ஜெயக்குமார், நான் அதைப் படித்துப் பார்த்துவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* போங்கள். *(கூச்சல்-குழப்பம்)* நான் சொல்கிறேன், அல்லவா? *(குறுக்கீடுகள்)* நான் சொல்கிறேன் அல்லவா? போங்கள். *(கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)* என்ன சொன்னார்? *(கூச்சல்-குழப்பம்)* பொறுங்கள். *(கூச்சல்-குழப்பம்)* துணைத் தலைவர், இங்கே வாருங்கள். *(கூச்சல்-குழப்பம்) (குறுக்கீடுகள்)* முதலில் உங்கள் கொறடாவை வரச்சொல்லுங்கள், ஐயா. *(கூச்சல்-குழப்பம்)* முதலில் கொறடாவின் சொல்படி கேளுங்கள் அல்லது உங்கள் கட்சி துணைத் தலைவர் சொல்படி கேளுங்கள். என்ன வார்த்தையை நீக்க வேண்டும்? *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* இல்லை, என்ன வார்த்தையை நீக்கவேண்டும்? *(குறுக்கீடுகள்)* திரு. டி. ஜெயக்குமார், நீங்கள் முதலில் போய் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* என்ன வார்த்தையை நீக்க வேண்டுமென்று சொன்னால்தானே, நீக்குவதற்கு. *(கூச்சல்-குழப்பம்)* என்ன வார்த்தையை நீக்க வேண்டுமென்று சொன்னால், நீக்கச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)* சரி, அதாவது, *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு கொறடா அவர்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதல்வர் அவர்கள். நீங்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதல்வர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் போங்கள் சார். *(குறுக்கீடுகள்)* முதலில் நீங்கள் உங்கள் இருக்கைக்குப் போங்கள், திரு. அரி. *(குறுக்கீடுகள்)* அனைவரும் இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லா உறுப்பினர்களும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் அவரவர் இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு முதல்வர் அவர்கள். *(குறுக்கீடு)* எல்லோரும் இருக்கையிலே உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)* திரு. ஆர். காந்தி அவர்கள் ஆற்றிய உரையில், எதிர்க்கட்சி நண்பர்களுக்கு ஆத்திரமூட்டக்கூடிய அளவிற்கு, வேதனை ஏற்படக்கூடிய அளவிற்கு அமைந்த வாசகங்களால், ஏற்பட்டுள்ள விளைவை நான் உள்ளபடியே விரும்பத்தகாத ஒன்று என்று

கருதுகின்றேன். எனவே, அந்த வாசகங்களை அவைக் குறிப்பிலேயிருந்து தாங்கள் நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதற்குப்பிறகு, எதிர்க்கட்சி நண்பர்கள் அமைதியாக இந்த அவையை நடத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு) கடைசிப் பகுதி, (குறுக்கீடு) கடைசிப் பகுதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கடைசியிலே, முன்னாள் முதலமைச்சரைப் பற்றிச் சொன்ன அந்த வாசகங்களை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கிவிடுங்கள். (குறுக்கீடு) அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-55*

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதனையொட்டி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சார்பாக திரு. அரி போன்றவர்கள் இன்னும் சிலர் தகாத வார்த்தைகளை இந்த அவையிலே பேசியிருக்கின்றார்கள். எதிர்ப்புத் தெரிவித்து ** என்ற வார்த்தையெல்லாம் பேசியிருக்கின்றார்கள். அது பதிவாகியிருந்தால், அதையெல்லாம் நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தமாதிரியான வார்த்தைகள் பதிவாகியிருந்தால், அந்த வார்த்தைகளும் நீக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தயவுசெய்து பேரவைத் தலைவர் அவர்களே, அந்த proceedings–ஐ வாங்கி (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை அப்படி இல்லை. Proceedings–ஐ வாங்கி, அவையினுடைய proceedings–ஐ வாங்கி, எந்தெந்தப் பகுதி ஆட்சேபணைக்குரிய வார்த்தை என்பதைப் பார்த்து, நீங்கள் அதை நீக்க வேண்டும். அதை மட்டும் நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கூச்சல் குழப்பத்திலே, அவைக் குறிப்பில் ஏதாவது வார்த்தைகள் பதிவாகியிருந்தால், அத்தனை வார்த்தைகளும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) திரு. காந்தி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால். (குறுக்கீடு) அடுத்த உறுப்பினர் திரு. ஜெயபாலை கூப்பிட்டுவிட்டேன். (குறுக்கீடு) உட்காருங்கள் காந்தி. (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடும் வறட்சியிலே உள்ள எங்கள் மாவட்டத்தில்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காந்தி, உட்காருங்கள். திரு. ஜெயபால், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக்கோரிக்கைமீது பேசுகின்றபோது, என்னை இந்தப் பேரவைக்கு வந்து உரையாற்ற வாய்ப்பளித்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பது என் தலையாய கடமை என்பதை உணர்கிறேன். குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக என்னை நியமித்த காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவி, அன்புத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அரசியலிலே எங்களைப்போன்ற சாமானியர்களுக்கும் முகவரி தந்து, சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு வழிவகை செய்த மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களின் அருமைப் புதல்வர் மக்கள் தளபதி மாண்புமிகு மத்திய அமைச்சர் ஐயா ஜி.கே. வாசன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில், தமிழகத்திலே ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிக்கு தலைமையேற்று மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களின் தாரக மந்திரமான 'வளமான தமிழகம், வலிமையான பாரதம்' என்பதை உருவாக்கும் சிற்பியாக, இந்த உலகத் தமிழர்களின் உரிமைக் குரலாய், தமிழினத்தின் தலைமகனாய் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மக்களின் பிரதிநிதியாய் பிரதிபலிக்கும் முத்தமிழ் அறிஞர் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் நேரத்திலே எனது வெற்றிக்காக வீதி வீதியாக வந்து வாக்காளர்களைச் சந்தித்து, தேர்தல் பிரச்சாரம் செய்த உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் 21,000 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த, என் தொகுதி மக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட தோழமைக் கட்சித் தொண்டர்களுக்கும், தோழர்களுக்கும் நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

*'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு'*

என்று வள்ளுவன் சொன்னதைப்போன்று, கன்னியாகுமரி மாவட்டத்திலே கிட்டத்தட்ட 40 ஆண்டுகாலக் கோரிக்கையாக இருந்த, குளச்சலிலே மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும், அதேபோன்று வர்த்தகத் துறைமுகம் அமைக்க வேண்டும் என்று எங்கள் மாவட்ட மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, நாங்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சந்தித்தபோது வைத்த அந்தக் கோரிக்கைகளை ஏற்று தாய் உள்ளத்தோடு இந்த நிதிநிலை அறிக்கையிலே 23.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோன்று, குளச்சலிலே கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்ற விதத்திலே, ஒரு மிகப் பெரிய பெட்டகத் துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்தி, கூடியவிரைவிலே துறைமுகம் அமைக்கப்படும் என்பதை நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக, எங்களுடைய மாவட்ட மக்களின் சார்பாகவும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

பொதுப் பணித் துறை என்பது, மிக முக்கியத்துவம் வாய்ந்த துறை. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் சீரிய தலைமையில், இந்தத் துறையில் தமிழகம் சாதனை படைக்கும் என நம்புகிறேன். நீர்ப்பாசனம், கட்டுமானம், கடலரிப்புத் தடுப்பு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய இந்தத் துறையின்மூலம்தான், விவசாயக் கட்டமைப்புகள், பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்புகள், மீனவர் நலன் காக்க தூண்டில் வளைவுகள், கடலரிப்புத் தடுப்புச் சுவர்கள் உருவாக்கப்படுகின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், வறட்சியாலும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதேபோன்று, பெரு வெள்ளத்தாலும், வெள்ளப்பெருக்காலும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். பருவமழை தீவிரமாகப் பெய்கின்ற வேளைகளில், வெள்ளப்பெருக்கால் பெருஞ்சேதம் ஏற்படுகிறது. ஏராளமான தண்ணீர் வீணாகக் கடலிலே கலக்கிறது. குறிப்பாக, தமிழக விவசாயத்தின் உயிர்நாடியாக, தமிழக மக்களுடைய ஜீவநாடியாக விளங்கிக் கொண்டிருக்கிற காவிரி ஆற்றின் உபரி நீர், ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான கன அடி நீர் வீணாகக் கடலிலே



கலக்கிறது. கடந்த ஆண்டு பெய்த பருவ மழையின்போது, பருவ மழையின் தீவிரத்தால், காவிரியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், தஞ்சை டெல்டா பகுதிகளில் விவசாயப் பயிர்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு, கோடிக்கணக்கான தொகை அளவுக்கு பயிர்ச்சேதம் ஏற்பட்டது. எனவே, வெள்ளப்பெருக்கால் வரும் சேதத்தைத் தடுக்கவும், வீணாகின்ற நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தவும், திட்டங்களைத் தயார் செய்யும் சிந்தனை அரசுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக, திருச்சி மாவட்டம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஐந்து இடங்களிலே தடுப்பணைகள் அமைத்து, காவிரி ஆற்றின் உபரி நீரைத் திருப்பிவிட்டால், நிச்சயமாக பல இலட்சம் ஏக்கர் நிலங்களைப் பாசன நிலங்களாக மாற்ற முடியும். அதேவேளையில், வெள்ளப்பெருக்கால் ஏற்படுகின்ற மிகப்பெரிய சேதத்தையும் தடுக்க முடியும் என்பதைக் கணக்கிலே கொண்டு, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஐந்து அணைக்கட்டுகளைக் கட்டவேண்டுமென்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில், Supreme Court தீர்ப்பின்படி, அணைக்கட்டை 142 அடியாக உயர்த்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து, கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வுகாண வேண்டுமென்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், குளச்சல் தொகுதியிலே பன்றிவாய்க்கால் வழியாகக் கடலில் பாய்ந்து வீணாகின்ற தண்ணீரை, தடுப்பணை கட்டி, lift irrigation மூலம் விவசாயத்திற்குப் பயன்படுத்துவதோடு, அந்தப் பகுதியிலே நிலத்தடி நீர் வளத்தையும் காக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, வள்ளியாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி, நீரேற்றுத் திட்டத்தின்மூலமாக, கடலில் கலக்கும் நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயிகளின் காவலனாக, விவசாயப் பெருங்குடி மக்களின் அரணாக இருந்து கொண்டிருப்பது, பேச்சிப்பாறை அணை. கடந்த காலங்களிலே ஒருமுறை மழை பெய்தால், அணை நிரம்பிவிடும். 48 அடி கொள்ளளவு கொண்ட அந்த அணை முழுவதும் நிரம்பிவிட்டது என்று சொன்னால், ஓராண்டு காலத்திற்கு அந்த மாவட்டத்திலே உள்ள அனைத்துப் பகுதிகளிலும் விவசாயத்தைச் செம்மையாக நிறைவேற்ற முடியும். ஆனால், கடந்த ஐந்தாண்டு காலமாக,

கடந்த ஆட்சியிலே, இந்த அணை சரியாகப் பராமரிக்கப்படாத சூழ்நிலையிலே, பேச்சிப்பாறை அணையினுடைய நீர்ப்பிடிப்புப் பகுதிகளெல்லாம் தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள், அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளாக இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலங்கள், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, வாழைத் தோட்டங்களைப் பயிர்செய்திருக்கின்ற காரணத்தினாலே, அணையினுடைய கொள்ளளவு இன்றைக்குக் குறைந்திருக்கிறது. அதேபோன்று, பேச்சிப்பாறை அணையினுடைய கட்டுமானப் பகுதியிலே தொடர்ந்து நீர்க்கசிவு ஏற்பட்டுக்கொண்டிருப்பதால், அந்த நீர்க்கசிவின் காரணத்தினாலே, ஏராளமான தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிறது. எனவே, பேச்சிப்பாறை அணைப் பகுதியினுடைய நீர்ப்பிடிப்புப் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

அதேபோன்று, கட்டுமானப் பகுதிகளிலே கசிகின்ற நீரைத் தடுக்கின்ற வகையிலே அரசு செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு-1, சிற்றாறு-2, பொய்கை அணை ஆகிய அணைகளை ஆண்டுதோறும் பராமரிப்புச் செய்வதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் சட்டமன்றத் தொகுதியில், விவசாயத்திற்குப் பயன்படும் அனந்தக்கால், காரவிளைச் சானல், ஆசாரிபள்ளம் சானல், கிருஷ்ணன்கோயில் சானல், குருந்தன்கோடு சானல், இராஜாக்கமங்கலம் சானல், இலட்சுமிபுரம் சானல், சாந்தபுரம் சானல், முட்டம் சானல், இந்தச் சானல்களெல்லாம் குளச்சல் தொகுதியிலே கடைவரம்புச் சானல்களாக இருந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சானல்களிலே தண்ணீர் ஒழுங்காக வந்தால்தான் கடைவரம்பு விவசாயத்தைச் செய்யமுடியும் என்ற சூழ்நிலையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தக் கடைவரம்புச் சானல்களுக்கு ஒழுங்காகத் தண்ணீர் வரக்கூடியவகையில், main சானல்களை, அதிலே பழுதுபட்டு இருக்கக்கூடிய மடைகளை சரியாகப் பராமரித்து சீரமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

குளச்சல் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நிலத்தடி நீர் வளம் பெருகவேண்டுமென்றால், நீர்ப்பாசனச் சானல்களை, முறைப்படி,



ஆண்டுக்கொருமுறை தூர்வாரி மராமத்துப் பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியில் குமரி மாவட்டத்தில் பொதுப் பணித் துறை நீர் ஆதாரப் பிரிவிற்கு நிதி ஒதுக்கீடு சரியாகச் செய்யப்படாததால், பாசனக் குளங்களெல்லாம் பாழடைந்த நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றன. பாசனக் கால்வாய்கள பராமரிப்பின்றி தண்ணீர் கொண்டு செல்லமுடியாத சூழ்நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, இந்த அரசாவது, டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே இருந்துகொண்டிருக்கக்கூடிய அரசாவது, ஆண்டுதோறும் சானல்களைப் பராமரிப்பதற்கு, தூர் எடுப்பதற்கு, நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு சானல்களைத் தூர் எடுப்பதற்கு நிதி நிலைமை இல்லாத சூழ்நிலையிலே, மக்களுடைய, விவசாயிகளுடைய நிர்ப்பந்தம் காரணமாக குமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய பொதுப் பணித் துறைச் சானல்களைத் தூர் எடுப்பதற்கு அங்கே இருக்கக்கூடிய Contractor-களை வைத்து வேலைகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால், அந்த வேலை செய்த Contractor-களுக்குப் பணம் கொடுப்பதற்கு நிதி வசதி இல்லாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதற்குரிய நிதியை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்திலுள்ள பாசனக் கால்வாய்களைச் சீரமைப்பதற்காக உலக வங்கிக் கடனுதவி பெற்று 46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு திட்டத்தைத் தயார் செய்து—அரசினுடைய ஒப்புதலுக்காக—உலக வங்கியினுடைய ஒப்புதலுக்காக, அனுப்பியிருக்கிறார்கள். 1996-லே உலக வங்கி நிதியைப் பெற்று, பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லி, இந்த ஆண்டு முடியாது என்று சொல்லியிருப்பதாக நாங்கள் அறிகிறோம். முடியாது என்று சொன்னால், நிச்சயமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே விவசாயம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். இதைக கருத்திலே கொண்டு, இந்த ஆண்டும், இந்த 46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே தயார் செய்திருக்கக்கூடிய திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜெயபால், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். ஜெயபால்:** *கன்னிப் பேச்சு பேசுகிறேன். செம்பகுளத்திலிருந்து பாயும் செம்பட்டை ஓடையில், தடுப்பு அணைகள் கட்டினால், அந்தப் பகுதி நிலத்தடி நீர் வளம் பாதுகாக்கப்படும். எனவே, அரசு அதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.*

*குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலே உள்ள பெருவிளை மிகை நீர்ப்போக்கிக் கால்வாயில் கரைகளைப் பலப்படுத்தவேண்டும்.*

*குமரி மாவட்டத்திலுள்ள, பொதுப் பணித் துறை நீர் ஆதாரப் பிரிவு அலுவலகத்தில், போதுமான பொறியாளர்கள் இல்லை. போதுமான களப் பணியாளர்கள் இல்லை. எனவே, காலியிடங்களில் பணியாளர்களை நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*பொதுப் பணித் துறை அலுவலகங்களில் N.M.R. நியமனங்களுக்குப் பதிலாக நிரந்தரப் பணியாளர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் முடியுங்கள், 12 நிமிடம் ஆகிவிட்டது.*

**திரு. எஸ். ஜெயபால்:** *படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கும்வகையில், குமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் தரமிக்க இரப்பரைக் கொண்டு, கனரக இரப்பர் தொழிற்சாலை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*தேங்காய் விலை வீழ்ச்சியால், பாதிக்கப்பட்டுள்ள தென்னை விவசாயிகளை, நஷ்டத்திலிருந்து மீட்க, தேங்காய் கொப்பரை கொள்முதலை, அரசு* Marketing Committee *மூலமாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முடியுங்கள், திரு. ஜெயபால்.*

**திரு. எஸ். ஜெயபால்:** *நூற்றுக்கு நூறு படித்தவர்கள் வாழும் குமரி மாவட்டத்தில், அரசு சட்டக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் கி. ஆறுமுகம்.*

**திரு. எஸ். ஜெயபால்:** *சித்த மருத்துவக் கல்லூரி தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*குளச்சல் தொகுதியில் சைமன் காலனியில் முன்னாள் அமைச்சர் லூர்து அம்மாள் அமைத்துக்கொடுத்த மீனவர் குடியிருப்புப் பகுதிகளுக்கு 40 ஆண்டு காலமாக...*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம். (குறுக்கீடு)*

**திரு. எஸ். ஜெயபால்:** *முடித்துவிடுகிறேன். நன்றி தெரிவித்து முடித்துவிடுகிறேன்.*

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.*

**திரு. எஸ். ஜெயபால்:** *எனவே, அந்த மனைகளுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித் துறை-கடல் அரிப்புமூலமாக, கன்னியாகுமரி மாவட்டத்தில், இராஜாக்கமங்கலம்துறை, கடியப்பட்டினம், பெரியவிளை, கொட்டில்பாடு, அழிக்கால் ஆகிய மீனவ கிராமங்களுக்கு தூண்டில்வளைவு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*புறம்பறை, வாணியக்குடி, கோடிமுனை, சைமன் காலனி ஆகிய கிராமங்களில், அமைக்கப்பட்டுள்ள தூண்டில்வளைவுகளை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*இராஜாக்கமங்கலம்துறை, முட்டப்துறை ஆகிய மீனவர் கிராமங்களில்,* BOOT *திட்டத்தின்கீழ்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, No, No. *ஜெயபால், சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திரு. எஸ். ஜெயபால்:** BOOT *திட்டத்தின்கீழ் தனியார் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கும் டெண்டரை, அங்கீகரிக்க— என்னுடைய நன்றியைச் சொல்லிவிடுகிறேன்—கேட்டுக்கொண்டு, கடந்த கால ஆட்சியில் குளச்சல் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில், (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வாய்ப்பளித்த நன்றி என்ற வார்த்தையைச் சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) நன்றியை எவ்வளவு நேரமாகச் சொல்வீர்கள். ஆறுமுகம், பேசுங்கள்.*

**திரு. எஸ். ஜெயபால்:** *அனந்தன் குளம் தூர்வாருதல் பணியிலே மிகப்பெரிய முறைகேடு நடந்திருக்கிறது. முறைகேடு செய்தவர்களை, சம்பந்தப்பட்டவர்கள்மீது, அதிகாரிகள்மீது நடவடிக்கை வேண்டுமென்று, இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதியிலே*

இன்னும் பல்வேறு பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும், அதை அமைச்சர் அவர்களிடத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. No. ஜெயபால், உட்காருங்கள். திரு. ஆறுமுகம்.

**திரு. எஸ். ஜெயபால்:** எழுத்துபூர்வமாகக் கொடுத்துவிடுகிறேன். இந்த வாய்ப்பினைத் தந்த, பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனக்குப் பேசுவதற்கு அனுமதியளித்த எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் மரியாதைக்குரிய சுதர்சனம் அவர்களுக்கும், கொறடா, மரியாதைக்குரிய அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. திரு. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டு, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைகள் எண் 39 மற்றும் 40 கட்டடங்கள் மற்றும் பாசனம் குறித்துப் பேச எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு, முதலில் நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

'நீர் இன்று அமையாது உலகு' என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க, உலகம் அமைவதற்கு ஆதாரமாகவும், மனிதன் உயிர்வாழ ஆதாரமாகவும் உள்ள நீரை, கையாளுகிற துறைதான், பொதுப் பணித் துறை. எனவே, மழையின் ஒவ்வொரு துளியையும் சேமித்து, அதைப் பாசனத்திற்கும், குடிப்பதற்கும் பகிர்ந்தளித்திடும் முக்கிய பொறுப்பு பொதுப் பணித் துறைக்கு உண்டு. இத்துறை நல்லமுறையில் செயல்பட, நல்ல அனுபவமிக்க, ஆற்றல்மிக்க, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரை நியமித்திருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், உடல்நலம் பெற்று, நாட்டிற்குப் பணியாற்ற நலமுடன் வந்திருப்பது, நமக்கு மிக்க மகிழ்ச்சி. இந்த மாமன்றத்தில் உள்ள அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய நாட்டின் மக்கள் தொகையில், தமிழ்நாடு, 7 சதவிகித மக்கள் தொகை கொண்டதாக நாம் இருந்துகொண்டிருக்கின்றோம். அதிலே நிலப்பரப்பு என்று பார்த்தால், 4 சதவிகிதம் இருக்கிறது. நீரின் அளவு என்று பார்த்தால், 2 சதவிகிதம் மட்டுமே இருக்கிறது. இது, புவியியல்



வல்லுநர்கள் மத்தியிலே, மிகப்பெரிய கவலைக்குரிய பிரச்சினை என்று கருதப்படுகிறது. இந்த நிலைமையை தீர்த்திட மழைநீரின் சேமிப்பு, நீர்நிலைகளின் மேலாண்மை, மற்றும் மாசுபடாமல் நீரினைக் காத்திடும் பணிகளில் நமது அரசு அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

உலகத்தில் தட்பவெட்ப நிலை மாறிவருகின்ற சூழ்நிலையிலே, உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இந்த ஆண்டு வறட்சி மாநிலமாக இருக்கின்ற இராஜஸ்தான், எப்போதும் பெறுகிற மழையின் அளவைவிட 43 சதவிகிதம் கூடுதலாக இன்றைக்கு மழை பெய்து அந்த நீரின்மூலம் மிகப்பெரிய பாதிப்பு அங்கே. அதேபோன்று, எப்போதும் அதிகமாக மழைபொழிகிற அசாம் மாநிலத்திலே, 43 சதவிகிதம் மழை குறைந்திருக்கிறது. இந்த ஆண்டிலே. அதைக் கணக்கிடும்போழுது புவியியல் வல்லுநர்கள் சொல்லுகிறார்கள், இந்த ஆண்டு தமிழகத்திற்குக் கூடுதலாக மழைவருவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, இதற்காக நம்முடைய பொதுப் பணித் துறை மிக போர்க்கால அடிப்படையில் பணியாற்றிட வேண்டும். கடந்த கால நிலைமைகள் எல்லாம் தெரியும் உங்களுக்கு. கடந்த ஆண்டு மிகப்பெரிய வெள்ள பாதிப்பு. அணைகள் உடைப்பு, ஏரிகள் உடைப்பு, கண்மாய்கள் உடைப்பு. பல்வேறு ஆறுகளிலே நீர்ப்பெருக்கம் ஏற்பட்டு, மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டது. இதையெல்லாம் உணர்ந்து, உடனடியாக அரசு செயல்பட வேண்டும். கடந்த ஆண்டு உடைந்த ஏரிகளே, இன்னும் என்னுடைய தொகுதியிலே, எங்கள் மாவட்டத்தில் கட்டப்படாமல் இருக்கின்றன. அதில் நீரினைத் தேக்குவதற்கான ஒரு வாய்ப்பை, உடனடியாக நம்முடைய அரசாங்கம், செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏரிகள் நிறைந்த மாவட்டமாக இருக்கிற எங்களுடைய காஞ்சிபுரம் மாவட்டத்திலே இருக்கிற ஏரிகளின்மீது சிறப்புக் கவனம் எடுத்து, அந்த நீர் நிலைகளைப் பாதுகாத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோன்று, தண்ணீர் தனியார்மயமாக்கப்படக்கூடாது. இதற்கு உதாரணம் சொல்லவேண்டுமென்று சொன்னால், கடந்த ஆட்சியிலே நீர் வள ஆதாரங்களாக இருக்கும் ஆரணி ஆறு, கொசஸ்தலை ஆறு இவற்றைத் தனியாருக்குக் கொடுக்க ஆய்வு நடத்தப்பட்டது. அந்த ஆய்விலே, பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே நானும், அப்போதைய திருத்தணி சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. இரவிராஜ் அவர்களும்,

அப்போதைய பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. சண்முகம் அவர்களும் கலந்துகொண்டு, இதுபோன்று தனியாருக்கு நீராதாரங்களை விற்கக்கூடாது என்பதைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய எதிர்ப்பை அங்கே தெரிவித்தோம். ஏனென்று சொன்னால், தனியார் முதலீடு, அந்நிய நாட்டினுடைய முதலீடு இதிலே புகுந்து, நம்முடைய நீரை நாமே விற்று, அவர்களிடம் யாசகம் செய்கிற ஒரு நிலைமைக்குச் சென்றுவிடும். எனவே, தண்ணீரைத் தனியார்மயமாக்கக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்துகிறேன்.

அதேபோன்று, தமிழகத்திலே நீரை மாசுபடுத்தும் பல்வேறு தொழிற்சாலைகள் இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றன. இருந்தாலுங்கூட, நீரை மாசுபடுத்துகிற தொழிற்சாலைகளும், நீரை அதிகமாகப் பயன்படுத்துகிற தொழிற்சாலைகளும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய தமிழக அரசினுடைய கடமையாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த வகையிலே நம்முடைய அரசாங்கம் அதைச் செய்யும் எனக் கருதுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, இங்கே சுமார் 39 ஆயிரம் ஏரிகள் உள்ளன. மேலும், குளங்கள், நீர்வரத்துக் கால்வாய்கள், பாசனக் கிணறுகள் என பல இருக்கின்றன. இவற்றையெல்லாம் இன்றைக்குப் பாதுகாத்திடும் பணிகளிலே நாம் இறங்க வேண்டும். கடந்த ஆண்டு மழை, வெள்ளத்தாலே மிகப் பெரிய பாதிப்பு வந்ததற்குக் காரணமே, கடந்த காலங்களிலே நீர் நிலைகளையும், ஏரிகளையும், கண்மாய்களையும், குளம், குட்டைகளையும் ஆழப்படுத்தாமல் இருந்த காரணத்தினாலேதான், தூர் வாரப்படாத காரணத்தாலேதான், இதுபோன்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று புவியியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். இன்னொரு பக்கம் பார்த்தால், இன்றைய நிலையிலே பல்வேறு தொழிற்சாலைகள். அதிலும் குறிப்பாக, நொய்யல் ஆறு இன்றைக்கு எவ்வளவு பாழ்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறது? இன்னொரு பக்கம் பவானி ஆறு எப்படி இருக்கிறது? இன்னொரு பக்கம் எங்களுடைய நீராதாரமாக இருக்கிற பாலாறு, ஒரு பக்கம் தோல் தொழிற்சாலை, இன்னொரு பக்கம் சாயக் கழிவு என பல கோணங்களிலே மாசுபட்டுக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை நாம் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, உலகத்திலே ஒரு நாளைக் குறிப்பிடுகிறார்கள். 'மார்ச் 22 - உலக நீர் நாள்' எனப் பெயர் சூட்டப்பட்டு, அன்றையதினம் நீரைப்பற்றிய கருத்தரங்குகளும், நீருடைய தன்மை, நீருடைய பாதுகாப்பு பற்றியெல்லாம் பேசப்படுகிறது. அந்த வகையிலே, நமது மக்கள் மத்தியிலே விழிப்புணர்வைக் கொண்டுவந்திட, அந்த நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடும் வகையிலே, நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



எங்களுடைய தமிழ்க் குடிதாங்கி, மருத்துவர் அய்யா அவர்கள், நீர் நிலைகளைப் பாதுகாப்பதற்கும், ஏரி, குளங்களை ஆழப்படுத்துவதற்கும் ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டுவந்து, ஏறக்குறைய 240 ஏரி, குளங்களை அவரே முன்நின்று, அவரே மண்வெட்டியாலே மண்ணை அள்ளி, தலைமீது சுமந்து, கரைகள்மீது கொட்டிய காட்சிகளை நீங்கள் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள்; செய்திகளைப் பார்த்திருப்பீர்கள். இது எதற்காக என்று சொன்னால், மக்கள் மத்தியிலே, குடிமராமத்து என்கிற ஒரு திட்டத்தைக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவே எங்கள் அய்யா அவர்கள் செய்தார்கள். அதிலேகூட ஒன்றைச் சொன்னார்கள். எப்படி இப்போது மார்ச் 22ஆம் தேதி 'உலக நீர் நாள்' வைக்க வேண்டும் என்று சொல்கிறோமோ, அதுபோன்று, ஒவ்வொரு கிராமத்திலும், மக்கள் நீர் நிலைமீது அக்கறை கொள்ள வேண்டும்; நீரின் தேவையினை அவர்கள் புரிந்துகொள்ளும் வகையிலே, 'தண்ணீர்த் திருவிழா நாள்'—ஒவ்வொரு கிராமத்திலும், எப்படித் திருவிழா கொண்டாடுகிறோமோ அதுபோன்று, 'தண்ணீர்த் திருவிழா நாள்' கொண்டாடப்பட வேண்டுமென்று அய்யா அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டார்கள். பொதுமக்கள் மத்தியிலேயும் அதற்கு நல்ல வரவேற்பு இருந்தது.

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சைத் தரணியினைச் செழிக்கச் செய்யும் காவிரி ஆற்றின் நீர்த்தேக்கப் பகுதியான மேட்டூர் அணை, கடந்த ஓராண்டுக்கும் மேலாக நிரம்பியிருக்கிறது. டெல்டா பாசன விவசாயத்திற்கும், தமிழக மக்கள் மத்தியிலும் மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேட்டூர் அணையிலிருந்து நீர் செல்லும் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, பெரம்பலூர், கடலூர், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் ஒரு பகுதியும், டெல்டா பகுதியாக இருக்கிற தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய மாவட்டங்களில் உள்ள அத்தனை பகுதிகளிலும் உள்ள கால்வாய்களை முழுமையாகச் செப்பனிட்டு தூர்வார வேண்டும் என என்னுடைய பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று இன்றைக்கு காவிரி நதி நீர்ப் பிரச்சினையிலே மிகப்பெரிய சிக்கல் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கிற கர்நாடக அரசாங்கம் நமக்குரிய நதி நீரைப் பகிர்ந்தளிக்க முன்வரவில்லை. மாறாக, நம்மைச் சாடிக்கொண்டிருக்கிறது. இது ஒருபுறம் இருக்க,

பக்ராநங்கல் நதி நீர் ஆணையம் மிகப் பெரிய ஒரு முன்னுதாரணமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த பக்ரா நங்கல் நதி நீர் ஆணையம், எல்லா அதிகாரங்களையும் கையில் அடக்கி வைத்திருக்கிற ஓர் ஆணையமாக—எந்த வகையிலும், எந்த மாநிலத்திற்கும் பிரச்சினையின்றி, எந்தப் பிரச்சினை வந்தாலும், அதைத் தீர்க்கவல்ல அதிகாரத்தைப் படைத்த ஆணையமாக இருக்கிறது. ஆனால், இங்கே நமக்கு இருக்கிற காவிரி நதி நீர் ஆணையம், எதைச் சொன்னாலும், நமக்கு எஜமானன் போல நடந்துகொண்டிருக்கிற கர்நாடக அரசாங்கம், நமக்குத் தண்ணீர் கொடுக்க மறுத்துக்கொண்டிருக்கிறது. எனவே, அதுபோன்ற ஆணையம் நமக்கு எதிர்காலத்திலே வரவேண்டிய நிலைக்கு நாம் இருந்து கொண்டிருக்கிறோம். எனவே, நம்முடைய தமிழ்நாட்டின் வாழ்வுரிமைப் பிரச்சினையாக உள்ள இந்த காவிரி நதி நீர்ப் பிரச்சினையிலே நம்முடைய முதலமைச்சரும், தமிழக அரசாங்கமும் பொறுப்பேற்று, நல்ல முடிவினை எடுக்கவேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

அதேபோன்று, கிருஷ்ணராஜ சாகர் அணை மற்றும் கபினியிலேயிருந்து நேரடியாக வருகிற தண்ணீர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், முடியுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, முடித்து விடுகிறேன் பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடனே முடியுங்கள். ரொம்ப அவசரம்.

**திரு. கி. ஆறுமுகம்:** முக்கியமான பிரச்சினை, தண்ணீர் பிரச்சினை. கிருஷ்ணராஜ சாகர் மற்றும் கபினி அணையிலிருந்து, நேரடியாக வாய்க்கால்மூலம்—பாசனத் திட்டங்கள் இல்லாமல்—அவர்கள் இன்னொன்றையும் செய்கிறார்கள். நூற்றுக்கணக்கான நீர்த்தேக்கங்களை, பாசனப் பகுதிகளை உருவாக்கி, ஒரு Master Plan-ஐ ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதை அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கும் தெரிவிக்கவில்லை, தன்னுடைய அண்டை மாநிலமாக இருக்கின்ற தமிழகத்திற்கோ, ஏனைய மாநிலங்களுக்கோ தெரிவிக்காமல், அவர்களே இன்றைக்கு ஏறக்குறைய 5 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்திலே ஒரு பெரும் திட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை உடனடியாக நாம் தடுத்து நிறுத்தவேண்டிய பொறுப்பிலே இருந்துகொண்டிருக்கிறோம்.



அதேசமயத்திலே நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிலத்தடி நீர் வள மதிப்பீடு 37 ஒன்றியங்களில் அபாயகரமாக இருக்கிறது எனவும், அதிகமான நுகர்வு 138 ஒன்றியங்களிலே இருக்கிறது எனவும், உவர் நீர்ப் பகுதிகளாக 8 ஒன்றியங்கள் எனவும், இதில் குறிப்பாக நாகை, திருவாரூர் மாவட்டங்கள் இருக்கின்றன எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோன்று, Fluoride நிறைந்த பகுதியாக தருமபுரி, சேலம் பகுதியிலே இருந்து கொண்டிருப்பதையும் காட்டுகிறது.

இன்னொன்று, என்னுடைய பகுதியிலே வங்கக் கடல் அருகிலே, பாலாற்றின் முகத்துவாரத்தில் என்னுடைய தொகுதியிலே இருக்கிற வாயலூரிலே ஓர் அணை கட்டுவதற்கான கருத்துரு சென்ற ஆட்சியிலே ஆணையிடப்பட்டது. அதற்கான திட்டங்கள் செயலாக்கப்பட்டன. இதுவரையிலே அது செயலாக்கத்திலே இல்லை. பாலாற்றின் கடைசிப் பகுதியாக இருக்கிற வாயலூரிலே அந்த அணையை அமைத்தால், வீணாகக் கடலிலே கலக்கும் பாலாற்றுத் தண்ணீர் சேமிக்கப்பட்டு, அந்தப் பகுதி மிகப் பெரிய செழுமை மிகுந்த பகுதியாக மாறும். எனவே, அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 5 ஆண்டுகளிலே தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நான் வைத்த கோரிக்கைகளைக் கடந்த ஆட்சியிலே அண்ணன் O.P.S. அவர்கள் செய்யவில்லை. நம்முடைய அரசாங்கம் செய்யவேண்டுமென்று இந்த சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டின் நீஞ்சல்மடுவினை, களத்தூரான் கால்வாய் திட்டம் 50 கிராமங்களுக்குப் பாசனத் திட்டம்—அதைத் தொடர்ந்து பேசி வந்திருக்கிறேன். கடந்த 5 ஆண்டுகளிலே தொடர்ந்து பேசி வந்திருக்கிறேன். அது நிறைவேற்றப்படவில்லை. அதை உடனடியாக நம்முடைய அரசாங்கம் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று சொல்லி, புதிய திட்டமாக நடுவக்கரையிலே இருந்து ஆரம்பித்து, காட்டுப்பாக்கம், அமைஞ்சிக்கரை, பேரம்பாக்கம், வேலங்காடு, விட்டலாபுரம், சதுரங்கப்பட்டினம் வரையிலே செல்கின்ற மடுவினை, அங்கே வங்கக் கடலிலே கலக்காமல் தடுத்து, சிற்றணைகள் கட்டி, விவசாயத்திற்காக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே நெரும்பூர்-விட்டலாபுரம் சாலை இருவழிச் சாலையாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கே இருக்கிற 42 சிறு பாலங்கள், மிகக் குறுகிய பாலங்களாக இருக்கின்றன. எனவே, அந்தப் பாலங்களை அகலப்படுத்த வேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். அதனால், ஏராளமான விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

எங்களுடைய தொகுதியிலே இருக்கிற ஒரே ஒரு பிரச்சினை, ஒரு சின்னப் பிரச்சினை. வெங்கப்பாக்கம் ஊராட்சியிலே நிறைய பேர் பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். அதற்காக பட்டா வழங்குவதற்கு மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டத்திலே கோவிந்தப்பாடியை அடுத்துள்ள புத்தரிக்கால்காடு அருகிலே மொட்டசாமரத்துபள்ளத்தில் ஓர் ஏரி அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியாகும் நீர், பாசனத்திற்குப் பயன்படும் வகையிலே அதற்காகச் சங்கம் அமைத்து, நீண்டநாள் கோரிக்கை வைத்து வரும் விவசாயிகளுக்காக ஒரு நல்ல முடிவு எடுக்க நம்முடைய அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எடப்பாடியில் கவுண்டன்பட்டிக்கும் வெள்ளாண்டிவலசுக்கும் இடையே சரபங்கா அணையில் பாலம் கட்டிக்கொடுக்க வேண்டும். எடப்பாடி சரபங்கா அணையைத் தூர் வாரி, செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நிறைய பிரச்சினைகள் இருந்தாலும்கூட என்னுடைய பிரச்சினைகளையெல்லாம் எழுதி கொடுத்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், அடிக்கடி பேசக்கூடியவர்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** நம்முடைய அரசு உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக்கூறி விடை பெறுகிறேன், நன்றி. வணக்கம்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லாம் அடிக்கடி பேசக்கூடியவர்கள், அதற்காகத்தான். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு. திரு. பாபு, 7 நிமிடத்திற்குள் உரையை முடிக்க வேண்டும்.



**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிக முக்கியமான துறைகளில் பொதுப் பணித் துறையும் ஒன்றாகும். நீர்வள ஆதாரங்கள் உரிய முறையில் பகிர்ந்தளிக்கப்படும்போது ஒட்டுமொத்தமாக நாட்டின் உணவு உற்பத்தியில் பெரிய அளவில் தன்னிறைவு அடைய வாய்ப்பு இருக்கிறது. அதேபோல் மனிதனின் வாழ்க்கைக்கு அத்தியாவசிய, ஜீவாதாரமாக இருக்கக்கூடிய குடிநீர் பிரச்சினையும் இத்துறையில் வருகிறது. கடந்த 25 ஆண்டுகளில் தமிழகத்தில் இருந்த நீர்வள ஆதாரம், விவசாயம், உணவு உற்பத்தி, இவை இன்று சுமார் 30 சதவிகிதம் வரை குறைந்து காணப்படுகிறது. நீர்நிலைப் பகுதிகளில், தொழிற்சாலைகள், கல்லூரி நிறுவனங்கள், செங்கல் சூளைகள், பகாசூர கம்பெனிகள் என்று உருவெடுத்துவிட்டன. உதாரணத்திற்கு ஒன்றுபட்ட செங்கற்பட்டு மாவட்டமான திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களைக் குறிப்பிடலாம். Per-capita availability of water, தமிழ்நாட்டில் தனிநபர் நீரின் அளவு மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் அளவு குறைந்து வருகிறது என்று ஒரு ஆய்வு குறிப்பிடுகிறது.

அடுத்த 10 ஆண்டுகளில் இந்நிலையில், இந்தியாவில் பல மாநிலங்களில், தனி மனிதனின் வருமானத்தில் 5 சதமானம் முதல் 10 சதமானம் வரை குடிநீருக்காகச் செலவழிக்க வேண்டி வரும் என்று அந்த ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. Monitoring Central Planning Commission-ல் Member-ஆக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய திரு. வைத்தியநாதன், MIDS-ஐச் சேர்ந்தவர், அதில் உறுப்பினராக இருந்தவர் பல பரிந்துரைகளைத் தமிழகத்திற்கு அளித்திருக்கிறார். குடிமராமத்து மானியம் கிராமப்புறங்களில் போதிய அளவிற்குக் கிடைப்பதில்லை என்றும், தஞ்சை கடைமடைப் பிரச்சினை, தூர் வாருதல் உட்பட, அதில் குறிப்பிட்டிருக்கிறார். அதைப்போல், தமிழகத்தில் 90 சதவிகிதம் பாசன வசதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது, அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற விஷயம் என்று அந்த ஆய்வு கூறுகிறது. ஆனால், இன்றைய யதார்த்த நிலைமை என்ன? சேலம், தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரியின் ஒரு பகுதி, இதுபோன்ற மாவட்டங்களில் மூன்றில் ஒரு பங்கு பூமி, வானம் பார்த்த விவசாயத்தைத்தான் இம்மாவட்ட மக்கள் நம்பி வாழ வேண்டியுள்ளது. அதேபோல், மறுபுறத்தில் நிலத்தடி நீர் அபாயத்தைத் தாண்டிவிட்டு பல மாவட்டங்கள் சென்றுகொண்டிருக்கின்றன. பணம் இருப்பவர்கள் எவ்வளவு ஆழ்துளைக் குழாய்க் கிணறு போட முடியுமோ, அவ்வளவும்

போட்டுக்கொள்ளலாம். எவ்வளவு நீரை வேண்டுமானாலும் உறிஞ்சிக்கொள்ளலாம். மறுபுறம் சிறு, குறு விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டு, விவசாயம் செய்ய நிதியின்றி, கடனாளியாக தற்கொலைக்கு இட்டுச் செல்வதை நாம் பார்க்க முடிகிறது.

கர்நாடகாவிலும், மகாராஷ்டிராவிலும், அணைக்கட்டுகள், பாசனம் குறித்த செயல்பாடுகளில் Project Committee, விவ்சாய சங்கப் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழு ஒன்று அமைத்து செயல்பட்டு வருகின்றது. இங்கும் தமிழகத்தில் விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழு அமைத்திட வேண்டுகிறோம். கொள்ளிடம் ஆற்றில் ஸ்ரீரங்கம் தீவில் 5 இடங்களில் தடுப்பணை அமைத்தால், காவிரி ஆற்றின் உபரிநீரைத் திருப்பிவிட்டால், பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும். சமீபத்தில் கடந்த ஆண்டில்கூட, 100 டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலில் கலந்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்புகூட, மேட்டூர் அணையில் திறந்துவிடப்பட்ட 6 டி.எம்.சி. உபரிநீர் வீணாகக கடலில் கலந்துள்ளது. மறுபுறம், உபரி நீர் செல்கின்ற பகுதியான கொள்ளிடம் ஆற்றின் கரையோரத்தில் இருக்கும் பெரம்பலூர் மாவட்டத்தில் ஏராளமான கிராமங்கள், குடிநீருக்கும் விவசாயத்திற்கும் தண்ணீரின்றி தவிப்பது கொடுமையானது. அதைப்போலத்தான் புதுக்கோட்டை மாவட்டத்திலும், ஏராளமான ஏரிகளும், காட்டாறுகளும் வறண்டே கிடக்கின்றன. வானம் பார்த்த பூமி ஏராளமாகக் காணப்படுகிறது.

காவிரி ஆற்றில் வெள்ளம் வரும்போதெல்லாம் உபரி நீரைச் சேமிக்க இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. இதுபோன்ற நிலைமைகளை முறைப்படுத்திட அதிகாரிகள், விவசாயச் சங்கங்கள் அடங்கிய கமிட்டி இருப்பது அவசியம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழக அரசை வலியுறுத்த விரும்புகிறது. விவசாயிகள் கொண்ட கமிட்டிகளின்மூலம் இதுபோன்ற திட்டமிடுதல் மட்டுமல்லாமல், ஏரி, கால்வாய்களை, கண்மாய்களைப் பராமரிப்பது என்பதை ஒழுங்குபடுத்தி இருந்தோமானால், வெள்ளச் சேதாரங்களையும், உயிர் பாதிப்புகளையும், பயிர் பாதிப்புகளையும் ஓரளவு தமிழகத்தில் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாராஷ்டிரா மாநிலத்தில் சாதாரணமாக, ஒரு கிணறு வெட்டுவதாக இருந்தாலும்கூட, ஆழ்குழாய்க் கிணறு போடுவதாக இருந்தாலும்கூட அதிகாரிகளும், விவசாயிகளும் கொண்ட கமிட்டி அங்கு அமைத்து செயல்பட்டு



வருகிறார்கள். அதைப்போல் தமிழகத்தில், Tamil Nadu Farmers Management of Irrigation Act-2000, குடிமராமத்து விவசாயிகள் சட்டம், இதற்கான தேர்தலை நடத்துவது, மராமத்திற்கான மானியத்தினை முழுமையாக வழங்கிடுவது, இதையும் விவசாயிகள் சங்கததிடமே ஒப்படைக்க வேண்டுமென்று இச்சட்டம் கூறுவதை தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது சாணக்கியத் திறமையை இந்திய நாடே அறியும். பொது பட்ஜெட்டில் குறிப்பிட்டுள்ளதுபோல், தமிழக அரசு அண்டை மாநிலங்களுடனான உறவை சுமுகமாகவும், நல்லுறவுடனும் மேற்கொள்வது என்பது பாராட்டுக்குரியதாகும், வரவேற்கின்றோம். அதன் அடிப்படையில் காவிரி நதிநீர் தாவா பிரச்சினையை சுமுகமாகவே தீர்ப்பதற்கு, நடுவர் மன்றத் தீர்ப்பை, இடைப்பட்ட 6 மாத காலங்களிலேயே வழங்குவதற்கு மத்திய அரசுடன் இணைந்து பேசி, தீர்வு காண்பார் என்ற முழு நம்பிக்கையை இந்த நாடே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது.

அதேபோல நீண்ட பல காலமாக இததுறையில் சிறந்த அனுபவங்களைப் பெற்ற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அண்டை மாநில அதிகாரிகளுடன் நல்லுறவுடன் தங்களது அனுபவத்தால்—தமிழகத்தின் நதிநீர் தாவா பிரச்சினைகள் பற்றி பல பட்டியல்கள் இடலாம்; சுமுகமாகத் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கை இந்த மன்றத்திற்கும், தமிழக மக்களுக்கும் உண்டு. மானாவாரி விவசாயத்தில்தான் எதிர்கால விவசாயமே அடங்கியுள்ளது என்று மத்திய வேளாண் விஞ்ஞானி மரியாதைக்குரிய டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமல்ல, இந்த அறிக்கையில், பக்கம் 18–ல் குறிப்பிட்டுள்ளதுபோல், 1960 ஆம் ஆண்டிலிருந்து மேற்பரப்பு நீர் ஆதாரம் ஏறக்குறைய 95 சதவிகிதம் பயன்படுத்தப்பட்டுவிட்டதால், நிலத்தடி நீர் ஆதாரம்தான் எதிர்கால வளர்ச்சிக்காக ஒரு மாற்று நீராதாரமாக இருக்கும் என்பதைப் பார்க்கும்போது, தற்பொழுது சொட்டுநீர்ப் பாசனம் மூலம், மானாவாரி விவசாயத்திற்கு, அதற்கான நிதியாதாரங்களைக் கூடுதலாக தமிழக அரசு ஒதுக்குவதன்மூலம் விவசாய உற்பத்தியில் அபிவிருத்தி காண முடியும் என்பதை நினைவுபடுத்துகிறோம். உதாரணமாக, இராஜஸ்தான் மாநிலத்தில் இராஜேந்திர சிங், விவசாயிகள் சங்கத் தலைவர் முயற்சியால் சிறு சிறு

குட்டைகள் அமைத்து, தடுப்பணைகள் அமைத்து, பாலைவனமாக இருந்த பல பகுதிகள் (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்கு விவசாயத்தைக் காண முடிந்தது. அதேபோல் நம் நாட்டில் இருக்கக்கூடிய நீர்ப்பாசனத்தில் ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம், போன்ற பாசனங்களில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு தண்ணீர் விநியோகத்தில் ஜனநாயகம் வேண்டும். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்பதை மாற்றி முறைப்படுத்திட வேண்டுகிறோம். தமிழ்நாடு முழுவதும் சுமார் 39 ஆயிரம் ஏரிகள் உள்ளதாகக் கணக்கு கூறுகிறது. இந்த ஏரிகளில் மீன் ஏலம், பனை மரம், ஓலை, நுங்கு போன்றவை ஏலம் விடுவதிலும், குத்தகைக்கு விடுவதிலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஏலம் எடுக்கும் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அவர்களுக்கு முறையான வாய்ப்பை அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** 4 நிமிடங்கள்கூட ஆகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 7 நிமிடங்கள் ஆகிவிட்டது.

**திரு. ப. டில்லி பாபு:** அதேபோல் தேசிய ஊரக கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதிச் சட்டம் தமிழகத்தில் 6 மாவட்டங்களில் அமல்படுத்தப்பட்டு வருவதில், ஏரி, குளங்களை, கால்வாய்களை ஆழப்படுத்திடும் பணிக்குக் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுகிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி நிபந்தனைகளில் ஒன்று பாசனத்தையும், கட்டடத்தையும் தனியாகப் பிரிப்பது என்பது. 1995 ஆம் ஆண்டே உலக வங்கி கூறியுள்ளதாம். Second Phase loan வழங்கப்படவேண்டுமானால் இவை தனித்தனியே அமைக்கப்பட வேண்டுமாம். தமிழகத்தில் நீர்ப்பாசனத் துறையையும், கட்டடத் துறையையும் தனித்தனியாகப் பிரித்துச் செயல்படுத்த வேண்டுகிறோம்.

கட்டடத்தைப் பொறுத்தவரை, ஒதுக்கப்படுகின்ற நிதி போதிய அளவு இல்லாததால் பல மாவட்டங்களில் அதன் தன்மைக்கேற்ப பொதுவாக அவர்களுடைய திட்டங்களை, work order -களை அந்தந்த மாவட்டத்தின் தன்மைக்கேற்ப வழங்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கோருகிறது. கான்ட்ராக்ட் பணிகள் என்பது கடந்த காலத்தில் இருந்த அதிகாரிகளின் பினாமிகள் கான்ட்ராக்ட்—ஆக இருந்தது என்பதை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அதேநேரத்தில் இத்துறையின் மூலம் செய்யப்படும் வேலைக்கான



மதிப்பீட்டில் போடப்படும் unit cost-க்கு ஏற்ப, பொருட்களின் விலைக்கேற்ப, கம்பி, ஜல்லி, செங்கல் போன்றவற்றை மாவட்டத்திற்கு மாவட்டம் வழங்கிட வேண்டுகிறோம். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறைக்குச் சம்பந்தமான இடங்களில் புறம்போக்கு நிலங்களில் 40, 50 ஆண்டுக் காலமாக குடிசை வீடு கட்டி வாழ்ந்து வரும் பகுதிகளில் சில இடங்களில் நீதிமன்றங்களின் தீர்ப்பு முடிவுகள் என்பது, பெரும்பகுதி ஏழை எளிய மக்களை பாதிப்பதாக அமைந்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** இவ்வரசு நல்ல சமுதாய நோக்குடன் இயற்கை நியதிக்குப் புறம்பில்லாமல் நியாயம் வழங்கிட வேண்டுகிறோம். தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட கோட்டப்பட்டியிலே 1974 ஆம் ஆண்டிலேயே திட்டம் தயாரிக்கப்பட்டு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டி இருக்கிறது.

**திரு. ப. டில்லி பாபு:** நிதி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டு ஏறக்குறைய 10 கோடியே 90 இலட்சம் கிடப்பிலே போடப்பட்டிருப்பதை, சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழக அரசு கல்லாறு அணை கட்டுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்க வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் மொரப்பூரை அடுத்த வேளாம்பட்டியில் செனாக்கல் பாசனக் கால்வாய் திட்டமும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** பாப்பிரெட்டிப்பட்டியிலே திட்டங்களை அமல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித் துறையில் தினக்கூலியாக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து வரும் சுமார் 5,036 ஊழியர்களை லஸ்கர், பணி ஆய்வாளர், பிளம்பர், போன்றவர்களை பணி நிரந்தரம் செய்திட வேண்டுகிறோம். அரசின் பொதுப் பணி மற்றும் பண்டகசாலையில் பணிபுரிபவர்கள், முழுநேர ஊழியர்கள் 400 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கொடுப்பதற்குப் பதிலாக தனியாரிடத்தில் கொடுப்பதைத் தவிர்த்திட வேண்டுகிறோம். மதுரையில் கட்டப்படும் எல்லீஸ் நகர், கூடல் நகர் பாலங்கள் விரைவில் கட்டப்பட வேண்டுகிறோம்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன். (குறுக்கீடு) எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருப்பீர்கள்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** அதேபோல, குமரி மாவட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே குழித்துறையிலும், பருத்திக்கடவிலும் தடுப்பணைகளைக் கட்ட வேண்டும். பேச்சிப்பாறை அணையைத் தூர் வார வேண்டும். நெய்யாறு இடதுகரை கால்வாய்க்குத் தண்ணீரைப் பெற்றுத் தரவேண்டும். குடியாத்தம் ஏரி, பாக்கம் ஏரி, வேலூர் ஏரிகளைத் தூர் வார வேண்டும். காவிரி டெல்டாவிலுள்ள ஆறுகளின் கரைகளைப் பலப்படுத்த வேண்டும். கடந்த காலத்தில் அவை பலமாக இல்லாததால் வெள்ளத்தின்போது உடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

***திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நல்ல உடல் நலத்தோடு பொதுப் பணியாற்ற மீண்டும் வந்தமைக்கு நல் வாழ்த்துகளை என் தொகுதி மக்களின் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தண்ணீர்தான் உலகத்திலுள்ள அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமான பொருள் என்ற அடிப்படையில் தண்ணீரைத் தமிழகத்தில் பாதுகாக்க தொலைநோக்குப் பார்வையோடுகூடிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

தமிழகம் இயற்கையாகவே மழை மறைவுப் பிரதேசம்தான். நமது முன்னோர்கள் கிடைக்கின்ற தண்ணீரைச் சேமிக்க தமிழகம் முழுவதும் சுமார் 40 ஆயிரம் ஏரி, குளங்கள், கண்மாய்கள் என்று அதன் வாத்துக்கால்கள், குளக்கால்கள் என்றும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து சங்கிலித் தொடர் போன்ற நீர் சேகரிப்பு முறைகளை உருவாக்கி இருந்தார்கள். பிள்ளையைத் தாங்கிப் பிடிக்கின்ற தாயின் மடிபோல தண்ணீரைச் சேமித்து வைக்கும் ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், ஆறுகள் பாசனக் கால்வாய்கள், சிறிய, பெரிய அணைகள் இவற்றை உருவாக்கவும், பாதுகாக்கவும் உள்ள பொதுப் பணித் துறையின் செயல்பாடுகள் மிகவும் கண்காணிப்போடு செயல்படுத்தப்பட வேண்டும்.



தமிழகத்தின் நீர்ப்பாசன முறைகள் என்பது ஆற்றுப் பாசனம், மழை நீர் சேமிப்புப் பாசனம், நிலத்தடி நீர்ப் பாசனம் என்ற ரீதியில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆற்று நீர்ப் பாசனத்தில் குறிப்பாக காவிரிப் பிரச்சினையில் இன்னும் இறுதித் தீர்ப்பு கிடைக்காத நிலையில் அதைப் பெறுவதற்கு உடன்டியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வெள்ளப் பெருக்குக் காலங்களில் உபரித் தண்ணீரைச் சேகரித்து வறண்ட பகுதிக்குத் திருப்பிவிடும் திட்டத்தை உருவாக்குவது இன்றைய அவசியத் தேவையாக உள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் கொள்ளிடத்தில் சுமார் 300 டி.எம்.சி. தண்ணீர் கடலில் வீணாகக் கலந்துள்ளது. கூடுதல் தண்ணீர் செல்கிற காலத்தில் அந்தத் தண்ணீரை வறண்ட பகுதிகளுக்குத் திருப்புகிற திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும்.

இப்பொழுதுகூட கடந்த சில தினங்களாக 6 டி.எம்.சி. தண்ணீர் கொள்ளிடத்திலே வீணாகக் கலந்திருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். 31-8-2006 'தின மலர்' பத்திரிகையிலே கொள்ளிடம் காவிரியிலே 7 மதகணைகள் கட்டுவதால் ஏற்படுகின்ற பலன்களைப் பற்றி விரிவான ஒரு படத்தோடுகூடிய அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேட்டூர் அணை திறக்கப்பட்டு 3 மாதங்கள் ஆகியும் கடை மடைகளுக்குத் தண்ணீர் செல்லவில்லை. கல்லணையில் 4200 கன அடி தண்ணீர் திறக்க வேண்டும். ஆனால், 3200 கன அடி தண்ணீர்தான் திறந்துள்ளார்கள். 5 நாள் முறை வைத்து தண்ணீர் திறக்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டு கடை மடைகளுக்கு இன்னும் தண்ணீர் செல்லாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல குடிமராமத்து முறைகள் உருவாக்கப்பட வேண்டும். நிதியுதவி அதற்காக உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.

திருவாரூர் மாவட்டத்தில் 1-8-2004 ஆம் தேதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சங்கம், விவசாயச் சங்கத்தின் சார்பில் சிரமதானப்பணி நடத்தப்பட்டது. வெண்ணாற்றில் நீடாமங்கலத்திலிருந்து ஆழத்தான்படி வரை சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் நெய்வேலி காட்டாமணக்கை அழிக்கிற பணியில் 10 ஆயிரம் விவசாயிகளைத் திரட்டி சிறப்பாக ஒரே நாளில் அழித்து ஒரு மகத்தான சாதனையைப் புரிந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட குடிமராமத்துகளுக்காக நிதியொதுக்கீடுகளைச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கண்மாய், ஏரி, குளங்கள் முறையாக மராமத்து செய்யப்படாததால் கடந்த ஆண்டு பெய்த மழையால் ஆயிரக்கணக்கான கண்மாய்கள்

உடைப்பு எடுத்திருக்கின்றன. 'எண்ணெய் செலவழித்தாலும் பிள்ளை செத்துப் போனது' என்ற பழமொழிக்கேற்ப கோடிக் கணக்கில் மராமத்துப் பணிகளுக்கு பணம் ஒதுக்கியும் பலன் கிட்டவில்லை. இந்த நிலையை மாற்ற வேண்டும்.

காவிரியில் சிவசமுத்திரம், மேகதாது, ராசிமணல், ஒகேனக்கல் ஆகிய இடங்களில் கர்நாடகமும், தமிழ்நாடும் இணைந்து நீர்மின் நிலையங்கள் அமைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. அத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் ஜூன், ஜூலை மாதங்களில் மேட்டூருக்குக் கூடுதலாகத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அந்தத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெரியாறு—வைகைப் பாசனம். முல்லைப் பெரியாறில் 152 அடி தண்ணீர் தேக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கேரள அரசின் செயல்பாடுகள் அதிர்ச்சியை ஊட்டுவதாக உள்ளது. 28 ஆம் தேதி, 'தினகரன்' செய்தித் தாளில் கேரள அமைச்சரின் அறிக்கை என்ற அடிப்படையில் வந்திருக்கிற செய்தி, ஐந்து மாவட்ட மக்களை கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. பெரியாறுக்கு வருகிற தண்ணீரைப் புதிய வாய்க்கால் அமைத்து, இடுக்கிக்கு திருப்பும் திட்டம் நிறைவேற்றப்படும் என்று கேரள அமைச்சர் சொல்லியுள்ளார். அதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-40

முல்லைப் பெரியாறு பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை திசை திருப்ப, நிலநடுக்கத்தால் அணையில் விரிசல் விட்டிருக்கிறது என்ற கேரள அமைச்சருடைய அறிவிப்பு கண்டிக்கத்தக்கது. எச்சரிக்கையோடு நாம் நமது உரிமையைப் பாதுகாக்க, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

110 அடிக்கு மேல் உள்ள தண்ணீரைத்தான் பெரியாறிலிருந்து எடுக்கிற அந்த நிலைமையை மாற்றி, கூடுதலாகத் தண்ணீரை தமிழகத்திற்கு எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெரியாறு தண்ணீர், வைகைப் பகுதி தண்ணீர், வைகை அணையில் ஒன்றாக சேர்க்கப்படுவதில் பெரும் குழப்பம் நீடிக்கிறது. எனவே, வைகைப் பாசனப் பகுதி தண்ணீரை முறைப்படுத்த தனியாக ஒரு செயற் பொறியாளரை நியமிக்க வேண்டும்.



பூர்வீக வைகைப் பாசன விவசாயிகளுக்கு போனைக்குக்கீழ் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் ஒருபோக சாகுபடிக்கு உத்தரவாதம் ஏற்படுத்துகிற வகையில் தண்ணீர்த் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

கண்மாய், குளங்கள், ஏரிகள், வரத்துக் கால்வாய்கள் மராமத்து முறையாக செய்யப்பட வேண்டும். மராமத்துப் பணிகளில் நடைபெறும் ஊழல்களைத் தடுக்க, மராமத்துப் பணிகளில் நடைபெறும் கொள்ளையைத் தடுக்க, பாசன விவசாயிகள் அளவில் கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும்.

கண்மாய்கள், குளங்கள், நீர்த்தேக்கங்களால நிலத்தடி நீர் அதிகரித்து வருகிறது. அதன் விளைவாக நிலத்தடி நீரில் மாற்றங்கள் ஏற்பட்டு சுமார் 10 மாவட்டங்களில் நிலத்தடி நீரில Flouride கலந்துள்ளது. பல மாவட்டங்களில் Calcium அளவுக்கு அதிகமாக உள்ளது. மேலும், கடலோர மாவட்டங்களில் கடல்நீர் உட்புகுகிற நிலைமை நீடிக்கிறது. எனவே, (மணியடிக்கப்பெற்றது) இந்த நிலைமைகளை கவனத்தில் எடுத்துக்கொண்டு, நிலத்தடி நீரைப் பாதுகாக்கிற செயல்பாடுகளைக் கொண்டு வர வேண்டும்.

பொதுப் பணித் துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிற 1500 தினக்கூலிகள் பணியை நிரந்தரம் செய்ய வேண்டும். 10 ஆண்டுகள் பணியாற்றுகிற நிலையை மாற்றி மூன்று ஆண்டுகளில் அந்தப் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். தினக்கூலிப் பணியாளர்கள் contract முறையிலே அந்தப் பணியை மேற்கொள்கிறார்கள். அதைவிடுத்து நேரடியாக muster அளவிலே அந்தப் பணியைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மணல் திருடர்கள்மீது குண்டர் சட்டம் பாயும் என்ற அறிவிப்பு சிறந்தது. அச்சட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாசன விவசாயிகளுக்கும் பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கும் இடையேயுள்ள இடைவெளியைக் குறைக்க மாதம் ஒரு முறை பாசன விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் நடத்தப்பட வேண்டும்.

சிவகங்கை தொகுதியில் கண்மாய், ஏரி, குளங்கள் மராமத்து செய்யப்படும்போது நீண்ட காலமாக மராமரத்துச் செய்யப்படாத கண்மாய்கள் முன்னுரிமை அடிப்படையில் மராமத்து செய்யப்பட வேண்டும். சிவகங்கை தொகுதியில் நாவலூர் கிராமத்தில், குன்னங்குடி என்ற கண்மாய் 1956-ல் மராமத்து செய்யப்பட்டது. அப்படிப்பட்ட

கண்மாய்கள் நிறைய உள்ளன. அவற்றின் மராமத்துப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

அதேபோல, பெரியாறு—வைகை பிரதானக் கால்வாய்க் கோட்டம், மேலூர் பிரிவில், நான்கு பிரதானக் கால்வாய்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. 10,770 ஏக்கர் பாசன வசதிக்குட்பட்ட அந்த நிலங்கள் இருக்கின்றன. அங்கு மராமத்து செய்வதற்குச் செலவழிக்கப்படக்கூடிய தொகை மிகக் குறைவாக இருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அந்த வாய்க்கால்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய மோசமான பழுதடைந்த மடைகள், வாய்க்கால்கள் உடைப்பிற்காக நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம் நான் அணுகி 35 இலட்சம் ரூபாய் நிதி கேட்ட நேரத்தில் அதை அனுமதித்திருக்கிறார்கள். அந்த வேலையை உடனடியாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, சீல்ட் கால்வாய் என்ற ஒரு கால்வாய் அந்தத் திட்டத்தில் இருக்கிறது. 8 கிலோ மீட்டர் கால்வாய், 1947-ல் அமைக்கப்பட்ட அந்தக் கால்வாய் இன்றுவரை மராமத்து செய்யப்படவில்லை. அந்தக் கால்வாய் மண்மேடிட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குணசேகரன், பேசி முடியுங்கள். சீக்கிரம் முடியுங்கள். நிறைய பேர் இன்னும் பேச வேண்டியுள்ளது.

**திரு. சு. குணசேகரன்:** ஒரு முக்கியமான பிரச்சினை. முடித்துவிடுகிறேன். அந்தக் கால்வாய் மண்மேடிட்டுள்ளதால் கிட்டத்தட்ட 10 கண்மாய்கள், 30 கிராமங்கள் பாதிப்படைந்திருக்கின்றன. அதற்குக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து முன்னுரிமை அடிப்படையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும்.

அதேபோல, எங்கள் சிவகங்கை மாவட்டத்தில் மணிமுத்தாறு நதியிலே தேவகோட்டை தாலுகாவில் எழுவன்கோட்டை—கல்லக்குடி என்ற பகுதிக்கு, 687 ஏக்கர் நிலப்பரப்பிலே பாசனப் பகுதிக்காக, 97 இலட்சத்து 69 ஆயிரம் நிதி ஒதுக்கீட்டில் 2002-2003 ஆம் ஆண்டு ஓர் அணை கட்டப்பட்டது. அந்த அணை Vaishvani Constructions என்ற பெயரில் அன்றைய அண்ணா தி.மு.க. மாவட்டச் செயலாளர் கருப்பையா என்பவர் கட்டி முடித்தார். ஆனால், கடந்த ஆண்டு அந்த அணை முற்றிலுமாக உடைந்துவிட்டது. அதை, அந்தப் பகுதி மக்கள் கேட்டதற்காக, அந்த தலித் மக்கள் மிரட்டப்பட்டு, எங்கள் ஒன்றியச் செயலாளர் கார்வண்ணன் உட்பட அந்த தலித் மக்கள்மீது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குணசேகரன், பேசி முடியுங்கள்.



**திரு. சு. குணசேகரன்:** P.P.D. Act-ல் வழக்குப் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. அந்த வழக்கு என்னவென்றால், அதிகாரிகளிடம் போய் முறையிட்டிருக்கிறார்கள். மண்வெட்டி எடுத்துக்கொண்டு போய் அந்த அணையை வெட்டினார்கள் என்று குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வழக்குகளை உடனடியாக வாபஸ் வாங்கி, மோசமான அணை கட்டியவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, போன ஆண்டு இருக்கன்குடி அணைக்கட்டு உடைப்பெடுத்த நேரத்தில் அதிகாரிகள் எலி நோண்டியதால் அந்த அணை உடைப்பெடுத்தது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் மாற்றி, ஒரு முறையான அடிப்படையில் அதன்மீது எல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-45

அதைப்போல, மழை நீர் சேகரிப்புத் திட்டம் என்பது கடந்த ஆட்சிக் காலத்தில் அள்ளித் தெளித்த திட்டமாகச் செயல்படுத்தினார்கள். அரசு கட்டடங்களுக்கு ரூ.20 கோடிக்கு மேலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பைப் எல்லாம் வாங்கி பொருத்தப்பட்டு இருக்கிறது. ஆனால், இப்போது போய் பார்த்தோம் பல இடங்களில் பைப்பும் கிடையாது, அந்தத் திட்டமும் கிடையாது. 20 கோடி ரூபாய் அளவில் ஒரு மோசடி நடந்து இருக்கிறது. அதையும் விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோல, பொதுப் பணித் துறையில், பாசனப் பகுதிக்கு என்று 4 பிரிவுகளாக இன்றைக்கு தலைமைப் பொறியாளர் C.E. level-வில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால், கட்டடத்திற்கு, சென்னையில் மட்டும்தான் இருக்கிறார்கள். எனவே, மதுரை போன்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குணசேகரன், முடியுங்கள், அடுத்த உறுப்பினர்.

**திரு. சு. குணசேகரன்:** தென் மாவட்டங்களில் இருந்து வரும்போது, நிறைய நாட்கள், செலவினங்கள் ஏற்படுகின்றன. எனவே, மதுரையை மையமாகக் கொண்டு ஒரு தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நீடூழி வாழ்க என்று வாழ்த்தி, எனது உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நிலத்தடி நீரை மேம்படுத்தவும், நீர் வளத்தைப் பெருக்கி சேமிக்கவும், விவசாய வளம், தொழில் வளம், பால் வளம், கால்நடை வளம், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவும், மின்சாரம் எடுக்கவும், மனிதன் உயிர் வாழவும், முக்கியமான துறைகளில் ஒன்றான பொதுப் பணித் துறை, அதுகுறித்துப் பேசுவதற்கு நான் இன்றைக்கு வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன்.

பொதுவாக தேசிய நதிநீர் இணைப்பு, பாலாறு நதியிலே இருக்கின்ற பிரச்சினை, காவிரி நீர்ப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை--முதலமைச்சர் அவர்கள், இருக்கின்ற சூழ்நிலையை முழுமையாகப் பயன்படுத்தி சுமுகமாக அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கின்ற அந்த காலம் வரைக்கும், அந்தந்த மாவட்டத்தில், இருக்கின்ற நிலத்தடி நீரைச் சேமிக்கவும், வளப்படுத்தவும் பொதுப் பணித் துறை முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேனி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்த நீர் அளவு 14,100 மி.க.அடி. இருந்தது. விவசாயத்திற்கும் மற்ற உபயோகத்திற்காகவும் 12,883 மி.க.அடி நீர் பயன்படுத்தப்பட்டது. இப்போது தற்சமயம் நிலத்திலே இருக்கின்ற நீர் 1,223 மி.க.அடி. நீர்தான். எப்படி இந்த நிலத்தடி நீரை மேம்படுத்துவது என்று சொன்னால், அதற்கு Micro Water shed—நுண்ணீர் வடிப் பகுதியின் மூலமாக அந்த நீரைச் சேமிக்கலாம்.

தேனி மாவட்டத்தில் மட்டும் 1,025 நுண்ணீர் வடிப் பகுதிகள் இருந்தது. 565 நுண்ணீர் வடிப் பகுதிகள் மண் அரிப்பினால் சேதமாகிவிட்டது. இந்த மண் அரிப்பினால் சேதமாகிவிட்ட அந்த நுண்ணீர் வடிப் பகுதிகள் பயன் ஆகாது என்றாலும்கூட ஒரு நுண்ணீர் வடிப் பகுதி என்பது 500 ஹெக்டேரிலிருந்து 1,000 ஹெக்டேர் நிலப் பரப்பளவு உள்ளதாகும்.

மலைகளால் சூழப்பட்ட அந்த தேனி மாவட்டத்தில், மழை பெய்யும்போது நீர் வரும்போது, ஓடைகளிலும், சிற்றோடைகளிலும் அணை கட்டாததன் காரணமாக, அது துரிதமாக ஆற்றில் சேர்ந்து விடுகிறது. ஆகவே, அந்த நுண்ணீர் வடிப் பகுதிகள் திட்டத்தை மேன்மைப் படுத்துகின்ற வகையிலே ஒரு முழுமையான தீர்வு காண நுண்ணீர் செரிவு நீர்ப் பிடிப்பு மேம்பாட்டுத் திட்டம் (Micro Watershed Development Programme) செயலாக்க வேண்டும்.



மேட்டுப் பாங்கான நிலங்களில் சம உயர வரப்பிடுதல், நீர்க்குமிழிகள் அமைத்தல் Contour Bunds and Trenching, மேட்டுப் பாங்கான நிலங்களிலிருந்து ஆரம்பம் ஆகும் சிற்றோடைகளில் குறுக்கே வெற்றுக்கல் தடுப்பணை Loose Rock check dam, நடுத்தர ஓடைகளின் குறுக்கே கம்பிவலை தடுப்பணை Gabin check dam, பெரிய ஓடைகளின் குறுக்கே சிமெண்ட் தடுப்பணை Masonry check dam, கசிவுநீர்க் குட்டைகள் Percolation ponds, பண்ணைக் குட்டைகள் Farm ponds, தற்சமயம் உள்ள ஊரணிகள், குளங்கள் சீரமைத்தல் renovation of ooranis and ponds இதுபோன்ற செயல்கள் செய்யப்படும்போது, அதன்மூலம் நிலத்தடி நீர் 10–15 மி.க.அடி. தண்ணீர் சேமிப்பதற்கு வாய்ப்பாக அமையும்.

பெரியாறு அணையானது, தமிழக அரசின் பொதுப் பணித் துறை பொறியாளர்களால் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, இயங்கி வருகின்றது. ஆனால், அணையும், அணையைச் சார்ந்த அந்தப் பகுதிகளும், பராமரிக்கப்படுகின்ற அந்த நேரத்திலே அது தடை செய்யப்பட்ட பகுதிகளாக கருதப்படுகிறது. சில நேரங்களில் கேரளாவைச் சார்ந்த அமைச்சர்களாகட்டும், அமைச்சர்களோடு வருகின்ற அரசியல்வாதிகளாகட்டும், அல்லது பொதுமக்களாகட்டும், அத்துமீறி அந்தத் தடை செய்யப்பட்ட Gallery பகுதியில் நுழைந்து, படம் எடுத்து, வீடியோ எடுத்து, அதைத் தொலைக்காட்சியிலும், பத்திரிகையிலும் செய்தியாக்கும்போது, அந்த அணை இடிந்து விழுகின்ற அபாயத்தில் இருக்கின்றது என அந்தச் செய்தியைச் சொல்லும்போது, அங்கே மக்கள் மத்தியிலே குழப்பமும், பீதியும் அச்சமும் ஏற்படுகிறது. இரு மாநிலத்திற்குள்ளான நல்லுறவை மேம்படுத்துகின்ற சூழ்நிலையைத் தமிழக அரசு முயன்று ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கின்றேன்.

பிற்பகல் 12–50

அதைப்போல 1880 ஆம் ஆண்டிலிருந்து 1996 வரைக்கும் இதுவரையில் 39 நிலச் சரிவுகள் அந்தப் பகுதியில் ஏற்பட்டும்கூட இன்னும் ஒரு சிறு விரிசல்கூட பெரியாறு அணையிலே ஏற்படவில்லை என்பதனையும் உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். பெரியாறு அணைப் பகுதிக்கும் அணையிலுள்ள தமிழகப் பணியாளர்களுக்கும் உரிய பாதுகாப்பினை அளிக்க தமிழக காவல் துறை காவலர்கள் பாதுகாப்புப் பணிக்கு நியமிக்கப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல 17 கால்வாய்களில் நீர்ச் சேதாரத்தைத் தடுக்கின்ற வகையிலே விரைந்து நீர் ஓடி கடைமடைக்குச் செல்கின்ற வகையிலே சிமெண்ட் ஸ்லாப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூடலூரில் மைத்திலிமண்ணாங்குளம், புதுப்பட்டி இடையங்குளம், புதுக்குளம், உத்தமபாளையம் தாமரைக்குளம், கம்பம் ஏழாசு குளம் ஆகியவற்றை ஆழப்படுத்தித் தூர் வார வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்திலிருந்து தேனி மாவட்டம் பிரிந்த பிறகு பொதுப் பணித் துறை, நீர் வள ஆதாரத் துறைக்கு தனி செயற்பொறியாளர் இன்னும் தேனி மாவட்டத்திற்கு ஏற்படுத்தப்படவில்லை. அதைப்போல கம்பம் பள்ளத்தாக்கில் 17 வாய்க்கால்கள் 25,000 ஏக்கர் பாசனம், 250 மடைகள், 17 அணைகள் உள்ளன. மற்றும் சண்முகா நதி பாசனம், 18 ஆம் கால்வாய்த் திட்டம் ஆகியவை கம்பம் பெரியாறு சிறப்புக் கோட்டத்துடன் இணைந்து தனிக் கோட்டமாகச் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தேக்கடி பொதுப் பணித் துறை தங்கும் விடுதி, மூன்று அறைகள் கொண்டதாகத்தான் இருக்கிறது. தற்சமயம் அதிகமாக தமிழ்நாட்டிலிருந்து நம்முடைய பொதுப் பணித் துறை அதிகாரிகளும் வெளி மாநிலங்களிலிருந்து அதிகமாக பொதுப் பணித் துறை அதிகாரிகளும் வருகின்ற காரணத்தினால் இன்னும் மூன்று அறைகள் சேர்த்து அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சண்முகா நதி திறந்து, பல மாதங்கள் ஆகியும் இன்னும் கடைமடைப் பகுதியான ஓடைப்பட்டிக்குத் தண்ணீர் செல்லவில்லை. அதையும் அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏரிகள், குளங்கள் போன்றவற்றை தூர் வாருவதற்கு ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவதற்குப் பதிலாக ஆங்காங்கே பாசனச் சங்கங்கள் மூலமாக விடுவது அர்ப்பணிப்பு உணர்வோடு அந்தச் செயலை செய்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஓரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடிக்கிறேன். காவிரி பாசனப் பகுதியிலுள்ள 39 வாய்க்கால்களின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட வேண்டும். ஏனெனில் மழை பெய்யும் காலங்களிலும், நீர் வரும் காலங்களிலும் அதைச் சேமிக்கலாம். இரண்டு வருடங்களுக்கு முன்பு 4 டி.எம்.சி. தண்ணீர் கர்நாடகா நமக்கு தர மறுத்ததால், 18 இலட்சம் எக்டேர் காவிரி பாசனப் பகுதியில் பயிர் கருகி விட்டது. ஆனால், கடந்த வருடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன், முடியுங்கள்.



**திரு. நா. இராமகிருஷ்ணன்:** ஓரே ஒரு நிமிஷம். மீதமுள்ள நீரைத் தேக்கி வைக்க முடியாததால் நான்கே நாட்களில் 108 டி.எம்.சி. தண்ணீர் காணாமல் போய் விட்டது. ஆகவே, காவிரியின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும்.

ஓரே ஒரு செய்தி மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். சுற்றுலா துறையில் பேச இயலவில்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன். 10-10-1906-ல் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்கள் ஆங்கிலேயனை எதிர்த்து சுதேசி கப்பலை இயக்கினார்கள். வருகின்ற 10-10-2006-ல 100 ஆண்டு நிறைவு ஆகிறது. அதை நினைவுகூர்கின்ற வகையிலே கடல் வாணிப நூற்றாண்டு விழாவாக அதை தமிழக அரசு கொண்டாட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தது கண்ணகி கோயில் முக்கியமான பிரச்சினை. கண்ணகி கோயில், சேரன் செங்குட்டுவனால் கட்டப்பட்டது. இராஜராஜ சோழன் மற்றும் பாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகரனால் சீரமைக்கப்பட்டது. அழகான சிற்பங்கள் நிறைந்த அந்தக் கோயிலுக்குச் செல்கின்ற பாதையைச் சீரமைக்க வேண்டும். அதைப்போல கண்ணகிக் கோட்டத்தையும் சீரமைக்க வேண்டும். தொலை நோக்குக் கண்ணாடி, தாங்கியியங்கும் கம்பி, தொட்டிக் கம்பி வட ஊர்தி ஆகியவைகளை அங்கே திறப்பு செய்து (குறுக்கீடு) ஓரே ஒரு வார்த்தை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம் என்று 9 தடவை சொல்லியிருக்கிறீர்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இலட்சத்திற்கு மேற்பட்ட சபரிமலை ஐயப்ப பக்தர்கள் வருகிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு, குமுளியில் பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து, அந்தப் பக்தர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே, தேவையான கழிப்பிட வசதிகளும், தேவையான அடிப்படை வசதிகளும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம். 5 நிமிடத்தில் உங்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனம் இந்தியுத் திருநாட்டில மட்டுமல்லாமல், உலகம் முழுவதும் உள்ள விவசாயத் துறைக்கு உயிர் நாடி ஆகும். குறிப்பாக தமிழ்நாட்டிற்கு

நீர்ப்பாசனம் இன்றியமையாததாகிறது. தமிழகத்தில் காவிரி, பாலாறு என்று இரண்டு பெரிய நதிகள் மட்டுமே உள்ள நிலையில் தென்பெண்ணை, செய்யாறு போன்ற சில சிறிய நதிகள் மட்டுமே உள்ளன. அவற்றிலும் பாசனத்திற்கு நீர் வரத்து சில சொற்ப காலங்களில் மட்டுமே கிடைக்கின்றன. காவிரித் தண்ணீரை கர்நாடகம் நம் மாநிலத்திற்கு விவசாயத்திற்கு அன்பாகவோ, பாசமாகவோ தமிழ் மக்களுக்குக் கொடுப்பதில்லை. கிருஷ்ணா நதியிலிருந்து சென்னைக்கு குடிநீர் பொதுவாக கிடைப்பதில்லை. தற்போது நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் ஆந்திர முதலமைச்சர் அவர்களை வலியுறுத்தியதாக தெரிய வருகிறது.

கேரளா, முல்லைப் பெரியாறு அணை உயரத்தை உச்ச நீதிமன்றம் உயர்த்த வேண்டுமென்று அளித்த தீர்ப்பின்படி 142 அடியாக உயர்த்த ஆணையிட்டு இருக்கிறது. கேரள அரசு இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. வெள்ள அபாய நேரங்களில் மட்டுமே கர்நாடக அரசு காவிரித் தண்ணீரை நமக்குத் திறந்து விடுகிறது. நம்முடைய தமிழகத்தில் கிடைக்கின்ற இயற்கைச் செல்வமான நிலக்கரிமூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தை மத்திய அரசின் ஒப்பந்தத்தோடு எந்த எதிர்ப்பும் இல்லாமல், இந்த மூன்று மாநிலங்களுக்கும் நாம் கொடுத்து வருகிறோம். அதுமட்டுமல்லாமல் கேரளாவிற்கு இங்குள்ள தமிழக அரிசியைத்தான் நாம் அங்கே கொடுத்து வருகிறோம். இந்த காலகட்டத்தில் Irrigation resource management என்ற நீர்ப்பாசன வளத்தை மேம்படுத்துவது இன்றியமையாததாகிறது.

பிற்பகல் 12–55

30 வருடங்களுக்கு முன்பு தமிழகத்தைவிட பின்தங்கிய மாநிலமான குஜராத், மகாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம் மற்றும் கர்நாடகம் போன்ற மாநிலங்கள் இன்று நீர்ப்பாசனத் துறை மட்டுமல்ல, மற்ற துறைகளிலும் முன்னேறி வருகின்றன. குறிப்பாக குஜராத் Industry, Agriculture போன்றவற்றில் முன்னோடியாகத் திகழ்கிறது. பங்கு வர்த்தகத்தில் சூரத் மட்டும் இந்தியாவில் உள்ள மற்ற எல்லா நகரங்களில் நடப்பதைவிட அதிகமான அளவில் அங்கே வியாபாரம் நடைபெற்று வருகிறது. கர்நாடகம் Computer Software துறையில் முதன்மை பெற்றுள்ளது. உத்தரப் பிரதேசம் தொழில் துறையிலே முன்னேறி வருகிறது. இந்நிலையில் தானியக் களஞ்சியம் என்று வர்ணிக்கப்பட்ட தஞ்சை மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக தண்ணீர் இல்லாமல், விளைச்சல் இல்லாமல், 4, 5 ஆண்டுகளாக கடும் வறட்சி தமிழகத்தில் நிலவி வருகிறது. ஆனால், கடந்த ஓராண்டு வரலாறு காணாத மழை பெய்தது. அதை நம்மால்



சேமித்து வைக்க முடியவில்லை. அந்தத் தண்ணீர் கடலிலே விரயமாகக் கலந்துவிட்டது. இஸ்ரேல் நாட்டில் வருடத்தில் சில தினங்கள் மழை பெய்தாலும் அந்தத் தண்ணீரை வருடம் பூராவும் பயன்படுத்துவதற்கு அந்த Technology-யை அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற விளைச்சல் விளைந்தாலே இந்தியாவிற்கு நாம் அரிசியை supply செய்யலாம் என்று கூறப்பட்டு வருகிறது. தஞ்சையில் மட்டும் விளைகின்ற அரிசியை தமிழகத்திற்கு நாம் பயன்படுத்த முடியும் என்ற ஒரு நிலை இருந்தது. அதாவது இதைப் போக்க வேண்டும் என்றால் ஒரு சிறிய ஆலோசனையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். Southern Chamber of Commerce-ல் ஒரு புள்ளிவிவரத்தை இரண்டு தினங்களுக்கு முன்பு அறிவித்தார்கள். அந்த அமைப்பு என்ன சொல்கிறது என்றால், குஜராத் மாநிலத்தில் கடைப்பிடிக்கப்படும் நீர் வள மேம்பாட்டுக் கொள்கையின்படி, மழை குறைவாக பெய்த போதிலும் அக்காலத்தில் அவர்கள் விவசாயத்திற்கு ஆண்டு முழுவதும் நீர் கிடைக்க Check dam-களை அமைத்து இருக்கிறார்கள். குஜராத்திலே இதுவரை 10,000 Check dam-களை அவர்கள் அமைத்திருக்கிறார்கள். நாம் தமிழகத்திலே 1,000 Check dam-களை அமைத்தால்கூட குறிப்பாக, பாலாறு, செய்யாறு போன்ற நதிகளில் ஓடி கடலில் கலக்கும் தண்ணீரை வீணாக்காமல் விவசாயத்திற்கு நாம் பயன்படுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்து, அங்கு வெலிங்டன் என்ற ஒரு ஏரி, கிழக்கிந்திய கம்பெனியால் கட்டப்பட்டது, அந்த வெலிங்டன் பிரபு அந்தப் பகுதிவாழ் ஏழையெளிய விவசாய மக்களுக்குக் கொடையாக அந்த ஏரியை கட்டிக் கொடுத்திருக்கிறார். ஆனால், அந்தப் பகுதியிலே, திட்டக்குடி பகுதியிலே, இப்போது என்ன நிலை ஏற்பட்டுள்ளது என்றால், அந்த ஏரியிலே— இப்போது எப்படி அதிகாரிகள் அவசர அவசரமாக அமைச்சர்கள் வந்தால், முதலமைச்சர் வந்தால் வேலையை முடிக்கிறார்களோ, அந்தக் காலத்திலும் 1922–லே 300 மீட்டர் வரை சரியாக அந்த ஏரியை பலப்படுத்தாமல் திறந்துவிட்டார்கள். அதன் தொடர்ச்சியாக அந்தப் பகுதியில் 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஓட்டை ஏற்பட்டு 300 மீட்டர் தினம், தினம் அங்கே இறங்கி வருகிறது. அங்கிருக்கின்ற பொதுப் பணித் துறை அதிகாரிகள் எல்லாம் இதைப் பயன்படுத்தி காமதேனுவாக வருடத்திற்கு பல கோடி ரூபாயை அடிப்பதாக நான் அறிய வருகிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அங்கிருக்கின்ற 40 ஆயிரம் ஏழை எளிய குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும். எதற்காக

வருடா வருடம் பல கோடி ரூபாய் பொதுப் பணித் துறையில் செலவிடப்படுகிறது என்பதைக் கண்காணிக்க வேண்டும். ஏறக்குறைய 67 கிராமத்தினர் அந்த ஏரியை நம்பி, அங்கே விவசாயக் கூலிகளாக தஞ்சம் புகுந்து வருகிறார்கள். இதில் ஏற்பட்ட நிலை என்னவென்றால், வேலைவெட்டி இல்லாமல், விவசாயம் செய்ய முடியாமல், அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயக் கூலிகள் எல்லாம் தங்கள் குடும்பத்தை விட்டுவிட்டு பெங்களூருக்கும், ஆந்திர மாநிலத்திற்கும், குஜராத்திற்கும் சென்று அங்கே பிழைப்பு தேடி வருகின்ற ஓர் அவல நிலை இருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் மேலைநாட்டு முதலீடுகளை எல்லாம் தமிழகத்திற்குக் கொண்டு வருகிறார். குறிப்பாக நோக்கியா போன்ற பெரும் கம்பெனிகள் சென்னையிலே வந்து தொழில் செய்ய விரும்புகின்றன. ஆனால், ஓர் அவல நிலை, நம்முடைய தமிழின மக்கள், பச்சைத் தமிழர்கள் எல்லாம் மாநிலம் விட்டு மாநிலம் போய் பிழைக்க வேண்டிய ஒரு நிலை என்னுடைய தொகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் ஏற்கெனவே எனக்கு உத்தரவாதம் அளித்திருந்தார், கண்டிப்பாக நான் உங்களை அழைத்துக்கொண்டுபோய் ஆய்வு செய்கிறேன் என்று.

பிற்பகல் 1-00

இதையும் நான் எனது தொகுதி மக்களுக்கு நன்றி சொல்லும்போது இதைச் சொல்லியிருந்தேன். இடையிலே அவர் உடல்நலம் குன்றியதால், அதையும் பத்திரிகையிலே படித்து அங்குள்ள பகுதி மக்கள் எல்லாம் இந்த ஏரி வேலை நடக்குமா, நடக்காதா என்று ஆதங்கத்தோடு கேட்டார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே, 40,000 குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் இன்று நீங்கள் இருக்கிறீர்கள். அவர்களும் நீங்கள் உடல் நலம் பெறவேண்டுமென்று பிரார்த்தனை செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கண்டிப்பாக நீங்கள் இதை அறிவிப்பாகச் செய்ய வேண்டும். 40,000 ஏழை எளிய விவசாயக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய பக்கத்துத் தொகுதியான, எங்களுடைய தொகுதி காட்டுமன்னார்குடி தொகுதியிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், உரையை முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** ஒரே நிமிஷம், ஒரேயொரு நிமிஷம். வீராணம் என்ற ஏரி இருக்கிறது. நமக்கு, 'மாநிலத்தில் கிடைக்கக்கூடிய மேற்பரப்பு நீர்வளம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதால், தண்ணீர் அரிதாகி



வருகிறது' என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்படி நீர்வளம் இருக்கின்ற முக்கிய ஆதாரங்களில் ஏரியும் ஒன்றாகும். தமிழ்நாட்டிலுள்ள பெரிய ஏரிகளில் ஒன்றான வீராணம் ஏரியை நம்பி பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் அங்கே பிழைத்து வருகிறார்கள். அங்குள்ள விவசாயிகளே போதுமான அளவு நீரின்றி அவதிப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே வீராணத்திலிருந்து சென்னைக்குக் குடிநீருக்காக தண்ணீர் எடுத்துவரும் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு 190 மில்லியன் லிட்டர் தண்ணீர் வீராணத்திலிருந்து எடுக்கப்பட்டு வருகிறது. வீராணம் ஏரியின் உயரத்தை இரண்டடி உயர்த்தி, ஏரியின் கொள்ளளவினை 935 மில்லியன் கன அடியிலிருந்து 1,485 மில்லியன கன அடியாக உயர்த்த வேண்டுமென்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு உயர்த்துவதற்கான பணி சரியாக நடைபெறவில்லை என்று தணிக்கை அதிகாரியின் அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் தங்கள் பயிருக்கு நீர் கிடைக்காமல், கடுமையான பாதிப்புக்கும், இழப்புக்கும் ஆளாகி வருகிறார்கள். இந்த நிலையில், இதை ஈடுகட்டும் விதமாக வீராணம் ஏரியிலிருந்து எடுக்கப்படும் நீருக்கு, 10 லிட்டருக்கு ஒரு பைசா என்ற அளவிலே ஒரு தொகையை நிர்ணயித்து அந்தப் பகுதிவாழ் விவசாயிகளுக்கு Royalty வழங்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

நான் சொன்ன கருத்துகளையெல்லாம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உன்னிப்பாகக் கவனித்திருக்கிறார். குறிப்பாக, வீராணம் ஏரியையும், வெல்லிங்டன் ஏரியையும் நீங்கள் மறக்காமல் அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. புஷ்பராஜ், 5 minutes.

**திரு. செ. புஷ்பராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைத் துறையில் கொப்பளிக்கும் கடலாய் குணசேகரன். மாற்றாரை மருள வைத்த மனோகரா, தேனைவிட தித்திப்பான அனார்கலி எனக் கலைத் துறையில் தன் புகழைப் பதித்த நமது தலைவர், முதன் முதலில் நிர்வாகத் துறையில் தனது பேனாவின் பேராற்றலை நிரூபித்தது இந்தப் பொதுப் பணித் துறையில்தான். அந்தப் பொதுப் பணித் துறையில் எனக்குப் பேச வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாய்மையே வெல்லும் என்பது உங்களது வாசகம். தேர்தலில் உங்கள் வாய் நின்றது. பட்ஜெட்டில் உங்கள் மை வென்றது. (மேசையைத் தட்டும் ஒலி) வேர்வைத் துளிகளுக்கு விடுமுறை விடாத உங்களுடைய வெறித்தனமான உழைப்பால், இந்த எளியவனையும் இந்த மாமன்றத்தில் நிற்கும் அதிசயத்தை நிகழ்த்திய எங்கள் தலைவரே, மாண்புமிகு தமிழக முதல்வரே எனது நன்றியினை உங்கள் பொற் பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

வைகறை விடியலைப் பிடித்துவரத் துடிக்கும் வாலிபப் பட்டாளத்துக்கு திசைகாட்டியாய், நாளைய நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழும் எங்கள் வழிகாட்டி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய 19–வது வயதில் தந்தையை இழந்து தவித்த நேரத்தில் எனக்கு கழகத்தில் பல்வேறு பொறுப்புக்களையும் வழங்கி, இன்று இந்தச் சட்டமன்ற உறுப்பினராக ஆவதற்கு உறுதுணையாகவும் இருந்த மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், அண்ணன் முனைவர் க. பொன்முடி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் கலைஞர் அவர்களின் உயிருக்கு உயிரான தம்பிகளில் ஒருவரும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சருமான அண்ணன் துரைமுருகன் அவர்கள் உடல் நலத்துடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விழுப்புரம் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியை வழங்கி காயம்பட்ட தொண்டர்களுக்கெல்லாம் மருத்துவத் துறையிலே பணியாற்றிட அந்த மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது வெற்றிக்காக வாக்களித்த கண்டமங்கலம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் தலைவர்களுக்கும், செயல் வீரர்களுக்கும் எனது நன்றியினை இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தாய் செந்தமிழ்ச் செல்வியையும், தந்தையார் செல்லையா அவர்களையும் வணங்கி எனது கன்னி உரையைத் துவக்குகிறேன்.

பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை எண், 39, 40 கொள்கை விளக்கக் குறிப்புகளைப் பக்கத்திற்குப் பக்கம் படித்துப் பார்த்தேன். மிகச் சிறப்பான திட்டங்களை எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள்.



"வரப்புயர நீருய ரும்
நீருயர நெல்லுய ரும்
நெல்லுயரக் குடியுய ரும்
குடியுயரக் கோலுய ரும்
கோலுயரக் கோனுயர் வான்"

என ஔவைப் பாட்டி பாடியதற்கேற்ப, நீர் நிலைகளை எல்லாம் ஆழப்படுத்த வாய்க்கால்களை எல்லாம் தூர் வார உத்தரவிட்ட அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள சிறிய அணைக்கட்டுகளைப் பற்றி உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 1–05

விழுப்புரம் தொகுதிக்குட்பட்ட எல்லீஸ் அணைக்கட்டு, சென்னை நகர மக்களின் தாகம் தீர்க்க கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைத் தீட்டித் தந்த, பொறியாளர் எல்லீஸ் அவர்களின் பெயராலே அமைந்திருக்கிறது. இந்த அணைக்கட்டு, இன்றுவரை அரசால் முறைப் பாசனத் திட்டத்தில் கொண்டுவரப்படாததால், பராமரிக்கப்படாமலும், பராமரிப்பின்றியும் உள்ளது. இந்த அணைக்கட்டுமூலம் சுமார் 15,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. இந்த அணைக்கட்டின்மூலம்தான், விழுப்புரம் பெருநகருக்கு குடிநீர் செல்கிறது. எனவே, இந்த ஆண்டே முறைப்பாசனத் திட்டத்தில் சேர்த்து நிதி ஒதுக்கிட கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தனூர் அணையிலிருந்து, எங்கள் மாவட்டத்தின் வழியாக புதுவை நோக்கிச் செல்லும் தென்பெண்ணை ஆற்றில் 67 வாய்க்கால்கள் உள்ளன என்பது நமது அமைச்சருக்குத் தெரியும். இதன்மூலம், 70,000 ஏக்கர் பாசனம் பெறுகிறது. காவிரி படுகையினைத் தூர் எடுத்து, கடைமடை வரை தண்ணீர் செல்ல நடவடிக்கை எடுத்ததைப்போல, 57 வாய்க்கால்களையும் பராமரித்தும், தென்பெண்ணை ஆற்றில் உள்ள 26 open type தலைப்பு மதகுகள், தடுப்புச் சுவர்கள் அமைத்தும், மழைக் காலங்களில் கிராமத்துக்குள் வெள்ளம் புகாமல் இருக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியான கண்டமங்கலம் தொகுதிக்குச் செல்லக்கூடிய வாதானூரான் வாய்க்காலில் 9 ஏரிகள்மூலம் ஏறத்தாழ 3,000 ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகின்றன. அந்த வாய்க்காலை ஆழப்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஏரிகளைத் தூர் வாரிட கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த முறை, மலட்டாற்றில் வெள்ளம் வந்தபோது, விழுப்புரம் மற்றும் கண்டமங்கலம் தொகுதியைச் சார்ந்த 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. நமது உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டார். இதில் முக்கியமான பிரச்சினை என்னவென்றால், தென்பெண்ணை ஆற்றிலிருந்து மலட்டாறாகப் பிரியக்கூடிய கொங்கரங்குண்டம் என்ற இடத்தில், regulator அமைத்து, வெள்ளம் அதிகமாக வரும்போது, 5,000 கன அடி தண்ணீர் மட்டும், மலட்டாற்றில் திறந்துவிட்டால், 100-க்கு மேலான உள்ள கிராமங்களுக்கு எந்தப் பாதிப்பும் வராது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சிறப்புக் கவனம் செலுத்தி, இந்த நிதியாண்டிலே கொங்கரங்குண்டத்தில் regulator அமைத்துத் தர மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நமது பொதுப் பணித் துறை அமைச்சருக்கு நன்கு தெரிந்த, மிக முக்கியமான ஒரு திட்டம், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது, அவர்களால் தொடங்கப்பட்ட திட்டம். திருவண்ணாமலை, மேல்மலையனூர், செஞ்சி, முகையூர், கண்டமங்கலம், ஆகிய ஐந்து தொகுதிகளைச் சார்ந்த மக்கள் எதிர்பார்க்கின்ற மிகப் பெரிய திட்டம். ஏறத்தாழ, 40 ஏரிகள், 70,000 ஏக்கர் பாசன பரப்புடைய திட்டம். தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம், கடந்த ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டது. அந்தத் திட்டம்தான் நந்தன் கால்வாய்த் திட்டம். கடந்த 2001 ஆம் ஆண்டு, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவிக்கப்பட்டு, 38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் 27-12-2001-ல் 18068/பி2/2000-2001 எண்ணிட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (திட்டம் மற்றும் உருவாக்கம்) நீர்வள ஆதார அமைப்பு, சென்னை-18 என்பவர், கடிதம்மூலம் நிராகரித்துவிட்டார் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

விழுப்புரம் மாவட்டப் பெருந்திட்ட வளாகத்தில், மழைக் காலங்களில் தேங்கும் தண்ணீர், விழுப்புரம் நகருக்குள் புகுந்து, சேதம் ஏற்படுத்துவதைத் தவிர்க்க, வழுதரெட்டி வழியாக சாலாமேடு, ஐயனார் ஏரிக்குச் செல்லும் வாய்க்காலைச் சீர்செய்து தர கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில், வேலைவாய்ப்பு அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், வணிக வரி அலுவலகம், புள்ளியியல் துறை அலுவலகம், போன்ற அலுவலகங்களைக் கட்டவும், 2,000 நபர்கள் அமர்ந்து அரசு நிகழ்ச்சிகளை நடத்த, (மணியடிக்கப்பெற்றது) ஒரு கலையரங்கம் கட்டித்தரவும் கேட்டுக்கொள்கிறேன்.



ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தில் எனது தொகுதியைச் சார்ந்த வாக்கூர், களிஞ்சிகுப்பம், பாக்கம், திருமங்கலம், முற்றாம்பட்டு, வழுதாவூர், சிறுவந்தாடு, கப்பிலியாம்புலியூர் ஆகிய ஏரிகளை ஆழப்படுத்தி, சீர்படுத்தித் தரவும், கோலியனூர் வாய்க்காலில் உள்ள மூன்று shutter-களைச் சீரமைக்கவும், சிறுவந்தாடு பகுதியில் உள்ள நரி ஓடையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பராமரித்திடவும், மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பொதுப் பணித் துறையில், பிரிவு அலுவலகங்களைத் தரம் உயர்த்தி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புஷ்பராஜ், உரையை முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம்.

**திரு. செ. புஷ்பராஜ்:** ஒரு நிமிடம். நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். நன்றி சொல்லுங்கள். ஒரு line-ல் உரையை முடியுங்கள்.

**திரு. செ. புஷ்பராஜ்:** ஜூன் 12 ஆம் தேதி, மேட்டூர் அணை திறக்கப்பட்டதால், கலைஞர் ஆட்சியில் கடைமடை வரை விவசாயிகளுக்குத் தண்ணீர் சென்றது. ஆதலால், காவிரி டெல்டா விவசாயிகள் அனைவரும் 'கடைமடை காத்த கரிகால் சோழனே' எனப் பாராட்டுகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதி, விக்கிரவாண்டி ஒன்றியத்தில் ஒரு SIPCOT Complex அமைக்கவும், கண்டமங்கலத்தைத் தனி தாலுகாவாக மாற்றவும் அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்கு பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம், only five minutes.

***திரு. ந. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்கீழ் சட்டப் பேரவையில் பேச வாய்ப்பளித்த, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை இரண்டாவது முறையாக இச்சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்க உறுதுணையாக இருந்த, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி, அன்னை சோனியா காந்தி அம்மையார் இருக்கும் திசை நோக்கி வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரசியல் வழிகாட்டியும், மத்திய நிதியமைச்சருமான மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்களுக்கும்,

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் திரு. கார்த்தி ப. சிதம்பரம் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னை இரண்டாம் முறையாகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய காரைக்குடி சட்டமன்றத் தொகுதியினுடைய மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1-10*

ஆந்திர அரசு, சித்தூர் மாவட்டத்தில், குப்பம் அருகே கணேசபுரத்தில், பாலாற்றின் குறுக்கே அணை கட்ட, அடுத்த மாதம் ஆந்திர முதல்வர் அடிக்கல் நாட்டப் போவதாக செய்திகள் வெளியாகி உள்ளன. வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மாவட்டங்களுக்குக் குடிநீர் வழங்கிக் கொண்டிருக்கும் ஆறு பாலாறு ஆகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆந்திர முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்தியோ, உச்ச நீதிமன்றத்தில் தடையாணை பெற்றோ, அணை கட்டப்படும் இடம் வனப் பகுதி என்பதால், மாண்புமிகு மத்திய வனத் துறை அமைச்சர்மூலம் தடையாணை வழங்கியோ, பாலாற்றின் குறுக்கே அணை கட்டப் போவதை உடனே தடுத்த நிறுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

முல்லைப் பெரியாறு அணை நிலநடுக்கத்தால் பலவீனப்பட்டதாக பொய்யான காரணம் சொல்லி, புதிய அணையைக் கட்டப்போவதாக கேரள அரசு அறிவித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் நிபுணர் குழு அளித்த அறிக்கைபடி, அணை ஸ்திரமாக நல்ல நிலையில் உள்ளது என்று சொல்லப்பட்டும்கூட, கேரள அரசு தமிழகத்திற்கு வழங்கப்படும் நீரின் அளவைக் குறைக்க மறைமுகமாக, வேறு அணை கட்ட முற்படுவது, நம் உரிமையை பறிக்கும் செயலாகும். அதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் நிறைய காட்டாறுகள் உள்ளன. இந்தக் காட்டாறுகளின் குறுக்கே அணைகள் கட்டி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவிட வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையில் ஒப்பந்தக்காரர்களாக பதிவு பெற்று, அரசு வேலையைச் செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். காரணம்,



இப்பொழுது சிமெண்ட் விலை ரூபாய் 167. ஆனால், வெளிச்சந்தையில் சிமெண்ட் விலை ரூபாய் 200 ஆகும். மணல் இரண்டு யூனிட்டுக்கு 1,850 ரூபாய். ஆனால், இன்று இரண்டு யூனிட்டுக்கு மணல் 4,500 ரூபாய் விலை. அதேபோன்று, செங்கல் ஒன்று, ஒரு ரூபாய் அறுபது பைசா. ஆனால், இன்று ஒரு செங்கல் 3 ரூபாய். இதுபோன்று கட்டுமானப் பொருட்களை அதிக விலைக்கு வாங்கி, எவ்வாறு ஒரு ஒப்பந்தக்காரர் தரமான முறையில் வேலைசெய்து முடிக்க முடியும்? ஆகையால், தாங்கள் தயவுசெய்து பொதுப் பணித் துறையில் உள்ள schedule of rate 2006-07 மார்க்கெட் விலைக்கேற்ப போடுவதற்கு வழிவகை செய்யுமாறு தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். இதே பிரச்சினைதான் நெடுஞ்சாலை, கிராமப்புற சாலைகளிலும் இருக்கின்றது என்பதையும் இந்த மாமன்றத்திலே உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டம், கீழ்பவானித் திட்டம் ஆயக்கட்டில் சேர்க்கப்படாத, அன்று தாராபுரம் கட் எனப்படும் 23,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறவில்லை. கடந்த தி.மு.க. ஆட்சியில் அந்த 23,000 ஏக்கர் நிலமும் ஆயக்கட்டில் சேர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது ஆனால், அது கடந்த 5 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நமது கலைஞர் அரசு உடனடியாக தாராபுரம் கட் எனப்படும் இந்த 23,000 ஏக்கர் நிலத்தை கீழ்பவானித் திட்ட ஆயக்கட்டில் சேர்க்க வேண்டுமென கோருகின்றேன்.

தஞ்சை மாவட்ட கடைமடை விவசாயிகளின் முக்கியமான கோரிக்கையான மேட்டூர் அணை நிரம்பி வழியும் நிலையில், தஞ்சை மாவட்டத்தின் கடைமடைப் பகுதிகளுக்கு சரிவர தண்ணீர் இன்னும் வரவில்லை என அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். எனவே, கல்லணைக் கால்வாயை தலைப்பகுதியில் பலப்படுத்தி, கல்லணையிலிருந்து 4,000 கனஅடி தண்ணீர் எடுத்தால்தான், கடைமடைக்குத் தண்ணீர் செல்லும். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறப்புக் குழு ஒன்று அமைத்து கல்லணைக் கால்வாயை பார்வையிட்டு, அதைப் பலப்படுத்த ஆவன செய்ய வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தொகுதிக்கு வருகின்றேன். காரைக்குடியைக் கல்விக் குடியாக்கி, கல்வியில் சிறந்து விளங்குவதற்காக, பாம்பாடும் இடமெல்லாம் பந்தாடும் இடமாக மாற்றி, மழலையர் கல்வி முதல் உயர் கல்வி வரை பயில்வதற்கு, மேலும் மத்திய விஞ்ஞான வேதியியல் ஆய்வகம் அமைப்பதற்கு தங்கள் உடைமைகள் அனைத்தையும் அளித்து, இன்று அழகப்பா பல்கலைக்கழகமாக சிறந்து விளங்கி வருவதற்கு வழிவகுத்துத் தந்த

கொடைவள்ளல் டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்கள், 1956-ல் மருத்துவக் கல்லூரி அமைக்க அடிக்கல் நாட்டி, எதிர்பாராவிதமாக அவர் 1957-லே இயற்கை எய்தினார். அவரது கனவு நினைவாகவில்லை. அவரது கனவை நினைவாக்கும் வகையிலும், மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அறிவிப்பை செயல்படுத்தும் முகமாக, எனது தொகுதியில், காரைக்குடியில் மருத்துவக் கல்லூரியை இந்த ஆண்டே தொடங்கிட வேண்டுமாய் கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாவட்டத் தலைநகரங்களில் உள்ள நகராட்சிகளுக்குப் பாதாள சாக்கடைத் திட்டம் இந்த ஆண்டே அமல்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்கள். எனது மாவட்டத்தில் தலைநகர் சிவகங்கைக்குத் தந்திருக்கின்றார்கள். அதற்காக அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாவட்டத்திலேயே பெரிய நகரமாக காரைக்குடி இருப்பதால், இந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கூடுதலாக எனது தொகுதி காரைக்குடி நகரத்திற்கும் இந்த ஆண்டே கொண்டுவர வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிவகங்கை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் சுமார் 40 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. மாணவர்கள் வேலைவாய்ப்பினை கருதி, எனது தொகுதியான காரைக்குடியில் 'டைடல் பார்க்' அமைத்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன். அதற்கான இட வசதி அழகப்பா பல்கலைக்கழகத்தில் உள்ளது எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது தொகுதியில் சாக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த கண்டனூரில் மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு ப. சிதம்பரம் அவர்கள் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து இப்பகுதியிலுள்ள ஏழை எளியோருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கதர் கிராம கைத் தொழில் அமைப்பதற்காக 30 ஏக்கர் நிலம் வழங்கினார்கள். ஆனால், ஒருசில ஆண்டுகளே இந்த தொழிலகம் இயங்கியது. அனைத்து வசதி இருந்தும் தற்போது மேற்படி தொழிலகம் முடங்கிக் கிடக்கின்றது. எனவே, மேற்படி தொழிலகம் உயிரூட்டப்பெற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம், ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.



பிற்பகல் 1-15

காரைக்குடி தொகுதியில், பெரியகோட்டை, அதிகமாக பின்தங்கிய மக்கள் வாழும் பகுதியாகும். இங்கு கோட்டைப்பூ என்ற மல்லிகைப் பூ விளைச்சல் அதிகமாக உள்ள பகுதியாகும். இந்தப் பகுதியில் மல்லிகை வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தால் அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பாகவும், வருவாய் கிடைக்க ஏதுவாகவும் இருக்கும். எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, தொழிற்சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அரசு கொண்டு வந்துள்ள தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், விவசாயிகளின் நன்செய், புன்செய் நிலங்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் ஆகியவை பாராட்டப்படக்கூடிய திட்டமாகும். நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்குவதைப்போல, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தரிசு நிலங்களில், தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின்படி காய்கறிகள், வாசனைப் பூக்கள், நெல்லிக்கனி, bio-diesel தயாரிக்கப் பயன்படும் jatropha பயிர் செய்யும் விவசாயிகளுக்கு மின் கட்டணம் ஒரு யூனிட்டுக்கு ரூபாய் 3.50 என்று உள்ளதை, யூனிட்டுக்கு 1 ரூபாய் என்று நிர்ணயம் செய்தால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன்பெறுவதோடு, தமிழகத்தில் உள்ள தரிசு நிலம் எல்லாவற்றிலும் விவசாயம் நடைபெற்று, கிராமப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வேலைவாய்ப்புப் பெருகும்.

நபார்டு வங்கியின்மூலமாக 1996-97 ஆம் ஆண்டிலே நமது நிதி அமைச்சர் மூலமாக 1996-லே ரூபாய் 250 கோடி, 1997-லே ரூபாய் 250 கோடி என்று நபார்டு திட்டத்தின் மூலமாக இங்கே பெறப்பட்டு, அந்த நிதியைக்கொண்டு நமது டாக்டர் கலைஞர் அவர்கள் சென்ற 1996-2001 ஆம் ஆண்டிலே பல்வேறு அடிப்படை வசதிகள் தந்திருக்கிறார்கள். இந்த ஆண்டும் நமது டாக்டர் கலைஞர் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள் மூலமாக நமது தமிழகத்திற்கு அதிக நிதியினைப் பெற்று, நமது தமிழக மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்துதர வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

சேலம் மாவட்டம், ஆத்தூரில் கல்லாறு அணைத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமாய் கேட்டுக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள். முடியுங்கள், அங்கே பக்கத்திலேயிருந்து பேப்பரை கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

**திரு. ந. சுந்தரம்:** கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தில் பணிபுரியும் NMR-களை G.O. படி பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு,

இந்த வாய்ப்பினை அளித்த எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும், கொறடா திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், துணைத் தலைவர் திருமதி யசோதா அக்கா அவர்களுக்கும் மற்றும் என்னுடைய ஏனைய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து, சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்றையதினம் பொதுப் பணித் துறையினுடைய மானியக் கோரிக்கையில் பேசுவதற்குரிய நல் வாய்ப்பினை எனக்கு வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய முதல் வணக்கத்தினையும், (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியினையும் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், வாய்ப்பினை வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் நீர்தான் மூல ஆதாரம். ஊற்று நீரும், மழை நீரும் ஆகிய இரு வகை நீர் வளமும், தக்கபடி அமைந்த மழையும், அதிலிருந்து வரும் நீர் வளமும், வலிய அரணும் நாட்டுக்கு இன்றியமையாத அம்சங்களாகும் என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாக்காகும்.

கால்வாய்ப் பாசன முறையையும், ஏரிப் பாசன முறையையும் நவீனப்படுத்துவதன்மூலம்தான் நமக்கு கிடைக்கப்பெறகின்ற நீர் வீணாகாமல் தடுப்பதுடன், நீரை சீரான முறையில் தேவைப்படுகின்ற உரிய அளவிற்கு மட்டுமே பயன்படுத்துவதில் நாம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். நீர் பயனீட்டாளரிடம் தகுந்த அறிவுரைகளையும் தொழில்நுட்ப நவீன யுக்திகளையும் பயன்படுத்தி, கிடைக்கப் பெறுகின்ற நீரை சரியான முறையில் பயன்படுத்த அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கவேண்டும். தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரங்களில் 65 சதவீத விழுக்காடு உழவுத் தொழிலுக்குப் பயன்படுகிறது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. பெரிய அணைகளிலும், ஏரிகளிலும் மற்றும் குளங்களிலும் பல்வேறு நீர்நிலைகளில் தேக்கி வைக்கப்படுகின்ற நீரை அதன்கீழ் வருகின்ற பாசனப் பகுதிகளுக்கு சீரான முறையில் நீர் சேதாரம் இல்லாமல் பயன்படுத்துவதற்குரிய யுக்திகளை, விழிப்புணர்ச்சிகளை விவசாயிகள்



மத்தியில் ஏற்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுப்பதன்மூலம், கிடைக்கப்பெறுகின்ற நீர் முழுவதும் பயன்படுத்தப்படுகின்ற நிலையை உருவாக்கும் என்பதனை தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1-20*

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், இருக்கின்ற ஏரி, குளம் போன்ற நீராதாரங்களின் கொள்ளளவினை அதிகரிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு மாநில நிதி மற்றும் உலக வங்கி, நபார்டு வங்கி போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவியைப் பெற்று, அதில் ஏற்கெனவே படிந்திருந்த வண்டல் மண் போன்றவற்றைத் தூர் எடுத்து, ஆழப்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

20–9–1995 அன்று நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் சுமார் 840 கோடி ரூபாயை உலக வங்கியிடமிருந்து நிதியாகப்பெற்று பாசன ஆதாரங்களைப் பெருக்குவதற்காகவும், நவீனப்படுத்துவதற்காகவும், அந்த நீரைப் பகிர்வதில் விவசாயிகளை ஈடுபடுத்துகின்ற தொலைநோக்குப் பார்வையில், மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று, 30–9–2004 அன்று அந்தப் பணிகள் நிறைவாக முடித்து வைக்கப்பட்டன. இந்தப் பணிகள் மிகவும் திருப்திகரமாக நடைபெற்றன என்று உலக வங்கி பாராட்டியுள்ளது. மேலும், நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் II–ன்கீழ் ஒருங்கிணைந்த நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் II–ஐ, 3,900 கோடி ரூபாயில் திட்டங்கள் தீட்டப்பட்டு, பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்தத் திட்டமாக இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்னோடித் திட்டமாக, 70 கோடி ரூபாயில் அனுமா நதி பாசனத் திட்டத்தின்கீழ், ஒருங்கிணைந்த பல்வேறு துறைகளின்கீழ், பணிகள் எடுக்கப்பட்டு, முடிக்கப்பட்ட அந்தப் பணிகளை உலக வங்கி பார்வையிட்டு, பாராட்டி, நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் II–க்கு ஒப்புதலும் தந்துள்ளது என்பதனை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய முல்லைப் பெரியாறு அணைத் திட்டம் 1886 ஆம் ஆண்டு திருவாங்கூர் மகாராஜாவுக்கும், சென்னை மாகாண அரசுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டு, இத்திட்டம் 1895 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. இதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு, இரண்டு துணை ஒப்பந்தங்கள் தமிழ்நாடு, கேரள அரசுகளுக்கிடையே ஏற்பட்டன. இந்த ஒப்பந்தத்தின்படி நாம் 152 அடி நீரைத் தேக்குவதற்கு உரிமை

பெற்றிருந்தோம். இந்த அணையின்மூலம் பாசன வசதி பெறுகின்ற விவசாயிகளும் இந்த நீரைக் கொண்டு குடிநீர் பெறுகின்ற 6 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் இன்று மிகவும் கவலையடையும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

1979 ஆம் ஆண்டு கேரள அரசு சில அச்சங்களைத் தெரிவித்ததன் அடிப்படையில், மத்திய நீர் வளக் குழுமமும், அணையினை ஆய்வு செய்து, அவசர கால நடவடிக்கை, இடைக்கால நடவடிக்கை, நீண்ட கால நடவடிக்கை என்ற மூன்றுவிதமான, பலப்படுத்தும் பணியினைச் செய்யச் சொல்லி, தமிழ்நாடு அரசும் அதைச் செய்துமுடிக்கும்பொருட்டு, அணையின் நீர்மட்டம் 152 அடியிலேயிருந்து 136 அடியாகக் குறைக்கப்பட்டு, மேற்கூறிய அவசரக் கால மற்றும் இடைக்காலப் பணிகள் நாம் முடித்து, மத்திய நீர்வளக் குழுமமும் பார்வையிட்டு, 29–4–1980 இல் அணையின் நீர்மட்டத்தை 145 அடிக்கு உயர்த்தலாம் என்று பரிந்துரைத்தது. பலப்படுத்தும் பணிகள் முடிந்த நிலையிலும் கேரள அரசு 136 அடிக்கு மேலே நீர்மட்டத்தை உயர்த்தக்கூடாது என்று தொடர்ந்து கூறி வந்த சூழ்நிலையில் இந்தப் பிரச்சினை பல்வேறு காலக்கட்டங்களைக் கடந்து, உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையின்படி, மத்திய நீர்வள ஆதார அமைச்சகம், 16–6–2000 ஆம் ஆண்டு வல்லுநர் குழுவை நியமித்து, அணையின் பாதுகாப்பு குறித்தும் அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவது குறித்தும் அதன் பரிந்துரையைக் கூறியதன் அடிப்படையில் வல்லுநர் குழுவும் மத்திய அரசிற்கு மார்ச் 2001 ஆம் ஆண்டு அதன் அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கையில் அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. வல்லுநர் குழு அளித்த பரிந்துரையை ஏற்க கேரள அரசு மறுத்த சூழ்நிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தப் பிரச்சினையை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று, தமிழ்நாட்டின் உரிமையைக் காக்க, அணையின் நீர்மட்டத்தை உயர்த்திட கேரள அரசுக்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நீதி கேட்டு, உச்ச நீதிமன்றத்தை நாடினார்கள்.

உச்ச நீதிமன்றமும் 27–2–2006 அன்று தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பின்படி, தமிழக அரசு 142 அடி வரை நீரைத் தேக்கலாம் என்றும், தமிழக அரசு, மத்திய நீர்வளக் குழுமம் பரிந்துரைத்தபடி, எஞ்சிய பலப்படுத்தும் பணிகளைச் செய்ய அனுமதிக்கப்படுவதாகவும், அதற்கு கேரள அரசு தடுத்து நிறுத்துவதற்கு காரணமாக இருக்கக்கூடாது எனவும், மேற்படி பலப்படுத்தும் பணிகள் மத்திய நீர்வளக் குழுமம் மனநிறைவுறும் நிலையில் முடிவுற்றபின், 152 அடி வரை நீரைத் தேக்குவது தொடர்பாக, வல்லுநர்கள் அணையின் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு, ஆய்வு



செய்த பின்னர், நீர்மட்டம் உயர்த்தப்படலாம் என்றும் அந்தத் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், இவைகளையெல்லாம் கருத்தில் கொள்ளாமல் கேரள அரசு, 13–5–2006 அன்று கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்புச் சட்டம் 2003–க்கான திருத்தச் சட்டத்தின்மூலம் அணையின் நீர் -மட்டத்தை 136 அடியாக அறுதியிட்டு ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. உச்ச நீதிமன்றதின் தீர்ப்புக்கு முரணான இச்சட்டத்தை கேரள அரசு நிறைவேற்றியுள்ளது. கேரள அரசு கொண்டுவந்திருக்கின்ற சட்டத் திருத்தம் அரசியல் அமைப்பினபடி செல்லத்தக்கதல்ல என்று உத்தரவு வழங்குமாறு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு சிவில் வழக்கைத் தாக்கல் செய்து, உச்ச நீதிமன்றம் முன்பு வழங்கிய தீர்ப்பை அமல்படுத்துவதற்கும், அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்த உறுதிப்படுத்தவும், அணையினைப் பலப்படுத்தும் பணியின்னைத் தொடர்ந்து செய்வதற்கும், ஆணை பிறப்பிக்குமாறு அணுகியுள்ள சூழ்நிலையில் ஆட்சிக்கு வந்துள்ள இவ்வரசு தொடர்ந்து முல்லைப் பெரியாறு அணையில் தமிழ்நாட்டிற்குரிய உரிமையை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்து, விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கையில் தொய்வில்லாமல் தங்கள் கடமையை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–25

பரம்பிக்குளம்–ஆழியாறு என்கின்ற திட்டம். பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம், 29–5–1970 அன்று மலைகளில் ஓடுகின்ற 6 நதிகள் மற்றும் சமவெளிப் பகுதிகளில் ஓடுகின்ற 2 நதிகள், மொத்தம் 8 நதிகளில் கிடைக்கக்கூடிய நீரை இரு மாநிலங்களின் மின் உற்பத்தி, பாசனம், குடிநீர் வழங்கல், தொழிற்சாலை பயன்பாடு மற்றும் இதர உபயோகங்களுக்காகப் பயன்படுத்தும்பொருட்டு, 9–11–1958 முதல் முன் தேதியிட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை, ஈரோடு மாவட்டம் தாராபுரம் ஆகிய தாலுக்காகள் பயனடைகின்றன. கேரளாவில் பாலக்காடு மாவட்டமும் பயனடைகிறது. 1958 ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகளுக்குப் பின்னர் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும், நீரைப் பகிர்ந்துகொள்வதில் கிடைக்கப்பெற்ற அனுபவத்தின் வாயிலாக இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும் ஒப்பந்தம் கோருகிறது. 1989 ஆம் ஆண்டு இரு மாநிலங்களும் மறு ஆய்வுக்கான ஆவணங்களை பரிமாற்றம் செய்துகொண்டு எந்த முடிவும் எட்டப்படாத சூழ்நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட

முயற்சியினால் சென்னையில் 10-6-2002-ல் அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இரு மாநிலங்களிலும் மூன்று பேர் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டு, அந்தக் குழுவும் ஆறு முறை கூடி, அறிக்கையைத் தத்தம் அரசுகளுக்கு 2003 ஜூனில் அளித்தது. இதன் தொடர் முயற்சியாக, சென்னையில் 6-11-2004 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள், மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு இணக்கமான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. அதன் தொடர் முயற்சியாக 27-11-2004 மற்றும் 18-12-2004 ஆகிய தேதிகளில் இரு மாநிலங்களிடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட மறு ஆய்வுத் திட்டத்திற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளையும் கடமைகளையும் ஆற்றியுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொண்டு, இன்று பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற இவ்வரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு மறு ஆய்வினை முடித்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு நீர்ப் பற்றாக்குறை மாநிலமாகவே இருக்கிறது. அண்டை மாநிலமான கர்நாடகம், கேரளம், ஆந்திரப் பிரதேச மாநிலங்கள், வடிநிலப் பகுதிகளில் உபரி நீர் மிகுதியாக இருக்கின்ற மாநிலங்களாகும். மேலும் மகாநதி மற்றும் கோதாவரியில் உபரியாக உள்ள நீரை கிருஷ்ணா, பெண்ணாறு, காவிரி, வைகை மற்றும் குண்டாறு பகுதி வரை இணைப்புச் செயல் வடிவம் கொடுத்து நிறைவேற்றுவதன்மூலம் நம்முடைய நீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஓரே வழி என்பதனை அரசு நன்குணர்ந்து, இந்த நதிகளின் இணைப்புக்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை, அதாவது மத்திய அரசு மூலமாக சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் பேசி தென்னக நதிகளின் இணைப்புத் திட்டத்திற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மதுரை மாவட்ட மக்களின் 58ஆம் கால்வாய்த் திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 74.60 கோடி ரூபாய் திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள். 58 கிராமங்கள் பயனடையும்வகையில், 32 கண்மாய்கள் மூலமாக, பாசன வசதி பெறுகின்ற இத்திட்டத்திற்கு, போதிய நிதி இவ்வாண்டு ஒதுக்கி, பணி தொய்வின்றி நடைபெற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள 18ஆம் கால்வாய் திட்டப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் துரிதமாக நடைபெற்று, தற்போது நில எடுப்புப் பணிகளும் முடிக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ள பணிகளுக்கும், இவ்வாண்டு போதுமான நிதி ஒதுக்கவேண்டுமென நான் அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய நீர்ப்பாசனத் திட்டங்களின்கீழ் நடைபெற்றுவரும் 43 திட்டப் பணிகளின் விவரங்கள் பட்டியலிடப்பட்டு நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் உள்ளன. ஆனால், அந்த 43 திட்டப் பணிகளுக்கும், ஒவ்வொரு திட்டத்திற்கும், நடப்பு நிதியாண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்றது என்ற விவரம் அதில் குறிப்பிடப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இதற்கு முன்னாலே, கொள்கை விளக்கக் குறிப்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகளுக்கு, ஒவ்வொரு திட்டத்திற்கும், திட்டப் பணிகளுக்கும் இவ்வாண்டு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகின்றது என்ற விவரம் இருக்கும். ஆனால், இந்தக் கொள்கை விளக்கக் குறிபபில் 43 திட்டப் பணிகளுக்கும், எந்தப் பணிக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டு இருக்கின்றது என்ற விவரங்கள் இல்லை என்பதனை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோல, மாண்புமிகு அம்மா அவர்கள், கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்மூலம், சென்னை குடிநீர்த் தேவைக்குத் தொடர்ந்து ஆந்திர அரசை வலியுறுத்தி, நமக்கு வரவேண்டிய நீரைப் பெறுவதற்கு, ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, முயற்சிகள் மேற்கொண்டார்கள் என்பதனை இந்த நேரத்தில் நான் நினைவுகூர்வதற்குக் கட்மைப்பட்டிருக்கின்றேன்.

பாலாற்றின் குறுக்கே, ஆந்திர மாநிலத்தில், கணேசபுரம் என்ற இடத்தில் தடுப்பணை கட்டப்படுவதை அறிந்தவுடனே, அதைத் தடுத்து நிறுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து நடவடிக்கை எடுத்துள்ளார்கள். நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஆந்திரா சென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்ததாக இங்கு சபையில் அறிவித்திருக்கின்றார்கள். தமிழகத்தினுடைய மக்கள் நலன் கருதி, அரசு இந்தப் பணியில் தொய்வில்லாமல் கடமையாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆக, கடந்த காலங்களில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில், நம்முடைய பொதுப் பணித் துறையில் பாசன வசதிகளை

மேம்படுத்துவதாக இருந்தாலும்சரி, கட்டடப் பணிகளில் துரிதமான பணிகளை எடுத்து நடைமுறைப்படுத்துவதாக இருந்தாலும்சரி, ஆக்கபூர்வமான பணிகளை மேற்கொண்டார்கள் என்பதனை இந்த நல்ல நேரத்திலே நினைவுகூர்ந்து, எனக்கு பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவருக்கு என்னுடைய நன்றியை மீண்டும் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவித மகிழ்ச்சியோடும், நெகிழ்ச்சியோடும் இந்த மன்றத்தில் நான் நிற்கிறேன். நான் நலம்பெற்று, இந்த அவைக்கு வந்தபொழுது, 'என்னுடைய நூறாவது நாளைவிட, என் தம்பி மீண்டும் பொலிவோடு வந்திருக்கிறான்' என்று (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய தலைவர் அவர்கள் பூரித்து, புளகாங்கித்து, அதைப் பெருமைப்படுத்திக் கூறியதையும், பல்வேறு கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள், எனக்கு வாழ்த்து தெரிவித்ததையும், பேரவைத் தலைவராகிய தாங்கள் அன்பான வாழ்த்து தெரிவித்ததையும், வந்த நேரத்தில் கைத்தட்டி, என்னை வரவேற்றதையும், அப்படி வரவேற்பு தெரிவித்த அனைவருக்கும், நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வாழ்த்தை white-லே தெரிவிக்கமுடியாதவர்கள், black-லே தெரிவித்திருக்கிறார்கள். (சிரிப்பு) நான் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆனால், பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அமைச்சனாக அல்ல; ஓர் உயிருள்ள உருவமாக நான் நின்று கொண்டிருக்கிறேன் என்று சொன்னால், அதற்கு முழுக் காரணம், முதற் காரணம், என் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு ஒருமுறை உயிர் கொடுத்தார்கள்; என் தாய், தந்தை. ஆனால், ஒருவர் எனக்கு இருமுறை உயிர் கொடுத்திருக்கிறார் என்றால், அவர் என் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1–35*

தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலை நான் சொல்லிவிடுவேன்; அது ஒன்றும் எனக்குப் பெரியதல்ல. ஆனால், நான் வாழ்க்கை வரலாறு எழுதக்கூடிய அளவிற்கு வளர்ந்தவன் அல்ல. ஆனால், என்னுடைய தலைவருடைய வாழ்க்கை வரலாறு எழுதப்படுகிறபோது, அவர் எவ்வளவு கனிவான இதயம்



படைத்தவர் என்பதை, அந்த வரலாற்று ஆசிரியர்கள் எழுதுவதற்கு, நான் இந்த அவையிலே பதிவு செய்வது முக்கியம் என்று கருதுகிறேன்.

என் மனதில் உள்ளதை நான் பேசிவிடுவதற்குத் தாங்கள் அனுமதிக்க வேண்டும். உணர்ச்சிவயப்படக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் எங்கோ இருந்து வந்தவன். 46 ஆண்டுகளுக்கு முன்னால், என் நண்பன் செல்வம், 'என்னுடைய நண்பர் துரைமுருகன்' என்று கலைஞருக்கு அறிமுகம் செய்தார். நான் யார்? என்ன ஜாதி? எனக்கு என்ன background? எதையும் பார்க்கவில்லை. அன்றைக்கு என்னைத் தடுத்து ஆட்கொண்டவர், என்னை எல்லா நிலையிலும் வைத்து, வைத்துப் பார்த்து, அழகு பார்த்தவர்; வளர்த்தவர்; எல்லாப் பொறுப்புகளையும் கொடுத்தவர்; மூன்று முறை அமைச்சராக்கியவர்; ஒரே தொகுதியிலே எட்டு முறை ஜெயிக்க வைத்தவர். அவர் எனக்கு செய்யாததில்லை. எனக்கிருக்கிற கௌரவம், பெயர், புகழ், அந்தஸ்து, அத்தனையும் என்னுடைய தலைவர் எனக்குத் தந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கென்று தலைமைக் கழகத்திலே புதிய பதவிகூட உருவாக்கித் தந்திருக்கிறார். பதவி கொடுத்திருக்கிறார்; பட்டம் கொடுத்திருக்கிறார்; அந்தஸ்து கொடுத்திருக்கிறார். இது கொடுக்கமுடியும். ஆனால், எனக்கு உயிர் கொடுத்திருக்கிறாரே, (மேசையைத் தட்டும் ஒலி) அது ஆச்சரியம் அல்லவா?

பல பேர் ஆச்சரியப்படுவீர்கள்; ஜூன் 12 ஆம் தேதி, வேலூரிலே சிப்பாய்க் கழக நிகழ்ச்சிக்கு ஏற்பாடு. அவரிடத்திலே சொல்கிறேன்; "8½ மணி, அண்ணே, நான் வேலூருக்குப் போகிறேன்; இராத்திரிக்கே போய்ப் பார்த்துவிட்டு, காலையிலே வருகிறேன் அண்ணே" என்றேன். "உனக்கு இதே வேலையா போச்சு; ஒன்றும் வேலூருக்குப் போகத் தேவையில்லை; வா! என்னுடன்" என்று அவர் வீட்டிலே உட்கார வைத்தார். ஆனால், ஒன்று; 10, 15 நண்பர்கள் உட்கார்ந்திருந்தும், கலைஞருக்கு என் முகத்தைப் பார்த்தே, நான் என்ன நினைக்கிறேன் என்பதை அப்படியே சொல்லிவிடுவார். கொஞ்சம் எனக்கு, ஒரு மாதிரி மயக்கம் இருப்பதைப்போல இருந்தது. யாருக்கும் சொல்லக்கூடாதே என்று, நான் வெளியிலே எழுந்துபோனேன். உடனே இவர் "துரை, என்னவோ ஒருமாதிரியாகப் போகிறான்; அவனைப் பாருங்கள்" என்று சொன்னார். நம்முடைய ஸ்டாலின், பேராசிரியர் மற்றவர்கள் எல்லாம். வீராசாமி போன்றவர்கள் எல்லாம் பின்னாலே வந்தார்கள்.

*பிற்பகல் 1–40*

உடனே அப்பல்லோ மருத்துவமனைக்குப் போனோம். எனக்கு அடைப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். அடைப்பு இருக்கிறது

என்று சொன்னபோது, நான் அழுததைவிட, அவர் அழுதது அதிகம்; துன்பப்பட்டது அதிகம். தாங்கமாட்டானே அவன், செய்தியை அவனிடத்திலே சொல்ல வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், கடைசியாக நான் என்ன செய்யட்டும் என்று கேட்டேன். நான் சொன்னதையெல்லாம் செய்திருக்கிறாய், வென்றிருக்கிறாய், இந்த operation–ஐயும் செய்துகொள் என்று சொன்னார். நான் செய்துகொண்டேன். தலைவர் அவர்களே, இன்றைக்கு என் இதயத்திலேயோ, என் இதய நாளத்திலேயோ அடைப்பு இல்லை. அதை கிரிநாத் எடுத்துவிட்டார். ஆனால், வேறு ஓர் அடைப்பு என் இதயத்தை அடைத்துக்கொண்டிருக்கிறது. கலைஞருக்கு 'நன்றி' என்ற அடைப்பு என் இதயத்திலே என் இரத்த நாளத்திலே அடைத்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை எந்த கிரிநாத்தாலும் எடுக்க முடியாது.

என் தாய் தந்த உடலை அன்றைக்கு நோய் கொண்டு போகாமல் காத்தவர். மீண்டும் ஒரு நாள் நான் மறைகிற வரையில் இந்த மன்றத்திலே சத்தியமிட்டுச் சொல்லுகிறேன், அவருக்குத் துணை மட்டும் அல்ல, அவா நிழலுக்கும் நிழலாக இருந்து பாடுபடும் என்னுடைய பரம்பரை இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கிறேன். இது ஒரு முறை.

அவர் அருள்வாக்கு சித்தர் அல்ல. ஆனால், சொன்னால் நடக்கும். ஒரு முறை, பட்டாபிராமில் இருக்கும் கல்லூரிக்குப் போக வேண்டும். வண்டியிலே போகிறபோது சொன்னேன், உங்களை பட்டாபிராம் College–லே பேச விட்டுவிட்டு, நான் Rock Fort பிடிப்பேன் என்று சொன்னேன். ஏன், அப்படி என்று கேட்டார். நாளை காலை எனக்கு கொடைக்கானலில் கூட்டம் இருக்கிறது. கொடைக்கானல் கூட்டத்திற்கு Rock Fort-ல் போய் எப்படி போவாய் என்றார். திருச்சியிலே இறங்கி போவேன் என்று சொன்னேன் நான். எனக்கு பட்டாமிராம் கல்லூரியில் பேசத் தெரியும். நீ Rock Fort-ல் இறங்கி அலைந்து போகாதே, பாண்டியனில் போ என்று வழியிலே என்னை Railway Station–ல் இறக்கிவிட்டார்கள். நான் ஓடி வந்து Rock Fort-ல் இருக்கிற டிக்கெட்டை cancel செய்து, பாண்டியனில் ஏறி, நான் திண்டுக்கல்லில் இறங்கி கொடைக்கானல் போய் சேர்ந்தேன். 11-00 மணிக்கு கொடைக்கானலுக்கு செய்தி வருகிறது, நான் போகவிருந்த Rock Fort அரியலூரிலே விபத்துக்குள்ளாகி, நான் reserve செய்திருந்த compartment–ல் ஒருவர்கூட பிழைக்கவில்லை; நான் போய் இருந்தால், அன்றைக்கு அதிலேயே நான் போய் இருப்பேன். ஆக ஒரு முறை அல்ல, இரு முறை எனக்கு உயிர் கொடுத்தவர். அது அருள்வாக்கு அல்ல. இதோ உட்கார்ந்திருக்கிறாரே திரு. கோ.சி. மணி அண்ணன், என்னைத்தான் அவரை அழைத்துக்கொண்டுபோய் இலட்சுமிகாந்தன் அவர்களிடம் காண்பிக்கச் சொன்னார். இரண்டு நாளில் ஆப்பரேஷன்



செய்ய வேண்டுமென்று சொன்னார். இன்றைக்கு ஊருக்குப் போகிறேன் என்று சொன்னார், இல்லை இன்றைக்கே செய்துகொள் என்றார், அவர் பணித்திருக்கிறார், ஆக 'உயிர்க் காப்பான் தோழன்' என்பார்கள், இல்லை, இந்தத் தொண்டனுடைய உயிரையும் காக்கின்ற ஒரு மகத்தான தலைவர் அவர்களிடம் நான் பணியாற்றுகிறேன் என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைவிட நான் வந்தபிறகு கேள்விப்பட்டேன். எவ்வளவு பெரிய நிலைமை பட்ஜெட் தயாரிக்கிற நேரம். எங்கள் அண்ணியார் வீட்டிலே சொன்னார்கள், என்ன நீ hospital–லில் படுத்துக்கொண்டு, உங்கள் அண்ணனுக்கு பைத்தியம் பிடிக்க வைத்துவிட்டாய். இராத்திரி தூக்கத்திலே எழுந்துகொண்டு, 'துரை, வந்துவிட்டானா பார், துரை வந்துவிட்டான், துரைக்கும் ஒன்றும் ஆகாது, துரை வந்துவிட்டான்', தூக்கத்தில் எழுந்துகொண்டு என்னுடைய தலைவர் என் பெயரைச் சொல்லி, சொல்லி 'துரை வந்துவிட்டானா' என்று கேட்டார் என்று எங்கள் அண்ணி என்னிடத்திலே சொன்ன போது, நான் கலங்கிப் போனேன். அதிகாரிகள் மத்தியிலே உட்கார்ந்திருக்கிறாராம், 'துரைக்கு ஜுரம் வந்துவிட்டது operation முடிந்து; discussion–ஐ நிறுத்து, என்னால் தாளமுடியவில்லை' என்று சொல்லிவிட்டு பட்ஜெட் கூட்டத்தையே நிறுத்திவிட்டார். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1–45*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களை, அவரது இருக்கையில் அமர்ந்து கொண்டு பேசச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இல்லை. என் உணர்வு, மன்னிக்க வேண்டும், என் சக நண்பர்களே, கிட்டத்தட்ட 23 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த அவையிலே என்னை உட்கார வைத்தவர்; நான் நினைத்து நினைத்துப் பார்க்கிறேன். எனக்கு இறை நம்பிக்கை உண்டோ, இல்லையோ, ஆனால் ஒன்று. இதைவிட எப்படிப்பட்ட ஒரு தலைவர், எப்படிப்பட்ட பாசமுள்ள தலைவர்; எனக்கு இறப்பில், மறுபிறப்பில் நம்பிக்கையில்லை. இந்த மன்றத்தில் ஒன்று சொல்கிறேன். இன்னொரு பிறவி இருந்தாலும், என்றென்றும் அவருக்கு நான் தம்பியாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய பிரார்த்தனை.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களை, அவரது இருக்கையில் அமர்ந்துகொண்டு பேசச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன் :** என்னை மன்னிக்க வேண்டும். எனவே, இப்படிப்பட்ட ஒரு தலைவரிடத்தில், நான் பிறந்த பயனை அடைந்துவிட்டேன். ஆகவே, ஒன்றை நான் இதுகாறும் சொன்னதைப்போல், என் நெஞ்சு இருக்கிற வரையில், தலைவரே, நீங்கள் இருப்பீர்கள். உங்களுக்குப் பின்னால் இருக்கிறவரையில், என் பரம்பரை இருக்கிறவரையில், இந்த மன்றத்திலே சொல்கிறேன்; இதே உணர்வு இருக்கும். ஆனால், ஒன்றை நான் தெரிவிக்கிறேன், இந்த அவைக்கு. என்னைப்போல் யாருக்காவது இந்த நிலை வந்தால், கிஞ்சிற்றும் பயப்படாதீர்கள், இதைப்போல் சுலபமான ஒரு operation கிடையாது என்பதை மக்களுக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்து, என் தலைவருக்கு நான் நன்றி தெரிவித்து, என்னுடைய demand-லே சில விஷயங்களை...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களுடைய உடல் நலம் கருதி, அந்த அறிவிப்புகளை, அந்த demand-லே உள்ள அறிவிப்புகளைப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் புத்தக வடிவில் அறிவிப்புகளையெல்லாம் அச்சடித்து, மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கிறார். அந்த அறிவிப்புகளை @@ அவர் அறிவித்ததாக ஏற்றுக்கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப்பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், நீங்கள் உட்காருங்கள்; கொஞ்சம் நேரம் உட்காருங்கள். அவர் கொடுத்திருக்கிற அந்த அறிவிப்புகளைப் பதிவு செய்துகொள்ள வேண்டுகின்றேன். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 39-பொதுப் பணித் துறை-கட்டடங்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39, பொதுப் பணித் துறை-கட்டடங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

---

@@ 293 முதல் 303 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு.க. பெரியாசமி.

**திரு. மு.க. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. தண்டபாணி.



**திரு. மா. தண்டபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். தேன்மொழி.



**திருமதி எஸ். தேன்மொழி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். தேன்மொழி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** இலலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி இளமதி சுப்பிரமணியன்.

**திருமதி இளமதி சுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி இளமதி சுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ராஜகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ராணி வெங்கடேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பொதுப் பணித் துறை-கட்டடங்கள் பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 10,87,99,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.245,57,28,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை எண் 40 – பொதுப் பணித் துறை-பாசனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40— பொதுப் பணித் துறை-பாசனம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவசரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். தேன்மொழி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பறப்படுகிறது. திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. இராம்பிரபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் ரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் ரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ராஜகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. வேல்துரை

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சின்னசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். பிரேமா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. செல்வம், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம் :** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.

**டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் போவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ.



**திரு. ஓ.கே. சின்னராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ரா. வரதராஜன்.

**திரு. ரா. வரதராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. வரதராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பொதுப் பணித் துறை-பாசனம் பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.626,76,05,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.508,22,37,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2006) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2006)(@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

உறுப்பினர்கள் திரு. சி. சண்முகவேலு, திரு. சு.ப. வேலுமணி ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம். திரு. சி. சண்முகவேலு.

பிற்பகல் 1-50

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"The proposed amendment shall be omitted"

என்ற திருத்தத்தை மொழிகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழி மொழிகிறீர்களா? (குறுக்கீடுகள்) திரு. செ. ம. வேலுசாமி, வழிமொழியுங்கள். (குறுக்கீடுகள்) யாராவது ஒருவர் வழிமொழியுங்கள்.

**திரு. செ.ம. வேலுசாமி:** நான் அந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

---

@ 18-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2006). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2006)(@) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

---

(@) 22-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, திரு. கு.ப. வேலுமணி, திரு. ஆர். சின்னசாமி ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம். திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"The proposed amendment shall be omitted"

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

**திரு. டி. ஜெயக்குமார்:** அதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.





மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1–55

## (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2006) திருவாளர்கள் ஆர். ஞானதாஸ், சி. சண்முகவேலு மற்றும் கு.ப. வேலுமணி ஆகியோர் இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழியலாம்:

"14–7–2006ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2006) இப்பேரவை நிராகரிக்கின்றது"

***திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"11-7-2006ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2006) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2006)(@) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு.ப. வேலுமணி அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் (குறுக்கீடு) சொல்கிறேன். அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது. இத்தீர்மானத்தின்மீது பேச விரும்புவோர், மிகச் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த மன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்கத்தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி, என்னுடைய பேரூர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் நன்றியைக்கூறி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இந்தச் சிறப்புச் சிற்றூராட்சிகளை, பேரூராட்சிகளாக மாற்ற அரசு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறது. தமிழகத்திலுள்ள 561 சிறப்புச் சிற்றூராட்சிகளை, பேரூராட்சிகளாக மாற்றியிருப்பதன்மூலம்,

(@) 22-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றது.



கிராமப்புறங்களில் வாழும் மக்களின் அடிப்படை தேவைகளை புறக்கணித்து, கிராமப்புறங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளுக்கு மரண அடி கொடுத்திருக்கிறது இவ்வரசு. சிறப்புச் சிற்றூராட்சிகளை பேரூராட்சிகளாக, இப்போது மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. கிராம மக்களுக்கு நன்மை செய்யும் நிர்வாக ஏற்பாட்டை சீரழிக்க வேண்டிய தேவையுமில்லை.

திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த சிறப்புச் சிற்றூராட்சிகளை, பேரூராட்சிகளாக, தற்போது மாற்றவுள்ளதால், இவற்றிற்குக் கிடைக்கக்கூடிய மத்திய-மாநில அரசுகளின் சிறப்பு உதவிகள் இனி கிடைக்காது. மேலும், அடிப்படை கட்டமைப்புகளை ஏற்படுத்த, இனி கடன் வாங்க வேண்டிய கட்டாயம் இந்தப் பேரூராட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், மாநில அரசின் பல்வேறு திட்டங்களும், மத்திய அரசின் பல்வேறு திட்டங்களும், குறிப்பாக, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், தாழ்த்தப்பட்ட ஏழையெளிய மக்களின் கச்சா வீடுகள் திட்டம், P.M.G.S.Y. சாலை வசதி மேம்பாட்டு திட்டம், கடன் மற்றும் மானியத்துடன்கூடிய திட்டங்கள், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டங்கள், கிராம ஊராட்சியாக இருந்தால் இது கிடைக்கும். பேரூராட்சியாக மாற்றினால், மத்திய அரசின் திட்டங்கள் கிடைக்காது.

பேரூராட்சிகள் அதிக அளவில் இருக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். அதன் அடிப்படையில் ஊராட்சி தன்மையோடு விளங்குகின்ற உள்ளாட்சி அமைப்புகளாகிய பேரூராட்சிகளை சிறப்புச் சிற்றூராட்சிகள் என்றும், நகர்புற தன்மைகளைக் கொண்டு விளங்கும் பேரூராட்சிகளை, மூன்றாம் நிலை நகராட்சிகளாகவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு கொண்டு வந்தது.

இத்திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த நோக்கம், மத்திய அரசின் அனைத்துத் திட்டங்களும் சிறப்புச் சிற்றூராட்சிகளுக்கு கிடைக்கவேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடுதான் கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதனுடைய இந்தத் திட்டத்திலே தேர்தல் சின்னத்துடன் நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. சிறப்புச் சிற்றூராட்சியாக இருந்தால், யார் பொதுவானவர்கள், இந்தத தேர்தலிலே போட்டியிடலாம். ஓர் உள்நோக்கத்தோடுதான் இநத அரசு கொண்டுவந்திருக்கிறது.

இந்தத் திருத்தச் சட்டத்தின்மூலம், கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பிரிவுகளில் புதிதாக சேர்க்கவேண்டுமென்கின்ற வாசகங்களை, நீக்கவேண்டும். அந்த வாசகங்களைக் கைவிட்டு, ஏற்கெனவே உள்ள சட்டத்தில் மாற்றம் தேவையில்லை. இந்தத் திருத்தத்தை சேர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுமணி அவர்கள் சில கருத்துகளை இங்கே எடுத்துவைத்திருக்கிறார்கள். அதற்காக நான் ஒரு விளக்கத்தைச் சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.*

*கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே, திடீரென்று, அவசர அவசரமாக, பேரூராட்சிகளை எல்லாம் சிறப்புச் சிற்றூராட்சிகளாக மாற்றிட வேண்டுமென்று முடிவு செய்து, அதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள். இதிலே வேடிக்கை என்னவென்று கேட்டால், சிறப்புச் சிற்றூராட்சிகளாக மாற்றக்கூடிய நேரத்தில், அந்தப் பேரூராட்சி அமைப்புகளிடத்திலே கடந்த கால ஆட்சி ஒரு கருத்தைக் கேட்டிருக்கிறது. அந்தக் கருத்தைக் கேட்டபோது, பேரூராட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் 568 பேரூராட்சிகள், அந்த 568 பேரூராட்சிகளில், 385 பேரூராட்சி அமைப்புகள் நாங்கள் பேரூராட்சிகளாகத்தான் இருக்கப்போகிறோம் என்று விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், ஒரு சர்வாதிகாரத் தன்மையோடு, அதை ஒரு பக்கத்திலே ஒதுக்கிவைத்துவிட்டு, அவசர அவசரமாக சிறப்புச் சிற்றூராட்சிகளாக கடந்த கால ஆட்சி மாற்றி இருக்கிறது.*

*மத்திய அரசினுடைய நிதி வராமல் போகும் என்ற ஒரு கருத்தை திரு. வேலுமணி அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மை என்னவென்று கேட்டால், சிறப்புச் சிற்றூராட்சிகளாக மாற்றிய நேரத்தில் மத்திய அரசினுடைய நிதி அதற்கு வந்ததா என்று கேட்டால், கடந்த காலத்திலே வரவில்லை. உண்மை நிலை என்னவென்றால், ஏற்கெனவே சிற்றூராட்சிகளுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்த அந்த மத்திய அரசினுடைய நிதி, பகிர்ந்து தந்தார்களே தவிர, அதிகமான, கூடுதலான நிதி வழங்கப்படவில்லை என்பதுதான் உண்மை.*



*அதுமட்டுமல்ல, தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு, இதே ன்னத்திலே போட்டியிடக்கூடிய வகையிலே இதை மாற்றியிருக்கிறார்கள் ன்ற ஒரு கருத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். கடந்த கால ஷ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அப்பொழுதே புவர்கள் ஓர் அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள். சிறப்புச் ிற்றூராட்சிகளைப் பொறுத்தவரையில் என்ன அரசாணை வெளியிட்டிருக்கிறார்கள் என்று கேட்டால், "The elections to the casual acancies to the Office of the President and Members of the Special Village 'anchayats shall be conducted on political symbol basis" என்று நீங்களே வெளியிட்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஏதோ, நாங்கள் புதிதாக ஒரு திட்டம் போட்டு, இதை வெளியிட்டிருப்பதாகச் சொல்கிறீர்கள். இது உண்மையல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)*

*இப்பொழுதுகூட ஜனநாயக முறைப்படிதான், இப்போது பேரூராட்சிகளாக மாற்றியிருக்கிறோம். அதற்கும் ஓர் ஆதாரத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு கருத்துகளைக் கேட்டோம். சிற்றூராட்சி அமைப்புகளிடத்திலே ஜனநாயக முறைப்படி கருத்துகளைக் கேட்டது மட்டுமல்ல, உங்களுடைய உறுப்பினர்களின் கூட்டத்தையும் கூட்டி, அதிலே வாக்கெடுப்பு நடத்தி, அதன்மூலமாக தீர்மானத்தை நிறைவேற்றித் தாருங்கள் என்று கருத்துகளைக் கேட்டிருந்தோம். அந்த அடிப்படையிலே, 561 சிறப்புச் சிற்றூராட்சிகளில், 506 அமைப்புகள் நாங்கள் பேரூராட்சிகளாக மாறவேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) கருத்துகளைச் சொல்லி, அதிலே 44 அமைப்புகள் நடுநிலை வகித்திருக்கிறது. ஆக, அந்த அடிப்படையிலேதான், ஜனநாயக முறைப்படிதான், இந்த ஆட்சி நடைபெறும் என்பதற்கு இது ஒரு சான்று என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே எடுத்துக்காட்டி, அந்த வகையிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலுமணி, என்ன? உட்காருங்கள்.

"14-7-2006 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/2006) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் திரு. சு.ப. வேலுமணி அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். தீர்மானம் தோல்வியுற்றது.

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2006) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்' என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. செ.ம. வேலுசாமி, திரு. கே.பி. அன்பழகன் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"The proposed amendment shall be omitted"

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** அதை நான் வழிமொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.





பிரிவுகள் 2 முதல் 11 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 11 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்றும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

பிற்பகல் 2-05

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்றும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 31

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2006), திருவாளர்கள் பி.கே. சேகர்பாபு, ஆர். ஞானதாஸ், சி. சண்முகவேலு மற்றும் சு.ப. வேலுமணி ஆகியோர் இந்த அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். அவர்களில் ஒருவர் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழியலாம் :

"14-7-2006 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2006) இப்பேரவை நிராகரிக்கின்றது."

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"14-7-2006 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2006) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தை யாராவது வழிமொழிகிறீர்களா?

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை நான் வழிமொழிகின்றேன்.



2006 ஆகஸ்ட் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2006)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. இத்தீர்மானங்கள்மீது பேச விரும்புவோர் மிகச் சுருக்கமாக பேசவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவசர திருத்தச் சட்டத்தின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு எனக்கு வாய்ப்பளித்த எங்களுக்கு எல்லாமுமாகத் திகழும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவசர திருத்தச் சட்டத்தில் அக்டோபர் 24 ஆம் தேதிக்குள் தேர்தல் நடைபெற வேண்டுமென்பதால், 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிந்திருக்கின்ற நிலையிலேயும், தொகுதிகளையும், வட்டங்களையும் மாற்றியமைத்து தேர்தலை நடத்துவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்திருக்கின்றீர்கள். மக்கள் கணக்கெடுப்பு முடிந்திருக்கின்ற நிலையிலே, தொகுதிகளையும், வட்டங்களையும் மாற்றி தேர்தல் நடத்துவதற்குண்டான சாத்தியக்கூறு இல்லை என்று கூறுகின்ற நீங்கள், நேரடியாக மாநகராட்சி மன்ற மேயரையும், நகராட்சி, ஊராட்சித் தலைவர்களையும் தேர்ந்தெடுக்கின்ற சாத்தியக்கூறுகளுக்கு மாத்திரம் இவ்வளவு அவசரம், அவசரமாக இந்தச் சட்டத்தை ஏன் நீங்கள் கொண்டுவர நினைக்கிறீர்கள் என்பதைத்தான் நான் இந்த நேரத்தில் கேள்வியாக கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

---

@ 22-8-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேயர் ஒரு கட்சியைச் சார்ந்தவராகவும், உறுப்பினர்கள் பெரும்பான்மையானவர்கள் வேறு கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கின்ற நேரத்தில் மக்களுக்குத் தேவையான நன்மைகளையும், சபையையும் ஒழுங்காக நடத்த முடியாது என்று கோடிட்டுக் காட்டியிருக்கின்றீர்கள். மாநகராட்சியைப் பொறுத்த அளவில், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் இருக்கின்ற Committee-கள்தான் சென்னை மாநகராட்சியைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஏதாவது முடிவு எடுக்க வேண்டுமென்றால், அதை அரசுதான் முடிவெடுக்கின்ற ஒரு சூழ்நிலையில் இன்றைக்கும் மாநகராட்சி இருக்கின்றது. பாராளுமன்றத்திற்கோ, சட்டமன்றத்திற்கோதான் சட்டங்களை இயற்றுகின்ற உரிமை இருக்கின்றது. மாநகராட்சியைப் பொறுத்த அளவில் சட்டங்களை இயற்றுகின்ற உரிமை இல்லை. ஆகவே, நீங்கள் சட்டங்களை இயற்றுகின்ற உரிமை இல்லாத மாநகராட்சிக்கு ஏன் மாநகராட்சி உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கின்ற ஒரு சூழ்நிலையை அறிவித்திருக்கின்றீர்கள் என்பதைதான் இன்றைக்கு நான் உங்கள் முன்னால் வைக்கின்ற மற்றொரு கேள்வி.

பிற்பகல் 2-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் நேரடியாக மேயரைத் தேர்ந்தெடுக்கின்றபோது, மேயருக்கும், மக்களுக்கும் இருக்கின்ற தொடர்பு முழுவதுமாக அற்றுப்போகின்றது. ஏனென்றால், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களால்தான் மேயர் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றால், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களைத் திருப்திபடுத்துகின்ற வேலையில்தான் மாநகராட்சியினுடைய மேயருக்கு முழு காலமும் செலவிடப்படுகின்றது. ஆகவே, மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படாத மேயர் என்பதால், மக்களும் தங்களுடைய கோரிக்கைகளை அவரிடத்தில் சொல்கின்ற வாய்ப்பும் மறுக்கப்படுகிறது. மேயரும், அந்த மக்களுக்குச் செய்ய வேண்டிய பணியிலிருந்து தவிர்க்கப்படுகிறார் என்பதுதான் என்னுடைய மூன்றாவது கேள்வி.

நான்காவதாக, நான் உங்களிடையே எடுத்து வைக்கின்ற கேள்வி, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இதே மாமன்றத்தில் அன்றைக்கு வி.கே. ராமசாமி முதலியார் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, சி. சுப்ரமணியம் அவர்கள் இந்த மன்றத்தினுடைய நிதி அமைச்சராக இருந்தபோது, இதேபோன்று ஒரு சட்டத் திருத்தம் இந்தச் சட்டமன்றத்திலே கொண்டுவரப்படுகின்றது. அப்போது பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்—ஏனென்றால், அண்ணாவின் ஆட்சி என்று





கூறுகின்ற நீங்கள், இதை வாசிப்பதற்கு ஒரு நிமிடம் எனக்கு அனுமதி தர வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே ஆற்றிய உரை அன்றைக்கு—"கிராமத்து மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்று நாம் ஆராய்ந்து பார்க்கின்ற நேரத்தில், தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள வேண்டுமென்று அவர்கள் வேண்டிக் கொண்டிருக்கின்றார்கள், அதற்கான நிர்வாக அமைப்பு வகுக்கப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இங்கே பேசிய வி.கே. ராமசாமி முதலியார் அவர்கள்"—அதன்பிறகு, அண்ணா அவர்கள் குறிப்பிடுகிறார், "ஐயோ, தேர்ந்தெடுக்கப்படுகின்ற மக்கள் தலைவரைத் தாங்கள் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக அங்கத்தினர்கள் இருந்து, அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்லிவிட்டார்களே, ஏனென்று கேட்டால், தலைவர், அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதை நீங்கள் விரும்பவில்லையா என்று நாங்கள் கேட்பதற்கு, ஆம் என்று சொன்னால், ஏன் நீங்கள் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதை விரும்பவில்லை என்பதற்கு, ஐயோ, இதனால்தான் 6 நபர்கள் இந்த ஊரிலிருந்து பழநிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்களோ, 8 பேர்கள் இந்த ஊரிலிருந்து காஞ்சிபுரத்திற்கு அதனால் அழைத்துச் செல்லப்பட்டார்களோ, புதுச்சேரிக்கு 6 பேர்கள் கடத்தப்பட்டார்களோ, தேர்தலுக்குப் பிறகு இதில் திரும்பியவர்கள் 4 பேர்கள்தான். இப்படி ஆளைத் தூக்கிக் கொண்டு போவதற்காக இப்படிச் செய்து விட்டார்களோ என்று மக்கள் கேட்டால், நாங்கள் என்ன பதில சொல்வது" என்று அன்றைக்கு பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இதே மாமன்றத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

மேலும், அண்ணா அவர்கள் ஒரு கருத்தைக் கூறுகின்றார், 'பஞ்சாயத்து அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறையில் இப்படிப்பட்ட சீர்கேடுகள் வளர்கின்றன என்பதை இந்த மாமன்றத்திலே நாங்கள் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றோம்.' சொல்லிவிட்டுச் சொல்கிறார், 'கிராம மக்களே எங்களைப் பார்த்து இந்தப் புதிய மசோதாவால் எங்களுக்கு என்ன கிடைக்கிறது என்று கேட்கிறபோது, நேற்றையதினம் வரை உங்களுக்கு இல்லாதிருந்த அதிகாரங்கள் இன்று முதல் உங்களுக்குக் கிடைக்கும் என்றா நாங்கள் சொல்ல முடியும்? உங்களுடைய அந்தஸ்து இப்போது உயர்ந்திருக்கிறது என்றா நாங்கள் இப்போது அவர்களிடம் சொல்ல முடியும்? எங்களுக்கு வாய்ப்பு அளிக்காத இந்த மசோதாவை நீங்கள் ஏன் எதிர்க்கவில்லை என்றுதான் எங்களை மக்கள் கேட்பார்கள்' என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அன்றைக்குக் கூறியிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் கேட்க விரும்புவது, பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் ஆட்சி என்று கூறுகிறீர்கள், அண்ணாவின் தம்பிகள் என்று கூறுகிறீர்கள், இதே மாமன்றத்தில் அன்றைய காங்கிரஸ் பேரியக்கத்தால் கொண்டுவரப்பட்ட மசோதாவை எதிர்த்து அன்றைக்குப் பேசியிருக்கின்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா அல்லது அவருடைய கொள்கைகளை மறுக்கின்றீர்களா என்பதுதான் உங்கள் முன்னால் நான் வைக்கின்ற கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக... (குறுக்கீடு) உரையை முடித்து விடுகிறேன். சென்னை மாநகரத்தைப் பொறுத்தளவில், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 9 தொகுதிகளில் போட்டியிடுகிறது. 7 சட்டமன்றத் தொகுதிகளை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனைகளுக்காக சென்னை மாநகர மக்கள் வழங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகம் 11 தொகுதிகளில் போட்டியிடுகிறது, 7 தொகுதிகளைத்தான் கைப்பற்றுகிறது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால்...(குறுக்கீடு) உரையை முடித்து விடுகிறேன், உரையை முடித்து விடுகிறேன். (குறுக்கீடு) Bill–தான், Bill–தான், (குறுக்கீடு) Bill–தான், Bill–தான். நேராக Bill–தான். அண்ணா திராவிட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் திருத்தத்தின்மீது பேசுங்கள். (குறுக்கீடு) அரசியல் பேச வேண்டாம். திருத்தத்திற்குள்ளே பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** திருத்தம்தான், சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 இலட்சத்து, 93 ஆயிரத்து, 271 வாக்குகள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு. 9 இலட்சத்து 79 ஆயிரத்து 8 வாக்குகள் தி.மு.க.–விற்கு.

*பிற்பகல் 2–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, தேர்தல் எல்லாம் முடிந்து போயிற்று. நீங்கள் திருத்தத்திற்குள்ளே பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில், சென்னையைப் பொறுத்தவரையில், மாநகராட்சி மன்றத் தேர்தலில் நேரடியாக மேயரை மக்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற சூழ்நிலை வந்தால், நிச்சயமாக கோட்டையைப் பிடித்திருக்கிற உங்களுக்கு, சென்னை மாநகராட்சியிலே ஓட்டை விழும் என்பதற்காகத்தான், இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதைப் பதிவு செய்து, இது ஜனநாயகத்திற்கு...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, உட்காருங்கள். நீங்கள் பேசி ஆயிற்று இல்லையா? அதாவது நீங்கள் எதைச் சொல்ல வேண்டுமோ, அதை மாத்திரம் சொல்லுங்கள். உங்களுக்குப் பாராட்டு கிடைக்க வேண்டுமென்பதற்காக இதையெல்லாம் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அண்ணாவின் தம்பிகளாகிய நீங்கள் இந்தச் சட்டத் திருத்தத்தை ஆதரிப்பது என்பது, நீங்கள் அண்ணாவின் தம்பிகள் அல்ல, நடைபெறுவது அண்ணாவின் ஆட்சி அல்ல என்ற என் கருத்தைப் பதிவு செய்து, இந்தச் சட்டத் திருத்தத்தை நிராகரிக்க வேண்டுமென்று எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்கள் வலியுறுத்தி அமர்கின்றோம். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் பல கருத்துகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயரையே வீட்டுக்கு அனுப்ப சட்டம் போட்டவர்கள் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆறு ஆண்டுக் காலமாக மாநகராட்சி மேயர் தேர்தல் இதுவரையிலே சென்னை மாநகராட்சியிலே நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவைப் பற்றி இங்கே பல உதாரணங்களையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி, நீங்கள் சொன்னதிலே. காரணம், அண்ணா அவர்கள் இருந்த காலம் வரையிலே அது மறைமுகத் தேர்தலாகத்தான். மாநகராட்சியினுடைய மேயராக இருந்தாலும், நகராட்சித் தலைவர்களாக இருந்தாலும் நடைபெற்றிருக்கிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அதிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி, மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தித் தந்தது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற நேரத்திலே, அந்தச் செயல்பாடு அமலுக்கு வந்ததற்குப் பிறகு, குறிப்பாக சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையிலே பல நல்ல காரியங்களெல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பது உண்மை. அனைவருக்கும் நன்றாகத்

தெரியும். ஆனால், கடந்தகால ஆட்சியில் அந்த மாநகராட்சி மன்றமும், நகராட்சியும், பேரூராட்சியும் எப்படியெல்லாம் செயல்பட்டு வந்தன என்பதும் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். குறிப்பாக நான் இங்கே சொல்ல வேண்டுமென்று சொன்னால், இன்றைக்குப் பல்வேறு மாநிலங்களில் மறைமுகத் தேர்தல்தான் அந்த மேயரைப் பொறுத்தவரை, அதேபோல நகராட்சி, பேரூராட்சி தேர்தலைப் பொறுத்தவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அஸ்ஸாம், குஜராத், ஹரியானா, ஹிமாசலப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, ஒரிஸ்ஸா, இராஜஸ்தான், மேற்கு வங்காளம், டெல்லி, பீகார், பஞ்சாப், மகாராஷ்டிரா போன்ற பல்வேறு மாநிலங்களில் அந்த முறைதான் கடைப்பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அதுமட்டுமல்ல, நான் இங்கே இன்னொன்றையும் குறிப்பிட்டுக் காட்ட விரும்புவது. மேயர் ஒரு கட்சியைச் சார்ந்தவராகவும், அதேபோல பெரும்பான்மையாக வரக்கூடிய உறுப்பினர்கள் வேறு கட்சியைச் சார்ந்தவர்களாகவும் வந்துவிடுகின்ற காரணத்தால், மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை அவையிலே வைத்து, மன்றக் கூட்டத்திலே வைத்து அதை நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலைக்கு அது தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் மக்களுடைய பிரச்சினைகள் தேக்கம் அடையக்கூடிய நிலையிலே இருக்கின்ற காரணம் ஒரு பக்கம். உதாரணத்திற்கு, நான் பலவற்றைக் குறிப்பிட்டுக் காட்ட முடியும். நேரம் கடந்துகொண்டிருக்கிறது. நான் உங்களுடைய பொறுமையை சோதிக்க விரும்பவில்லை. இருந்தாலும், விழுப்புரம் நகராட்சி, அதேபோல விருத்தாசலம் நகரமன்றம். இந்த நகராட்சிகளைப் பொறுத்தவரையில் நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், அது 2001 தேர்தல் நடந்ததற்குப் பிறகு, இதுவரையில் அந்த இரண்டு நகராட்சிகளிலும் முறையாக கூட்டங்களும் நடைபெறவில்லை. அப்படியே நடைபெற்றாலும் அங்கு மக்களுடைய பிரச்சினைகளை முன்வைத்து நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானங்களும் அங்கே முழுமையாக நிறைவேற்றப்பட முடியாத ஒரு நிலை. இதுபோன்று பல இடங்களில் இருக்கிறது. ஆக, விருத்தாசலத்தைப் பொறுத்தவரை நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இதுவரை ஒரு முறைகூட அங்கே எந்தத் தீர்மானமும் முறையாக எளிதாக நிறைவேற்றப்பட முடியாத ஒரு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. ஆக இந்த நிலைகளையெல்லாம் கருத்திலேகொண்டுதான், இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, அந்த நிலையை இன்றைக்கு மாற்றி, இந்த முறையை இன்றைக்கு அமல்படுத்தி இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட இந்தத் தீர்மானத்தை நீங்கள் எல்லாம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** "11-7-2006 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/2006) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்னும் பி.கே. சேகர்பாபு அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். தீர்மானம் தோல்வியுற்றது.

'2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2006) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்' என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

இப்போது திரு. செம. வேலுசாமி, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம். திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"The proposed amendment shall be omitted."

என்னும் திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் வழிமொழியப் போகிறீர்கள்?

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.

### பிரிவு 2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2, திரு. மு. பரஞ்ஜோதி, திரு. சி.வி. சண்முகம் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

***திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In clause 2, sub clause (1), (i) shall be omitted"

என்னும் திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவுகள் 3 மற்றும் 4 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 3 மற்றும் 4 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

### பிரிவு 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. சின்னப்பன், தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. பொ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"Clause 5 shall be omitted."

என்னும் திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் வழிமொழிகிறீர்கள்?

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. சின்னப்பன் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 5. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 5. சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 6. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 6. சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## பிரிவு 7

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 7, திரு. மு. பரஞ்ஜோதி, திரு. சி.வி. சண்முகம் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In Clause 7, Sub-clause (1) (i) shall be omitted."

என்னும் திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிகிறீர்களா?

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 7. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 7. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 7. சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

## பிரிவு 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 8, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In the said Bill, in Clause 8, in Sub-clause (1), for the word "herefore" substitute the word "wilfully".

என்ற திருத்தத்தை மொழிகிறேன்.

பிற்பகல் 2-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 8, திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவுகள் 9 மற்றும் 10**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவுகள் 9 மற்றும் 10 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 9 மற்றும் 10 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு 11**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 11, திரு. மு. பரஞ்ஜோதி, திரு. சி.வி. சண்முகம் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம். திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"In Clause 11, Sub-clause (1) (i) shall be omitted."

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி. நீங்கள் அதை வழிமொழிகிறீர்களா? Right.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி அவர்கள் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம். திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 11, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 11, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவுகள் 12 முதல் 37 வரை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவுகள் 12 முதல் 37 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 12 முதல் 37 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிறகு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2006) திருத்தப்பெற்றவாறு நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றவாறு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-9-2006) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

111. மானியக் கோரிக்கை எண்கள் 39 மற்றும் 40–பொதுப் பணித் துறை–கட்டடங்கள் மற்றும் பாசனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

112. பன்னிரண்டாவது நிதிக் குழுவிற்கு தமிழ்நாடு அரசு அளித்த விழுமியக் குறிப்பின் சுருக்கமும், பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் சுருக்கமும். (2006) (தமிழ், ஆங்கிலம்)



## இணைப்பு I

(96ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 39–பொதுப் பணித் துறை–கட்டடங்கள்

## மற்றும்

## மானியக் கோரிக்கை எண் 40–பொதுப் பணித் துறை–பாசனம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

"நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு"

திருக்குறள்

### முகவுரை

முதலாவது பொதுப் பணிக் குழுவின் பரிந்துரையின்படி, 1858 ஆம் ஆண்டு மெட்ராஸ் பொதுப் பணித் துறை ஒரு தலைமைப் பொறியாளரைக் கொண்டு உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டில் இத்துறை ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டு பழமை வாய்ந்ததாகும்.

பொதுப் பணித் துறை, கடந்த காலங்களில் பலமுறை சீரமைக்கப்பட்டது. மார்ச் 1994 ஆம் ஆண்டு, அரசு எடுத்த முடிவின்படி பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு மற்றும் கட்டட அமைப்பு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பணிகளை செய்து முடிப்பதில் தனித் தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, பணியாளர்களை ஒரே வகையாகக் கொண்டு இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது.

### நீர்வள ஆதார அமைப்பு

தண்ணீர் ஓர் இயற்கையான முதன்மை ஆதாரம் ஆகும். மக்களின் அடிப்படைத் தேவையும் ஆகும். எனவே, நீரானது விலை மதிப்பற்ற

[2006 ஆகஸ்ட் 31

தேசிய சொத்தாகும். மக்கள் தொகை அதிகரித்தல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் முன்னேற்றம் ஆகியவற்றால் நிலப்பரப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே, விலை மதிப்பற்ற இயற்கை வளமாகக் கருதப்படும் தண்ணீரை முறையாக உபயோகப்படுத்துவதன்மூலம் உணவு உற்பத்தி மற்றும் மின் உற்பத்தியில் தன்னிறைவை அடைய வேண்டுமென்பது நமது குறிக்கோளாகும்.

வடிநிலம் என்ற கோட்பாட்டை மையமாகக் கொண்டு நீர் சம்பந்தமான அனைத்து நடவடிக்கைகளுக்கும், அதாவது நீர் இருப்புத் தன்மையை மதிப்பீடு செய்தல், பல்வேறு உபயோகங்களுக்கான தண்ணீர் தேவையை மதிப்பீடு செய்தல், பல்வேறு இடங்களில் நீர் இருப்பினை கண்டறிதல் மற்றும் பிற்காலத்திற்குத் தேவைப்படுகின்ற தண்ணீர் விவரம் கண்டறிந்து மேலாண்மை வாயிலாக உகந்த அளவில் தண்ணீரைப் பயன்படுத்தத் திட்டமிடுதல் போன்றவற்றை ஒரு வடிநிலப் பரப்பு அல்லது உபவடிநிலப் பரப்பின் வாயிலாகக் கண்டறிய நீர்வள ஆதார அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தற்பொழுது, நீர்வள ஆதார அமைப்பு ஒரு முதன்மைத் தலைமைப் பொறியாளரையும் நான்கு நடைமுறை சார்ந்த தலைமைப் பொறியாளர்கள் மற்றும் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள ஆற்று வடிநிலங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் நான்கு மண்டலத் தலைமைப் பொறியாளர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. இது தவிர, திருச்சிராப்பள்ளியில் ஒரு தலைமைப் பொறியாளர் தலைமையில் பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது. இவ்வமைப்பில் 31 கண்காணிப்புப் பொறியாளர்களும் 117 செயற் பொறியாளர்களும் உள்ளனர்.


## கட்டட அமைப்பு

பொதுமக்களின் பயன்பாட்டிற்கான கட்டடங்களைக் கட்டுதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல் ஆகிய பணிகளை பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு மேற்கொள்கிறது. இவ்வமைப்பில், தற்பொழுது ஒரு தலைமைப் பொறியாளர், 16 கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் 51 செயற் பொறியாளர்கள் உள்ளனர். பொதுவாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை ஒரு கோட்டம் மேற்கொள்கிறது. கட்டடங்களைக் கட்டும் பணிகளுக்காக மட்டுமே கோட்டங்கள் இயங்கி வருகின்றன. மேலும், 7 மின் கோட்டங்களும், ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புக்காக இரண்டு கோட்டங்களும் உள்ளன. கட்டட அமைப்பு, ஆண்டுக்கு ரூ.650 முதல் ரூ.700 கோடி மதிப்பிற்கான பணிகளைச் செய்து வருகிறது. (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உள்பட).




2006 ஆகஸ்ட் 31]

கட்டட அமைப்பு
வட்டங்கள் வாரியாக திட்ட ஒதுக்கீடு
2006-2007



[2006 ஆகஸ்ட் 31






2006 ஆகஸ்ட் 31]

## கட்டடம்

நீர்வள ஆதார மேலாண்மையில் தனிக் கவனம் செலுத்துவதற்கு வசதியாக 1995 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் "நீர்வள ஆதார அமைப்பு" தனியே உருவாக்கப்பட்டபின் பொதுப் பணித் துறையின் கட்டடப் பிரிவு, "கட்டட அமைப்பு" என்ற பெயரில் தனி அமைப்பாக செயல்படத் தொடங்கியது. தற்போது, இக்கட்டட அமைப்பில், கட்டடப் பணிகளுக்காக ஒரு தலைமைப் பொறியாளர் தலைமையின்கீழ் 12 வட்டங்களும், 43 கோட்டங்களும் செயல்படுகின்றன மற்றும் மின் பணிகளுக்காக, 3 வட்டங்களும், 7 கோட்டங்களும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின்கீழ் செயல்படுகின்றன.

### 1. கட்டட அமைப்பின் செயல்பாடுகள்

**1.1.** அரசின் கட்டுமான நடவடிக்கைகளை இந்த அமைப்பு செயல்படுத்துகிறது. மாநிலத்தின் பல்வேறு துறைகளுக்கான பொதுக் கட்டடங்களை திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் கட்டுதல் போன்ற செயல்களை இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது.

மேலும், மாநில மற்றும் மத்திய அரசுகளின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்கள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் போன்றவை தங்கள் கட்டடங்களுக்காக இவ்வமைப்பின் சிறந்த அனுபவத்தை பயன்படுத்துகின்றன.

அரசு அலுவலகக் கட்டடங்கள், நினைவகங்கள், நினைவுத் தூண்கள் ஆகிய அரசு சொத்துக்களைப் பராமரிக்கும் பணிகளை இவ்வமைப்பு செயற்படுத்தி வருகின்றது.

ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், சென்னை மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள ஆளுநர் மாளிகைகள், தலைமைச் செயலகம், அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதிகள் மற்றும் குடியிருப்புகள், நீதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் மிக மிக முக்கிய நபர்களுக்கான மாளிகைகள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பணியினை இவ்வமைப்பு செய்து வருகின்றது.

இவை தவிர, நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளும், ஊழல் தடுப்புத் துறை மற்றும் நீதித் துறை ஆகியவற்றால் அனுப்பப்படும் சொத்து மதிப்பீட்டுப் பணிகளும் இவ்வமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திரையரங்குகளுக்கு தர உறுதிச் சான்றிதழ்களும், அரசு அலுவலகங்களுக்கு

[2006 ஆகஸ்ட் 31

எடுக்கப்படும் தனியார் கட்டடங்களுக்கு வாடகை நிர்ணயச் சான்றிதழ்களும் இவ்வமைப்பினால் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வமைப்பு, முக்கியமானவர்கள் வருகையின்போது செய்யப்பட வேண்டிய சாலை ஓரத் தடுப்பு, மேடை அமைப்பு, ஒளி மற்றும் ஒலியமைப்புகளையும் செய்து வருகின்றது.

## 1.2 கட்டட ஆராய்ச்சி மையம்

நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கும், கட்டுமான நடவடிக்கைகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறியும் நோக்கத்துடன், சென்னை தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி மையம் செயல்படுகிறது.

மேற்படி மையத்தின் சேவைகள் பின்வருமாறு:

- கட்டுமான கைவினைஞர்களுக்கு பொதுப் பணித் துறை கட்டட மையம்மூலம் பயிற்சி வழங்குதல்.
- பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளுக்கு கோரிக்கை அடிப்படையில் ஆலோசனைகளைத் தருதல்.
- கட்டுமானப் பொருள்கள் தரப் பரிசோதனை செய்தல் மற்றும் அடிப்படை ஆய்வுப் பணிகளை தேவைப்படும் நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- பழுதடைந்த கட்டடங்களுக்குத் தேவையான புனரமைப்பு பரிந்துரைகளை வழங்குதல்.
- கட்டடக் கட்டுமானப் பணிகளில் நிலக்கரி/பழுப்பு நிலக்கரிச் சாம்பலைப் பயன்படுத்துதல்.

அனல் மின் நிலையங்களிலிருந்து வெளியேற்றப்படும் நிலக்கரி/பழுப்பு நிலக்கரிச் சாம்பலால் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தவிர்க்கும்பொருட்டு, இந்திய அரசின் ஆணையின் அடிப்படையில், நிலக்கரி/பழுப்பு நிலக்கரிச் சாம்பல் கலந்து தயாரிக்கப்பட்ட செங்கற்கள் மற்றும் சாம்பல் ஆகியவை தாழ்வான பகுதிகளிலும், கரை அமைப்புகளிலும் இயன்றவரையில் பயன்படுத்தப்படுகின்றன. நிலக்கரிச் சாம்பல் கலந்து தயாரிக்கப்பட்ட செங்கற்கள் மற்றும் சாம்பல் முதலியவற்றை அதிகபட்சம் பயன்படுத்த களப் பணியாளர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக மேற்படி பொருள்களுக்கான விலைகள்



2006 ஆகஸ்ட் 31]

ஒவ்வோர் ஆண்டிலும் இத்துறையின் விலைவிகிதப் பட்டியலில் சேர்க்கப்படுகின்றன.

### 1.2.1. கற்காரைப் பணிகளில் மணலுக்கு மாற்றாக கல் துகளைப் பயன்படுத்துதல்

முக்கிய கட்டுமானப் பொருளான மணல் மிகுதியாக பயன்படுத்தப்படுவதால் மிகவும் அரியதொரு பொருளாக மாறிவிட்டது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மணலுக்கு மாற்றாக ஒரு பொருள் இனம் காணப்பட வேண்டியுள்ளது. இதற்காக கட்டட ஆராய்ச்சி மையம் தேவையான நடவடிக்கை எடுத்து மணலுக்கு உரிய மாற்றாக கல்குவாரியிலிருந்து கிடைக்கும் கல் துகளைப் பயன்படுத்தலாம் என்று கண்டறிந்துள்ளது. இதறகாக செய்யப்பட்ட ஆராய்ச்சி மூலம் கட்டட கட்டுமானத்தின் கற்காரைப் பணிகளில் 30 சதவீத அளவு மணலுக்கு பதிலாக கல் துகளைப் பயன்படுத்தலாம் என்று தெரிய வருகிறது.

## 1.3 புதிய பணிகள்

2006-2007 ஆம் நிதி ஆண்டில் ரூ.790.08 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படவுள்ள கட்டடப் பணிகள் கீழ்வருமாறு:

- பொதுப் பணித் துறை கட்டடப் பணிகள் திட்டம் சார்ந்த பணிகள் தலைப்பின்கீழ் ரூ.222.97 கோடி மற்றும் திட்டம் சாராத பணிகள் தலைப்பின்கீழ் ரூ.19.94 கோடி.
- பிற துறைகளைச் சார்ந்த பணிகளை செலுத்துதல் தலைப்பின்கீழ் ரூ.312.76 கோடி.
- பொதுப் பணித் துறை மற்றும் பிற துறைகளுக்கான கட்டட பராமரிப்புப் பணிகள் ரூ.216.47 கோடி.
- இதர பணிகளை வைப்புத் தொகை கணக்குத் தலைப்பின்கீழ் ரூ.17.94 கோடி மதிப்பில் செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 1.4 கட்டடக் கலைப் பணிகள்

இவ்வமைப்பில், சிறந்த கட்டடக் கலையுடன் கூடிய கட்டடங்களை உருவாக்குவதற்காக தலைமைப் பொறியாளர் நிலையிலான தலைமை கட்டடக் கலைஞரின் தலைமையில், கட்டட வரைகலைப் பிரிவு தனியாக இயங்கி வருகின்றது. அனுபவம் வாய்ந்த கட்டடக் கலைஞர்களால் எழிலார்ந்த மற்றும் அறிவியல்பூர்வமான தோற்றங்களையும் உள் அமைப்புகளையும் கொண்ட கட்டடங்கள் உருவாக்கப்படுகின்றன.

[2006 ஆகஸ்ட் 31

மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், பள்ளிக்கூடங்களுக்கான வகுப்பறைகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கான மாதிரி வரைபடங்களை இப்பிரிவு தயாரிக்கின்றது.

## 1.5. துறைவாரியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகள்

### 1.5.1. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம்

#### அ. மருத்துவக் கல்லூரிகள்

2005–2006 ஆம் ஆண்டில், தஞ்சாவூரில், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கான 8 கட்டடங்கள் கட்டுவதற்காக அரசு ரூ.22.75 கோடி ஒப்பளிப்பு வழங்கியதில், 4 பணிகள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 4 பணிகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

2004–2005 ஆம் ஆண்டில், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஏற்கெனவே அமைந்துள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு பல்வேறு கட்டடங்கள் கட்டுவதற்கும் தேனி, வேலூர் மற்றும் ஆசாரிப்பள்ளம் ஆகிய இடங்களில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கும் அரசு ரூ.184.51 கோடி நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மொத்தமுள்ள 174 பணிகளில், தூத்துக்குடியில் 12 பணிகளும், திருநெல்வேலியில் 15 பணிகளும், தேனியில் 29 பணிகளும், வேலூரில் 32 பணிகளும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் 21 பணிகளும் (மொத்தம் 109 பணிகள்) முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

#### ஆ. தமிழ்நாடு நலவாழ்வு திட்டம்

2005–2006 ஆம் ஆண்டில் தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைந்துள்ள 35 அரசு மருத்துவமனைகளுக்கு கூடுதல், விரிவாக்கம், பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் செய்வதற்கு ரூ.45.82 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. தேனி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள பணிகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.



2006 ஆகஸ்ட் 31]

### 1.5.2. உள் துறை

#### அ. நீதி

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதற்காக ரூபாய் 4.97 கோடி மதிப்பில் கட்டடங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கொடைக்கானலில் மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்டுவதற்கு கட்டம்–I–ல் ரூ.2.50 கோடி அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ரூ.3.61 கோடி நில மதிப்பு வழங்கியுள்ளது. இப்பணிகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

தேனி மாவட்டம், தேனியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களுக்கான துணைக் கட்டடங்கள் கட்டுவதற்கும், நீதித் துறை அலுவலர்கள் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கும், வண்டிகள் நிறுத்துமிடம், பொது மக்களுக்கான கழிப்பறை, மிதிவண்டி மற்றும் இருசக்கர மோட்டார் வாகனம் நிறுத்துமிடம், புல்வெளித் தோட்டம் முதலியன அமைப்பதற்கும் அரசு ரூ.3.57 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

#### ஆ. சிறை

இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் புதிய சிறைக் கட்டடங்கள் கட்டவும், திருச்சியில் பெண்களுக்கான புதிய சிறைக் கட்டடங்கள் கட்டவும் 116 துணை சிறைக் கட்டடங்களில் சமையல் அறை நவீனப்படுத்தவும், 13 துணை சிறை மற்றும் மத்திய சிறைக் கட்டடம் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பிக்கவும், திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள மத்திய சிறைச்சாலைகளில் சுகாதாரம், குடிநீர் வசதிப் பணிகள் மற்றும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்யவும் அரசு ரூ.17.82 கோடி ஒருமித்த தொகையாக 262 பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மொத்தமுள்ள 262 பணிகளில் 250 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 7 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 5 பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 1.5.3. வருவாய்

பதினோறாவது நிதிக்குழுவின் நிதி உதவியுடன் எடுத்துக் கொள்ளப்பட்ட பெரும்பாலான பணிகள் முடிவுற்றன. ஒரு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

[2006 ஆகஸ்ட் 31

கிருஷ்ணகிரி பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு அரசால் ரூ.10.00 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சத்தியமங்கலம், எடப்பாடி, மன்னார்குடி மற்றும் எட்டயபுரம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் ரூ.1.15 கோடி செலவில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

திருநெல்வேலியில் புதியதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு ரூ.6.00 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 1.5.4. கல்வி

தற்போது உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள வசதிகளை பெருக்கி மாநிலத்தில் தரமான கல்வி வளர்வதற்கு உதவியாக நல்ல சூழ்நிலையை பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

மூன்றாம் கட்டமாக கடலூர், வேலூர், திருவள்ளூர், தருமபுரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் ஆகிய 7 வட மாவட்டங்களில் உள்ள 259 பள்ளிகளுக்கு மொத்தத் தொகை ரூ.83.71 கோடி மதிப்பில் நபார்டு நிதி உதவியுடன் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 240 இடங்களில் பணிகள் முடிந்துள்ளன. 17 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன மற்றும் 2 இடங்களில் பணிகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

2005–2006 ஆம் ஆண்டில் நான்காம் கட்டமாக 27 மாவட்டங்களில் உள்ள 351 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி செய்வதற்கு நபார்டு நிதி உதவியுடன் ரூ.130.11 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 193 இடங்களில் பணிகள் முடிந்துள்ளன. 136 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

2005–2006 ஆம் ஆண்டில் ஐந்தாம் கட்டமாக, 17 மாவட்டங்களில் உள்ள 198 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி செய்வதற்கு நபார்டு நிதி உதவியுடன் ரூ.102.03 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 71 இடங்களில் பணிகள் முடிந்துள்ளன. 116 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.



2006 ஆகஸ்ட் 31]

2006–2007 ஆம் ஆண்டில் ஆறாம் கட்டமாக, 13 மாவட்டங்களில் உள்ள 234 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி செய்வதற்கு ரூ.161.32 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளது.

### 1.5.5. வேளாண்மை

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் வேளாண் விளைபொருள் பேரங்காடி கட்டுவதற்கு ரூ.3.08 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 1.5.6. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி

திண்டுக்கல் அரசு மகளிர் தொழிற் பயிற்சி நிலையக் கட்டடம் ரூ.61 இலட்சம் மதிப்பில் கட்டும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பணி முன்னேற்றத்தில் உள்ளது.

### 1.5.7. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி அலுவலகங்கள்

தொகுதி ஒன்றுக்கு ரூ.4.85 இலட்சம் செலவில், 231 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவர்களது தொகுதிகளில் அலுவலகக் கட்டடங்கள் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் 226 தொகுதிகளுக்கான கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுவிட்டன. தியாகராயநகர், மைலாப்பூர், அண்ணாநகர் மற்றும் இராயபுரம் ஆகிய நான்கு இடங்களுக்கு நிலவாடகைக்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது மற்றும் துறைமுகம், புரசைவாக்கம், திருவல்லிக்கேணி மற்றும் எழும்பூர் ஆகிய நான்கு தொகுதிகளுக்கு இடங்கள் முடிவு செய்யப்பட உள்ளன.

### 1.5.7. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம்

பகுதி II திட்டத்தின்கீழ் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு 358 இடங்களில் விடுதிகள் கட்டும் பணிக்காக, ரூ.2.76 கோடி ஒப்புதல் வழங்கியதில், 355 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 3 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளில் குடிநீர் வழங்கும் வசதி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளும் அடங்கும்.

2004–2005 ஆம் ஆண்டில் 79 சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளில் பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 100 தங்கும் விடுதிகள் கட்ட அரசு ரூ.31.50 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

[2006 ஆகஸ்ட் 31

82 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 18 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

### 1.5.8. செய்தி மற்றும் சுற்றுலா

மாமல்லபுரத்தில் (இரண்டாம் கட்ட பணிகள்) உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக அரசு ரூ.4.32 கோடி இந்திய அரசு நிதி உதவியுடன் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பணிகள் விரைவில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன. சென்னை, மெரினா கடற்கரை காமராசர் சாலையிலிருந்து அகற்றப்பட்ட கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவும் பணி செய்து முடிக்கப்பட்டது. சென்னை, மெரினா கடற்கரையை ஒட்டியுள்ள காமராசர் சாலையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் முழு உருவச் சிலை ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பீடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### 1.5.9. கால்நடை பராமரிப்பு

2005-2006 ஆம் ஆண்டில் பல்வேறு இடங்களில் 383 கால்நடைப் பராமரிப்பு மையங்கள் கட்டுவதற்கு அரசு ரூ.40.74 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவற்றில், 127 மையங்களில் பணிகள் முடிக்கப்பட்டு 73 மையங்கள் பயன்படுத்தும் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 195 மையங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் மீதமுள்ள 61 மையங்களில் பணிகள் விரைவில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

### 1.5.10. பதிவுத் துறை

சென்னை, திருவல்லிக்கேணியில் ஏற்கெனவே அமைந்துள்ள துணைப் பதிவாளர் அலுவலகக் கட்டடம் புதுப்பித்துக் கட்டும் பணிக்கு அரசு ரூ.84.50 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கி, பணி செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, முன்னேற்றத்தில் உள்ளது.

### 1.5.11. வணிக வரிகள்

சிவகாசியில் வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ரூ.1.30 கோடி ஒப்பளிப்பு வழங்கி பணி செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சென்னை, கிரீம்ஸ் சாலையில் வணிக வரி ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ரூ.5.50 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பணிகள் விரைவில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.



006 ஆகஸ்ட் 31]

### .6. ஆழிப் பேரலை

2005-2006 ஆம் ஆண்டில் ஆழிப் பேரலையினால் பொதுப் பணித் ுறை, வருவாய் துறை, சுகாதாரத் துறை, கால்நடை வளர்ப்புத் துறை ற்றும் கல்வித் துறை ஆகியவற்றினைச் சார்ந்த அலுவலகக் கட்டடங்கள் கவும் பாதிப்புக்குட்பட்டதனால், இவற்றைச் சீரமைத்துக் கட்டுவதற்கு ரசு ரூ.36.54 கோடி ஒதுக்கியுள்ளது. அதில், பொதுப் பணித் துறை ற்றும் வருவாய்த் துறை சார்ந்த பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. காதாரத் துறை மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த ணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. கல்வித் ுறையைச் சார்ந்த பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

### .7. பன்னிரண்டாவது நிதிக் குழு பரிந்துரைகள்

பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ராமரிப்புப் பணிகளுக்காக மத்திய அரசின் கூடுதல் மானியத் தொகையான ரூ.60.04 கோடி தேவையான அனைத்துத் துறைகளுக்கு 006-2007 ஆம் ஆண்டில் பகிர்ந்து அளிக்கப்பட உள்ளது. மேலும், ாரம்பரியமிக்க தொன்மை வாய்ந்த கட்டடங்களைப் பன்னிரண்டாவது திக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2006-2007-ல் 5.10.00 கோடி செலவில் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### .8. பகுதி-II திட்டங்கள்

***2005-2006 ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள்:***

- தேனியில், கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டச் செயற் பொறியாளருக்கு கோட்ட அலுவலகக் கட்டடம் ரூ.34.10 இலட்சம் மதிப்பில் கட்டுதல்.
- திருச்சியில், ரூ.96.50 இலட்சம் மதிப்பில் சுற்றுலா மாளிகை கட்டுதல்.
- திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப் பணித் துறை, கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், அவர்களுக்கு பொதுப் பணித் துறை அலுவலர் குடியிருப்பு வளாகத்தில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் குடியிருப்புக் கட்டடம் கட்டுதல்.

[2006 ஆகஸ்ட் 31

**2006–2007 ஆம் ஆண்டின் பகுதி–II திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள புதிய பணிகள்:**

- திருவாரூரில் கோட்ட அலுவலகம் மற்றும் உப கோட்ட அலுவலகம் ரூ.39.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுதல்.
- விருத்தாசலம், கும்பகோணம், சத்தியமங்கலம், மணப்பாறை மற்றும் குழித்துறை ஆகிய 5 இடங்களில் ஒரு உப கோட்டம் மற்றும் ஒரு பிரிவு அலுவலகம் ஒவ்வொன்றும் ரூ.8.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுதல்.
- தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசத்தில் ஒரு பிரிவு அலுவலகம் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ.4.20 இலட்சம்.
- சேலத்தில் கூடுதல் சுற்றுலா மாளிகை ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் கட்டுதல்.
- கோவையில் சுற்றுலா மாளிகை வளாகத்தில் கூடுதல் அறைகள் ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுதல்.
- சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 'சி' பிரிவு அரசு ஊழியர் குடியிருப்பு (4 பிளாக்) மூன்று தளக் கட்டடம் (24 எண்ணிக்கை) கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.18 கோடி.
- திருச்சி, ஈரோடு மற்றும் சென்னை ஆகிய இடங்களில் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு அரசு குடியிருப்புகள் கட்டும் பணிக்கு மதிப்பீடு தலா ரூ.20.00 இலட்சம்.
- பொதுப் பணித் துறை கோட்டங்களுக்காக 24 ஈப்பு ஊர்திகள் வாங்குவதற்கு மதிப்பீடு ரூ.96.00 இலட்சம் (24 x 4.00 = 96 இலட்சம்) சென்னை, தலைமைச் செயலகத்தில் பொதுப் பணித் துறை அலுவலக உபயோகத்திற்கு ரூ.14.00 இலட்சம் செலவில் 20 கணினிகள், ஓர் ஒருங்கிணைப்புப் பணி கணினி மற்றும் அதன் துணைப் பாகங்கள் வாங்குதல்.



2006 ஆகஸ்ட் 31]

**தற்போது முன்னேற்றத்தில் உள்ள பெரிய பணிகள் மற்றும் 2006–2007ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பெரிய பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:–**

**தற்போது முன்னேற்றத்தில் உள்ள பணிகள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பு |
|---|---|---|
| 1 | தேனியில் புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு பல்வேறு கட்டடங்கள் கட்டுதல். | 4669.55 |
| 2 | வேலூரில் புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு பல்வேறு கட்டடங்கள் கட்டுதல். | 5049.55 |
| 3 | கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் புதிய மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு பல்வேறு கட்டடங்கள் கட்டுதல். | 4465.91 |
| 4 | திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு பல்வேறு கட்டடங்கள் கட்டுதல். | 1584.55 |
| 5 | தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு பல்வேறு கட்டடங்கள் கட்டுதல். | 2681.91 |
| 6 | தூத்துக்குடி மருத்துவக் கல்லூரியில் மகளிர் தங்கும் விடுதிக்குக் கூடுதல் கட்டடம் மற்றும் மருத்துவமனைக்கு சி.ஆர்.ஆர்.ஐ. குடியிருப்புகள் கட்டுதல். | 310.00 |
| 7 | 11 இடங்களில் 30 படுக்கைகளுடன்கூடிய பிரிவு மற்றும் கதிர் வீச்சுப் பிரிவு கட்டடம் கட்டுதல். | 456.00 |
| 8 | 33 இடங்களில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்களை உயர்நிலைப்படுத்துதல். | 1221.00 |
| 9 | தஞ்சாவூரில் மருத்துவக் கல்லூரிக்கான கட்டடங்கள் கட்டுதல். | 2275.00 |
| 10 | திருப்பத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுதல். | 497.00 |
| 11 | கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெருந்திட்ட வளாகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் மாளிகை கட்டுதல். | 1000.00 |
| 12 | திருநெல்வேலியில் புதியதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுதல். | 660.00 |
| | **மொத்தம்** | **24870.47** |

[2006 ஆகஸ்ட் 31

## 2006-2007 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பணிகள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பு |
|---|---|---|
| 1 | 35 அரசு மருத்துவமனைகளுக்குக் கூடுதல், விரிவாக்கம், பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் செய்தல். | 4562.00 |
| 2 | கொடைக்கானலில் கட்டம்-1-ன்கீழ் மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்டுதல் | 250.00 |
| 3 | தேனி மாவட்டம், தேனியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு துணைக் கட்டடங்கள், நீதித் துறை அலுவலர் குடியிருப்பு, வாகனம் நிறுத்துமிடம், பொதுக் கழிப்பிடங்கள், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம், புல்வெளியுடன்கூடிய தோட்டம் ஆகியவை அமைத்தல் | 357.00 |
| 4 | சென்னை, கிரீம்ஸ் சாலையில் வணிக வரி ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 550.00 |
| 5 | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் வேளாண் விளை பொருள் பேரங்காடிக் கட்டடம் கட்டுதல் | 308.00 |
| 6 | மாமல்லபுரத்தில் உள்கட்டமைப்பு மற்றும் பயணியர் வருகை வளர்ச்சிப் பணிகள் செய்தல் (கட்டம்-2 பணிகள்) | 432.00 |
| 7 | சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரி ஆகிய இடங்களில் மன நல மருத்துவச் சிகிச்சைப் பகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் கட்டுமானப் பணிகள் | 193.00 |
| 8 | தருமபுரி மாவட்டம், அதியமான் கிராமத்தில் வள்ளல் அதியமான் நினைவகம், மணி மண்டபம் மற்றும் 400 நபர்கள் அமரக்கூடிய கலையரங்கம் அமைத்தல் | 115.00 |
| | மொத்தம் | 6767.00 |



2006 ஆகஸ்ட் 31]

## 2. பாசனம்

**2.1.** மண் அனைத்து உற்பத்திகளுக்கும் ஆதாரமாகும். உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும், நல்ல விளைச்சலை உறுதிப்படுத்துவதற்கும் தண்ணீர் அத்தியாவசியமானதாகும். தென்மேற்குப் பருவ மழை மற்றும் வட கிழக்குப் பருவ மழை ஆகிய இரு பருவ காலங்களும் மாநிலத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால மேற்குத் தொடர்ச்சி மலைச் சாரங்களின் காற்றுக்கு ஒதுக்குப்புறமான பக்கத்தில் இம்மாநிலம் உள்ளதால், தென் மேற்குப் பருவ மழையினால் ஏற்படக்கூடிய முழுப் பலனை இம்மாநிலம் அடைய முடியவில்லை. வட கிழக்குப் பருவ மழை இடை இடையே நின்று வந்த போதிலும், வங்காள விரிகுடாவில் ஏற்படும் காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக உருவாகும் கடுமையான மழைதான் இம்மாநிலத்தின் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் ஓராண்டில் பெய்யும் சராசரி மழையின் அளவு 925 மில்லி மீட்டர் ஆகும். அதில், 308 மில்லி மீட்டர் (33 சதவிகிதம்) தென்மேற்குப் பருவ மழைக் காலத்திலும், 439 மில்லி மீட்டர் (47 சதவிகிதம்) வடகிழக்குப் பருவ மழைக் காலத்திலும் மீதமுள்ள 178 மில்லி மீட்டர் (20 சதவிகிதம்) தொடர்ந்து வரும் குளிர்காலம் மற்றும் கோடைக் காலத்திலும் பெய்யும் மழையின்மூலம் கிடைக்கிறது.

**2.2.** நாட்டின் மக்கள் தொகையில் 7 சதவிகிதம் கொண்ட தமிழ்நாடு, நீர்வள ஆதாரத்தில் 3 சதவிகிதம்தான் பெற்றுள்ளது. மாநிலத்தின் நீர்வள ஆதாரம் பருவ மழையை மட்டுமே நம்பி உள்ளது. 2002 ஆம் ஆண்டின் தேசிய நீர்க் கொள்கையினைக் கருத்தில் கொண்டு தண்ணீரை உபயோகிப்பதில் அதிகபட்ச அளவில் திறமையுடன் இருக்க வேண்டியது மற்றும் தண்ணீர் பாதுகாப்பு, பொதுமக்களிடையே விழிப்புணர்வு போன்ற முக்கிய அம்சங்களுடன் மாநில நீர்க் கொள்கை மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது.

### 2.3. மேற்பரப்பு நீர் வளம்

நிலத்தடி நீர் உட்பட மாநிலத்தின் மொத்த நீர்வளம் 46,540 மில்லியன் கனமீட்டர் (1643 டிஎம்சி) ஆகும். அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திராவில் இருந்து பெறப்படும் நீரின்அளவு (7391 மில்லியன் கன மீட்டர் அல்லது 261 டிஎம்சி) உட்பட தமிழகத்தின் மேற்பரப்பு நீர்வளம் 24,160 மில்லியன் கன மீட்டா (853 டிஎம்சி) ஆகும்.

[2006 ஆகஸ்ட் 31

| வ.எண் | நீர்வளம் | மி.க.மீ | டிஎம்சி |
|---|---|---|---|
| 1. | மேற்பரப்பு நீர்வளம் | | |
| | மாநிலத்திற்குள் | 16769 | 592 |
| | அண்டை மாநிலங்களில் இருந்து | 7391 | 261 |
| | **மொத்தம்** | **24160** | **853** |
| 2. | நிலத்தடி நீர்வளம் | 22380 | 790 |
| | **ஆக மொத்தம்** | **46540** | **1643** |

## 2.4. நிலத்தடி நீர்வளம்

மாநிலத்தில் கிடைக்கக்கூடிய மேற்பரப்பு நீர்வளம் ஏறக்குறைய முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதால் தண்ணீர் அரிதாகி வருகிறது. மாநிலத்தில் உள்ள 46,540 மில்லியன் கன மீட்டர் தண்ணீரில் மேற்பரப்பு நீர் பாதி அளவுதான் உள்ளது. மேற்பரப்பு நீர் ஆதாரம், ஏறக்குறைய முழுமையாக (95 சதவிகிதம்) 1960 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு விட்டதால் நிலத்தடி நீர் ஆதாரம் தான் எதிர்கால வளர்ச்சிக்கான ஒரு மாற்று நீர் ஆதாரமாக இருக்கும்.

1997–ல் மத்திய நீர்வள ஆதார அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி நிலத்தடி நீரை மதிப்பீடு செய்ய வகுத்துள்ள மாற்று வழிமுறைகளின்படி நில்த்தடி நீரின் இருப்பு விவரம்:

(சனவரி 1998–ன்படி)

| | |
|---|---|
| தமிழ்நாட்டில் மொத்த நிலத்தடி நீர் ஆதாரம் | 23070 மி.க.மீ |
| ஓர் ஆண்டில் கிடைக்கக்கூடிய நிகர நிலத்தடி நீர் அளவு | 20763 மி.க.மீ |
| பாசனத்திற்கான நீர் தேவை மொத்தம் | 16581 மி.க.மீ |
| தொழிற்சாலை, உள்நாட்டுப் பயன்பாட்டிற்கு மொத்த தேவை | 646 மி.க.மீ |
| அடுத்த 25 ஆண்டு காலத்திற்கு உள்நாட்டு மற்றும் தொழிற்சாலைத் தேவைக்கான ஒதுக்கீடு | 879 மி.க.மீ |
| எதிர்கால நீர்ப்பாசனத்திற்கு கிடைக்கவுள்ள நிகர நிலத்தடி நீர் அளவு | 3303 மி.க.மீ |



2006 ஆகஸ்ட் 31]

சனவரி 2003–ல் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி, பிறகால மேம்பாட்டிற்கு 3142.27 மில்லியன் கன மீட்டர் நிலத்தடி நீர் இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நீர் ஆதாரம் 97 பாதுகாப்பான பகுதிகள், 105 ஓரளவு பாதுகாப்பான பகுதிகள், 37 அபாயப் பகுதிகள் ஆகிய வட்டாரங்களில் உள்ளது. 138 பகுதிகள் அதிநுகர்வு பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதிகளின் வகை | பகுதிகளின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | சனவரி 1998-இல் | 2003 சனவரியில் |
| 1. | பாதுகாக்கப்பட்ட பகுதிகள் | 137 | 97 |
| 2. | மித பாதுகாக்கப்பட்ட பகுதிகள் | 70 | 105 |
| 3. | அபாயப் பகுதிகள் | 35 | 37 |
| 4. | அதிநுகர்வுப் பகுதிகள் | 135 | 138 |
| 5. | உப்பு நீர்ப் பகுதிகள் | 8 | 8 |
| | **மொத்தம்** | **385** | **385** |

## 2.5. பாசனப் பரப்பு

தமிழகத்தில் ஆறுகள், ஏரிகள் மற்றும் கிணறுகள் ஆகிய மூன்றும் மேற்பரப்பு பாசனத்திற்கான முக்கிய ஆதாரங்களாக உள்ளன. இம்மாநிலத்தில் 39,202 ஏரிகளும், 2,295 முக்கிய பாசன வாய்க்கால்களும், 18,16,434 பாசனக் கிணறுகளும் உள்ளன.

1950 ஆம் ஆண்டுகளில் 21.11 இலட்சம் எக்டேராக இருந்த பாசனப் பரப்பு 1990-களில் 27.75 இலட்சம் எக்டேராக உயர்ந்து, 2004–2005–ல் 21.48 இலட்சம் எக்டேராக குறைந்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நீர்வள ஆதாரம் தனிநபர் தேவையின் அடிப்படையில் கணக்கிடும்போது 0.08 எக்டேராகவும் அனைத்திந்திய சராசரி 0.15 எக்டேராகவும் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. பாசனப் பரப்பளவை விரிவுபடுத்தவும், தற்போதுள்ள பாசனப் பரப்பளவை நிலைப்படுத்தவும் தமிழ்நாடு, நிலத்தடி நீரை நம்ப வேண்டியுள்ளது.

## 3. பாசனத் திட்டங்கள்

### 3.1. நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம்

நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தை ரூ.840.84 கோடி செலவில் செயல்படுத்த உலக வங்கி 1995 ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கியது. இத்திட்டம் 31–3–2002–க்குள் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். உலக வங்கி இத்திட்டத்தை முதலில் 31–3–2004 வரையிலும், பின்னர் 30–9–2004 வரையிலும் நீட்டித்தது.

நீர்வள ஆதார தொகுப்புத் திட்டத்தின் தொடர் திட்டமாக, மாநிலத்தில் குறைவான நீர் ஆதாரங்களை உபயோகிப்பதில் ஒட்டுமொத்த நீர்வளத்தையும், சேமிப்பு கொள்திறனையும் அதிகரிக்கும் பொருட்டு, நீர்ப்பாசன மேலாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்வள ஆதார மேலாண்மைத் திட்டம் (IAMWARM) ஆகியவற்றை உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூ.3,900 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம், தொடர்புடைய அனைத்துத் துறைகளின் (Line Departments) பங்கேற்புடன் ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி வடிநிலத்தின் அனுமா நதி உப வடிநிலத்தில் திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட்ட முன்னோடித் திட்டத்தின்வாயிலாக கிடைக்கப்பெற்ற அனுபவத்தைக் கொண்டு செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.2. நீரியல் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் நீரியல் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்வாயிலாக நிறுவன மற்றும் அலுவலக அமைப்புகள், தொழில்நுட்பத் திறமைகள் மற்றும் கட்டமைப்புகள் ஆகியவற்றை மேம்படுத்துதல், மதிப்பீடு, விவரம் திரட்டுதல், பகுப்பாய்வு, நீரியல் பரப்பு மற்றும் மாறுதல், நீர் வானிலை மற்றும் தகுதிவாய்ந்த பயனீட்டாளர்களுக்கு வழங்க உள்ள நீர் விவரங்கள் ஆகிய இனங்களில் முன்னேற்றம் அடைதல் இதன் குறிக்கோளாகும்.

வற்றாத ஆறுகளின் வடிநிலம் தொடர்பான நீர் வானிலை பற்றிய, உண்மை புள்ளி விவரங்கள், வெள்ள முன்னெச்சரிக்கை மற்றும் மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் உள்ளடக்கிய நீரியல் சுழற்சி தரம் மற்றும் அளவு தொடர்பாக மாநிலத்தில் மேற்கொள்ளக்கூடிய அறிவியல் புள்ளி விவரங்களை வழங்க நிரந்தர நீரியல் ஆய்வு மேலாண்மைத் திட்டத்தை உருவாக்கவும் இத்திட்டத்தின் காலம் ஆறு ஆண்டுகள் என (1995–2001) முதலில் முடிவெடுத்திருந்தாலும், இத்திட்டம் 31–12–2003 அன்றுதான் முடிக்கப்பட்டது. இரண்டாம் கட்ட நீரியல் திட்டம் தற்பொழுது





2006 ஏப்ரல் முதல் செயல்பட்டு வருகிறது. இதன் திட்ட காலம் ஆறு ஆண்டுகளாகும். இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு ரூ.25.27 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 4. அண்டை மாநில நதிகளிலிருந்து உபரிநீரை தமிழ்நாட்டிற்கு திருப்பி விடுதல்

**4.1.** தமிழ்நாடு, அநேகமாக தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயன்படுத்திவிட்டது. ஆனால், அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகியவை நல்ல நீர்வளம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் நீர்வளத்தை மேலும் பெருக்குவதற்கு அண்டை மாநில வடிநிலப் பகுதிகளில் உள்ள உபரி நீரைத் திருப்பி விடுவதை நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அண்டை மாநிலங்களின் வடிநில உபரி நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பி விடுவதற்கு மத்திய அரசையும், அண்டை மாநிலங்களையும் தமிழ்நாடு அரசு அணுகியுள்ளது. தேசிய நீர் மேம்பாட்டு முகமை, உபரி மற்றும் பற்றாக்குறையாக உள்ள வடிநிலங்களைக் கண்டறிந்து, மகாநதி மற்றும் கோதாவரியில் உபரியாக உள்ள நீரை கிருஷ்ணா, பெண்ணாறு மற்றும் காவிரி மற்றும் வைகை ஆறுகளுக்குத் திருப்பி விடலாம் எனக் கண்டறிந்துள்ளது.

இத்திட்டத்தின்படி, மகாநதி மற்றும் கோதாவரி நதிகளின் உபரி நீர் ஆந்திர பிரதேசத்திலுள்ள கிருஷ்ணா மற்றும் பெண்ணாற்றுக்குத் திருப்பி விடப்பட்டு, பெண்ணாற்றிலிருந்து காவிரிக்கு சோமசீலா அணைக்கட்டிலிருந்து 538 கி.மீ நீளமுள்ள இணைப்புக் கால்வாய் வழியாக சுமார் 8,565 மி.க.மீ (303 டி.எம்.சி) நீர் காவிரி நதியின் குறுக்கே அமைந்துள்ள கல்லணை வரை திருப்பிவிட நடவடிக்கை எடுக்கப்படும். இணைப்புக் கால்வாய் சோமசீலா அணை முதல் தமிழகத்தின் கல்லணை வரை இடைப்பட்ட ஆந்திரம் மற்றும் தமிழ்நாட்டு பகுதிகளின், பாசனம், குடிநீர் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும். மேலும் சுமார் 3855 மி.க.மீ. (136.21 டி.எம்.சி.) அளவு நீர் கல்லணைப் பகுதியில் விடப்படும். அது காவிரி வடிநிலப் பகுதி மற்றும் காவிரி படுகைக்குத் தெற்கே அமைந்துள்ள பகுதிகளின் பாசனத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

காவிரி–வைகை–குண்டாறு இணைப்பானது இந்த இணைப்புத் திட்டத்தின் கடைசி அங்கமாகும். இந்த இணைப்பின் நோக்கம் காவிரியில், நதிகள் இணைப்பின்மூலம் கிடைக்கப்பெறும் 3855 மி.க.மீ (136.21 டி.எம்.சி.) அளவு நீரில் 2252 மி.க.மீ (79.5 டி.எம்.சி.) அளவு நீரை காவிரியின் தெற்கில் குண்டாறு வரையில் உள்ள பகுதிகளின் பாசனம் மற்றும் குடிநீர் வசதிகளுக்காக திருப்புவதே ஆகும்.

இந்த அரசு அண்டை மாநிலங்களுடன் சுமுகமான உறவு முறையைக் கடைப்பிடித்து, மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவாக்களை பேச்சுவார்த்தைமூலம் முடிவு செய்ய ஆர்வம் கொண்டுள்ளது. மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-காவிரி-வைகை மற்றும் குண்டாறு இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த ஆந்திரா, ஒரிசா மற்றும் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுடன் மத்திய அரசின் துணையுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கிட விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் இத்திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும்.

## 4.2. பாசன நீர்ப் பயன்பாட்டில் சிக்கனம்

மாநிலத்தின் மேற்பரப்பு நீர் அநேகமாக முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன. இந்தச் சூழலில், தற்போதைய கால்வாய்ப் பாசன முறையையும், ஏரிப்பாசன முறையையும் நவீனப்படுத்துவதன்மூலம் நீர் வீணாகாமல் தடுப்பதுடன், நீரைச் சீரான வகையில் உரிய அளவிற்கு மட்டுமே பயன்படுத்துவதில் தற்போது அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இம்முயற்சியால், சேமிக்கப்படும் நீரைக் கொண்டு புதிய பகுதிகளில் பயிர் சாகுபடி செய்யவும், ஏற்கெனவே சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் கூடுதலாகப் பயிர் சாகுபடி செய்யவும் இயலும்.

தமிழகத்திலுள்ள 42 உபநதிக் கோட்டங்களில், 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து, உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ள நீர்வள ஆதார மேலாண்மைத் திட்டத்தின்மூலம், பாசன ஏரிகளையும், கால்வாய்களையும் சீரமைத்து, தண்ணீரை அளவோடு பயன்படுத்தி, புதிய சாகுபடி முறைகள்மூலம் வேளாண் வருவாயைப் பெருக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

## 5. நீர்ப்பாசனத் திட்டங்கள்

### 5.1. நடைபெற்றுவரும் பாசனத் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை

#### (1) நங்காஞ்சியாறு நீர்த்தேக்கம் (திண்டுக்கல் மாவட்டம்)

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், இடையன்கோட்டை கிராமத்தின் அருகில் அமராவதி ஆற்றின் கிளை ஆறான நங்காஞ்சியாற்றின் குறுக்கே ரூ.20.70 கோடி மதிப்பீட்டில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் திண்டுக்கல்





மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம் மற்றும் கரூர் வட்டத்திலுள்ள அரவக்குறிச்சி ஆகிய இடங்களில் 21 எக்டேர் பழைய பாசன நிலம் பாசன உறுதியும் 2530 எக்டேர் புதிய நிலம் பாசன வசதியும் பெறும். திருத்திய மதிப்பீடான ரூ.11.68 கோடிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்திற்கான அனைத்துப் பணிகளும் முடிந்துவிட்ட நிலையில் நவம்பர் 2005-ல் ஏற்பட்ட வரலாறு காணாத மழையால் அணையின் கரையில் பாதிப்பு ஏற்பட்டது. இதை சரிசெய்யும் பணி உடனடியாக வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமானப்பிரிவின்மூலம் மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தை அக்டோபர் 2006-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

#### (2) இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி கிராமத்தினருகே வைப்பாற்றின் குறுக்கே ரூ. 28.70 கோடி மதிப்பீட்டில் இந்நீர்த்தேக்கம் 1992-லிருந்து அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் ரூ.62.20 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டத்தில் மொத்தம் 3,705 எக்டேர் புன்செய் நிலத்திற்குப் புதிய பாசன வசதியும், 254 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதியும், 255 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் கிடைக்க வழிவகை செய்கிறது.

மொத்தத்தில் 94 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

#### (3) மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்படை கிராமம் அருகாமையில், கமுதி நீர் கட்டுப்பாட்டு மதகிற்குக் கீழ்ப்புறமாகக் கிருதுமால் மற்றும் பரளையாறு, மலட்டாற்றுடன் கலக்கும் இடத்திற்குக்கீழ் மலட்டாற்றின் குறுக்கே ரூ.15.10 கோடி மதிப்பீட்டில் அணை கட்ட அரசு அனுமதி அளித்தது. மேலும், ரூ.42.00 கோடிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின்மூலம் கடலாடி மற்றும் கமுதி வட்டங்களிலுள்ள சுமார் 1758 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமும், மேலும் இந்த வட்டங்களில் 51 கண்மாய்களின்கீழ் உள்ள 156 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

50 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. இத்திட்டத்தினை மார்ச் 2007-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### (4) உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)

1996 ஆம் ஆண்டு, வைகை அணையின் உபரி வெள்ள நீரைப் பயன்படுத்தி, உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்காக வைகை அணையின் உபரிநீர் வழிந்தோடியிலிருந்து 2425 மீட்டர் தொலைவில் வைகை அணையின் வலது கரையில் 27.26 கி.மீ நீளத்திற்கு ஓர் உயர் மட்டக் கால்வாய் அமைக்க அரசு அனுமதி அளித்தது. இத்திட்டத்தின்கீழ் 3 கண்மாய்கள் அமைத்து அதற்கு உயர் மட்டக் கால்வாய்மூலம் நீர் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ.33.81 கோடி மதிப்பீட்டிற்கு அரசு அனுமதி அளித்தது. பின்னர் ரூ.71.60 கோடிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டச் செயலாக்கத்தினால் 570 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசன வசதி கிடைக்கும். மேலும், உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 29 கண்மாய்கள் மற்றும் மூன்று குட்டைகளின்கீழ் உள்ள 128 எக்டேர் விடுபட்ட நன்செய் நிலங்கள் பயனடையும். இவை தவிர புதிதாக உருவாக்கப்படவுள்ள 3 கண்மாய்கள்மூலமாக 227 எக்டேர் புதிய நன்செய் நிலமும் பாசன வசதி பெறும்.

மார்ச் 2007-க்குள் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### (5) ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் கிராமத்தினருகே ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே 112 மில்லியன் கன அடி கொள்ளளவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திற்கு ரூ.27.38 கோடிக்கு திருத்திய நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் மற்றும் இருணாப்பட்டு கிராமங்களில் 810 எக்டேர் நிலம் நேரடியாக இருபோக புன்செய் சாகுபடியின்கீழ் வரும்.

இத்திட்டம் நபார்டு வங்கியின் கடனுதவிமூலம் நடைபெற்று வருகிறது. மண் அணை, சாலைப் பணி, உபரிநீர் வழிந்தோடி மற்றும் வடிகால் பணிகள் முடிவடைந்துள்ளன. கால்வாய்ப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.





### (6) செண்பகத்தோப்பு நீர்த் தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், செண்பகத்தோப்பு கிராமத்தில் கமண்டலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க ரூ. 21.33 கோடிக்கு 1996 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்பொழுது இத்திட்டத்திற்காக, ரூ.31.00 கோடிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் போளூர், ஆரணி, ஆற்காடு, செய்யாறு மற்றும் வந்தவாசி வட்டத்திலுள்ள மொத்தம் 2067 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 612 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

இப்பணி நபார்டு வங்கியின் கடனுதவியின்மூலம் நடைபெற்று வருகிறது. இதுவரை 98 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. ஏனைய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

### (7) பத்தலப்பள்ளி – மலட்டாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலப்பள்ளி கிராமத்தின் அருகே மலட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு ரூ.29.55 கோடிக்கு 1997—ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

குடியாத்தம் வட்டத்தில் மொத்தம் 1064 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 61 எக்டேர் விடுபட்ட நிலங்கள் பாசன வசதியும் பெறும். மேலும் இத்திட்டத்தில் பேரணாம்பட்டு நகரம் மற்றும் வழியில் அமைந்துள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வசதி அளிக்கவும் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் மீண்டும் நல்ல நீரை வழங்க ஏற்றதாக மாறும்.

### (8) குப்பநத்தம் நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க 1996—ல் ரூ.35.16 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் செய்யாற்றின் குறுக்கே உள்ள ஐந்து அணைகளின்கீழுள்ள 22 ஏரிகள் மற்றும் இரண்டு நேரடிக் கால்வாய்களின்மூலம் செங்கம் மற்றும் போளூர் வட்டத்தில் மொத்தம் 2,528 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 580 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கப்பெறும்.

இத்திட்டத்திற்காக பட்டா நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுற்றுள்ளது. புறம்போக்கு நிலம் மாற்றும் பணி நடைபெற்று வருகிறது. நபார்டு வங்கி கடனுதவியுடன் ரூ.43.50 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. சுமார் 38 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. இத்திட்டப் பணிகளை மார்ச் 2007—ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(9) வறட்டாறு—வள்ளி மதுரை நீர்த்தேக்கம் (தருமபுரி மாவட்டம்)**

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளி மதுரை கிராமம் அருகே வறட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க 1997—ல் ரூ.19.20 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்தது. பின்னர் ரூ.35.95 கோடிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டம் நிறைவடைந்தவுடன், அரூர் வட்டத்தில் கீரிப்பட்டி அணைக்கட்டு, எல்லப்புடயம்பட்டி அணைக்கட்டு மற்றும் மாங்குப்பம் ஏரியின்கீழ் உள்ள 110 எக்டேர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன உறுதி மற்றும் 1,047 எக்டேர் ஒரு போக புன்செய் பயிர் செய்வதற்கான பாசன வசதியும் கிடைக்கப்பெறும்.

இதுவரை 98 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

**(10) நாயோடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் வட்டத்தில் உள்ள கன்னிவாடி கிராமத்தில் மங்கரியாற்றின் உபநதியான நாயோடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைக்க 1998—ல் ரூ.3.50 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் ரூ.7.20 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் திண்டுக்கல் வட்டத்தில் 118 எக்டேர் புதிய நிலங்கள் பாசன வசதி பெறும்.

சுமார் 95 சதவிகிதப் பணிகள் முடிவுபெற்றுள்ளன. எஞ்சிய பணிகள் விரைவில் முடிக்கப்படும்.





**(11) இராமக்கால் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் வட்டத்திலுள்ள எ.வெள்ளோடு மற்றும் கீழக்கோட்டை கிராமங்களில் குடகனாற்றின் உபநதிகளான இராமக்கால் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே 1998—ல் ரூ.3.55 கோடி மதிப்பீட்டில் குளம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் ரூ.5.65 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் திண்டுக்கல் வட்டத்தில் 107.65 எக்டேர் புதிய புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இதுவரை 81 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. கால்வாய்ப் பணிக்குத் தேவையான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(12) நல்லதங்காள் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் (ஈரோடு மாவட்டம்)**

தாராபுரம் வட்டம், பொன்னிவாடி கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே 1998—ல் ரூ.31.01 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. ரூ.42.70 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தாராபுரம் வட்டத்தில் 1919.87 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

சுமார் 95 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**(13) வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)**

வாணியம்பாடி வட்டம், விண்ணமங்கலம் கிராமத்தினருகே வெள்ளக்கால் கானாறின் குறுக்கே 1998—ல் ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் வழங்கியது.

இத்திட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள 431 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 57 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

வன நிலத்திற்கான மத்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

நபார்டு வங்கியின் கடனுதவி கிடைத்த பின்னர் பணிகள் துவக்கப்படும்.

[2006 ஆகஸ்ட் 31

**(14) சிறுமலையாற்றின் குறுக்கே குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

1998 ஆம் ஆண்டில் நிலக்கோட்டை வட்டம், இராஜதானிக்கோட்டை அருகில் சிறுமலையாற்றின் குறுக்கே ரூ.4.91 கோடி மதிப்பீட்டில் குளம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்தது. ரூ.8.87 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனால் நிலக்கோட்டை வட்டத்திலுள்ள ஒருதட்டு கிராமத்தில் 128 எக்டேர் புன்செய் நிலங்கள் பயனடையும்.

மொத்தத்தில் 75 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**(15) உத்தமபாளையம் வட்டத்தில் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம் (தேனி மாவட்டம்)**

உத்தமபாளையம் வட்டத்தில் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு 1999–ல் அரசு ரூ.26.52 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்தது. பின்னர் ரூ.28.60 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் உத்தமபாளையம் வட்டத்தில் 511.16 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 73.90 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 22.81 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

சுமார் 66 சதவிகிதப் பணிகள் முடிவுபெற்றுள்ளன. இத்திட்டம் 2007–ல் நிறைவேற்றப்படும்.

**(16) மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (கன்னியாகுமரி மாவட்டம்)**

கல்குளம் வட்டத்தில் வில்லுக்குறி கிராமத்தின் அருகே மாம்பழத் துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க 1999–ல் ரூ.9.50 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்தது. மேலும் ரூ.14.80 கோடிக்கு கல்குளம் வட்டத்தில் 3.57 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 25.82 எக்டேர் ஒரு போக பயிர் மற்றும் 18.14 எக்டேர் இருபோக பயிர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதி மற்றும் 308.98 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும் வகையில் திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

இத்திட்டப் பணிகள் விரைவில் துவங்கப்படும்.



2006 ஆகஸ்ட் 31]

**(17) நிலையூர்க் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்)**

மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள வலையன்குளம், கட்பிக்குடி கண்மாய் தொடர்குளங்களுக்கு நீர் வழங்க, பெருங்குடி மேல்மடையிலிருந்து நிலையூர்க் கால்வாயை நீட்டிக்கும் திட்டத்திற்காக ரூ.8.94 கோடி மதிப்பீட்டிற்கு 1999–ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால், மதுரை மாவட்டத்தில் மதுரை தெற்கு மற்றும் திருமங்கலம் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் காரியாபட்டி வட்டம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை வட்டம் ஆகிய பகுதிகளில் சுமார் 2,086.53 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 1,126.03 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும். ரூ.19.49 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு நபார்டு வங்கி கடனுதவி அளித்துள்ளது.

பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**(18) மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

போளூர் வட்டம், மேல்சோழங்குப்பம் கிராமம் அருகே மிருகண்டா நதியின் குறுக்கே ரூ.16.79 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு 1999–ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.18.90 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் போளூர் வட்டத்தில் 778.05 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 81.10 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

மொத்தத்தில் 90 சதவிகிதப் பணிகள் முடிவுற்றுள்ளன.

**(19) ராஜகம்பீரம் ஏரி மற்றும் 15 இதர ஏரிகளும் நீர் வசதி பெற வைகை வெள்ளநீரைத் திருப்பி விடும் திட்டம் (சிவகங்கை மாவட்டம்)**

1999 ஆம் ஆண்டில் வைகை ஆற்றின் வெள்ள நீரை மானாமதுரை வட்டத்திலுள்ள ராஜகம்பீரம் ஏரி மற்றும் 15 இதர ஏரிகளுக்குத் திருப்பி விடும் திட்டத்திற்காக ரூ.3.09 கோடி மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

[2006 ஆகஸ்ட் 31

இத்திட்டம் மானாமதுரை மற்றும் பரமக்குடி வட்டத்திலுள்ள 1,039.61 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 198.99 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு மற்றும் 8.25 எக்டேர் புதிய நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

ஆற்றின் குறுக்கே இரயில்பாலம் கட்டும் பணியைத் தவிர அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன. பாலம் அமைக்கும் பணியை முடிக்க ரூ33.00 இலட்சம் இரயில்வே துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(20) மத்தளபள்ளம் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைத்தல் (தருமபுரி மாவட்டம்)**

2001 ஆம் ஆண்டில் பென்னாகரம் வட்டம், இராமகொண்டஹள்ளி கிராமத்தில் மத்தளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே புதிய ஏரி அமைக்க ரூ.14.15 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்தின்மூலம் 445 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுமார் 50 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகள் மார்ச் 2007-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(21) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், படதலேவ் கண்மாய் முதல் வெண்ணம்பள்ளி கண்மாய் மற்றும் கீழே உள்ள காசிம்பூர் கண்மாய் வரை 10 கண்மாய்களுக்கு நீர் கொண்டு செல்ல புதிய வழங்கு கால்வாய் அமைத்தல்**

இத்திட்டத்திற்காக ரூ7.00 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் வழங்கி உள்ளது.

படதலேவ் ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீரைக் கால்வாய் வெட்டி வெண்ணம்பள்ளி மற்றும் அதன்கீழ் காசிம்பூர் ஏரி வரை உள்ள 10 ஏரிகளுக்குக் கொண்டு சென்று 542 எக்டேர் நிலங்கள் நேரடிப் பாசன வசதியும், 607 எக்டேர் நிலங்கள் மறைமுகப் பாசன வசதியும் பெறும்வகையில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நபார்டு வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மொத்தத்தில் 65 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. மார்ச் 2007–ல் பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 31]

**(22) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆனைமரத்துப்பட்டி கிராமத்தில் ச.எண் 18இல் சாம்பார் பள்ளம் ஓடையின் குறுக்கே குட்டை அமைத்து பழுதான சொரக்காப்பட்டி ஏரியை குட்டையாக மாற்றியமைத்து சாம்பார் பள்ளம் குட்டையின் உபரி நீரை சொரக்காப்பட்டி குட்டைக்கு வழங்க ஓர் இணைப்பு ஏற்படுத்தி பாசன வசதி செய்தல்**

இத்திட்டத்திற்கு ரூ.1.25 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 18.5 எக்டேர் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்ற வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அருகிலுள்ள அனைத்து கிணறுகளிலும் நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது.

வன நிலங்களில் உள்ள பணிகளைத் தவிர மீதமுள்ள அனைத்து பணிகளும் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் வன நிலங்கள் கையகப்படுத்தப்பட்டவுடன் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(23) பெரியஊத்து ஓடையின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல் (தேனி மாவட்டம்)**

உத்தமபாளையம் வட்டம், சின்ன ஓவலாபுரம் கிராமத்தில் பெரியஊத்து ஓடையின் குறுக்கே புதிய கண்மாய் அமைக்கும் பணிக்கு ரூ.2.02 கோடி மதிப்பீட்டிற்கு 2003 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 47.55 எக்டேர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும். தற்பொழுது 80 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள பணிகள் டிசம்பர் 2006–ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(24) அய்யனார் கோயில் ஓடையின் குறுக்கே புதிய ஏரியமைத்தல் (மதுரை மாவட்டம்)**

பேரையூர் வட்டம் மல்லாபுரம் கிராமத்தில் அய்யனார் கோயில் ஓடையின் குறுக்கே ரூ3.54 கோடி மதிப்பீட்டில் புதிய கண்மாய் அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ7.50 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 294 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதுடன் வெள்ள நீரினால் ஏற்படும் சேதமும் தடுக்கப்படும்.

[2006 ஆகஸ்ட் 31

தற்போது 63 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**(25) கொசஸ்தலையாற்றின் இடதுபுறம் உள்ள படுக்கை அணையை மீண்டும் அமைத்தல் (திருவள்ளூர் மாவட்டம்)**

பொன்னேரி வட்டம் இடையஞ்சாவடி கிராமம் கொசஸ்தலையாற்றின் இடதுபுறம் உள்ள படுக்கை அணையை மீண்டும் அமைத்து இருகரைகளிலும் வெள்ளத்தடுப்பு அமைக்கும் திட்டத்திற்காக 2004-ல் அரசு ரூ.2.50 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இப்பணி நபார்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுவரை 65 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. மார்ச் 2007-க்குள் பணிகள் முடிவடையும்.

**(26) தூத்துக்குடி மாவட்டம், மருதூர் அணைக்கட்டிலிருந்து கல்வாய் ஏரி வரை உள்ள மருதூர் மேலக்காலின் கொள்ளளவை அதிகப்படுத்துதல்**

2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.9.527 கோடி மதிப்பீட்டிற்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. மருதூர் மேலக்கால் வாய்க்காலின் கொள்ளளவை அதிகப்படுத்தி அதன்கீழ் உள்ள நிலங்களுக்குப் பாசன உறுதியும் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கப்படும். மேலும், மருதூர் அணைக்கட்டிலிருந்து கால்வாய் சடையநேரி வாய்க்கால்மூலம் ஏற்கெனவே அளிக்கப்படும் 1,060 கன அடி நீருக்கு குந்தகம் இல்லாமல் தனியாக வினாடிக்கு 500 க.அடி தண்ணீர் கொண்டு செல்வதை இத்திட்டம் உறுதி செய்யும்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட உடன் ஏற்கெனவே உள்ள மருதூர் மேலக்கால் ஆயக்கட்டில் 28010 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும், 534.46 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் அளிக்கப்படும். மேலும், கடைமடைப் பகுதியில் உள்ள கண்மாய்களுக்கும் தண்ணீர் வழங்குவது உறுதி செய்யப்படும்.

சுமார் 17 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. பாசனக் காலம் முடிவடைந்தவுடன் எஞ்சிய பணிகள் மேற்கொள்ளப்படும்.



2006 ஆகஸ்ட் 31]

**(27) வண்டல் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பொட்டல் கிராமத்தில் வண்டல் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு நபார்டு கடனுதவியுடன் செயல்படுத்த ரூ.6.11 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் மருதூர் பிரதான கால்வாயின்கீழ் உள்ள நிலங்களில் கார் பருவ காலத்தில் 87.51 எக்டேர் விடுபட்ட பரப்புக்கும் பிசானம் பருவ காலத்தில் 41.37 எக்டேர் விடுபட்ட பரப்புக்கும் பாசன வசதியளிக்கப்படும். மேலும், கார் பருவத்தில் 3.41 எக்டேர் பரப்புக்கும், பிசானம் பருவத்தில் 33.57 எக்டேர் பரப்புக்கும் உறுதிப்படுத்தப்பட்ட பாசன வசதி அளிக்கப்படும். மேலும், 3682 எக்டேர் புதிய மானாவாரி நிலங்கள் பாசன வசதி பெறும்.

இதுவரை 88 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**(28) திருக்குறுங்குடி பெரிய குளத்தை நவீனப்படுத்துதல் (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருக்குறுங்குடி கிராமத்தில் உள்ள பெரிய குளத்தை நவீனப்படுத்த ரூ.1.0277 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

மொத்தமாக 30 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

**(29) பாசிமுத்தான் ஓடையின் மதகு எண் 2-ஐ மறு கட்டுமானம் செய்தல் (கடலூர் மாவட்டம்)**

சிதம்பரம் வட்டம், குருமான்திட்டு கிராமத்தில் பாசிமுத்தான் ஓடையில் எல்.எஸ். 10.27 கி.மீ-ல் இரண்டு மதகுகளைப் புதுப்பிக்கவும், பிரிவு வாய்க்கால்களை மேம்படுத்தும் பணிக்கும், 2004 ஆம் ஆண்டு அரசு ரூ.2.64 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தில் பிரிவு வாய்க்கால்களை மேம்படுத்துவதன்மூலம் 13 கிராமங்களிலுள்ள 1,582 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டத்திற்கு ரூ.2.517 கோடிக்கு நபார்டு வங்கியின் கடனுதவி பெறப்பட்டுள்ளது.

இதுவரை 70 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

[2006 ஆகஸ்ட் 31

**(30) பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (சேலம் மாவட்டம்)**

2004 ஆம் ஆண்டில் ஓமலூர் வட்டம், கனவாய்ப்புதூர் கிராமம், கே.மோரூர் அருகே பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே குளம் அமைக்க அரசு ரூ.4.95 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 85 எக்டேர் விடுபட்ட பாசனப் பரப்பும், 75 எக்டேர் உறுதிபடுத்தப்பட்ட பாசன வசதியும் பெறும்.

இத்திட்டப் பணிகள் செப்டம்பர் 2006-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(31) விருமநூத்து ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (தேனி மாவட்டம்)**

ஆண்டிப்பட்டி வட்டம், கோனவாய்பட்டி (கணேசபுரம்) கிராமத்தில் விருமநூத்து ஓடையின் குறுக்கே குளம் அமைக்கும் திட்டத்திற்கு 2005-ல் அரசு ரூ.2.05 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 35 எக்டேர் நஞ்சை நிலங்கள் பயன்பெறும்.

48 சத்விகிதப் பணிகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(32) குண்டம்பாச்சி ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

2005 ஆம் ஆண்டு கொடைக்கானல் வட்டம், பூம்பாறை கிராமத்தின் அருகே குண்டம்பாச்சி ஓடையின் குறுக்கே தற்போது இருக்கும் குண்டம்பாச்சி குளத்தின் மேலே ஒரு குளம் அமைக்கும் திட்டத்திற்கு ரூ.3.50 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 99 எக்டேர் நன்செய் நிலங்கள் பயன்பெறும். வனத் துறை நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



2006 ஆகஸ்ட் 31]

**(33) சங்கிலியான்கோயில் ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் வட்டம், அஞ்சுகுளியபட்டி கிராமத்தில் சங்கிலியான்கோயில் ஓடை/சின்னத்து ஓடையின் குறுக்கே குளம் அமைக்க ரூ.1.90 கோடிக்கு 2005 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 110 எக்டேர் நிலங்கள் பயன் பெறும். இத்திட்டம் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**(34) காவிரி வடிநில மற்றும் காவிரி ஆறு பாயும் மாவட்டங்களில் உள்ள பாசனக் கட்டமைப்புகளைச் சீரமைத்தல்**

இத்திட்டத்திற்கு அரசு ரூ.20.00 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கண்ட வேலைகள் பாசன காலம் முடிந்தவுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**(35) பழமையான பாசன ஆதாரங்களை விரைந்து சீரமைக்கும் திட்டத்தின்கீழ் 290 மானாவாரி ஏரிகளின்கீழ் உள்ள 34,194 எக்டேர் நிலங்களுக்கு மீண்டும் பாசன வசதி ஏற்படுத்துதல்**

இத்திட்டத்திற்காக ரூ.62.50 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மார்ச் 2007-ல் இப்பணிகள் நிறைவு செய்யப்படும்.

**(36) மூனாண்டிப்பட்டி ஓடையின் அருகே குட்டை அமைத்தல் (தேனி மாவட்டம்)**

2005 ஆம் ஆண்டில் ஆண்டிப்பட்டி வட்டம், மூனாண்டிப்பட்டி கிராமத்தின் அருகில் உள்ள ஓடையில் 35 எக்டேர் பயனடையும் வகையில் குட்டை அமைப்பதற்காக ரூ.70.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது.

பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

**(37) குறுங்கூர் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

கொடைக்கானல் வட்டம், பூண்டி கிராமம் குறுங்கூர் ஆற்றின் குறுக்கே (அருங்காட்டுக்கண்மாய்) 2005 ஆம் ஆண்டில் ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் கண்மாய் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்மூலம் 68 எக்டேர் நிலம் பயனடையும். 15 சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மேலும், இந்த ஆண்டுக்குள் மீதமுள்ள பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(38) தலைமலைவாரியின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல் (திருச்சி மாவட்டம்)**

முசிறி வட்டம், தோளூர்பட்டி கிராமத்தில் தலைமலைவாரியின் குறுக்கே ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஏரி அமைப்பதற்கு 2005 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் 52 எக்டேர் நிலங்கள் பயனடையும்.

நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

**(39) செந்தாழைக்கரடு அருகே ஏரி அமைக்கும் திட்டம் (கரூர் மாவட்டம்)**

குளித்தலை வட்டம், பாலவிடுதி கிராமத்தில் செந்தாழைக்கரடு அருகே புதிய ஏரி அமைப்பதற்காக ரூ.68.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 2005 ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டது. இதன்மூலம் 33 எக்டேர் பாசன வசதி பெறும்.

இதுவரை 85 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

**(40) காளப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் ஒரு குட்டை அமைத்தல் (நாமக்கல் மாவட்டம்)**

2005 ஆம் ஆண்டில் நாமக்கல் வட்டம், காளப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் புல எண் 26-ல் புதிய குளம் அமைப்பதற்காக ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 12 எக்டேர் நிலம் பயனடையும்.

பணிகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.





**(41) மூங்கில் ஏரியின் குறுக்கே குளம் அமைத்தல் (கிருஷ்ணகிரி மாவட்டம்)**

ஊத்தங்கரை வட்டம், மூங்கில் ஏரி கிராமத்தில் புல எண்கள் 59, 65, 66 மற்றும் 67-ல் குளம் அமைப்பதற்கு ரூ.36.00 இலட்சம் செலவில் அரசு 2005 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியது. இத்திட்டத்தின்மூலம் 15 எக்டேர் நிலம் பயனடையும். மேலும், 31 எக்டேர் பாசன உறுதி பெறும்.

இப்பணிகளை இந்த ஆண்டுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(42) பெரும்பள்ளத்தின் குறுக்கே குளம் அமைத்தல் (கோயம்புத்தூர் மாவட்டம்)**

உடுமலைப்பேட்டை வட்டம், சோமவாரப்பட்டி கிராமத்தில் புல எண் 297-ல் புதிய குளம் அமைப்பதற்காக ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 17 எக்டேர் நிலங்கள் பயனடையும். மேலும் 6 எக்டேர் நிலங்கள் பாசன உறுதி பெறும்.

பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(43) அரசக்கவுண்டனூரில் வாரியின் குறுக்கே குளம் அமைத்தல் (கரூர் மாவட்டம்)**

குளித்தலை வட்டம் செம்பியநத்தம் கிராமத்தில் அரசகவுண்டனூரில் புதிய குளம் அமைப்பதற்காக ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டு தொகையில் 2005 ஆம் ஆண்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 41 எக்டேர் நிலங்கள் பயனடையும்.

பணிகள் நடைபெற்று வருகின்றன.

## (44) 2005-2006 ஆம் ஆண்டு நபார்டு வங்கியின் நிதியுதவியில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் வலதுப்புறக் கால்வாயினை நீட்டித்து பொம்மசமுத்திரம், கரியாமங்கலம், திண்டல் ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டம் | 706.32 | 50 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 2 | கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம் சிக்கரப்பள்ளி கிராமத்தில் மார்கண்டா நதியின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல் | 232.80 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 3 | தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம் ஏ.வேலாயுதபுரம் கிராமத்தில் ஏரி அமைத்தல் | 38.44 | பணிகள் முடிவடைந்தன. |
| 4 | தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், செக்கரக்குடி கிராமத்தில் சொக்கலிங்கபுரம் அருகே ஏரி அமைத்தல் | 40.75 | 75 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 5 | தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், அச்சன்குளம் கிராமத்தில் ஏரி அமைத்தல் | 52.23 | பணிகள் முடிவடைந்தன. |
| 6 | தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், குமாரஎட்டையாபுரம் கிராமத்தில் ஏரி அமைத்தல் | 25.96 | பணிகள் முடிவடைந்தன. |
| 7 | தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், சுப்பலாபுரம் கிராமத்தில் ஏரி அமைத்தல் | 50.30 | 50 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 8 | தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கட்டாரங்குளம் கிராமத்தில் ஏரி அமைத்தல் | 19.31 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |



(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 9 | தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், மேலபாண்டியபுரம் கிராமத்தில் ஏரி அமைத்தல் | 17.53 | 70 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 10 | தூத்துக்குடி மாவட்டம், எட்டயாபுரம் வட்டம், நல்லி உப்போடையின் குறுக்கே நம்பிபுரம் ஏரிக்கு நீர் வழங்க அணைக்கட்டு அமைத்தல் | 113.85 | 70 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 11 | கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தளி கால்வாய் மற்றும் வளையப்பாளையம் திட்டத்தை நவீனப்படுத்துதல் | 440.92 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 12 | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் கீழுள்ள ஓ.ஏ.சி. பாவிலங்கால் அணைக்கட்டு மற்றும் கால்வாயை சீரமைத்தல் | 138.68 | 35 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 13 | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் கீழுள்ள ஓ.ஏ.சி. அரியாபுரம் அணைக்கட்டு மற்றும் கால்வாய் சீரமைத்தல் | 124.23 | பணிகள் முடிவடைந்தன. |
| 14 | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் கீழுள்ள ஓ.ஏ.சி. பெரியணை அணைக்கட்டு மற்றும் கால்வாய் சீரமைத்தல் | 180.86 | 40 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 15 | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் கீழுள்ள ஓ.ஏ.சி. கரியாப்பட்டி அணைக்கட்டு மற்றும் கால்வாய் சீரமைத்தல் | 210.53 | 40 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 16 | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் கீழுள்ள ஓ.ஏ.சி. வடகலூர் அணைக்கட்டு மற்றும் கால்வாய் சீரமைத்தல் | 120.83 | பணிகள் முடிவடைந்தன. |

[2006 ஆகஸ்ட் 31

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 17 | தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பர்கூர் கிளைக் கால்வாயை நவீனப்படுத்துதல் | 514.70 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 18 | தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், சோனஹள்ளி கிராமத்தில் பெணுகொண்டாபுரம் கிளைக் கால்வாயை நவீனப்படுத்துதல் | 426.88 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 19 | திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் வட்டம், பெண்ணையூர் கிராமத்தில் மந்தைகுளம் கால்வாயின் கீழுள்ள பெண்ணையார் ஏரியின் மண் அணையை கல்லணையாக மாற்றுதல் | 44.52 | பணிகள் முடிவடைந்தன. |
| 20 | திருவண்ணாமலை மாவட்டம், ஆலத்தூர் கால்வாயிலிருந்து ஹரிதாரி மங்கலம் ஏரிக்கு ஒரு வழங்கு கால்வாய் அமைத்தல் | 26.06 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 21 | தஞ்சாவூர் மாவட்டம் கல்லணையில் உள்ள காவிரி தலைப்பு மதகினை புனரமைத்தல் | 1738.83 | இரண்டு தொகுப்புகளின் பணி முடிவடைந்துள்ளன. எஞ்சிய மூன்று தொகுப்புகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 22 | தஞ்சாவூர் மாவட்டம் கல்லணையில் உள்ள வெண்ணாறு தலைப்பு மதகினை புனரமைத்தல் | | |
| 23 | தஞ்சாவூர் மாவட்டம் கல்லணையில் உள்ள கல்லணை கால்வாய் தலைப்பு மதகினை புனரமைத்தல் | | |
| 24 | தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகில் மைல் 26/6-ல் உள்ள காவேரி மதகினை புனரமைத்தல் | | |
| 25 | தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகில் மைல் 26/6-ல் உள்ள குடமுருட்டி மதகினை புனரமைத்தல் | | |



2006 ஆகஸ்ட் 31]

### (45) சிறுபாசன ஏரிகளை நவீனப்படுத்தி மேம்படுத்துதல்

### (அ) ஆர்.ஐ.டி.எப்-IX (ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி-IX)

*நபார்டு வங்கியின் கடனுதவியின்மூலம் 17 மாவட்டங்களிலுள்ள 157 மானாவாரி சிறுபாசன குளங்களை ஆர்.ஐ.டி.எப்-IX திட்டத்தின்கீழ் நவீனப்படுத்த ரூ.48.13 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதுவரை 122 ஏரிகளின் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.*

### (ஆ) ஆர்.ஐ.டி.எப்-X (ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி-X)

*நபார்டு வங்கியின் கடனுதவியின்மூலம் 23 மாவட்டங்களிலுள்ள 250 மானாவாரி சிறுபாசன குளங்களை 26,900 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ஆர்.ஐ.டி.எப்-X திட்டத்தின்கீழ் நவீனப்படுத்த ரூ.68.02 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அனைத்துப் பணிகளையும் மார்ச் 2007-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

### (இ) ஆர்.ஐ.டி.எப்-XI (ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதி-XI)

*நபார்டு வங்கியின் கடனுதவியின்மூலம் 16 மாவட்டங்களிலுள்ள 96 மானாவாரி சிறுபாசனக் குளங்களை 7,909 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ஆர்.ஐ.டி.எப்-XI திட்டத்தின்கீழ் நவீனப்படுத்த ரூ.20.59 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. அனைத்துப் பணிகளையும் மார்ச் 2007-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

### 6. புதிய திட்டங்கள்

*2006-2007 ஆம் ஆண்டில் சுமார் ரூ.39.11 கோடி மதிப்பீட்டில் கீழ்க்காணும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:*

[2006 ஆகஸ்ட் 31

### 6.1. சிறப்பு சிறுபாசனத் திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு 2006-2007 |
|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், மோட்டூர் கிராமத்தில் ஒட்டுப்பள்ளம் ஓடையின் குறுக்கே புதிய குட்டையமைத்தல் | 20.00 |
| 2. | வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், வாணியம்பாடி கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து உதயேந்திரம் ஏரிக்கு நீர் வழங்கும் திட்டம் | 60.95 |
| 3. | வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், மேல் மிட்டாலம் கிராமத்தில் உள்ள தடுப்பணையினை மேம்படுத்துதல் | 15.00 |
| 4. | வேலூர் மாவட்டம் வாணியம்பாடி வட்டம், கோத்தகோட்டை கிராமத்தில் போரைகாணாறிலிருந்து இறா குட்டை மற்றும் இதர குளங்களுக்கு நீர் வழங்குவதற்காக புதிய வாய்க்கால் அமைக்கும் திட்டம் | 49.00 |
| 5. | திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், தூசிமாமண்டூர் ஏரியின் உபரி நீர் ஓடையின் குறுக்கே மண்கொண்டத்திற்குப் பதிலாக கல்கொண்டம் அமைத்தல் | 47.23 |
| 6. | ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், தொட்டியன்துறை கிராமம் அருகில் காசிலிங்கம்பாளையம் கிராமம் புல எண் 894-ல் புதிய குளம் அமைக்கும் திட்டம் | 27.16 |
| 7. | கிருஷ்ணகிரி வட்டம், பாலேகுலி கிராமத்தில் காட்டோடையின் குறுக்கே ஒரு குளம் அமைத்தல் | 18.50 |
| 8. | கிருஷ்ணகிரி வட்டம், பெல்லம்பள்ளி கிராமத்தின் அருகில் பவிகானூரில் கரிமலை பள்ளம் குறுக்கே க.ச.எண் 266-ல் தடுப்பணை அமைத்தல் | 12.30 |
| 9. | சேலம் வட்டம், டி. பெரும்பாளையம் கிராமத்தில் க.ச.எண் 44-ல் ஒரு குளம் அமைத்தல் | 15.70 |
| 10. | புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், மீனவேலி கிராமத்தில் நல்லாம்பிள்ளை குளத்திற்கு நீர் வழங்க வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல் | 25.20 |



2006 ஆகஸ்ட் 31]

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு 2006-2007 |
|---|---|---|
| 11. | திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆண்டிப்பட்டி கிராமத்தில், புல எண் 677-ல் கரடி ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் | 16.55 |
| 12. | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி கிராமம் புல எண் 378, 379-ல் கசிவுநீர்க் குட்டை அமைத்தல் | 15.30 |
| 13. | திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம் பழவூர் கிராமத்தில் கட்டைப்புலி ஓடையின் குறுக்கே உள்ள முதல் தடுப்பணையினை கசிவுநீர்க் குட்டையாக மாற்றியமைத்தல் | 20.00 |
| | **மொத்தம்** | **342.89** |

### 6.2. சிறு பாசனத் திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம் கவசம்பட்டு கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே படுகைஅணை மற்றும் பிரிவுச் சுவர் அமைத்தல் மற்றும் கொட்டார் ஆற்றின் படுகை மட்டத்தை சீராக்குதல் | 650.00 |
| 2. | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், சித்தாத்தூர் கிராமத்தின் அருகே கவுண்டன்ய நதியின் குறுக்கே ஏற்கனவே அமைந்துள்ள வடிகுழாய்க்கு கீழே பிரிவுச்சுவர் அமைப்பதோடு நீர் சக்தியை போக்கும் அமைப்பு அமைத்தல் மற்றும் கவுண்டன்ய நதியின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் திட்டம் | 450.00 |
| 3. | தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் மற்றும் பாலகோடு வட்டத்தில் உள்ள ஜெர்தலாவ் வாய்க்காலின் 5.690 மீட்டரிலிருந்து புதிய கால்வாய் அமைத்து தொட்டாம்பட்டி ஏரி, பாப்பாரபட்டி ஏரி மற்றும் கீழ்புறம் அமைந்துள்ள 15 ஏரிகளுக்கு நீர் வழங்க புதிய வாய்க்கால் அமைக்கும் திட்டம் | 629.00 |
| 4. | திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், கோணப்பட்டி கிராமத்தில் கருப்பகோவில் ஓடையின் குறுக்கே புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் | 272.00 |
| | **மொத்தம்** | **2001.00** |

### 6.3. கடலரிப்பு தடுப்புத் திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | தூத்துக்குடி மாவட்டம், திரேஸாபுரத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் | 710.00 |
| 2. | திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தொகுதி, இடிந்தகரை கிராமத்தில் கடல் அரிப்பை தடுக்க தூண்டில் வளைவு அமைத்தல் | 620.00 |
| | மொத்தம் | **1330.00** |

### 7. இதர நிதி நிறுவனங்களின் கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

மாநில அரசின் நிதி ஆதாரங்கள் மட்டும் அல்லாமல் பிற நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெற்று பாசன வசதிகளைப் பெருக்கும் நோக்கத்தில் பல்வேறு திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) நிதியுதவியுடன் 2006-07 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன:

**நபார்டு ஆர்.ஐ.டி.எப். XI-ன்கீழ் அனுப்பப்பட்டு அரசாணை பெறப்பட்ட திட்டங்கள்.**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சோலையாறு அணையினை புனரமைத்தல் | 6.4793 |
| 2. | ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் உள்ள கீழ்பவானி அணையினை சீரமைத்தல் | 7.2941 |
| 3. | கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், ஜி.டி. குப்பம் ஏரிக்கு நீர் வழங்க பர்கூர் ஆற்றின் குறுக்கே கூட்டூர் கிராமத்தில் அணைகட்டும் திட்டம் | 0.3056 |
| 4. | மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சீலநாயக்கன்பட்டி கிராமத்தில் ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் | 1.6968 |



(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|
| 5. | நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், மொடக்காடு கிராமத்தில் புல எண் 44-இல் வாட்சுக்கல் ஓடையின் குறுக்கே புதிய தடுப்பணை கட்டுதல் | 0.2378 |
| 6. | பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், தேவூர் பெரிய ஏரி மற்றும் விளாங்குரி ஏரி தொகுப்புகளுக்கு நீர் வழங்க ஆத்தூர் கிராமத்தில் விளாங்குடி ஓடையின் குறுக்கே அணை கட்டும் திட்டம் | 0.3503 |
| 7. | புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், செங்கமேடு கிராமத்தில் செங்கமேடு பெரிய குளம் மற்றும் இதர குளங்களுக்கு நீர் வழங்க மகாராஜா சமுத்திரம் ஆற்றின் குறுக்கே மண் கொரம்பிற்குப் பதிலாக அணை கட்டும் திட்டம் | 0.9265 |
| 8. | புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திலுள்ள குளங்களுக்கு நீர் வழங்கும் அயங்குடி பிரதான மற்றும் கிளை வாய்க்கால்களைப் புனரமைத்தல் | 0.7325 |
| 9. | புதுக்கோட்டை மாவட்டம், கலக்கமங்கலம் பிரதான வாய்க்கால் எல்.எஸ். 0 கி.மீ. முதல் 9.386 கி.மீ. வரை கலக்கமங்கலம் எண் II கிளை வாய்க்கால் எல்.எஸ். 0 கி.மீ. முதல் 2.068 கி.மீ. வரை கலக்கமங்கலம் எண் II கிளை வாய்க்கால் எல்.எஸ். 0 கி.மீ. முதல் 4.749 கி.மீ. வரை கம்பர்கோவில் வழங்கு வாய்க்கால் நாமருங்கூர் வழங்கு வாய்க்கால், ஆதம்பூர் வழங்கு வாய்க்கால் மற்றும் இதன்மூலம் பயன்பெறும் கூத்தனூர் ஏரி, வேதியான்குடி ஏரி, நீர்விளங்குளம் ஏரி, கோபாலபுரம் ஏரி நாமருங்கூர் ஏரி மற்றும் இதர 23 ஏரிகள் புனரமைத்தல் | 4.2867 |
| 10. | புதுக்கோட்டை மாவட்டம், சிறுமருதூர், பிரதான வாய்க்கால் எல்.எஸ். 0 கி.மீ. முதல் 4.136 கி.மீ. வரை சிறுமருதூர் எண் I வாய்க்கால் எல்.எஸ். 0 கி.மீ. முதல் 2.587 கி.மீ. வரை மற்றும் அதனால் பயன்பெறும் சிறுமருதூர் ஏரி, வட்டத்தூர் ஏரி, கண்டியக்கோட்டை ஏரி, வேதிவையல் ஏரி, முத்துவளக்குடி ஏரி, செல்வநந்தாள் ஏரி, வெளிவயல் ஏரி, கீழ்குடி ஏரி மற்றும் புதுவயல் ஏரிகளைப் புனரமைத்தல் | 1.3333 |
| 11. | சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் உள்ள நீர்க்கசிவு துவாரங்களை எல்.எஸ் 300 முதல் 4540 வரை புனரமைத்தல் | 0.8366 |

[2006 ஆகஸ்ட் 31

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு |
|---|---|---|
| 12. | திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொம்பராஜு பேட்டை கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல் | 0.3301 |
| 13. | திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தேர்வாய் கண்டிகை கிராமத்தில் உள்ள கண்ணன் கோட்டை இஸ்ஸா ராஜநேரி ஏரியின் உபரி நீர் வெளியேறும் மற்றும் தேர்வாய் பெரிய ஏரி உபரி நீர் கலக்கும் இடத்திலும் ஒரு அணை கட்டுதல் | 1.0082 |
| 14. | தூத்துக்குடி மாவட்டம், காயாமொழி ஏரியை மேம்படுத்துதல் மற்றும் காயாமொழி ஏரிக்கு புதிய வழங்கு வாய்க்கால் அமைத்தல் | 0.9246 |
| 15. | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், கரைபோட்டனார் ஏரியின் குறுக்கே உள்ள அணைக்கட்டுகளை புனரமைத்தல் | 1.0158 |
| 16. | திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி திட்டத்தின்கீழ் உள்ள மணிமுத்தாறு பிரதான கால்வாயில் 26.845 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் காரை பூசுதல் | 15.3768 |
| 17. | திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள கென்னடியன் கால்வாயின் மதகுகளைச் சீரமைத்து கால்வாய்க்கு சிமெண்ட் காரை பூசுதல் | 17.7874 |
| 18. | மேட்டூர் கால்வாயினைப் புனரமைத்தல் | 11.3509 |
| | **மொத்தம்** | **72.2733** |

நகர்ப்புறங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கின் தீவிரத்தை உணர்ந்து சென்னை, மதுரை மற்றும் திருச்சியில் நபார்டு வங்கியின் கடனுதவியின் மூலம் பெரிய அளவிலான வெள்ளப் பாதுகாப்பு பணிகள் குறித்து மாநில அரசு 2006-2007ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள்:-

* சென்னை நகரத்தின் தாழ்வான பகுதிகள், வெள்ள நீரில் மூழ்குவதை தடுப்பதற்கு கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய்கள் மற்றும் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் ஆகியவற்றில் வெள்ளக்காலங்களில் ஏற்படும் நீரை கடலில் கொண்டு செல்வதற்கான வெள்ளத்தடுப்புப் பணிகள் ரூ.279.01 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.



2006 ஆகஸ்ட் 31]

* புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வறட்சிப் பகுதிகள் பயனளிக்கும் வகையில் கோரையாறு, குடமுருட்டி ஆறு, அரியாறு மற்றும் உய்யக்கொண்டான் வாய்க்காலில் வரும் வெள்ள நீரை வாய்க்கால் மற்றும் குளங்கள்மூலம் அக்னியாற்றில் திருப்பிவிடும் திட்டம் ரூ.295.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
* மதுரை நகரத்தில் இருப்புப் பாதையை ஒட்டியுள்ள வெள்ள நீர் கால்வாய்களைத் தூர் வாரியும், கரைகளை பலப்படுத்தி உயர்த்தியும் வெள்ள நீர் வைகையில் வடியும் வகையில் மேற்கொள்ளும் திட்டம் ரூ.12.00 கோடியில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**8. ஆர்.ஐ.டி.எப்.-XII-ன்கீழ் நபார்டு வங்கியின் தீவிர பரிசீலனையில் உள்ள திட்டங்கள்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1. | தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை தாலுகாவில் ஜவ்வாது மலையிலிருந்து அங்குத்தி சுனை வழியாக நீர் வழங்கும் கால்வாயை மேம்படுத்துதல் | 0.6826 |
| 2. | தருமபுரி மாவட்டம், அரூர் தாலுகா, வேதாரம்பட்டி கிராமத்தில் உள்ள வேதாரம்பட்டி குளத்தை விரிவாக்கி மேம்படுத்துதல் | 0.1522 |
| 3. | திண்டுக்கல் மாவட்டம், கூவனூத்து கிராமத்தில் கன்னிமார் ஓடையின்(நொச்சி ஓடை) குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | 0.0993 |
| 4. | திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகா, செந்துறை கிராமத்தில் புல எண் 602-ல் பஞ்சன் தாங்கி ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | 0.3886 |
| 5. | கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுகா, நாகம்பள்ளி கிராமத்தில் குடகனாறு ஆற்றின் குறுக்கே உள்ள தடுப்பணையினை மேம்படுத்துதல் | 0.7798 |
| 6. | தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகா, வல்லநதி கிராமத்தில் லாவலூத்து ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | 0.2002 |

[2006 ஆகஸ்ட் 31

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 7. | திருச்சி மாவட்டம், முசிறி தாலுகாவில் உள்ள ரெட்டியாபட்டியிலிருந்து கரிகாலி உத்தானதம்பட்டி வரையில் உள்ள வழங்கு கால்வாய் மற்றும் ருத்திராக்ஷ கோம்பையாற்றில் உள்ள அணைக்கட்டுகளை சீரமைத்தல் | 1.9841 |
| 8. | செயற்கை முறையில் நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தும் 21 திட்டங்கள் | 3.0613 |
| | **மொத்தம்** | **7.3481** |

**9. நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்ட திட்டங்கள்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1. | புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், ஐயாசோலை காட்டுவாரி அணைக்கட்டு மற்றும் வரப்பட்டு கிராமத்தினருகில் உள்ள குளங்களைச் சீரமைத்தல் | 0.5500 |
| 2. | புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாலுகா மீனவேலி கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்து நல்லாம்பிள்ளை குளத்திற்கு நீர் வழங்குதல் | 0.2490 |
| 3. | இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தாலுகாவில் உள்ள ஆர்.எஸ். மங்கலம் பெரியகுளத்தை மேம்படுத்துதல் | 5.2800 |
| 4. | சேலம் மாவட்டம், கெங்கவள்ளி தாலுகா, சொக்கனூர் அக்ரஹாரம் கிராமத்தில் பொன்னையாற்றின் அருகில் புதிய குளம் அமைத்தல் | 4.5500 |
| 5. | சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுகாவில் கப்பலூர் குளத்திற்கு நீர் வழங்க தேனாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல் | 0.2167 |



2006 ஆகஸ்ட் 31]

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 6. | தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் சித்தரைகுடிவாரியினை மேம்படுத்தி சுற்றியுள்ள வயல்களுக்கு வெள்ள நிவாரணம் அளித்தல் | 0.3050 |
| 7. | தேனி மாவட்டம் மற்றும் தாலுகாவில் உள்ள அல்லிநகரம் கிராமத்தில் வீரப்ப அய்யனார் கோயிலின் அருகில் கசிவு நீர்க் குட்டையமைத்தல் | 0.2100 |
| 8. | தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகாவில் பாம்பாற்றின் குறுக்கே கும்பக்கரை நீர் வீழ்ச்சி அருகே நீர்த்தேக்கம் அமைத்தல் | 53.00 |
| 9. | தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, இலட்சுமிபுரம் கிராமத்தில் புல எண் 1678–ல் வடவீரலநாயக்கன்பட்டி வறட்டாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 0.1190 |
| 10. | திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம் போலிவாக்கம் கிராமத்தில் சுண்ணாம்பு கல் ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் | 0.7350 |
| 11. | திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தாலுகா, கிருஷ்ணகுப்பம் மயிலாவாடா கிராமத்தின் அருகே புதிய குளம் அமைத்தல் | 0.1704 |
| 12. | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், சித்தாம்பூர் கிராமத்தில் சித்தாம்பூர் ஏரிக்கு நீர் வழங்க அய்யாறு குறுக்கே அணைகட்டுதல் | 0.9400 |
| 13. | 2005 ஆம் ஆண்டு வெள்ளச் சேதங்களை நிரந்தரமாக சீரமைத்தல்–கரூர், திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் காவிரி மற்றும் கொள்ளிடக் கரைகளை நிரந்தரமாகப் பாதுகாத்தல் | 230.0000 |
| | **மொத்தம்** | **296.3251** |

[2006 ஆகஸ்ட் 31

**10. நீர்ப்பாசன வேளாண்மை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்வள ஆதார மேலாண்மைத் (IAMWARM) திட்டம்**

வேளாண்மையைப் பிரதானமாகக் கொண்ட தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்தி, வருவாயை உயர்த்த முயற்சிகளை மேற்கொள்வது அவசியம் ஆகும். வேளாண்மையில் நீண்ட கால வளர்ச்சியானது நீர்ப்பாசனத்தை விரிவுபடுத்தி, நீர் உபயோகிக்கும் திறனை சிறந்த முறையில் அதிகப்படுத்துவதை சார்ந்துள்ளது. உடனடியாக நீர்வள அமைப்புகளை வலுப்படுத்தலும், ஒருங்கிணைத்தலுமே சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பெருமளவில் உதவி புரிவதில் பெரும் பங்கு வகிக்கும்.

தமிழ்நாடு அரசு, ஜூலை 2000-ல் ஏற்படுத்தி அமைத்த நீர்வள ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் மேலாண்மைக்கான வல்லுநர் குழு, கூடுதல் பரப்பளவை, பயிரிடுதல் திட்டத்தின்கீழ் கொண்டு வர வாய்ப்புகள் மிகக் குறைவே என்றும், ஆனால், திறமையான நீர்வள மேலாண்மை மற்றும் நவீன வேளாண் உத்திகளை கடைப்பிடித்தல் மூலம் பாசன நீருக்கான தேவை குறைக்கப்பட்டு பயிரிடும் பரப்பிலுள்ள குறைபாடுகள் நீக்கப்படும் என்றும் தெரிவித்தது. நீர்வள ஆதார மேலாண்மைத் திட்டத்தினை, பல்வேறு துறைகளை உள்ளடக்கி, நீர்வள ஆதார மேம்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம்மூலம் நிறைவேற்றுவதுதான் ஒரே வழி என்றும் பரிந்துரைத்தது.

பழுதடைந்த நீர்வள கட்டமைப்புகள், தொழில் துறை மற்றும் வீட்டு உபயோகத்திற்காக பெருகி வரும் நீர்த் தேவை போன்றவற்றால் ஏற்பட்ட நீர்ப் பற்றாக்குறை, வேளாண்மை வளர்ச்சி மற்றும் கிராமப்புற வருவாய், பெருமளவில் நீரினை ஆதாரமாகக் கொண்ட திறனை பெருக்குவதன் மூலமே அடைய முடியும். வேளாண்மையில் மாற்றுப் பயிர் மற்றும் கூடுதல் மதிப்புள்ள பதப்படுத்துதல், தனியார் முதலீடு அதிகப்படுத்துதல் மூலம் வேளாண்மை அல்லாத துறையில் கிராமப்புற வேலைவாய்ப்புகள் மற்றும் கிராமப்புற வருவாயை உயர்த்தவும் ஏதுவாக இருக்கும். கூடுதலாக கிடைக்கப்பெறும் நீர் மற்றும் சொட்டு நீர்ப் பாசனம் மற்றும் தெளிப்பான் பாசனம்மூலம் மேம்படுத்தப்பட்ட பாசன திறன்மூலம் ஆண்டு முழுவதும் பயிரிடுவதற்கும் வேளாண் மற்றும் பதப்படுத்துதலில் வேலை வாய்ப்புகளை அளிப்பதன்மூலம் கிராமப் புற பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவும்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட வேளாண் வருவாய் ஆகியவை நீர்ப்பாசன வேளாண்மையில் முடிவான பலன்கள் என உணர்தல் வேண்டும்.



2006 ஆகஸ்ட் 31]

இப்பின்னணியில் நீர்வள ஆதாரத் தொகுப்பு திட்டம்-II-ன் கருத்துரு ரூ.3,900 கோடி திட்ட மதிப்பீட்டில் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டு தற்போது IAMWARM என மறு பெயரிடப்பட்டு திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

புதிய திட்டம் (IAMWARM) பின்வரும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படவுள்ளது :

* பொருளாதாரக் கட்டமைப்பு, உழவியல், நீர்வளம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் தொகுப்பாக ஒவ்வொரு துளி நீருக்கும் கூடுதல் பயிர்கள், வருவாய் மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவற்றைக் கொண்டு நீரின் அதிக அளவு உற்பத்தித் திறனை அடைதல்.
* நீர் உபயோகத் திறனை அதிகரித்தல்.
* பல்வேறு தட்பவெட்ப நிலைகளுக்கேற்ப மாற்றுப் பயிர் வேளாண்மை.
* நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்புமூலம் கூடுதல் வேளாண்மை வருவாய்.
* மேலும் சிறந்த விற்பனை உக்திகள் மற்றும் தொழில்நுட்ப முயற்சிகள்மூலம் வேளாண் பொருட்களுக்கு நல்ல விலைகளை பெற உதவுதல்.

தமிழகத்தில் நதி வடிநிலம் மற்றும் உப வடிநில அமைப்புக்கு உட்பட்டு ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மைமூலம் பாசன நீர் வழங்குதலுக்கான சேவை மற்றும் நீர்ப் பாசன வேளாண் உற்பத்தி திறனை அதிகப்படுத்துதல் இத்திட்டத்தின் வளர்ச்சி நோக்கங்கள் ஆகும்.

அனைத்துத் துறைகளின் பணிகள் மற்றும் பயன்பெறுவோரை ஒருங்கிணைத்தல், மீன் வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு மேம்பாடுமூலம் வேளாண் வருவாயை அதிகப்படுத்துதல் ஆகியவையே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

**10.1. தொகுதி-I - பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல்**

பாசன வேளாண்மையின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துதல் இத்தொகுதியின் நோக்கமாகும். இப்பணிகளுக்கான திட்ட உதவி பின்வருமாறு:

* உப வடிநில அமைப்பில் நீர்ப் பாசன அமைப்புகளை நவீனப்படுத்துதல்.
* நீர்வள நிலைகளை பங்களிப்பு மற்றும் தொலைதூர நோக்குப் பார்வையில் நவீனப்படுத்துதல் (மரபு சார்ந்த நீர்நிலைகளை சீரமைத்தல் மற்றும் சரி செய்தல்)
* ஒரு மில்லியன் எக்டேர் அளவிற்கான விநியோக அமைப்புகள் மற்றும் அதன் தொடர்பான கட்டமைப்புகளை நவீனப்படுத்துதல்.
* நீர்ப்பாசன வேளாண்மைக்கான நிறுவனங்களை நவீனப்படுத்துதல்.
* நீர்வள ஆதார அமைப்பு, வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பால்வள உற்பத்தி, தொழில்நுட்பத் துறைகளுக்கிடையேயான நெருங்கிய ஒருங்கிணைப்பு.
* தொலைநோக்கு வேளாண் நவீனப்படுத்துதல்.
* தோட்டக்கலை பயிர்களைக் கொண்ட மாற்றுப் பயிர்த் திட்டம்.
* பாசன நீர் சிக்கன மேலாண்மை.
* ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு ஊட்டச்சத்து மேலாண்மை.
* விரிவாக்கப் பணிகளுக்கான அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சி.

### 10.2. தொகுதி-II நீர்வள மேலாண்மை

நீர்வள ஆதார மேலாண்மை, நீர்வள ஆதாரங்களுக்கான மேம்படுத்தப்பட்ட தொலைநோக்கு வேளாண்மைக்கென கொள்கை மற்றும் நிறுவன அமைப்புகளை உறுதிப்படுத்துதலே இதன் நோக்கமாகும். இதற்கான நடவடிக்கைகள் பின்வருமாறு:-

#### (1) மாநில நிலை

(அ) மாநில நீர்வள ஆதார அமைப்பினை உருவாக்குதல் (SWARA)

(ஆ) நீர் முறைப்போக்கியை உருவாக்குதல்.

(இ) மாற்றக்கூடிய நீர் மேலாண்மையை அமல்படுத்த தகுந்த கொள்கையினை உருவாக்குதல்.





#### (2) வடிநில நிலை

(அ) ஆற்றுப் படுகை மேம்பாடு மற்றும் மேலாண்மை குழுமங்களை உறுதிப்படுத்துதல், கூடுதல் அதிகாரங்கள் வழங்குதல் மற்றும் விரிவுபடுத்தல்.

(ஆ) வடிநிலம் மற்றும் உப வடிநில திட்ட மேம்பாடுகளுக்காக சமூக மற்றும் சுற்றுச்சூழல் கணிப்புகளை உருவாக்குதல்.

(இ) மாநிலத்தின் அனைத்து நீர்ப்பாசன பகுதிகளிலும் நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் (PIM) அமைப்பதன்மூலம் நீர்ப் பாசன பங்கேற்பு மேலாண்மையை உறுதிபடுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல்.

#### (3) நீர்வள ஆதார ஆராய்ச்சி நிதி (WRRF)

விழிப்புணர்ச்சியை அதிகரித்தல், பயன்படும் வகையான ஆராய்ச்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் கூட்டு முயற்சிமூலம் உள்ளூர் பங்களிப்பை அதிகரித்தல்.

இந்நோக்கத்தை அடைய, திட்ட தயாரிப்பு, செயலாக்கம் மற்றும் தாக்க கணிப்புக்காக பன்முகத் திட்ட அலகு உருவாக்கப்பட்டது. இவ்வலகு பொதுப் பணித் துறை செயலாளர் தலைமையில் ஒருங்கிணைப்புக்கென தனி திட்ட இயக்குநரின்கீழ் செயல்படுகிறது. நீர் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் துறை அலுவலர்கள் இத்திட்ட அலகில் பங்கேற்கிறார்கள் :

(1) பொதுப் பணி
(2) வேளாண்மை
(3) வேளாண் பொறியியல்
(4) கால்நடை வளர்ப்பு
(5) வேளாண்மைப் பல்கலைக்கழகம்
(6) வேளாண்மை விற்பனை
(7) தோட்டக் கலை
(8) மீன் வளர்ப்பு
(9) சமூக நலம்
(10) தகவல் தொழில்நுட்பம்
(11) மாசுக் கட்டுப்பாடு வாரியம்
(12) சுற்றுப்புறசூழல் மற்றும் வனம்

[2006 ஆகஸ்ட் 31

### 10.3. திட்டச் செயலாக்கம்

தமிழகத்தில் 17 ஆற்று வடிநிலங்களில் 127 உப வடிநிலங்கள் உள்ளன. ஒவ்வோர் உப வடிநிலத்திலும் பங்கேற்போரின் ஆலோசனையுடனும், சார்புத் துறைகளின் கூட்டுறவுடனும் 42 உப வடிநிலங்களுக்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு உலக வங்கிக்கு அனுப்பப்பட்டன. உலக வங்கி உப வடிநிலங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்து ஒரு வடிநிலத்திற்கு ஓர் உப வடிநிலம் (காவேரி தவிர) என திட்டச் செயலாக்கத்தை தொடங்க ஆலோசனை வழங்கியுள்ளது.

மற்ற வடிநிலங்களுக்கும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு 2007-2008 முதல் 5 ஆண்டுகளுக்கு திட்டச் செயலாக்கத்தை துவக்க உலக வங்கி ஆலோசனை வழங்கியுள்ளது. இதன்படி நீர் உபயோகிப்போர் சங்கங்களின்மூலம், கலந்தாலோசித்து திட்ட அறிவுரைகள் தயாரிக்கப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ளது. சாகுபடி இடைவெளிப் பரப்பினை சரி செய்தல், தற்போதைய ஆயக்கட்டு பரப்பினை உறுதிப்படுத்துதல் மற்றும் மறைமுக மதிப்புக் கூடுதல் ஆகியவற்றின்மூலம் பெறப்படும் ஆதாயங்களை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார ஆய்வின் பேரில் திட்டத் தொகுதிகளும், அதன் அளவும் முடிவாகும். இத்திட்டம் IAMWARM திட்ட இயக்குநர் அவர்களால் சார்புத் துறைகள்மூலம் செயலாக்கப்படும். நமது நாட்டில் இத்திட்டம் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும்.

### 11. மத்திய அரசு நிதி உதவியின்மூலம் முன்னோடித் திட்டமாக நீர்நிலைகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல்

விழுப்புரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் முறையே ரூ.9.372 கோடி மற்றும் ரூ.1.222 கோடி திட்ட மதிப்பீட்டில் முன்னோடித் திட்டமாக மத்திய அரசின் நிதி உதவியின்மூலம் நீர்நிலைகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் சீரமைக்கும் பணிக்காக மத்திய நீர் ஆணையம்மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டங்களை ஆய்வு செய்ய, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களைத் தலைவராகவும், தன்னார்வ நிறுவன பிரதிநிதியை உள்ளடக்கிய, மாவட்ட அளவில் செயல்படுத்தும் குழு (DLIC) அமைக்கப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் கூடுதலாக 23 ஏரிகளுக்கு ரூ.8.06 கோடிக்கு திட்டக் கருத்துரு தயாரிக்கப்பட்டு, அனுமதிக்காக மத்திய நீர் ஆணையம்மூலம் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 31]

இத்திட்டத்தின் கால அளவு இரண்டு வருடங்கள் ஆகும். மார்ச் 2007-ல் முடிவடையும் வகையில் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

### 12. உலக வங்கியின் நிதியுதவியுடன் தேசிய கொள்கையின்கீழ் பாசன நீர் நிலைகளை செப்பனிடுதல் மற்றும் புதுப்பித்தல்

மத்திய அரசு, உலக வங்கியின் நிதியுதவியுடன் பல்வேறு மாநிலங்களில் பாசன நீர்நிலைகளை பழுதுபார்த்து புனரமைக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. ஏரிப் பாசனத்தில் முன்னோடியான தமிழ்நாடும் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவினத்தை 75:25 என்ற விகிதத்தில் மாநில மற்றும் மத்திய அரசுகள் ஏற்கும். 25 சதவிகிதத்தை மத்திய அரசு மானியமாகவும், மீதமுள்ள 75 சதவிகிதத்தை உலக வங்கிமூலம் கடனாகவும் மத்திய அரசு பெற்றுத் தரும். இத்திட்டத்திற்காக ரூ.2,600 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள 40 எக்டேருக்கு மேல் பாசன வசதி அளிக்கும் 10,540 முறை மற்றும் முறைசாரா ஏரிகளும் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் பராமரிப்பில் உள்ள 20 முதல் 40 எக்டேர் வரை பாசன வசதி அளிக்கும் 8,600 ஏரிகளும் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.

### 13. கடலரிப்புத் தடுப்புத் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள கடற்கரையின் மொத்த நீளம் 1,076 கிலோமீட்டர் ஆகும். கிழக்குக் கடற்கரையில் சமீப காலங்களில் கடலரிப்பு மிக அதிக அளவில் ஏற்பட்டு வருகிறது. கடலரிப்பைத் தடுத்து கடற்கரைப் பகுதிகளை பாதுகாக்க அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

எண்ணூர் அதிவேக சாலையில் இராயபுரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 9.20 கிலோ மீட்டர் நீளம் மிகவும் கடலரிப்பால் பாதிப்புக்குள்ளான பகுதியாகும். கடற்கரையையும், எண்ணூர் அதிவேக சாலையையும் பாதுகாக்க கல் சுவர்கள் [Rubble Mound Sea (RMS) Wall] அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ.57.69 கோடி மதிப்பீட்டில் ஹட்கோ நிறுவன நிதியுதவியுடன் கடலரிப்புத் தடுப்பு மற்றும் கடற்கரைப் பாதுகாப்பு திட்டங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

[2006 ஆகஸ்ட் 31

தேசிய கடற்பகுதி பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் (NCPP), ஏழு மாவட்டங்களில் 13.824 கிலோ மீட்டர் நீளத்திற்கு, அதிக பாதிப்புக்குள்ளான 29 இடங்களில் கடலரிப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.169 கோடி மதிப்பீட்டில் மத்திய நீர் குழும நெறிமுறைகளின்படி திட்டம் வகுக்கப்பட்டு, செப்டம்பர் 2002-ல் மத்திய நீர் குழுமத்திற்கு அனுப்பப்பட்டது. இத்திட்டம் தேசிய கடற்பகுதி பாதுகாப்புத் திட்ட முதல் பகுதியில் (Phase–I) சேர்க்கப்பட்டு, அந்நிய நிதி உதவி பெறுவதற்காக மத்திய நீர்வளத் துறை அமைச்சகத்திற்கு பிப்ரவரி 2003-ல் மத்திய குழுமத்தால் அனுப்பப்பட்டுள்ளது.

தேசிய கடற்பகுதி பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள கடலரிப்பினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள பெரியதாளை பகுதியில் கடலரிப்புத் தடுப்புத் திட்டம் மத்திய அரசு நிதியுதவியின்கீழ் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டுத் தொகையில் மத்திய அரசின் பங்கு ரூ.2.32 கோடியும் மாநில அரசின் பங்கு ரூ.3.68 கோடியும் ஆகும். மேற்கண்ட பணிகள் முடிவடைந்துள்ளன.

## 14. சென்னைப் பெருநகர நீர் வழிகளை செப்பனிட்டுச் சீரமைத்தல்

சென்னை நகரத்தில் 87.80 கிலோ மீட்டர் நீளத்திற்கு 10 நீர்வழிப் பாதைகள் உள்ளன. இந்த நீர்வழித் தடங்களில் சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் கலப்பதாலும் திடக் கழிவுகளை மக்கள் போடுவதாலும், சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்பட்டு சுகாதாரக் கேடு ஏற்படுகின்றது. ஆறுகள் கடலில் கலக்கும் இடங்களில் மணல் திட்டுகள் ஏற்படுவதாலும், தூர்ந்து போவதாலும், ஆக்கிரமிப்புகளாலும், நீர் கொண்டு போகும் கொள்ளளவுத் திறன் குறைந்து மிகுதியாக மழை பெய்யும் காலங்களில் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தினால் சூழப்படுகின்றன.

இவ்வாறு ஏற்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு சென்னைப் பெருநகர நீர்வழிப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.1,700 கோடி முதலீட்டிற்கு மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இதில், 1998 ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர நீர் வழி மற்றும் வடிகால்களை செப்பனிட்டு மேம்படுத்தும் ஒருங்கிணைந்த திட்டத்திற்கு, ரூ.300.00 கோடிக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தினை ஹட்கோவிடம் நிதியுதவி பெற்று பொதுப் பணித் துறை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சிமூலம் செயல்படுத்த சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமம் தொடர்பு முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 31]

இத்திட்டத்தின்மூலம் சிறிய மற்றும் பெரிய அளவிலான பணிகள் தொகுப்பு வாரியாக மேற்கொள்ளப்பட்டன.

(ரூபாய் கோடியில்)

| தொகுப்பு எண் | திட்டத்தின் பெயர் | திருத்திய மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| I | கூவம், விருகம்பாக்கம் – அரும்பாக்கம் வடிகால் – ஓட்டேரி நல்லா – மேம்படுத்துதல் | 0.90 | முடிவடைந்துள்ளது. |
| II | வடக்கு, மத்திய மற்றும் தெற்கு பக்கிங்காம் கால்வாய் மேம்படுத்துதல் | 30.81 | முடிவடைந்துள்ளது. |
| III | அடையாறு ஆற்றை மேம்படுத்துதல் | 46.06 | 58 சதவீதம் முடிவடைந்துள்ளது. |
| IV | சென்னைப் பெருநகர பகுதிகளில் அம்பத்தூர், கொரட்டூர், மாதவரம், செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரி உபரி நீர் வடிகால் மேம்படுத்துதல் மற்றும் நிலம் கையகப்படுத்துதல் | 56.21 | 60 சதவீதம் முடிவடைந்துள்ளது. |
| V | விருகம்பாக்கம் – அரும்பாக்கம், ஓட்டேரி நல்லா ஆகிய வடிகால்களை மேம்படுத்துதல் மற்றும் வேளச்சேரி பகுதிக்கு வடிகால் வசதி செய்தல் | 10.46 | 85 சதவீதம் முடிவடைந்துள்ளது. |
| VI (அ) | கூவம் ஆறு மேம்படுத்துதல்– பெரியார் பாலத்திலிருந்து கடல் முகத்துவாரம் வரை | 2.20 | முடிவடைந்துள்ளது. |
| (ஆ) | பெரியார் பாலத்திலிருந்து கோயம்பேடு வரை | 17.45 | பணி மேற்கொள்ளப்பட உள்ளது. |
| | **மொத்தம்** | **164.09** | |

[2006 ஆகஸ்ட் 31

## 15. கிருஷ்ணா குடிநீர் வழங்குத் திட்டம்

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் கிருஷ்ணா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஸ்ரீசைலம் நீர்த் தேக்கத்திலிருந்து சென்னை நகர குடிநீர்த் தேவைக்காக 15 டி.எம்.சி. அடி தண்ணீர் வழங்கும் நோக்குடன் கிருஷ்ணா நீர் வழங்கும் திட்டம் துவக்கப்பட்டது. ஸ்ரீசைலம் நீர்த் தேக்கத்திலிருந்து வெளியேற்றப்படும் நீர் வெள்ளக்கோடு, சோமசீலா மற்றும் கண்டலேறு நீர்த் தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள்மூலம் 400 கிலோ மீட்டர் தூரத்திற்கு வருகின்றது. தமிழ்நாடு எல்லையில் தண்ணீர் வரத்து, இழப்புகள் தவிர்த்து 12 டி.எம்.சி. அடி ஆகும்.

இத்திட்டம் 1983 ஆம் ஆண்டில் தமிழகம் மற்றும் ஆந்திர மாநிலங்களிடையே ஏற்பட்ட ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் ஆகும். 1996 ஆம் ஆண்டில் போதுமான அளவிற்கு கால்வாய் பணிகள் முடிவடைந்தவுடன் சென்னை நகருக்கு கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. 1996 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசு தனது பங்காக ரூ.512.00 கோடி ஆந்திரபிரதேச அரசுக்கு இத்திட்டத்திற்காக வழங்கியுள்ளது.

**1996 ஆம் ஆண்டு முதல் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தமிழ்நாடு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு விவரம் பின்வருமாறு:-**

| ஆண்டு | தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு (டி.எம்.சி. அடியில்) |
|---|---|
| 1996-1997 | 0.076 |
| 1997-1998 | 2.290 |
| 1998-1999 | 2.810 |
| 1999-2000 | 1.830 |
| 2000-2001 | 6.688 |
| 2001-2002 | 0.400 |
| 2002-2003 | 3.262 |
| 2003-2004 | 0.210 |
| 2004-2005 | 2.717 |
| 2005-2006 | 2.090 |
| 2006-2007 (20ஆம் தேதி ஆகஸ்ட் முதல் 28 ஆகஸ்ட் வரை) | 0.254 |



2006 ஆகஸ்ட் 31]

ஆந்திரப் பிரதேச எல்லைக்குள் கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து தமிழ்நாடு எல்லை வரையிலான 80 கிலோ மீட்டர் சத்தியசாய் கால்வாய்ப் பகுதியில் கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணி 2005-ல் முடிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 23 கிலோ மீட்டர் நீளத்திற்கு சத்தியசாய் கால்வாயில் கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆந்திரப் பிரதேச அரசு மேலும் 58 கிலோ மீட்டர் தொலைவிற்கு கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணியை ஆகஸ்டு 2007ஆம் ஆண்டுக்குள் முடித்து விடுவதாக உறுதி அளித்துள்ளது.

தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட பகுதியில் மண்ணின் மோசமான தன்மை காரணமாக கால்வாயில் சரிவு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மண் சரிவு ஏற்படும்போதெல்லாம் அதனைச் சீரமைப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டிலிருந்து கட்டம்கட்டமாக நிரந்தர கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, உள்ளாட்சித் துறை அமைச்சர், உயர் கல்வித் துறை அமைச்சர் மற்றும் அலுவலர்கள் 5-8-2006 அன்று ஐதராபாத்தில் மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து 15-8-2006 முதல் சென்னைக் குடிநீர்த் தேவைக்காக நீரை விடுவிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தனர். ஆந்திர அரசு சென்னைக் குடிநீர்த் தேவைக்காக 15-8-2006 அன்று நீரை விடுவித்துள்ளது.

## 16. தமிழ்நாட்டில் பக்கிங்காம் கால்வாயை உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துத் தடமாக மேம்படுத்துதல்

இந்திய உள்நாட்டு நீர்வழிகள் ஆணையம், பக்கிங்காம் கால்வாயினை மேம்படுத்த தமிழக அரசினைக் கேட்டுக்கொண்டது. இந்திய உள்நாட்டு நீர்வழிகள் ஆணையம் பக்கிங்காம் கால்வாயை உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்கு உகந்ததாக மாற்றுவதற்கு ஏதுவாக, பக்கிங்காம் கால்வாயின் வடக்கு மற்றும் தெற்குக் கால்வாயின் 100 மீட்டர் அகலத்திற்கு அதன் எல்லைகளை நிர்ணயித்து, இந்திய உள்நாட்டு நீர்வழி அதிகார குழுமத்திற்கு அறிக்கை அனுப்பும்படி, தமிழ்நாட்டில் 4 மாவட்ட எல்லைக்குள் உள்ள மாவட்ட ஆட்சியர்களை நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

இதனடிப்படையில், பக்கிங்காம் கால்வாயை மேம்படுத்தி உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துத் தடமாக மாற்றுவற்கு ஏதுவாக அரங்கம் முதல் மரக்காணம் வரை நில அளவை எடுக்க வருவாய்த் துறை அதிகாரிகளுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட நில அளவைப் பணிகளை முடித்த பிறகு தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிதி உதவிக்காக மத்திய அரசிற்கு அனுப்பப்படும்.

## 17. சென்னை மாநகரத்திற்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டம்

***17.1.*** சென்னை மாநகரத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ரூ.60.00 கோடி செலவில் கொள்ளிடத்திலிருந்து நீர் கொண்டு வரும் வடவாறு வாய்க்காலை மேம்படுத்துதல் மற்றும் வீராணம் ஏரியை தூர் வாருதல், மேலும், வீராணம் ஏரியின் உயரத்தை 2 அடி உயர்த்தி, கொள்ளளவினை 935 மில்லியன் கன அடியிலிருந்து 1,485 மில்லியன் கன அடியாக அதிகரித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியது. இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதனால், சென்னை மாநகரத்திற்கு குடிநீர் வழங்குவதோடு மட்டுமல்லாமல் 18,045 எக்டேர் நிலங்கள் பாசன உறுதி பெறும். ரூ.110.95 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் மார்ச் 2007-ல் முடிக்கப்படும்.

***17.2.*** அடையாறு ஆற்றின் குறுக்கே நந்தம்பாக்கம், மணப்பாக்கம், கவுல்பஜார் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தின் அனகாபுத்தூர் ஆகிய இடங்களில் தடுப்பு அணைகள் கட்டும் பணிக்காக, 2004 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ரூ.12.37 கோடிக்கு அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம், மழைநீர் முழுமையாக சேகரிக்கப்பட்டு அருகிலுள்ள இடங்களில் நிலத்தடி நீர் சுழற்சி முறையில் நன்றாக உயரும். இத்திட்டம் செயல்படுத்தப்படும் இடங்கள், நிலத்தடி நீர் நன்றாக உயர்வதற்கான சாத்தியக்கூறுகளை பார்த்த பிறகே தெரிவுசெய்யப்பட்டன.

நந்தம்பாக்கம் அருகில், அடையாறுக்கு குறுக்கே ஒரு தடுப்பணை கட்டும் பணி ரூ.3.25 கோடி மதிப்பில் முதற்கட்டமாக (Phase I) எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்போது பணி முன்னேற்றத்தில் உள்ளது.

மணப்பாக்கம் அருகே தடுப்பணை அமைக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். நந்தம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம் பகுதிகளில் அமைக்கப்படும் தடுப்பணைகளின் செயல்பாட்டினைப் பொறுத்து





கவுல்பஜார் மற்றும் அனகாபுத்தூர் பகுதிகளில் தடுப்பணைப் பணி மேற்கொள்ளப்படும்.

பருத்திப்பட்டு மற்றும் கண்ணம்பாளையம் அருகில், கூவம் ஆற்றின் குறுக்கே இரு பழைய அணைக்கட்டுப் பணிகள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1.33 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இந்த இரு பணிகளினால் ஆவடி, கண்ணம்பாளையம், பருத்திப்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருவேற்காடு ஆகிய பகுதிகளில் நிலத்தடி நீர் உயர வாய்ப்புள்ளது.

## 18. ஆழிப் பேரலை (சுனாமி)

***18.1.*** ஆழிப் பேரலை (சுனாமி) தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளை 26-12-2004 அன்று கடுமையாகத் தாக்கியது. இதனால் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டங்களின் கடலோரப் பகுதிகள் கடுமையாகப் பாதிப்படைந்தன.

பொதுப் பணித் துறை நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக பொக்லைன், ஜே.சி.பி, டிப்பர்கள் போன்ற இயந்திரங்களை வழங்க நடவடிக்கை மேற்கொண்டது. நிவாரணப் பணிகளை திறம்பட மேற்கொள்ள மாவட்ட நிருவாகத்திற்கு பொதுப் பணித் துறை அனைத்து ஒத்துழைப்பையும் நல்கியது.

தமிழ்நாட்டின் மொத்த கடற்கரை நீளம் 1,076 கிலோ மீட்டர் ஆகும். இதில் 1,016 கிலோ மீட்டர் வங்காளவிரிகுடா பகுதியையும் 60 கிலோ மீட்டர் நீளம் அரபிக்கடல் பகுதியையும் சார்ந்தது. புயல், சூறாவளி, குறைந்த காற்றழுத்தம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் தமிழ்நாடு அதிக அளவில் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகிறது. கடலரிப்பிலிருந்து கடலோரப் பகுதியினை பாதுகாப்பதற்காக கடற்கரைப் பகுதிகளில் ஆர்.எம்.எஸ். சுவர், தூண்டில் வளைவு, தடுப்புச் சுவர் போன்ற பணிகளை மேற்கொள்வது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடலில் அநேக நதிகள் கலக்கின்றன. இதைத் தவிர கடற்கரை பகுதியில் சிறு சிறு ஓடைகள், சதுப்பு நிலங்கள், சதுப்பு நிலக் காடுகள், உப்பங்கழிகள், சிறிய மற்றும் பெரிய மீன்பிடி துறைமுகங்கள் அமைந்துள்ளன. இவைகள் அனைத்தும் இருக்கும் தூரம் 435 கிலோ மீட்டர் ஆகும். மொத்தம் 1,076 கிலோ மீட்டர் தூரத்தில், 435 கிலோ மீட்டர் தூரம் நீங்கலாக மீதமுள்ள 641 கிலோ மீட்டர் தூரத்திற்கு கடற்கரையை இயற்கைச் சீற்றங்களிலிருந்து

[2006 ஆகஸ்ட் 31

பாதுகாக்க வேண்டியுள்ளது. இந்த 641 கிலோ மீட்டர் நீளத்தில் ஏற்கெனவே 40 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆர்.எம்.எஸ். சுவர்கள், தூண்டில் வளைவுகள், தடுப்புச் சுவர்கள் ஆகியவை கட்டப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 601 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக்கழகம் கடலோரப் பகுதிகளில் விரிவான ஆய்வு செய்து, அதிகமாக பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து, அந்தப் பகுதிகளை கடலரிப்பிலிருந்து பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை பரிந்துரை செய்துள்ளது. இதன் அடிப்படையில் ரூ.695.99 கோடி அளவில் கடலரிப்புத் தடுப்புத் திட்டப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, நிதியுதவிக்காக மைய அரசு மற்றும் மத்திய திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. நிதியுதவி பெறுவதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2006-2010-ல் கடற்கரை பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.50.00 கோடி தொகையை பன்னிரண்டாவது நிதிக் குழு தமிழகத்திற்கு ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சென்னை, இந்திய தொழில்நுட்பக்கழகம் அளித்த அறிக்கையின்படி கீழ்க்காணும் 30 இடங்களில் முன்னுரிமையின் அடிப்படையில் கடலரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள உயர் மட்டக் குழு தெரிவு செய்துள்ளது.

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1. | கன்னியாகுமரி மாவட்டம், இரட்சகர் தெருவில் கடலரிப்பைத் தடுக்க தூண்டில் வளைவு அமைக்கும் பணி | 4.80 |
| 2. | கன்னியாகுமரி மாவட்டம், நீரோடித் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 1.50 |
| 3. | கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.80 |
| 4. | கன்னியாகுமரி மாவட்டம் வள்ளவிளைத் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.80 |



2006 ஆகஸ்ட் 31]

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 5. | கன்னியாகுமரி மாவட்டம் சின்னத் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.30 |
| 6. | கன்னியாகுமரி மாவட்டம், இரவிபுத்தன் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.30 |
| 7. | கன்னியாகுமரி மாவட்டம், தூத்தூர் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.23 |
| 8. | கன்னியாகுமரி மாவட்டம், பூத்துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.33 |
| 9. | கன்னியாகுமரி மாவட்டம், இறையமான் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.22 |
| 10. | கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்பட்டினம் மற்றும் முள்ளூர் துறையில் கடலரிப்புத் தடுப்பு சுவர் கட்டுதல். | 0.60 |
| 11. | கன்னியாகுமரி மாவட்டம், கோடி முனையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.33 |
| 12. | கன்னியாகுமரி மாவட்டம், பெரிய விளைத் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.27 |
| 13. | கன்னியாகுமரி மாவட்டம், பெரிய காடு பகுதியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.32 |
| 14. | கன்னியாகுமரி மாவட்டம், கோவளத்தில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.20 |
| 15. | தாழங்குப்பம் முதல் நெட்டுக்குப்பம் வரை கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைத்தல் | 2.30 |
| 16. | தந்திரியான் குப்பத்தில் தூண்டில் வளைவு அமைத்தல். | 2.62 |
| 17. | விழுப்புரம் மாவட்டம், வானூர் தாலுகா, கோட்டக்குப்பம் கிராமத்தில் வளைவு பாதை கட்டுமானம் எல்.எஸ். 126 முதல் 946 வரை | 0.99 |

[2006 ஆகஸ்ட் 31

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 18. | அன்னை சிவகாமி நகர் குப்பம் முதல் இந்திரா நகர் குப்பம் வரை வட சென்னையில் கடல்நீர் புகுவதைத் தடுக்க கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல். | 0.99 |
| 19. | கடலூர் மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளை பாதுகாக்க தாழன்குடா முதல் தேவனாம்பட்டினம் வரை கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல். | 3.00 |
| 20. | பெரிய காடில் தூண்டில் வளைவு நீட்டிப்பு | 4.75 |
| 21. | மணக்குடியில் தூண்டில் வளைவு (2 x 200 = 400 மீ) | 6.00 |
| 22. | இணையம்புத்தன் துறையில் தூண்டில் வளைவு 240 மீ | 3.50 |
| 23. | அரியா நாட்டூரில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் | 1.44 |
| 24. | வேளாங்கன்னியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் | 0.53 |
| 25. | பூம்புகாரில் கடலரிப்புச் தடுப்புச் சுவர் | 1.78 |
| 26. | தரங்கம்பாடியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் | 3.05 |
| 27. | கடுவையாறு மற்றும் கல்லாறு பகுதியில் தாங்கு சுவர் அமைத்தல். | 3.20 |
| 28. | கூவம் ஆற்றில் நிலையான முகத்துவாரம் (+)4.200 மீ. வரை அமைய வடக்குப் பக்கத்தில் தற்போது உள்ள மண் தோணித்துறை வரை தடுப்புச் சுவர் கட்டுதல். | 1.32 |
| 29. | மாற்றுப்பாதை வழியே ஆற்று முகத்துவாரத்தில் மண் செல்வதை தடுக்க தெற்குப்புறத்தில் உள்ள தடுப்புச் சுவரை (+) 2.50 மீ. இருந்து 4.20 மீ. வரை உயர்த்துதல். | 0.90 |
| 30. | எளிதாக வெள்ள நீர் செல்லவும் மற்றும் கடல் நீர் அலைகள் பரிமாற்றம் ஏற்படவும் கூவம் ஆற்று முகத்துவாரம் மற்றும் பாலங்கள் உள்ள இடங்களில் உள்ள மண்மேடுகளை மன்றோ பாலம் வரை அகற்றுதல். | 0.60 |
| | மொத்தம் | 47.97 |



2006 ஆகஸ்ட் 31]

## 18.2. அவசரகால சுனாமி புனரமைப்புத் திட்டம்

*நாகப்பட்டினம் மாவட்டத்தின் வெவ்வேறு கால்வாய்களில் தூர் வாருதல் மற்றும் கரைகளை பலப்படுத்தும் பணிகளை உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்துவதற்காக, அக்டோபர் 2005-ல் ரூ.19.271 கோடிக்கு நிருவாக ஒப்புதல் கீழ்க்காணும் பணிகளுக்காக அரசு வழங்கியுள்ளது.*

(ரூபாய் கோடியில்)

| வ. வண் | பணி விவரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம் கால்வாயில் L.S.0 கி.மீ. முதல் 14.8 கி.மீ. வரை தூர் வாருதல், அகலப்படுத்துதல் மற்றும் கரைகளை பலப்படுத்துதல். | 1.822 |
| 2. | L.S.14.8 கி.மீ. முதல் 31.2 கி.மீ. நாகப்பட்டினம் மாவட்டம். | 2.019 |
| 3. | L.S.31.2 கி.மீ. முதல் 56.8 கி.மீ. நாகப்பட்டினம் மாவட்டம். | 3.151 |
| 4. | தெற்கு பக்கிங்காம் கால்வாயின் கரைகளை தூர் வாருதல் மற்றும் பலப்படுத்துதல் (2.3 கி.மீ.), மஞ்சலாறு வடிகாலிலிருந்து கடல் வரை 3.6 கி.மீ. (3 கி.மீ.). வீரசோழன் வடிகாலின் கரையை பலப்படுத்துதல் (0.8 கி.மீ.) மற்றும் நண்டலாறு வடிகாலின் வலது கரை 0 முதல் 1.8 கி.மீ. வரை, இடது கரை 0 முதல் 4.45 கி.மீ. வரை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மகிமலையாற்றிலிருந்து நேரடிப்பிளவு (2.2 கி.மீ.) | 2.440 |
| 5. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கொள்ளிடட பிரிப்பு கரைகளான கொரைத்திட்டு, பாண்டியன் திட்டு மற்றும் காட்டுரை பலப்படுத்துதல் (6. கி.மீ.) | 1.230 |
| 6. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் நத்திகன்னி மன்னியார் வடிகாலை தூர்வாருதல், பலப்படுத்துதல் (12 கி.மீ.) மற்றும் வெள்ளப்பள்ளம் உப்பனார் வடிகாலில் L.S.19 கி.மீட்டரிலிருந்து கடல் வரை (5 கி.மீ.) பலப்படுத்துதல். | 1.808 |

[2006 ஆகஸ்ட் 31

(ரூபாய் கோடியில்)

| வ. வண் | பணி விவரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 7. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வெள்ளையாறு நேரடிப் பிளவு L.S. 3.5 கி. மீட்டரிலிருந்து கடல் வரை (1 Km.) தூர் வாருதல் மற்றும் பலப்படுத்துதல், சாக்கிலியான் வாய்க்காலின் நேரடிப்பிளவு L.S.5.5 கி. மீட்டரில் இருந்து கடல் வரை லா போர் நேரடிப்பிளவு L.S. 1.5 கி.மீ. 3 கி.மீட்டரிலிருந்து கடல் வரை (1 கி.மீ.), நல்லார் நேரடிப் பிளவு L.S. 8.2 கி. மீட்டரிலிருந்து கடல் வரை (1 கி.மீ.) அடப்பார் நேரடிப் பிளவு L.S. 1.5 கி. மீட்டரிலிருந்து கடல் வரை (1 கி.மீ.) முல்லையாறு நேரடிப் பிளவு L.S. 0 கி. மீட்டரிலிருந்து 1.5 கி.மீ. கடல் வரை (1 கி.மீ.) மற்றும் வளவனார் நேரடிப் பிளவு L.S. 0 கி. மீட்டரிலிருந்து 1.5 கி.மீ. வரை (1.5 கி.மீ.) | 2.445 |
| 8. | நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடுவையார் வடிகாலின் L.S. 5.30 கி. மீட்டரிலிருந்து கடல் வரை அகலப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் 6 கி.மீ. | 1.726 |
| 9. | வடக்கு பக்கிங்காம் கால்வாயை பலப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் (13 கி.மீ.) மற்றும் முடவனாறு வடிகால் நீரொழுங்கியை புனரமைத்தல். | 2.630 |
| | **மொத்தம்** | **19.271** |

**19. காவிரி நதிநீர் தாவா**

*1892 மற்றும் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின் அடிப்படையில் காவிரி நதிநீர் பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

*காவிரி நதிநீர் தாவாவை விசாரிக்க ஜூன் 1990–ல் காவிரி நடுவர் மன்றத்தை மத்திய அரசின் நீர்வள ஆதார அமைச்சகம் ஏற்படுத்தியது.*

*காவிரி நடுவர் மன்றம் 25–6–1991 அன்று கீழ்க்காணும் ஆணைகளைப் பிறப்பித்தது :*

(அ) *கர்நாடகா அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து மாதாந்திர/வாராந்திர அடிப்படையில் 205 டி.எம்.சி. அடி நீரை மேட்டூர் நீர்த்தேக்கத்திற்த ஆண்டொன்றுக்கு விடுவிப்பதை உறுதி செய்ய வேண்டும்.*



2006 ஆகஸ்ட் 31]

(ஆ) *மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்ட பாண்டிச்சேரியின் காரைக்கால் பகுதிக்கு 6 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாடு அளிக்க வேண்டும்.*

(இ) *கர்நாடகா மே 1991–ல் நடுவர் மன்றத்தில் தெரிவித்தவாறு, காவிரி நீரைப் பயன்படுத்தி 11.2 இலட்சம் ஏக்கருக்கு மேல் அதன் பாசனப் பகுதியை அதிகரிக்கக்கூடாது.*

*மேற்கூறிய ஆணைகள் 1-7-1991 முதல் நடைமுறைக்கு வரும். இவ்வாணை நடுவர் மன்றம் இறுதி ஆணை பிறப்பிக்கும் நாள் வரை நடைமுறையில் இருக்கும்.*

*நடுவர் மன்றம் ஆணை பிறப்பித்த நாள் முதற்கொண்டு கர்நாடகா அரசு இந்த ஆணையை மதித்து நடைமுறைப்படுத்த முன்வரவில்லை. எனவே, மே 1992–ல் உச்ச நீதிமன்றத்தில் ஓர் உரிமையியல் வழக்கை தமிழக அரசு தாக்கல் செய்ய நேரிட்டது. இந்த வழக்கு விசாரணையில் இருந்து வந்தபோது மத்திய அரசு உச்ச நீதிமன்றத்திற்கு அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் 11–8–1998 அன்று காவிரி நதிநீர் ஆணையத்தை ஏற்படுத்தியது. அதற்கு உதவும் பொருட்டு காவிரி கண்காணிப்புக் குழு ஒன்றையும் ஏற்படுத்தியது. காவிரி நதிநீர் ஆணையம் பிரதமரைத் தலைவராகவும், நான்கு படுகை மாநில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. காவிரி கண்காணிப்புக் குழு மத்திய அரசின் நீர் ஆதார அமைச்சக செயலரைத் தலைவராகவும், நான்கு படுகை மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் பாசனத்தை கவனித்து வரும் தலைமைப் பொறியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டும் செயல்பட்டு வருகிறது. இதுவரையில் காவிரி நதிநீர் ஆணையம் 6 முறையும், காவிரி கண்காணிப்புக் குழு 22 முறையும் கூடியுள்ளது.*

*காவிரி நதிநீர் ஆணையம், காவிரி நடுவர் மன்றத்தின் ஆணையையோ அல்லது அதன் முடிவுகளையோ செயல்படுத்த கர்நாடகாவை கட்டாயப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. ஏனென்றால், காவிரி நதிநீர் ஆணையத்திற்குப் போதுமான அதிகாரம் இல்லை என்பதே ஆகும். இந்த நிலைமையை தமிழக அரசு ஆய்வு செய்து முறையே 19–9–2001 மற்றும் 10–7–2002 ஆகிய நாட்களில் உச்ச நீதிமன்றத்தில் 2 உரிமையியல் வழக்குகளை தாக்கல் செய்துள்ளது. ஜூலை 2002-இல் தாக்கல் செய்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில், நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை செயல்படுத்துவதற்கு ஏற்கெனவே உள்ள திட்டத்திற்கு மாற்று திட்டத்தையோ அல்லது அத்திட்டத்தை திருத்தியோ அமைக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டுமென்ற*

கோரிக்கை ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது. மேலும், காவிரி நடுவர் மன்றத்தின ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஒரு புதிய வரைவுத் திட்டமும், அவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த 2 வழக்குகளும் உச்ச நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ளன.

காவிரி நடுவர் மன்றத்தின்முன் மாநிலங்களுக்கிடையே நீரை ஒதுக்கீடு செய்வது குறித்து வாதிட்டபோது, 566 டிஎம்சி அடி நீர் தமிழ்நாட்டிற்குத் தேவை என்று எடுத்துரைக்கப்பட்டது. மேலும் நடைபெற்ற விசாரணையின்போது, நடுவர் மன்றத்தின் ஆணையை செயல்படுத்துவதற்கு நடுவர் மன்றமே வழிமுறையை அதன் இறுதித் தீர்ப்பில் தெரிவிக்க வேண்டுமென்று தமிழ்நாட்டின் சார்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கிடையேயான நீர் சட்டம் (Inter State Water Disputes Act) 2002-இல் திருத்தியமைக்கப்பட்டதன்படி நடுவர் மன்றத்தின் ஆணையானது உச்ச நீதிமன்றம் அளிக்கும் உறுத்துக்கட்டளை (Decree) போன்றதாக இருக்கும்.

10–5–2006 அன்று, மதிப்பீட்டாளர்கள் அளித்துள்ள அறிக்கைகளை சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு அளித்து அதன்மீது அனைத்து மாநிலங்களும் 5 வாரங்களுக்குள் கருத்தினை அளிக்கவும், அதன் பிறகு மாநிலங்கள் அளித்துள்ள கருத்தின்மீதான பதில் கருத்தினை மூன்று வாரங்களுக்குப் பிறகு அளிக்க வேண்டும் என்று நடுவர் மன்றம் ஆணை பிறப்பித்தது. மதிப்பீட்டாளர்களின் அறிக்கையின் மீதான தமிழ்நாட்டின் கருத்து குறிப்பிட்ட காலத்தில், 15–6–2006 அன்று நடுவர் மன்றத்தின் முன் தாக்கல் செய்யப்பட்டது. கேரளா மற்றும் கர்நாடகா அரசின் கருத்தின் மீதான தமிழ்நாட்டின் கருத்தினையும் நடுவர் மன்றத்தின் முன் தாக்கல் செய்யப்பட்டது. 10–7–2006 அன்று மேலும் தாமதமின்றி, நடுவர் மன்றம் அதன் இறுதித் தீர்ப்பினை உடனே வழங்க வேண்டும் என்று தமிழ்நாட்டின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. கடைசியாக 27–7–2006 அன்று நடைபெற்ற நடுவர் மன்றத்தின் விசாரணையின் போது, அனைத்து வாதங்களும் 21–4–2006 அன்று முடிவுற்றதனால், நடுவர் மன்றத் தீர்ப்பினை வழங்குவதற்காக ஒத்திவைப்பதாக ஆணை பிறப்பித்துள்ளது. இறுதித் தீர்ப்பு விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 20. பாலாறு

ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், குப்பம் வட்டத்தில் கணேசபுரம் என்ற இடத்தில் பாலாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்ட ஆந்திர அரசு முடிவு செய்துள்ள செய்தி தமிழகத்திற்குக் கவலை அளிப்பதாக உள்ளது. பாலாற்றின் நீரை உபயோகிப்பது 1892 ஆம் ஆண்டின் மைசூர்–சென்னை ஒப்பந்தத்தின் அடிப்படையின்கீழ் வரும். ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுமானால் தமிழ்நாட்டிற்கு தண்ணீர் வராது என்பதால் இதில் தலையிட்டு அவ்வாறு தடுப்பணை கட்டுவதைத் தடுக்குமாறு மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.





பாலாறு மற்றும் அதன் கிளை நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டுவதைத் தொடரக்கூடாது என்ற ஒரு உத்தரவினை ஆந்திர அரசிற்கு பிறப்பிக்கக் கோரி 10–2–2006 அன்று தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் ஓர் உரிமையியல் வழக்கினை தாக்கல் செய்துள்ளது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் உயர் கல்வித் துறை அமைச்சர் ஆகியோர் 5–8–2006 அன்று ஐதராபாத்தில் மாண்புமிகு ஆந்திர மாநில முதலமைச்சரை சந்தித்து பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டினால் அது தமிழக மக்களின் நலனை பெரிதும் பாதிக்குமென எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அப்பொழுது, தமிழக மக்களின் நலனை பாதிக்கும் வகையிலும் மற்றும் சட்டத்திற்குப் புறம்பாகவும் தடுப்பணையை கட்டாது என்று ஆந்திர அரசின் முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்துள்ளார்கள். மேலும், கட்டவிருக்கும் தடுப்பணை குறித்த விவரங்களை தமிழ்நாட்டிற்கு அனுப்பி தமிழகத்தின் கருத்தினை கேட்டறிந்த பிறகே மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## 21. பரம்பிக்குளம்–ஆழியாறு ஒப்பந்தம் புதுப்பித்தல்

தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களும், ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், பாலாறு, ஆழியாறு மற்றும் இவற்றில் இணையும் ஆறுகளின் நீரை மின்சாரம் தயாரிக்கவும், பாசனத்திற்கும், குடிநீர் விநியோகத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்த 9–11–1958 முதல் செயல்படுத்தக்கூடிய ஓர் ஒப்பந்தத்தில் 29–05–1970–ல் கையெழுத்திட்டன. ஒப்பந்த விதிகளின்படி 9–11–1958 முதல் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பிறகும் அக்கால அனுபவத்தின அடிப்படையில் இரு சாரார் ஒப்புதலின் பேரில் ஒப்பந்தம் பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டும். இந்த ஒப்பந்தம் 9–11–1988–இல் மறு ஆய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இதன்படி இரு அரசுகளும் 21–9–1989 அன்று தங்களது ஆவணங்களைப் பரிமாற்றிக்கொண்டு மாநிலங்களுக்கிடையே பலமுறை பேச்சு வார்த்தைகள் நடத்தின. பரம்பிக்குளம்–ஆழியாறு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து ஒரு விவரமான அறிக்கை தயாரிக்க இருமாநில அரசு

[2006 ஆகஸ்ட் 31

அலுவலர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு திருவனந்தபுரம் மற்றும் அட்டகட்டி ஆகிய இடங்களில் கூடி பேசிய போதிலும் எந்த முடிவுக்கும் வர இயலவில்லை.

10–6–2002 அன்று சென்னையில் நடந்த இரு மாநில அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில் பரம்பிக்குளம்–ஆழியாறு ஒப்பந்தத்தினை ஆய்வு செய்து எங்கெல்லாம் திருத்தங்கள் செய்யவேண்டும் என்பதைக் கண்டறிய இரு மாநிலப் பொறியாளர்கள் அடங்கிய குழுவினை அமைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறே குழு ஆய்வு அறிக்கையினை இரு மாநில அரசுகளுக்கும் அனுப்பியது.

தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை 10–11–2003–இல் சென்னையிலும் 4–1–2004 அன்று திருவனந்தபுரத்திலும் இருமாநில அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும், ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யப்படவேண்டிய இனங்களில் மாநிலங்களுக்கிடையே இருந்த கருத்து வேற்றுமைகளின் இடைவெளி பெருமளவில் குறைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, 6–11–2004, 27–11–2004 மற்றும் 18–12–2004 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களுக்கிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன.

தமிழக அரசு, பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட ஒப்பந்தத்தின் முதல் ஆய்வினை முடிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வருகின்றது.

**22. பெரியாறு அணையில் தேக்கப்படும் நீர் மட்ட அளவை உயர்த்துதல்**

1886 ஆம் ஆண்டு திருவாங்கூர் மகாராஜாவுக்கும் மற்றும் அப்போதைய சென்னை மாகாண அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் பெரியாறு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் 1895–ல் முடிக்கப்பட்டது. தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளுக்கிடையே 1970 ஆம் ஆண்டு இரண்டு துணை ஒப்பந்தங்கள் ஏற்பட்டன.

1979 ஆம் ஆண்டு கேரள அரசு பெரியாறு அணையின் பாதுகாப்புப் பற்றி சில அச்சங்களை எழுப்பியது. மத்திய நீர்வளக் குழுமம் அணையினை ஆய்வு செய்து சில பலப்படுத்தும் பணிகளை பரிந்துரைத்தது. பலப்படுத்தும் பணிகளை செய்து முடிக்கும் பொருட்டு அணையின் நீர்மட்டம், அதன் முழு நீர் மட்ட அளவான 152 அடியிலிருந்து தற்காலிகமாக 136 அடியாகக் குறைக்கப்பட்டது.



2006 ஆகஸ்ட் 31]

பலப்படுத்தும் பணிகள் அனைத்தும் முடிவடைந்த நிலையிலும், பெரியாறு அணையில் தேக்கப்படும் நீர்மட்டம் தற்காலிகமாக குறைக்கப்பட்ட அளவான 136 அடியிலேயே வைக்கப்படவேண்டும் என்று கேரள அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தமிழக அரசு மற்றும் பிறர் தாக்கல் செய்த மாற்றல் மனுக்களையும் (Transfer Petitions) முல்லைப் பெரியாறு சுற்றுச் சூழல் பாதுகாப்பு மன்றம் தாக்கல் செய்த ரிட் மனுவையும் விசாரித்து இவ்வழக்குகளை உச்ச நீதி மன்றத்திற்கு மாற்றவும், இவைகளை சேர்த்து விசாரிக்கவும் 8–4–2002 அன்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

உச்ச நீதிமன்றம் 27–2–2006 தேதியிட்ட ஆணையில் பின்வருமாறு தெரிவித்துள்ளது :

"1. தமிழக அரசு 142 அடி வரை நீரைத் தேக்கலாம் என்றும், 2. தமிழக அரசு மத்திய நீர்வளக் குழுமம் பரிந்துரைத்தபடி எஞ்சிய பலப்படுத்தும் பணிகளைச் செய்ய அனுமதிக்கப்படுவதாகவும், அதற்கு கேரள அரசு தடுத்து நிறுத்துவதற்கு காரணமாக இருக்கக்கூடாது எனவும், 3. மேற்படி பலப்படுத்தும் பணிகள் மத்திய நீர்வளக் குழுமம் மனநிறைவுறும் நிலையில் முடிவுற்றபின் 152 அடி வரை நீரைத் தேக்குவது தொடர்பாக வல்லுநர்கள் அணையின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு ஆய்வு செய்த பின்னர் நீர்மட்டம் உயர்த்தப்படலாம்."

கேரள அரசு, 15–3–2006 அன்று கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்புச் சட்டம் 2003–க்கான திருத்தங்களை மேற்கொண்டது. அதன்படி ஏனைய இனங்களுடன் முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர் மட்டம் 136 அடியாக அறுதியிடப்பட்டது. இது உச்ச நீதிமன்ற ஆணையை செயல்படுத்துவதற்கு முரணான நோக்கத்துடன் இவ்வாறு நீர்மட்டம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு, கேரள பாசன மற்றும் நீர் பாதுகாப்புச் சட்டம் (திருத்தம்) 2006–ல் அரசியலமைப்பின்படி செல்லத்தக்கதல்ல என்று உத்தரவு வழங்குமாறு ஒரு சிவில் வழக்கை 31–3–2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. மேலும், இந்த சிவில் வழக்குடன் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனுவில், உச்ச நீதிமன்றம் 27–2–2006 அன்று பிறப்பித்த ஆணைக்கேற்ப முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தபட்டில் மேற்குறிப்பிட்ட சட்டம் பொருந்தாது என்றும், தமிழ்நாடு, அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரையில் நிறுத்திக் கொள்வதற்கு கேரள அரசு குறுக்கீடு செய்யவோ அல்லது பலப்படுத்தும் பணிகளை செய்வதைத் தடை செய்யவோ கூடாது என ஓர் இடைக்கால உத்தரவை வழங்குமாறும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 31

பெரியாறு, வைகை ஆற்று நீரை நம்பியிருக்கும் விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு உறுதி பூண்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளை செயல்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 23. பாண்டியாறு–புன்னம்புழா திட்டம்

இரு மாநிலங்களுக்கிடையே ஓடும் நதியான பாண்டியாறு–புன்னம்புழா, தமிழ்நாட்டில் தோன்றி கேரள மாநிலத்தில் உள்ள சாளியாற்றில் கலக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பாண்டியாறு–புன்னம்புழா நீலகிரி மலையிலுள்ள உயர்ந்த சிகரங்களில் தோன்றி, கூடலூர் நகரத்திற்கு 5 கிலோ மீட்டர் மேற்கே இணைகின்றன. இந்த இணைப்புக்குக் கீழ் இந்த ஆறு புன்னம்புழா என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆறு, கேரள மாநிலத்தில் நிலாம்பூர் அருகே சாளியாற்றுடன் கூடுகிறது. கடைசியாக, இந்த ஆறு பேப்பூர் என்ற இடத்தில் அரபிக்கடலில் கலக்கிறது. இந்த திட்டத்திற்கான தளம் ஊட்டி–மைசூர் நெடுஞ்சாலையில் அமைக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் 1965 ஆம் ஆண்டு இணைந்து சம்மதித்தபடி, பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டம் மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளின் 171.38 சதுர கிலோ மீட்டர் (66.20 சதுர மைல்) பரப்புடைய நீர்ப்பிடிப்பிலிருந்து கிடைக்கப்பெறும் சராசரி 11 டி.எம்.சி. தண்ணீரை 500.50 மீட்டர் (1642 அடி) உயரத்திலிருந்து கிடைக்கும் நீர் விசையை பயன்படுத்தி, முதல் கட்டமாக 100 மெ.வா. (2X50 மெ.வா.) மின்சாரம் தயாரிக்கவும், இறுதியாக 150 மெ.வா. மின்சாரம் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டது. இதனால் ஆண்டுக்கு சராசரியாக 409 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் கிடைக்கும். திட்டக் குழுமம் இத்திட்டத்திற்கு 1968–ல் ஒப்புதல் அளித்தது.

அதன் பிறகு, கோவை மாவட்ட விவசாயிகள் பாண்டியாறு–புன்னம்புழா திட்டத்தினால் கிடைக்கும் தண்ணீரை, தமிழ்நாடு பயன்பெறும் வண்ணம், பவானி ஆற்றின் கிளையாறான மோயாற்றில் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயக் கேட்டுக் கொண்டதன்பேரில் பரிசீலனை செய்ததில், இந்தத் திட்டமும் செயல்படுத்த முடியும் என்று தெரிந்தது. தமிழ்நாடு குறைந்தபட்சம் 7 டி.எம்.சி. தண்ணீரையாவது தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட விரும்பியது.



2006 ஆகஸ்ட் 31]

இப்பொருள் குறித்து 28-11-1996–ல் சென்னையில் நடைபெற்ற கேரள மற்றும் தமிழ்நாடு அமைச்சர்களின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. எந்த முடிவும் எட்டப்படவில்லை. பின்னர் 10–6–2002 அன்று சென்னையில் நடந்த இரு மாநில அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது. தமிழ்நாடு மின் வாரியம் திட்ட அறிக்கையினை தயாரித்து கேரள மின் வாரியத்திற்கு அனுப்புவது எனவும், பின்பு இரு மாநில மின் வாரியத் தலைவர்கள் அளவில் கூடி விவாதிப்பது எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

தமிழக மின் வாரியம், மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தை ஒவ்வோர் ஆண்டும் கிடைக்கும் நீரை கேரளா மற்றும் தமிழகம் சமமாக பிரித்துக் கொள்ளும் வகையில் தயாரித்தது. அதன்படி, தமிழ்நாடு கரகோட்டப்புழாவில் (2 x 30 MW) மின் உற்பத்தி செய்த பின்னர், 50 விழுக்காடு நீர் கேரளப் பகுதிக்குச் செல்லும் என்றும், மீதமுள்ள 50 விழுக்காடு நீர் தமிழ்நாட்டிலுள்ள மோயாறுக்கு கொண்டு செல்லப்பட்டு, இறுதியில் கீழ்பவானி நீர்த்தேக்கத்தில் விடப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்த அரசு, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைச் செயல்படுத்திட தொடர்ந்து அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

## 24. பம்பா–அச்சன் கோயில் மற்றும் வைப்பாறு நதிகள் இணைப்பு

மத்திய அரசினால் தயாரிக்கப்பட்ட தேசிய தொலைநோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியான தீபகற்ப ஆறுகள் மேம்பாட்டுத் திட்டப்படி, தீபகற்ப ஆறுகள் இணைப்பிற்கான ஆய்வு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி தேசிய நீர் மேம்பாட்டு முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் நீரை கிழக்கே திருப்புவதும், தீபகற்ப ஆறுகள் மேம்பாட்டின் ஒரு பகுதியாகும்.

தேசிய நீர் மேம்பாட்டு முகமை, பம்பா–அச்சன்கோயில்–வைப்பாறு இணைப்புத் திட்டத்தை, கேரளாவின் பம்பா–அச்சன்கோயில் ஆறுகளின் மிகை நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்புவதற்கு ஏதுவாக உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தில் தமிழ்நாட்டின் சங்கரன்கோயில், கோவில்பட்டி, சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் 91,100 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறவும், அதற்காக 22 டி.எம்.சி. நீரைத் திருப்பவும் வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டிற்கு பாசன வசதி தருவது தவிர, அதிகபட்சமாக 500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும் இத்திட்டம் வகை செய்கிறது. தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் ஆய்வுப்படி, இந்த 22 டி.எம்.சி.

நீரானது பம்பா-அச்சன்கோயில் ஆறுகளில் கிடைக்கும் மிகை நீரில் சுமார் 20 சதவீதம் மட்டுமே ஆகும்.

கேரள அரசு பம்பா-அச்சன்கோயில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்திற்கு ஆதரவாக இல்லை. எனினும், தமிழகம் இது குறித்து மத்திய அரசிடம் இணைப்பை செயல்படுத்திட தொடர்ந்து தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

## 25. மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக்குறிப்பு மையம்

குடிநீர் மற்றும் விவசாய வளர்ச்சிக்கு நிலத்தடி நீர் ஆதாரமாகும். தமிழ்நாட்டில் மேற்பரப்பு நீர் ஆதாரங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டு விட்ட நிலையில், இதர ஆதாரமான நிலத்தடி நீரினை நமது தேவைகளுக்காகச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

நிலத்தடி நீர் மீளப் பெறக்கூடிய ஆதாரமாக இருந்த போதிலும், அதன் இருப்பிடம் மற்றும் அதன் இயக்கம், நீர் வானியல் மற்றும் நிலநீர் புவியியல் அம்சங்களால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தமிழ்நாட்டில் நீர்த் தன்மையும், நீரின் அளவிலும் மாறுபட்டவகையில் பரவியுள்ளதால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது.

இம்மையம், புவி வளங்களை நிலநீர் புவியியல் ஆய்வின்மூலமாகவும், தீவிர கண்காணிப்பு மற்றும் அதனைச் சார்ந்த ஆய்வுகளின் அடிப்படையில், அறிவியல் பூர்வமான புள்ளியியல் விவரங்களை உருவாக்கி பயனீட்டாளர்களுக்கு பயன்படும் வகையில் செயல்பட்டு வருகின்றது.

இதுமட்டுமல்லாமல், நடப்பு நிதியாண்டில் சிறிய நீர்பிரி முகடுகளின் வாயிலாக நிலத்தடி நீர் இருப்பு மதிப்பீட்டினை வேலூர், விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள ஒன்றியங்களில் ரூ.68.85 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.


### 25.1 தமிழ்நாடு நிலத்தடி நீர் (வளர்ச்சி மற்றும் மேலாண்மை) சட்டம், 2003

மாநிலத்தின் நிலத்தடி நீர்வளம் பாதுகாக்கப்பட்டு, தகுந்தமுறையில் மேம்பாடு செய்ய, தமிழ்நாடு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டம், 2003-ஐ நடைமுறைப்படுத்த ஏதுவாக அதன் விதிகள் வரையறுக்கப்பட்டு, தமிழ்நாடு நிலத்தடி நீர் ஆணையம் உருவாக்கப்படும் கருத்துரு, தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது.





**நீர்வள ஆதார அமைப்பு**
**நிலத்தடி நீர்வள மதிப்பீடு**
**ஒன்றியவாரியாக வகைப்படுத்தல்**
**(ஜனவரி 2003 முதல்)**



### 25.2 நீரியல் திட்டம் (தொகுப்பு-II)

நீரியல் திட்டம் தொகுப்பு I-ன்கீழ், நேர்த்தி வாய்ந்த நீரியல், நீர் வானியல் மற்றும் நிலநீர் புவியியல சம்பந்தப்பட்ட அடிப்படை விவரங்களைத் திரட்டவும், பாதுகாக்கவும் மற்றும் பரப்பிடவும், நீரியல் தகவல் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

திட்டமிடுபவர்களும், கோட்பாடுகளை உருவாக்குபவர்களும் பயன்படுத்தும்வகையில், மேற்கூறிய அடிப்படை விவரங்களை, தொழில்நுட்பத் தகவலை அளிக்கும்வகையில், ரூபாய் 25.27 கோடி மதிப்பீட்டில் நீரியல் திட்டம் தொகுப்பு II மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில், உலக வங்கியின் கடன் தொகையாக ரூபாய் 20.65 கோடியாகவும் எஞ்சிய தொகை மாநில அரசின் நிதியாகவும் இருக்கும்.

கீழ்க்காணும் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் :

(1) நீரியல் திட்டம் பகுதி I செயல்பாட்டின் தொகுப்பினைத் தொடருதல்.

(2) நீர்வளம் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், அடிப்படை விவரங்களை பயன்படுத்துவோருக்கு பரப்பிடல் மற்றும் நீர்வளத்தினைக் குறித்து, நீரினைப் பயன்படுத்துவோரிடமிருந்து தேவைகளைப் பகிர்ந்து கொள்ளுதல்.

(3) மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீருக்கான வளர்ச்சித் திட்டத்தினை நீரியல் வடிவமைப்பு உதவியுடன் வளர்ச்சி பெறுதல்.

(4) பாசனம், குடிநீர் மற்றும் தொழிற்சாலைகளில் நீரின் பயன்பாட்டினை உகந்தவகையில் நீர்வள இருப்பிற்கேற்ப மூன்று ஆற்றுப்படுகைகளில் முடிவு ஆதரவு முறையின்மூலம் (Decision Support System) வளர்ச்சி பெறச் செய்தல்.

(5) தற்போதைய நீரியல் திட்டத்தின்போது, மாநிலத்தின் தேவைக்கேற்ப படுகைகளில் நீர் ஆதாரத்தின் மாசுக்கள், செயற்கை முறையில் நிலத்தடி நீரினை செறிவுபடுத்துதல் போன்றவற்றினை, நோக்கப் பணிக்கான ஆராய்வுகளின்மூலம் (Purpose Driven Studies) அறிந்து அதற்கேற்ப பயன்படுத்த வழிவகை செய்யப்படும்.

இந்தத் திட்டம் ஏப்ரல் 2006—ல் தொடங்கப்பட்டது. ஆறு வருடங்கள் இத்திட்டம் செயலாக்கத்தில் இருக்கும்.

இத்திட்டம் மாநிலத்தில் நீர் உபயோகம் குறித்து நீண்ட காலத்திட்டம் தீட்டுவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## 26. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் (Irrigation Management Training Institute)

பன்னாட்டு நிதியுதவியுடன் இந்தியாவில் தொடங்கப்பட்ட 11 பயிற்சி நிலையங்களில் திருச்சி, துவாக்குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையமும் ஒன்றாகும். இந்நிலையம் 1981—ல் தொடங்கப்பட்டது. தற்போது, மாநில அரசு அளிக்கும் மானிய நிதியுதவியுடன் இந்தப் பயிற்சி நிலையம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்நிலையத்தில் விவசாயிகள், நீர்வளத் துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண் துறையில் உள்ள களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பாசன மேம்பாட்டு அறிவை மேம்படுத்தும்வகையிலும், அவர்களின் திறமையை கீழ்க்காணும் புலங்களில் (Field) நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன :

### 26.1. பயிற்சிகள்

(1) பாசன மேலாண்மை, பாசன வடிவமைப்பு மற்றும் திட்டமிடுதல் ஆகியவைகளை கணினிவாயிலாக செயல்படுத்துதல்.

(2) பாசனம் சார்ந்த மேலாண்மைப் பயிற்சி.



(3) விவசாயிகள் கூட்டமைப்பு மற்றும் பாசன முறை பராமரிப்புப் பணிகளை விவசாய கூட்டமைப்புக்கு மீண்டும் திருப்பித்தருதல்.

### 26.2. பாசன மேலாண்மை

பாசன மேலாண்மை சம்பந்தமான அலுவலர்களுக்குக் கீழ்க்காணும் தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது :

(1) பாசன மேலாண்மையில் பங்கேற்பு.

(2) நவீன பாசன முறைகள்.

(3) பாசனப் பகுதியில் நீர்த் தேவை திட்டமிடுதல்.

(4) பாசனப்பரப்பு மேம்படுத்துதல்.

(5) மழைநீர் சேகரிப்பு.

(6) அடிப்படை விரிவான விவசாயம்.

(7) பாசன கட்டுமானங்களில் தரத்தைக் கட்டுப்படுத்துதல்.

(8) நீர் அளவு முறைகள்.

### 26.3. பாசன வடிவமைப்பு மற்றும் திட்டமிடுதல் ஆகியவற்றைக் கணினிமூலம் செயல்படுத்துதல்

பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் முழுமையான கணினி பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் நீர்வள ஆதார அமைப்பு, வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண் துறை ஆகியவற்றின் அலுவலர்களுக்கு கீழ்க்காணும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன :

(1) எம்.எஸ். ஆபிஸ்

(2) எம்.எஸ். அக்ஸஸ் மற்றும் விசுவல் பேசிக்

(3) புவியியல் அமைப்பு சார்ந்த தகவல்கள்

(4) ஆட்டோ கேட் (AUTOCAD)

### 26.4. பாசன மேலாண்மையில் நுட்பங்கள்

துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு தங்களது செயல்பாட்டினை மேம்படுத்தும்வகையில் "கூட்டு முயற்சி மற்றும் தகவல் பரிமாற்றத் திறனை மேம்படுத்துதல்." குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

[2006 ஆகஸ்ட் 31

## 26.5. விவசாயிகள் அமைப்பு மற்றும் பரிமாற்றம்

விவசாயிகள் அமைப்பை அமைப்பதற்கும், பாசன மேலாண்மையில் பங்கேற்கவும் ஏதுவாக, விவசாயிகளுக்கு கீழ்க்காணும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன :

(1) விவசாயிகள் அமைப்பை அமைத்தல் மற்றும் செயல்பாடுகள்.

(2) தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு.

(3) பாசன மேலாண்மைப் பயிற்சி.

2006–07 ஆம் ஆண்டில் 111 பயிற்சிகள் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பயிற்சிகள் பாசன மேலாண்மையில் 2,500 விவசாயிகளுக்கும் 2,000 அலுவலர்களுக்கும் அளிக்கப்படும்.

## 27. நீர் ஆய்வு நிறுவனம்

### 27.1. நீர் வள திட்டமிடுதல்

தொலையுணர்வு, நிலவியல் அமைப்பு விவரங்களைக் கொண்டு நீர்வள மேலாண்மைக்கான ஆய்வுகளைச் செய்யும்பொருட்டு நீர் ஆய்வு நிறுவனமானது 1974–ல் நிறுவப்பட்டது.

பரம்பிகுளம்-ஆழியாறு, பாம்பாறு-கோட்டைக்கரையாறு, அக்னியாறு மற்றும் பரவனாறு ஆற்றுப் படுகைகளுக்கான நுண்ணிய அளவு ஆய்வானது மேற்கொள்ளப்பட்டு 2006–2007–க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 27.2. தமிழ்நாடு மாநில நீர்க் கொள்கை

1987 ஆம் ஆண்டைய தேசிய நீர்க்கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில நீர்க் கொள்கையானது 1994 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தேசிய நீர்க் கொள்கையானது ஏப்ரல் 2002 ஆம் ஆண்டு திருத்தப்பட்டு தேசிய நீர்வள ஆதாரக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதை அடிப்படையாகக் கொண்டும், தற்பொழுது உள்ள நிலைக்குத் தக்கவாறும் தமிழ்நாடு நீர்க் கொள்கை திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.



2006 ஆகஸ்ட் 31]

### 27.3. நீர் வள ஆராய்ச்சி நிதி மற்றும் ஆய்வுகள்

உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட நீர் வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின் நீர் வள ஆராய்ச்சி நிதியின்கீழ் 38 ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

இந்தச் செலவினத்தில் தமிழ்நாட்டின் பங்கான மூன்றில் ஒரு பங்கை வங்கியில் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஆய்வுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### 27.4. சிறப்பு ஆய்வுகள்

**27.4.1.** நீர் ஆய்வு நிறுவனம், மாநிலத் திட்டக் குழுவின் நிதி உதவியுடன் கீழ்க்காணும் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றது :

தமிழ்நாடு ஆற்றுப்படுகைகளில் வெள்ளப் பெருக்கு, வெள்ளப் பெருக்கைத் தடுத்தல், நிலத்தடிநீரை செறிவூட்டுதல் மற்றும் ஒரு படுகையிலிருந்து நீரை மற்றொரு படுகைக்கு மாற்றம் செய்தல்.

**27.4.2.பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர் வள ஆதார மேலாண்மைத் திட்டத்திற்காக (IAMWARM) கருத்துரு வரைபடங்கள் தயாரிக்கும் பணி**

மேற்கூறிய திட்டத்திற்காக குறியீடு வரைபடம், ஆட்சி எல்லை வரைபடம், வடிகால் வரைபடம், நிலவியல் வரைபடம், நிலமேற்பரப்பியல் வரைபடம், நிலப்பயன்பாடு வரைபடம், மண்வகை வரைபடம், நீர்ப்பாசன கட்டமைப்புகள், ஒன்றியங்கள்வாரியாக நிலநீர் இறைவு அளவு வரைபடம், கிராம எல்லையும் சாலை வசதிகள் போன்ற வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### 27.5. தொலையுணர்வு மற்றும் நிலவியல் அமைப்பின் செயல்பாடுகள்

நீர் ஆய்வு நிறுவனத்திலுள்ள தொலையுணர்வு பிரிவானது மாநில தொலையுணர்வு பயன்பாட்டு மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில தொலையுணர்வு பயன்பாட்டு மையத்தின் முக்கியமான பணி செயற்கைக் கோள் வண்ணப்படங்கள் மற்றும் ஆகாய விமானம்மூலமாக எடுக்கப்பட்ட கருப்பு வெள்ளை புகைப்படங்களிலிருந்து கணினிமூலமும், நேரடி ஆய்வுமூலமும் வெவ்வேறு நோக்க வரைபடங்களை வெவ்வேறு அளவுகளில் தயாரித்து, அவற்றை ஒன்றின் மேல் ஒன்றாகப் பொருத்தி, மேற்பரப்பு நீர் மற்றும் நில நீர்

இருப்பு அளவீட்டுப் பணி, நில உபயோக ஆய்வு, வெவ்வேறு பயிர்வகைகளைக் கண்டறியும் ஆய்வு, தரிசு நிலத்தைக் கண்டறியும் பணி ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. நீர் ஆய்வு நிறுவனமும் ஆற்றுப்படுகைவாரியாக நுண்ணிய ஆய்வு மேற்கொள்வதற்கு ஏற்றவாறு இந்தத் தொலையுணர்வு மையம் செயல்பட்டு வருகிறது. அதற்காக நிலவியல், நில உபயோகம், நீர் மட்டம், நீர்போக்கு, நிலமேற்பரப்பியல், மண்வகை, முறம்பின் பரிமாணம் உயர்வான இடங்களும் நிலைகளும், பெரும்பிளவுப் பாறைகள், நீர்தன்மை, நிலநீரியல் மற்றும் எண் எழுச்சி மாதிரி போன்ற நோக்க வரைபடங்களைத் தயாரித்து, ஆய்வு செய்து ஆலோசனைகளையும் வழங்குகிறது.

### 27.6. நீர் வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வுக் குழுமம்

நீர் வளக் கட்டுப்பாடு ஆய்வுக் குழுமத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் தலைவராவார். இந்தக் குழுமத்தில் 35 உறுப்பினர்கள் உள்ளனர். நீர்வளக் கட்டுப்பாடு ஆய்வுக் குழுமத்தால் கொள்கை முடிவு எடுப்பதற்கு ஏதுவாக அதன்முன் வைக்கப்படும் பொருள்களை பரிசீலனை செய்வதற்கு தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

### 27.7. ஆற்றுப் படுகை மேலாண்மை மற்றும் மேம்பாட்டு வாரியம்

பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப்படுகைகளில் வாழும் பல இலட்சக்கணக்கான சிறிய விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், நீர் மற்றும் ஒருங்கிணைந்த திட்டம், கண்காணித்தல், வளர்ச்சிகளை மேம்படுத்தும் பொருட்டு சார்ந்த துறைகள் மற்றும் பயனீட்டாளர்களின் ஈடுபாட்டுடன் ஆற்றுப் படுகை மேம்பாட்டு வளர்ச்சி வாரியமும் மற்றும் ஒரு தொழில்நுட்பச் செயலகமும் செயல்பட்டு வருகிறது.

இந்த வாரியம் மூன்று முறை கூடி பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி விவாதித்துள்ளது. வடிநில மேலாண்மைக் குழு மேற்கண்ட ஆற்றுப்படுகைகளுக்கு இரண்டு முறை கூடி பகுப்பாய்வு செய்தது. அடுத்த கூட்டம் இவ்வாண்டில் நடைபெற உள்ளது.

தொழில்நுட்பச் செயலகமானது உலக வங்கியின் பரிந்துரைகளின்படி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு தலைமைப் பொறியாளர் (ம) இயக்குநர், நீர் ஆய்வு நிறுவனம் தலைவராவார். இச்செயலகமானது 13 வல்லுநர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.



### 28. தமிழ்நாடு கொதிகல ஆய்வக இயக்ககம்

கொதிகலன்கள் பாதுகாப்பாக இயக்கப்படுவதையும் பொது மக்களின் உயிர், உடைமைகளுக்கும், பொதுச் சொத்துகளுக்கும் இழப்பு நேரா வண்ணம் பாதுகாப்பு விதி நெறிமுறைகளைச் செயல்படுத்துவதற்காகவும் இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923–ல் இயற்றப்பட்டது. இச்சட்டத்தை மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்து அமல்படுத்த வேண்டும். தமிழ்நாட்டில் இப்பணியை தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் கொதிகலன்கள் மற்றும் அதன் பாகங்களை உற்பத்தி செய்யும் பணியில் தமிழ்நாடு கொதிகலன் ஆய்வகம் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்களில் இயங்கி வரும் கொதிகலன்கள் அனைத்தும் தேர்ச்சி பெற்ற பணியாளர்களாலும், தேர்ச்சி பெற்ற பொறியாளர்களாலும் இயக்கப்படுவது தொடர்பாக, தமிழ்நாடு கொதிகல பணியாளர் விதிகள், 1964 மற்றும் தமிழ்நாடு கொதிகல இயக்கப்பொறியாளர்கள் விதிகள், 1965 ஆகிய விதிகளை செயல்முறைப்படுத்தும் பொறுப்பும் இவ்வாய்வகத்தின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

தமிழ்நாடு கொதிகல பணியாளர் முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை தேர்வுகள் மற்றும் தமிழ்நாடு கொதிகல இயக்கப் பொறியாளர்கள் தேர்வு ஆகிய தேர்வுகளை நடத்தி, அதில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் பொறுப்பினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

இந்திய கொதிகலன் இயக்க விதி 1950–ன்கீழ் கொதிகலன்கள் மற்றும் அதற்குத் தேவையான பாகங்களை நல்ல தரத்துடன் வடிவமைப்பதையும், உற்பத்தி செய்வதையும் உறுதி செய்வதை தமிழ்நாடு கொதிகலன் ஆய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

பதிவு பெறாமலும், சான்றிதழின்றியும் இயக்கப்படும் கொதிகலன்களைக் கண்டறிந்து அவற்றின் இயக்கத்தைத் தடை செய்யும் பணியையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

### 29. மணல் குவாரி

பொது மக்களுக்கு மணல் விற்பனை செய்வது சமபந்தமாக நடைமுறையில் இருந்த குறைபாடுகளை நீக்கவும், அரசிற்கு ஏற்பட்டிருந்த

வருமான இழப்பைத் தவிர்க்கவும், நிலத்தடி நீர் வளம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்கவும், பெருகி வரும் மணல் தேவையைப் பூர்த்தி செய்யவும் ஆற்றுப்படுகை, பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் இருப்பதால் துறைமூலம் மணல் எடுக்கும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. நாளுக்கு நாள் பெருகிவரும் கட்டுமானப் பணிகளால் மணல் தேவை அதிகரித்து வருவதால் பொதுப் பணித் துறையால் தெரிவுசெய்யப்பட்ட புதிய மணல் குவாரிக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக காலதாமதம் தவிர்க்கப்பட்டு மணல் தட்டுப்பாடின்றி கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

உயிரின வாழ்க்கைச் சூழலுக்கும், இயற்கைச் சூழலுக்கும் ஏற்பட்டு வரும் இழப்புகளைக் கருத்தில்கொண்டும், மணலை கள்ளத்தனமாகத் தோண்டி எடுத்தல், அதனைக் கடத்துதல், பதுக்கிவைத்தல் ஆகிய செயல்களைச் செய்யும் நபர்களை பிடிக்கச் செல்லும்பொழுது அதிகாரிகளுக்கு ஏற்படும் உயிரிழப்புகளையும் மனதில் கொண்டும், அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினையும் கருத்திற்கொண்டும் முறையற்றவகையில் மணல் எடுப்பதைத் தடுக்கும் நோக்குடன், 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசைப் பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொளித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ், மணல் திருட்டு கொண்டுவரப்பட்டுள்ளது.



## இணைப்பு II

*(166ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 39—பொதுப் பணித் துறை—கட்டடங்கள்

## மற்றும்

## மானியக் கோரிக்கை எண் 40—பொதுப் பணித் துறை—பாசனம்

## அறிவிப்புகள்—2006—2007

### 1. நதிகள் இணைப்பு

மத்திய அரசின் தேசிய நீர் மேம்பாட்டு முகமை (NWDA) தீபகற்ப நதிகளான மகாநதி—கோதாவரி—கிருஷ்ணா—பெண்ணாறு—காவிரி—வைகை—குண்டாறு நதிகள் இணைப்புத் திட்டம் பற்றி ஆய்வு செய்து இந்தத் திட்டம் தொழில்நுட்ப ரீதியாகச் சாத்தியம் எனக் கூறியுள்ளது. இது தொடர்பான விரிவான ஆய்வுகளையும் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது.

நீண்ட நெடுங்காலமாக இந்தத் திட்டம் எல்லா நிலையினராலும் பேசப்பட்டுவரும் ஒரு கனவுத் திட்டமாக இருக்கிறதே தவிர, செயல்வடிவம் பெறுவதில் காலதாமதம் ஆகி வருகிறது.

இந்த மகத்தான திட்டத்திற்கு, விரைந்து செயல்வடிவம் தந்திட வேண்டும் என்பதற்காக முதல் முறையாகவும், முதல் முயற்சியாகவும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், பாரதப் பிரதமர் தலைமையில், ஒரிசா, ஆந்திரா மற்றும் சம்பந்தப்பட்ட முதலமைச்சர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அதன்மூலம் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த முயற்சி மேற்கொண்டுள்ளார்கள் என்ற செய்தி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

**2. கட்டளையில் கதவணை (Barrage)**

காவிரியில் வெள்ளம் வரும் காலங்களில் உரிய முறையில் தேவையான பகுதிகளுக்குத் தண்ணீரைத் திருப்புவதற்கு வேண்டிய கட்டுமானங்கள் ஏதும் மேட்டூர் அணை முதல் மாயனூர் வரை (சுமார் 143 கிலோ மீட்டர்) இல்லாததால் நீரினை முறைப்படுத்தி, தண்ணீரைத் திறம்பட பயன்படுத்த முடியவில்லை. மாயனூர் அருகேயுள்ள கட்டளை படுகை அணையானது (Kattalai Bed Regulator) 1934 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

இந்தக் கட்டளை படுகை அணையினை கதவணையாக (Barrage) மாற்றி அமைத்திடும் நோக்குடன் விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.

**3. காவிரி டெல்டாவில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள கட்டுமானங்களைப் புனரமைத்தல்**

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களில் காவிரி டெல்டாவில் உள்ள கட்டுமானங்களைச் சீரமைத்துப் புனரமைப்பதற்கென ரூ.400.00 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளைப் படிப்படியாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இப்பணிகளை மேற்கொள்ள மேலும் ரூ.30.00 கோடி ஒதுக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

**4. நீர்ப்பாசன ஏரிகளைப் புனரமைத்தல்**

தமிழ்நாட்டில் மொத்தம் 39,202 பாசன ஏரிகள் உள்ளன. இவற்றில் 10,540 ஏரிகள் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளன. எஞ்சியுள்ள 28,662 ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ளன.

தற்போது, மத்திய அரசு, நபார்டு வங்கி மற்றும் மாநில அரசின் நிதி ஆதாரத்துடன் 936 மானாவாரி ஏரிகளில் சீரமைப்புப் பணி நடைபெற்று வருகிறது. பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள மீதமுள்ள ஏரிகளையும், ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் உள்ள சுமார் 8,600 பாசன ஏரிகளையும், உலக வங்கி நிதி ஆதாரம் மற்றும் மத்திய அரசு நிதி உதவியுடன் தூர் வாரி, முழுமையாகப் புனரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் வேளாண் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை போன்ற பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தப்படும்.





இத்திட்டத்தின் மதிப்பீடு தோராயமாக ரூ.3,900.00 கோடியாக அமையும். இதனை 7 ஆண்டுகளில் செயல்படுத்த உத்தேசித்து, 2006-2007 நிதியாண்டில் இருந்து இத்திட்டம் துவங்கப்படும்.

**5. திருச்சி மாநகர வெள்ளத் தடுப்புப் பணிகள்**

காவிரி நதியில் மேட்டூர் அணைக்குக் கீழே சில உப நதிகள் கலக்கின்றன. குறிப்பாக கோரையாறு, அரியாறு ஆகியவற்றின் வெள்ள நீர் திருச்சி மாநகருக்கு அருகில் காவிரி வலது கரையில் கலக்கின்றது. இது தவிர, காவிரியிலிருந்து பிரிந்து செல்லும் உய்யக்கொண்டான் வாய்க்கால் திருச்சி மாநகருக்கு அருகில் ஓடுகிறது. வெள்ளக் காலங்களில் உபரி நீர் காவிரியில் கலக்கும்போது ஆங்காங்கே உடைப்புகள் ஏற்பட்டு, திருச்சி மாநகரம், திருவரங்கம் போன்ற பகுதிகள் பெரும் பாதிப்படைகின்றன. எனவே, கோரையாறு, அரியாறு, குடமுருட்டி ஆகிய ஆறுகளின்மூலம் கிடைக்கும் வெள்ள நீரை புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்குப் பயன்படுத்தும் வகையில் அக்கினி ஆற்றில் திருப்பி விடுவதற்கான பணிகளுக்கு ரூ.295.00 கோடியில் திட்டம் ஒன்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. திட்ட அறிக்கை தயாரித்தவுடன் நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**6. மதுரை மாநகர வெள்ளத் தடுப்புப் பணி**

மதுரை மாநகரத்தில் உள்ள செல்லூர் குளத்தில் இருந்து வெள்ள நீர் ஓடி வைகை ஆற்றில் கலக்க கால்வாய்கள் உள்ளன. இந்தக் கால்வாய்கள் தூர்ந்து போய், வெள்ள நீர் வைகை நதியில் கலக்க இயலாத நிலை ஏற்பட்டு, மதுரை மாநகரம் பாதிப்புக்குள்ளாகிறது. எனவே, இந்தக் கால்வாய்களைத் தூர் வாரியும், கரைகளை உயர்த்தியும், பலப்படுத்தியும் வெள்ள நீர் வைகை நதியில் கலக்கும் வகையில் ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயலாக்கப்படும் என இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. நபார்டு வங்கியின் நிதி ஆதாரத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**7. காவிரிப் படுகையில் நிரந்தர வெள்ளப் பாதுகாப்புப் பணி**

கடந்த ஆண்டு பெய்த பலத்த மழையின் காரணமாக காவிரி, கொள்ளிடம் மற்றும் அதன் உபநதிகளில் வெள்ளம் ஏற்பட்டு கரைகளில்

உடைப்பு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தினால் ஏற்பட்ட உடைப்புகளை நிரந்தரமாகச் சரிசெய்யவும், கரைகளை உயர்த்தி பலப்படுத்தவும் ரூ.450.00 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நபார்டு வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும்.

## 8. கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

தமிழகக் கடற்கரையின் மொத்த நீளம் 1,076 கிலோ மீட்டர் ஆகும். பல பகுதிகள் சாதாரண காலங்களிலும், மற்றும் சுனாமி போன்ற பேரலை ஏற்படும் காலங்களிலும் கடலரிப்பு ஏற்பட்டு, கடலோரப் பகுதி வாழ் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகிறார்கள். கடலைத் தங்களது வாழ்வின் ஆதாரமாக நம்பி இருக்கும் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலையைக் கருத்தில்கொண்டு சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகம், தமிழகக் கடலோரப் பகுதிகளை ஆய்வு செய்து, கடலரிப்பைத் தடுப்பதற்கு சில பரிந்துரைகளை அளித்துள்ளது. இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் தூண்டில் வளைவுகள், கடலரிப்புத் தடுப்புச் சுவர்கள் கட்டத் திட்டம் தயாரிக்கப்பட்டு, இதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கிமூலம் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 9. சென்னை மாநகர நீர்வழித் தடங்கள்

சென்னை மாநகரின் மத்தியப் பகுதியில் கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் வடிகால் போன்ற நீர்வழித் தடங்களைச் சீரமைக்க ரூ.279.00 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படும் என இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நிரந்தத் தீர்வாக ஆக்கிரமிப்புகளை அகற்றி, சுகாதாரச் சீர்கேட்டினை விளைவிக்கின்ற நிலைமையை மாற்றி, வரும் காலங்களில் கால்வாயின் அகலத்தை முழுமையாகப் பாதுகாத்திட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. நீர்வழித் தடங்களைச் சீரமைக்கும் பணிகள் விரைவில் துவங்கப்படும்.

மேலும், உடனடியாக நீர்வழித் தடங்களை தூர்வாரி வரும் வடகிழக்குப் பருவமழையால் ஏற்படக்கூடிய வெள்ள அபாயத்தைத் தவிர்க்கும்பொருட்டு ரூ.4.00 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.





## 10. கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்

சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும்பொருட்டு கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம் 1996-ல் நிறைவேற்றப்பட்டு, அது முதல் சென்னை மாநகருக்கு குடிதண்ணீர் பெறப்பட்டு வருகிறது.

2005-ல் பெய்த பெரும் மழையின் காரணமாக கண்டலேறு பூண்டி கால்வாய் 10 முதல் 25 கிலோ மீட்டர் மிகவும் சேதமடைந்துள்ளது.

இந்தச் சேதத்தைத் தற்காலிகமாக ரூ.64.00 இலட்சம் மதிப்பீட்டில் சீர்செய்து, இந்த ஆண்டுக்குத் தேவையான குடிநீர் தங்குதடையின்றி வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வரும் ஆண்டுக்குள் கண்டலேறு-பூண்டி கால்வாயை முழுமையாகச் சீரமைத்தால்தான் சென்னைக்குத் தேவையான குடிநீர் தடையின்றி பெற இயலும். எனவே, கால்வாயில் சேதமடைந்த பகுதிகளைச் சீரமைத்திட தேவையான மதிப்பீடுகள் தயாரித்து சுமார் ரூ.10.00 கோடி அளவில் பணிகள் தொடங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், இணைப்புக் கால்வாய் மற்றும் ஊட்டுக்கால்வாய்கள் தூர்வாரி, மராமத்து செய்ய ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

## 11. சென்னை மற்றும் புறநகர் பகுதியில் உள்ள ஏரிகளைப் பராமரித்தல்

சென்னை மாநகரைச் சுற்றி அமைந்துள்ள 18 ஏரிகளைச் சீர் செய்து, நல்ல முறையில் பராமரிக்கும் நோக்கத்துடன் தனித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஏரிகள் மூலம் பாசனம் இல்லாவிடினும், வெள்ளப் பெருக்கினைத் தடுத்து, தண்ணீரைத் தேக்கி வைத்து, அதன் மூலம் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கான வாய்ப்புகள் இருப்பதால், இந்நீர்நிலைகளை நன்கு சீர் செய்து, பராமரிப்பு செய்வது அவசியமாகிறது.

ஏரிகள் செப்பனிடும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. இத்திட்டம் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.

## 12. பொறியாளர்கள் பணியிடங்கள் நிரப்புதல்

புதிய அரசு பொறுப்பேற்ற தருணத்தில் பொதுப் பணித் துறையில் உதவிப் பொறியாளர் முதல் தலைமைப் பொறியாளர் வரை 1,336 பொறியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. இந்த அரசு

பொறுப்பேற்றவுடன் பணி முக்கியத்துவம் கருதி 5 தலைமைப் பொறியாளர்கள் உட்பட 145 பொறியாளர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டு துறையின் செயல்பாடு துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இத்துறையில் பணிபுரியும் உதவிப் பொறியாளர்களின் பணி துறைக்கு மிக முக்கியமானதாகும். சென்ற ஆட்சியின்போது இருந்து வேலை நியமன தடைச் சட்டத்தின் காரணமாக இந்தப் பணியிடங்களில் சுமார் 1,100 பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன.

இதன் காரணமாக பணிகள் விரைவாக முடிப்பதில் சிரமம் ஏற்பட்டு, ஒதுக்கீடு செய்த நிதியினை முழுமையாகச் செலவிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளில் நீர் ஆதாரங்கள் மற்றும் குளங்கள் ஆகியவற்றைப் புனரமைக்க மத்திய அரசு மற்றும் உலக வங்கி பெருமளவில் நிதி ஆதாரங்களை வழங்க முன் வந்துள்ளன. இச்சூழ்நிலையில், பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணித்துள்ளார்கள். எனவே, முதற்கட்டமாக 569 உதவிப் பொறியாளர்களை நியமிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 13. தினக்கூலி பணியாளர்கள் பணி வரன்முறை

இத்துறையில் பணிபுரிந்து வந்த தினக்கூலி பணியாளர்களில் 10 ஆண்டுக்காலம் பணி முடிந்த நபர்களில், 1998-ல் முதல்வர் கலைஞர் அவர்கள், 413 பணியாளர்களின் பணியை வரன்முறை செய்ய உத்தரவிட்டார்கள். அதன் பின்னர் முந்தைய ஆட்சியில் தினக்கூலி பணியாளர்களின் பணி வரன்முறை குறித்த கருத்துருவின் மீது எவ்வித ஆணைகளும் வழங்கப்படவில்லை.

இம்முறை கலைஞர் அரசு பொறுப்பேற்றவுடன் இத்துறையில் பல்வேறு பணிகளில் 10 ஆண்டுகள் பணி முடித்து, பணி நிரந்தரம் செய்யப்படாமல் உள்ள 1,056 தினக்கூலி பணியாளர்களின் பணிகளை வரன்முறைப்படுத்தி நிரந்தரம் செய்ய முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

## 14. பாசன உதவியாளர் பணியிடங்கள் நிரப்புதல் (லஸ்கர்)

கால்வாய்களைச் சீராகப் பராமரிப்பதற்குப் பாசன உதவியாளர்களின் பணிகள் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஆற்று பராமரிப்புப்





பணிகளைக் குறைந்தது 10 கி.மீ. வரை ஒரு பாசன உதவியாளரே கவனித்து வருகிறார்.

பாசன உதவியாளர்களின் மொத்தப் பணியிடங்கள் 1,670. சென்ற ஆட்சியில் வேலை நியமனத் தடைச் சட்டம் இருநததன் காரணமாக, 884 பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. பாசன உதவியாளர்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தால் கால்வாய்களைப் பராமரிப்பதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே, பணியின் முக்கியத்துவம் கருதி, ஏற்கெனவே பணிபுரியும் 158 தினக்கூலி பணியாளர்களைப் பணி நிரந்தரம்மூலம் நிரப்பவும், மீதமுள்ள காலிப் பணியிடங்களில் 300 பணியாளர்களைப் புதிதாக பணியமர்த்திடவும் முதல்வர் கலைஞர் அவர்கள் முடிவு செய்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 15. நவீன கட்டுமானத் தொழில்நுட்பப் பயிலகம் அமைத்தல்

தற்பொழுது மிக வேகமாக வளர்ந்து வரும் கட்டுமானத் தொழிலில், வடிவமைப்பு, திட்டமிடுதல் மற்றும் கட்டுமானப் பொருள்களின் உபயோகம் ஆகியவற்றில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அதிவேகமாக வளர்ந்துவரும் கட்டுமானத் தொழில்நுட்பங்களை முறையாக பயன்படுத்தி காலத்திற்கேற்றவாறு அரசு கட்டடங்களை கட்ட வேண்டியது அவசியமாகிறது.

தற்பொழுது, சென்னை தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி மையத்தினை விரிவாக்கி மேம்படுத்திட அரசு முடிவு செய்துள்ளது. இதன்மூலம் தேவைக்கேற்ப தொடர் கல்வியினையும், திறமைகளையும் பொறியாளர்களுக்கு கிடைக்க பயிற்சி அளித்தல், பொறியியல் மற்றும் மேலாண்மை சம்பந்தமாக பயிற்சி அளித்தல், பொறியாளர் சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல், கட்டட அமைப்பிற்கும், கல்வி நிறுவனங்களுக்கும் இடையே பாலமாக செயல்படுதல், பொறியாளர்களுக்குத் தேவையான நல்ல வளர்ச்சியும், இன்றைய புதிய தொழில்நுட்ப மாற்றங்களையும் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 16. பொதுப் பணித் துறையை இரு பிரிவுகளாகப் பிரித்தல்

தற்பொழுது பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு மற்றும் கட்டடங்கள் அமைப்பு என இரு அமைப்புகளாக இயங்கி வருகின்றன.

எனினும், நடைமுறையில் பொறியாளர்கள் ஓர் அமைப்பிலிருந்து மற்றோர் அமைப்பிற்கு மாறுதல் பெற்று பணியாற்றி வருகின்றனர். இதன் காரணமாக, இத்துறையில் பணியாற்றும் பொறியாளர்கள் தனித்திறமை மற்றும் ஆழ்ந்த அனுபவம் பெற முடியாத நிலை தற்போது உள்ளது. வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்ப நுணுக்கங்களை அறிந்து துறையின் பணிகளில் அவற்றைப் புகுத்துவது அவசியமாகிறது. இச்சூழ்நிலையில், பணி சம்பந்தப்பட்ட நிபுணத்துவம் பெறவும், அரசின் வளர்ச்சித் திட்டங்களை எவ்வித தொய்வில்லாமல் உடனுக்குடன் நிறைவேற்றவும், பணியின் இலக்கு மற்றும் தரம் எள்ளளவும் குறையாமல் செம்மையாகச் செயல்படுத்திடவும், பொதுப் பணித் துறையைச் சீரமைத்து, இரு பிரிவுகளாக நீர்வள ஆதார அமைப்பு மற்றும் கட்டட அமைப்பு என இரு தனி அமைப்புகளாக செயல்படும். இரு பிரிவுகளாகச் சீரமைக்கும்போது தற்பொழுது பணிபுரியும் பொறியாளர்களது முதுநிலை பாதிக்கப்படாமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

## 17. காவிரி டெல்டா மாவட்டங்களில் வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களில் தூர் அகற்றுதல்

காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள ஆறுகள் மற்றும் கால்வாய்களைத் தூர்வார வேண்டியது அவசியமாகும். இத்தகைய மகத்தானப் பணியை முதன்முதலாகத் துவக்கியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள். ஆனால், கடந்த 2001 ஆம் ஆண்டிற்குப் பிறகு பெரிய அளவில் தூர் வாரும் பணிகள் நடைபெறவில்லை.

வாய்க்கால்கள் மற்றும் வடிகால்களில் தூர் அகற்றுவது நடைபெறாததால் பாசனத்திற்கு தண்ணீரைப் பகிர்ந்து அளிப்பதில் மிகுந்த இடர்ப்பாடு ஏற்படுவதுடன், கடைமடை வரை பாசனத்திற்குத் தண்ணீர் வழங்க இயலவில்லை. மேலும், மழைக்காலங்களில் வெள்ள நீர் வடிவதில் மிகுந்த சிரமம் ஏற்படுவதுடன் பயிர்கள் மூழ்கி உணவு உற்பத்தி பாதிக்கும் நிலை உண்டாகிறது.

எனவே, இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மேட்டூர் அணை திறப்பதற்கு முன்பாக ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் காவிரி டெல்டா பகுதியில் தூர்வாரும் பணி செய்யப்பட்டது. தொடர்ந்து இந்த ஆண்டு பாசனம் முடிவுற்றவுடன் ஆறுகள் கால்வாய்களைத் தூர்வார ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணித்துள்ளார்கள்.



## 18. கீழ்பவானி ஆயக்கட்டில் "தாராபுரம் கட்"–ல் விடுபட்ட நிலங்களைச் சேர்த்தல்

கீழ்பவானி ஆயக்கட்டு பகுதியில் உள்ள கிராமங்களில் சுமார் 23,000 ஏக்கர் நிலங்கள் பாசன ஆயக்கட்டிலிருந்து விடுபட்டுள்ளன. இப்பகுதிகள் "தாராபுரம் கட்" என அழைக்கப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்கள் நிலங்களை கீழ்பவானி பாசனத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர்.

"தாராபுரம் கட்"-ல் விடுபட்ட 23,000 ஏக்கர் நிலங்களை ஆயக்கட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என அரசு மார்ச் 2000—ல் ஆணை பிறப்பித்தபோதிலும், இந்த முடிவை இதற்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற அரசு செயல்படுத்தவில்லை.

தற்பொழுது, இவ்வாறு விடுபட்ட நிலங்களை, கீழ்பவானி திட்ட ஆயக்கட்டில் சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 19. நீர் வாரச் சந்தை

நீர் மேலாண்மையை செவ்வனே முறைப்படுத்த ஏதுவாக பொறியாளர்களும், பணியாளர்களும் விவசாயிகளோடு கலந்து ஆலோசித்து சில முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். பாசன மேலாண்மையை இந்த இரு தரப்பாரும் கூட்டாக நிர்வகிக்க வேண்டும். இந்த முறை பல நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் நீர்ப்பாசனப் பகுதிகளில் நீர் வாரச் சந்தை பெரியாறு-வைகை பாசன பகுதியில் செயல்பட 1985 ஆம் ஆண்டில் அரசு ஆணை பிறப்பித்தது. இதன்படி பொதுப் பணித் துறை உதவிப் பொறியாளர் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை 4 மணி அளவில் இந்த நீர் வாரச் சந்தையைக் கூட்டி, பாசனதாரர்களோடு கலந்தாலோசித்து நீர் பகிர்வினில் உள்ள குறைகளைப் போக்குவதற்கான முக்கிய முடிவுகளை எடுப்பார். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசு இப்போது இந்த நீர் வாரச் சந்தை முறையை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த தீர்மானித்துள்ளது.

## 20. பகுதி II திட்டம்

### பாசனம்

நாட்டில் புதிய பாசன வசதிகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நடப்பு நிதியாண்டில் குடியாத்தம் அருகே மோட்டூர் கிராமத்தில் புதிய குட்டை

[2006 ஆகஸ்ட் 31

அமைத்தல், வாணியம்பாடி அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து, உதையந்தம் ஏரிக்கு நீர் வழங்கும் திட்டம், மேல்மிட்டாலத்தில் உள்ள தடுப்பணையை மேம்படுத்துதல், கோத்தகோட்டை கிராமத்தில் போரைகாணாறிலிருந்து இறாக்குட்டை மற்றும் இதர குளங்களுக்கு நீர் வழங்க புதுக்கால்வாய் வெட்டுதல், தூசி மாமண்டூர் ஏரியின் உபரி நீர் ஓடையின் குறுக்கே கல்கொண்டம் அமைத்தல், காசலிங்கம்பாளையம் கிராமத்தில் புதிய குளம் அமைத்தல், பாலேகுளி கிராமத்தில் காட்டோடையின் குறுக்கே குளம் அமைத்தல், பெல்லம்பள்ளி கிராமத்தில் பவிகாஹூரில் கரிமலை பள்ளத்தின் குறுக்கே தடுப்பணை அமைத்தல், ட்டி. பெரும்பாளையம் கிராமத்தில் குளம் அமைத்தல், மீனவேலி கிராமத்தில் நல்லாம்பிள்ளை குளத்திற்கு நீர் வழங்க வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டுதல், ஆண்டிப்பட்டி கிராமத்தில் கரடி ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல், சத்திரப்பட்டி கிராமத்தில் கசிவு நீர்க் குட்டை அமைத்தல், பழவூர் கிராமத்தில் கட்டப்பள்ளி ஓடையின் குறுக்கே கசிவு நீர்க் குட்டை அமைத்தல் ஆகிய 13 சிறப்பு சிறு பாசனப் பணிகள் ரூ.3.43 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மேலும், கலசம்பட்டு கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே படுகை அணை அமைத்தல், சித்தாத்தூர் கிராமத்தின் அருகே கவுண்டன்ய நதியின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல், பாலக்கோடு வட்டத்தில் ஜெர்தலாவ் வாய்க்கால் அமைத்து தொட்டாம்பட்டி ஏரி, பாப்பாரப்பட்டி ஏரி மற்றும் கீழ்புறம் அமைந்துள்ள 15 ஏரிகளுக்கு நீர் வழங்கவும், போனப்பட்டி கிராமத்தில் கருப்பக்கோவில் ஓடையின் குறுக்கே கண்மாய் அமைக்கும் திட்டம், மேற்கண்ட 4 திட்டங்களுக்கு சிறுபாசனத் திட்டத்தின்கீழ் ரூ.20.01 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

இது தவிர, கடலரிப்பிலிருந்த கடலோரத்தில் வாழும் உயிர், உடைமைகளைப் பாதுகாக்க கடலரிப்புப் பணிகளை இவ்வரசு மேற்கொண்டு வருகிறது. பகுதி II திட்டத்தின்கீழ் தூத்துக்குடி மாவட்டம் திரேசாபுரத்தில் தூண்டில் வளைவு அமைத்தல், திருநெல்வேலி மாவட்டம், இடிந்தகரை கிராமத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் ஆகிய இரண்டு பணிகளுக்கு ரூ.13.30 கோடி மதிப்பில் பணிகள் துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கட்டடம்**

அரசு அலுவலகங்கள் இயங்குவதற்கு அதற்கு தகுந்த கட்டமைப்பு வசதிகளும், அரசு அலுவலர்களுக்கு குடியிருப்பு வசதிகளும், பணிகளை



2006 ஆகஸ்ட் 31]

ஆய்வு மேற்கொள்ள வாகன வசதிகளையும், அரசுப் பணிகளைச் செவ்வனே மேற்கொள்ள வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் இவ்வரசின் நோக்கமாகும். இதனைக் கருத்தில்கொண்டு பகுதி II திட்டத்தின்கீழ் திருவாரூர், விருத்தாசலம், கும்பகோணம், சத்தியமங்கலம், மணப்பாறை, குழித்துறை மற்றும் பாபநாசம் ஆகிய இடங்களில் ரூ.86.70 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சென்னை, ஈரோடு, திருச்சி ஆகிய இடங்களில் ரூ.1.78 கோடி மதிப்பீட்டில் அரசு அலுவலருக்கான குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படும். குறிப்பாக சென்னையில் தாடண்டர் நகர் குடியிருப்பு வளாகத்தில் ஈப்பு ஓட்டுநர் மற்றும் அலுவலக உதவியாளர் பயனடைவார்கள்.

சேலத்தில் ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் கூடுதல் சுற்றுலா மாளிகையும், ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் கோவையில் உள்ள சுற்றுலா மாளிகை வளாகத்தில் கூடுதல் கட்டடங்களும் கட்டப்படும்.

ரூ.96.00 இலட்சம் மதிப்பீட்டில் 24 கட்டடக் கோட்டங்களுக்குப் புதிய ஈப்புகள் வாங்கப்படும் என்பதையும், மேலும் தலைமைச் செயலக பொதுப் பணித் துறை அலுவலக உபயோகத்திற்கு ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் கணினிகள் வாங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

D
V24,51C06
F06.161
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227480
சென்னை-600 008
நூலகம்